சுகஜீவ
தேவ சபை

SUGA JEEVA
MELODIES

கார்டினல் Rev. டாக்டர்.
வி.ஜி. செல்வராஜ்

வழங்கும்

சுகஜீவ கீதங்கள்

Vol. 1 - 35

ONG BOOK

Cardinal Rev. Dr. V.G. SELVARAJ

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சுகஜீவ தேவ சபைகள்

சுகஜீவ தேவ சபை

விஜிபி உலக அமைதி வளாகம்,
(விஜிபி தங்க கடற்கரை அருகில்),
ஈஞ்சம்பாக்கம்,
(பேருந்து நிறுத்தம் அருகில்).
சென்னை-41. Ph : 044-64596037

சுகஜீவ ஊழியங்கள் ஜெப கூடம்

39/7, விஜிபி விக்டரி ஹவுஸ்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.
Ph : 044-65722230, 65722231

சுகஜீவ தேவ சபை

ஒத்தவாடைத் ரோடு,
அம்மாபேட்டை,
திருவண்ணாமலை-606 601.
Ph : 95475 222664

சுகஜீவ தேவ சபை

விஜிபி டைமண்ட் சிட்டி,
அம்மாபேட்டை,
திருச்சி - 9.
Ph : 95431 2419950 2415729

இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

சங்கீதம் : 95 : 1

சுவிசேஷகர். டாக்டர். வி.ஜி. செல்வராஜ்

இயற்றிய

"சுகஜீவ கீதங்கள்"

(VOL 1 - 35)

SUGA JEEVA OZHIYANGAL
VGP Victory House,
37, Anna Salai, Chennai - 600 002, India.
Phone : 91-44-6572 2230 / 31
Fax : 91-44-4556 6490
E-mail : info@sugajeevaministries.org
Web : www.sugajeevaministries.org

“சுக ஜீவ கீதங்கள்”

(VOL 1 - 35 & Your Word)

INDEX

எண்	பாடல்	பக்கம்
VOL 1		
1.	வான தூதர்கள்	1
2.	நான் செய்த பாவங்கள்	2
3.	இயேசுவே இயேசுவே	3
4.	வானம் என்னும் வீதியில்	4
5.	ஒளிவந்தது	5
6.	மாந்தரே மலைக்கு	6
7.	தவிக்கிறேன் தவிக்கிறேன்	7
8.	சத்தியநாதனே இயேசுவே	8
9.	கானா ஊரு	9
VOL 2		
1.	தேடி வந்தோம் நம் தேவனை	10
2.	உலக மக்களே ஒன்று கூடுங்கள்!	11
3.	ஆருயிரே கண்மணியே! இயேசுவே இராசாவே!	12
4.	உன்னத தேவனே	13
5.	வலைவீசி மீன் பிடித்தது போதும்	14
6.	ஆவியானவர் எனக்குள் வந்தார்	15
7.	என் உள்ளமே நீ	16
8.	எவ்வளவு நல்லவர்	17
9.	வருகிறார் இயேசு	18

VOL 3

1. ஜீவ ஒளி 19
2. துதித்து துதித்து பாடிடுவோம் 20
3. உன்னைவிட்டு 21
4. எல்லையில்லா பேரின்பம் 22
5. இறங்கி வாரும் 23
6. என் உள்ளம் 24
7. அடிக்கப்படும் ஆட்டைப்போல் 25
8. உயிரோடு இருப்பவர் 26
9. அன்பே அன்பே 27

VOL 4

1. வாழ்க்கைக்கு தேவை 28
2. கடல் மீது நடந்திடுவாய் 29
3. அடைக்கலமே 30
4. இயேசு இயேசு 31
5. என் எண்ணமெல்லாம் 32
6. கலங்காதே மனமே 33
7. இதை நீ நம்பு 34
8. உம்மால் கூடுமே 35
9. நான் ஏங்கினேன் 36

VOL 5

1. புது வாழ்வு 37
2. இயேசுவே என்னை 38
3. ஒரு வார்த்தை 39
4. கேளும் கேளும் 40
5. வெண்புறா 41
6. நேற்று இன்று என்றும் 42
7. எந்நாளுமே 43
8. இயேசு இராஜனே 44
9. தேவாதி தேவனை 45

VOL 6 46
1. ஆலயம் 47
2. தளர்ந்துபோன 48
3. இந்த பூமியின் 49
4. என்னையும் ஒரு பொருட்டாக 50
5. கண்ணில் நிற்குதே 51
6. வணங்கி 52
7. இயேசுவே என் கன்மலையே 53
8. பரலோகம் 54
9. அன்பின் அவதாரம்

VOL 7 55
1. கர்த்தரின் பலத்த கரங்களிலே 56
2. கர்த்தர் என் மேய்ப்பர் 57
3. புல்லின்மேல் இறங்கும் 58
4. தேவனை நம்பு 59
5. தேவனின் ஜனமே 60
6. எபிநேசரே 61
7. எந்தன் தேவா 62
8. எல்லோரையும் நேசிப்பேன் 63
9. ஒரு தகுதியும் இல்லாத எனக்கு

VOL 8
1. கிருபையின் தேவனே 64
2. பொங்கிப் பொங்கி 65
3. என் காதில் 66
4. என்னைக் காண்கின்ற தேவன் 67
5. Happy - ஆக இருக்க வேண்டுமென்றால் 68
6. எல்லோரும் என்னோடு 69
7. ஆனந்தமே, பேரின்பமே 70
8. சொல்லத் தெரியல ஏசுவே 71
9. தாயின் சொல்லைத் தட்டாதே 72

VOL 9

1. கர்த்தரின் சந்நிதியில் 73
2. நேசமானவர் 74
3. ஆச்சரியமானவர் 75
4. எந்தன் இயேசுவே 76
5. மேலான நாமம் 77
6. தேவன் தந்தார் 78
7. தன் ஜீவன் தந்தார் 79
8. நெஞ்சத்தின் நன்றியெல்லாம் 80
9. இதுவரையிலும் நம்மை காத்த தேவன் 81

VOL 10

1. இரட்சிப்பின் ஊற்றாய் 82
2. நாதா, இயேசுநாதா 83
3. ஒவ்வொரு நாளும் புதிதாக 84
4. அண்ணன்மாரே, தம்பிமாரே 85
5. எம்மாத்திரம் நான் 86
6. ஒரு நாளல்ல இரு நாளல்ல 87
7. மாறிடுதே மறைந்திடுதே 88
8. நம் வாழ்வில் சந்தோஷம் 89
9. ஒத்தாசை வருமே உனக்கு 90

VOL 11

1. மாட்சிமை நிறைந்தவரே 91
2. என்னை அழைத்த 92
3. அன்பு நேசரே 93
4. பயப்படாதே 94
5. தாளத்தோடு 95
6. இயேசுவின் அன்பு 96
7. ஆத்துமாவே 97
8. கண்ணீரால் 98
9. இந்த உலகம் 99

VOL 12

		100
1.	ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே	101
2.	இசையை மீட்டியே	102
3.	வந்தாரே வந்தாரே	103
4.	சிலுவைக்கொடி	104
5.	வாலிபரே வாருங்களேன்	105
6.	கண்ணீரை துடைப்பதற்கு	106
7.	ஞானத்தையும், புத்தியையும்	107
8.	எத்தனைவிதமாய் இயேசு	108
9.	ஜல் ஜல் ஜல்	

VOL 13

		109
1	பரிசுத்த ஆவி வருகின்றார்	110
2	மானிடரே வார்த்தை ஒன்று	111
3.	மனசுக்குள்ளே மனசுக்குள்ளே	112
4.	போதாதே ஐயா போதாதே	113
5.	பூமியின் மேலே	114
6.	இறங்கி வருகின்றது	115
7.	ஏங்குதே என் மனம்	116
8.	எந்த நேரமும் என் இயேசுவே	117
9.	உலகம் போற போக்கிலே	

VOL 14

1.	ஒரு மனதாய்	118
2.	நதியோரம்	119
3.	கலிலேயா கடலிலே போகின்றோம்	120
4.	My Dear Heavenly Father	121
5.	சொன்னால் போதுமே	122
6.	ஆராதனை ஆராதனை	123
7.	என்றும் மாறா	124
8.	கல்வாரி சிலுவையில்	125
9.	சில் விதைகள் விதைக்கையிலே	126

VOL 15

1. உயிருள்ளதாய் இருக்கின்றது 127
2. நேரமே இந்த நேரமே 128
3. வாசம் செய்கின்றார் 129
4. திரும்புங்களேன் - மனம் 130
5. சூப்பர் ஃபாஸ்ட் ட்ரயினுதான் 131
6. நாசியிலே சுவாசமுள்ள 132
7. சந்தோஷம் அடைந்தாலே 133
8. பரம தேவன் ஞான ரூபன் வந்தாரே 134
9. நடக்க வாருங்கள் 135

VOL 16

1. உதடுகளின் கனியான ஸ்தோத்திரபலி 136
2. இயேசப்பா எங்க இயேசப்பா 137
3. தாயாக இயேசு 138
4. எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் 139
5. கரம் ஒன்று 140
6. அழைக்கின்றேன் அழைக்கின்றேன் 141
7. பாடுவோம் பாடுவோம் 142
8. நாட்டு மக்களே செவிகொடுத்து 143
9. தனித்திருக்கும் குருவியைப் போல் 144

VOL 17

1. யேகோவா தேவனை 145
2. ஒவ்வொரு நாளும் என்னை 146
3. வாலிப கூட்டம் நடுவிலே 147
4. இராஜா இராஜா நேச இராஜா 148
5. சோர்ந்து போன உள்ளமே 149
6. ரொம்ப ரொம்ப நல்லவர் 150
7. கை கூடி வந்ததே காரியமே 151
8. காலை முதல் மாலை வரை 152
9. ALMIGHTY GOD 153

VOL 18

1. பனி போல இறங்கி 154
2. சிலுவைக்கு முன்பாக 155
3. உன்னை அறிந்த தேவனே 156
4. என் இயேசுவே என் இயேசுவே 157
5. சிறகடித்து பறக்கின்றதே 158
6. வரப்போகிறார் இயேசு வரப்போகிறார் 159
7. நானும் என் 160
8. ஓ என் நேசரே 161
9. ஓடி போகுதே நாட்கள் சீக்கிரம் 162

VOL 19

1. தேசமெங்கும் சுவிசேஷம் 163
2. என் நேசப் பிதாவே 164
3. மெய்யான ஒளியாய் வந்தீரே தேவா 165
4. எனக்கென்று இடம் ஒன்று 166
5. கர்த்தருக்கு காத்திருப்போம் 167
6. என்னை மாற்றுமே 168
7. அன்பினால் 169
8. வருவீரே - வருவீரே 170
9. இயேசு உன்னை நேசிக்கிறார் 171

VOL 20

1. நீரோடைக்கு ஏங்கும் 172
2. ஒப்புகொடு ஒப்புக்கொடு உன்னை 173
3. புதிதானதே 174
4. வாரும் பரிசுத்த ஆவியே 175
5. எந்தன் புறாவே 176
6. உயிருள்ள நம் தேவன் 177
7. சிலுவை நடுவில் 178
8. நான் போகும் இடமெல்லாம் 179
9. முழுமனதோடு உமைநான் 180

VOL - 21

1. உன்னை நான் ஆசீர்வதிப்பேன் 181
2. முழுநிலவாய் முகம் மலரும் 182
3. கர்த்தர் தந்தாரே கர்த்தர் தந்தாரே 183
4. கானா ஊரிலே நடந்த கல்யாணம் 184
5. மனைவியிடம் அன்பு காட்டுங்கள் 185
6. மணமகளே மணமகனே 186
7. வாழ்க வாழ்கவே 187
8. நடத்திதந்தாரே 188
9. கர்த்தருக்கு பயந்து நடந்தால் 189

VOL - 22

1. அபிஷேகமே 190
2. சகோதரனே சகோதரியே 191
3. சருவ வல்லவரே 192
4. வரவேணுமே 193
5. எந்தன் விண்ணப்பம் 194
6. கர்த்தரே தெய்வமென்று 195
7. என்னை நடத்தும் 196
8. கடலோரம் இயேசு 197
9. திசையேங்கும் செல்வேன் 198

VOL - 23

1. மகிமையின் தேவனே 199
2. பரிசுத்த அலங்காரத்துடனே 200
3. பரலோக இராஜாவே 201
4. உலகமெங்கும் இயேசு வார்த்தையே 202
5. மண்ணின் மேல் நான் 203
6. தனிமை உன்னை 204
7. மஜா மஜா என்று 205
8. மாறாதவர் இயேசு மாறாதவர் 206
9. கீழ்ப்படிந்தாலே ஜெயமே 207

VOL - 24 208
1. அல்லேலூயா சொல்வோம் 209
2. கண்ணீரோடு விதைப்பவர்கள் 210
3. இயேசு இராஜாவே 211
4. இயேசுவின் நாமமே 212
5. இன்றைய உலகத்திலே 213
6. நம்ப முடியலே 214
7. வானமே தேவனை 215
8. எத்தனையோ முறை 216
9. ஒருவனாய் இருக்கையில் அழைத்தீரே

VOL - 25 217
1. ராஜாவே உயர்ந்தவரே 218
2. இருக்கிறார் இருக்கிறார் 219
3. வரப்போகிறார் - வரப்போகிறார் 220
4. எத்தனையோ நாமங்கள் தேவனே 221
5. சத்திய ஆவியே 222
6. ஜெபத்தை கேட்பவரே 223
7. அழைக்கின்றேன் அழைக்கின்றேன் 224
8. என் நேசரே - உம்மோடு நான் 225
9. உயிருள்ள தேவன் இயேசுவே

VOL 26 226
1. கரம் தட்டி பாடுவோம் 227
2. வாசம் வீசிடும் 228
3. வானமும் பூமி 229
4. நாட்டு நடப்ப 230
5. சாத்தானே சாத்தானே 231
6. பறவைகளுக்கு கூடு உண்டு 232
7. என் பேச்செல்லாம் என் மூச்செல்லாம் 233
8. பரலோக ராஜ்ஜியம் 234
9. தேவ மைந்தனே உமது பாதத்தில்

VOL 27

1. புதுப்பாட்டை நானும் 235
2. என் தேவனே உம்முடைய 236
3. முத்திரை மோதிரமாக 237
4. இயேசுவே இயேசுவே 238
5. என்வாழ்விலே 239
6. நடக்கின்றார் இயேசு 240
7. எங்கே நீ போகின்றாய் 241
8. பாரபட்சம் இல்லாத 242
9. இயேசுவின் இரத்தத்தில் 243

VOL 28

1. என் தேவனே மனப்பூர்வமாய் 244
2. தேவனின் தோட்டத்தில் பூத்திருக்குதே 245
3. வாசப்படி வந்து நின்றார் 246
4. இயேசுவை நானே நேசிக்கிறேனே 247
5. தேவ சபைக்கு போவோம் 248
6. கீதமானவரே 249
7. வாலிப வயதில் நினைப்பாய் 250
8. சுற்றி வந்தார் நம் இயேசு 251
9. இதயத்திலிருந்து 252

VOL 29

1. ஆதியில் வார்த்தை இருந்தது 253
2. ஆவியின் கனியை தருகின்ற தேவன் 254
3. கீர்த்தியும் புகழ்ச்சியுமாகவே 255
4. மாட்சிமை நாமமே 256
5. என் ஜீவனின் பெலனானவர் 257
6. இருந்தவரே இருப்பவரே 258
7. அன்பாகவே தேவன் இருக்கின்றார் 259
8. தேசத்தின் ஜனங்களே நீங்களே 260
9. என் இயேசுவே நல்ல மேய்ப்பரே 261

VOL 30
1. தேவ பிரசன்னமே இறங்கியே வருகுதே 262
2. ஆராதனை ஆராதனை 263
3. சீனாய் மலைமேலே 264
4. ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன் 265
5. ஆராதிக்க வந்தோமே 266
6. உயிரோடு கலந்தவரே உமக்கே ஸ்தோத்திரம் 267
7. என்னை தேடி வந்த தெய்வமே 268
8. தேனிலும் இனிய நாமமே 269
9. பெரிதான இரட்சிப்பு இரட்சிப்பு 270

VOL 31
1. ஆசீர்வதிக்கும் தேவனே 271
2. சீயோன் மலையருகே நாங்கள் வந்தோமே 272
3. கர்த்தாவே கூப்பிட்டேன் 273
4. நன்றி இயேசுவே 274
5. தூய மனதுடனே உம்மிடம் வந்தோமே 275
6. உன் ஆத்துமா வாழ்வது போல் 276
7. மதுரமான இயேசு 277
8. ஏங்குதே எனது மனமும் ஏங்குதே 278
9. அழைக்கின்றார் இயேசு 279

VOL 32
1. கர்த்தரையே எக்காலமும் 280
2. பரலோக நித்தியராஜா 281
3. தேவன் போட்ட மதிலை 282
4. பூமி Happy ஆகிடுதே 283
5. தேவனே எந்தன் 284
6. வாருமே தேவனே வாருமே 285
7. கல்வாரி நிலுவையிலே 286
8. பிதாவே குமாரனே 287
9. மகிமையின் ஜெய தேவனே 288

VOL - 33

1. காண கண் கோடி 289
2. எங்கள் இயேசுவே 290
3. மனமே நீ 291
4. உதயமானவரே 292
5. நான் எங்கு சென்றாலும் 293
6. என் இயேசுவே 294
7. மேலே வானத்திலே 295
8. கர்த்தர் மேல் 296
9. வாழ்கின்ற காலம் 297

VOL - 34

1. இயேசு மகா ராஜனே 298
2. என் ஆசையே 299
3. ஊற்றுமைய்யா 300
4. போதும் போதும் 301
5. பட்சிக்கும் அக்கினியாய் 302
6. இயேசுவே உம்மை 303
7. சூரியன் போல் முகம் 304
8. இயேசுவே இயேசுவே 305
9. எழுந்து கட்டுவோம் 306

VOL - 35

1. பரிசுத்த நாமத்தையே நான் 307
2. நான் தேடினேன் 308
3. இஸ்ரவேலின் தேவனே 309
4. ஆராதனை நாயகனே 310
5. தேவனின் ஆலயம் 311
6. எந்தன் ஆத்துமா 312
7. ஊற்றுமே எனக்குள்ளே 313
8. கர்த்தாவே உம்மை 314
9. இயேசப்பா எனக்குள் 315

YOUR WORD

1. ஆத்துமாவே 316
2. உம்மையன்றி 317
3. உம்பாதம் 318
4. சர்வ வல்ல 319
5. More Love 320
6. கரம் ஒன்று 321
7. பலிபீடத்தில் 322
8. I Need You Daddy 323
9. உன் வாயை 324
10. மான்கள் நீரோடை 325

சுக ஜீவ கீதங்கள்

VOL 1

1. வான தூதர்கள்

வான தூதர்கள் கூடிடுவோம்
தேவ கானம் பாடிடுவோம்
பிறந்தார் இயேசு பிறந்தார்
மானிடர் பாவம் போக்கிடவே
மன்னவர் இயேசு பிறந்தாரே } 2
நம் இயேசு மண்ணில் பிறந்தாரே.

(வான தூதர்கள்)

வானமும் பூமியும் சர்வ லோகமும்
படைத்தவர் நம் தேவனே
அந்த தேவனின் ஒரே நேசக்குமாரன்
பூமியில் இன்று உதித்தாரே
அக்கிரமம் அழிந்து ஒழியவே
நீதிகள் என்றும் வெல்லவே } 2
மானிடர் திருந்தி வாழவே.

(வான தூதர்கள்)

வேதத்தில் முன்னமே சொன்னது போலவே
தாவீதின் வம்சத்தில் பிறந்தாரே
தீர்க்க தரிசியால் கர்த்தர் உரைத்தது
பூலோகத்தில் நிறைவேறவே
உன்னதர் மேல் மகிமையும்
பூமியில் சமாதானமும்
மனிதர் மேல் பிரியமும் உண்டாவதாகவே
பாவிகள் இரட்சிப்பை பெற்றிடவே
நித்திய ஜீவன் அடைந்திடவே
பரலோக ராஜ்ஜியம் சென்றிடவே

(வான தூதர்கள்)

2. நான் செய்த பாவங்கள்

நான் செய்த பாவங்கள் கொஞ்சமா
மனமே நீ நினைத்துப் பார்
(நான் செய்த)

தேவன் ஒருவரே என்ற உண்மையை மறந்தேனே
தேவைக்கு ஏற்பவே தெய்வங்கள் பல தொழுதேனே
விக்ரக ஆராதனை செய்தேனே
கர்த்தரின் நிந்தையை அடைந்தேனே - என் வாழ்விலே
(நான் செய்த)

மண்ணாசை, பொன்னாசை, பொருளாசை,
உடலாசை, உலகாசை, பேராசை, அதிகார ஆசை
என்ற ஆசைகளை வளர்த்தேனே
இறையாசை மட்டும் நான் தொலைத்தேனே
உலகின்பத்தில் நான் திளைத்தேனே - என் வாழ்விலே
(நான் செய்த)

நம்பினோரை ஏமாற்றிட என் நெஞ்சம் துணிந்திடுதே
பொய் பேச என் நாவும் எந்நாளும் துடித்திடுதே
களவுகள் செய்யவும் முனைந்தேனே
சுயநலம் பெரிதென நினைத்தேனே - என் வாழ்விலே
(நான் செய்த)

தேவனே உம்மிடம் பாவங்கள் அறிக்கையிட்டேன்
மன்னித்து இரட்சிப்பின் கனிகளை தந்திடுவீர்
உள்ளத்தை பரிசுத்தம் ஆக்கிடுவீர் பரலோக
ராஜ்ஜியத்தில் இடம் கொடுப்பீர் - என் வாழ்விலே
(நான் செய்த)

3. இயேசுவே இயேசுவே

இயேசுவே இயேசுவே எழுந்து வாரும்
அழைக்கிறேன் நெஞ்சுக்குள் இறங்கி வாரும்
நேசம் என்றால் என்னவென்று சொல்லித்தாரும்
பாசத்தோடு பழகும் நல்ல உள்ளம் தாரும்

(இயேசுவே இயேசுவே)

அந்நியரிடத்தில் அன்பு, எளியோரிடத்தில் இரக்கம்
பாவியர்க்கு நல்வழியும் காட்டிடவே
பகைவரிடம் கருணை, முதியோரிடம் ஆதரவு
நலிந்தோர்க்கு உதவிக்கரம் நீட்டிடவே
ஆதரவற்று கிடப்போர்க்கு ஊன்றுகோலாய்
அரவணைத்து அவர்களுக்கு தூண்டுகோலாய்
நேய உள்ளம் கொண்டு நாங்கள்
வாழ்ந்து காட்டவே - வாழ்ந்து காட்டவே

(இயேசுவே இயேசுவே)

அற்புதங்கள் செய்தீர், நோய்களெல்லாம் தீர்த்தீர்
ஜீவ ஊற்றை எங்களுக்கு தந்தீரே
பாவங்களை மன்னித்தீர், சமாதானம் விட்டுச் சென்றீர்
பரலோகப் பிதாவிடம் அழைத்துச் செல்வீர்
மீண்டும் வருவேன் என்று சொல்லி சென்றீரே
விரைந்து வந்து எங்களையெல்லாம் மீட்பீரே
உம் வருகைக்காக நாங்கள் இங்கு
காத்து நிற்கிறோம்- காத்து நிற்கிறோம்

(இயேசுவே இயேசுவே)

4. வானம் என்னும் வீதியில்

வானம் என்னும் வீதியில் மேகம் என்னும் தேரினில்
வருகிறார் இயேசு வருகிறார் சொன்னபடி இயேசு வருகிறார்
வான தூதர் சூழவே எக்காளச் சத்தம் கேட்கவே
வருகிறார் - இயேசு வருகிறார்
வெண் வஸ்திரம் அணிந்து வருகிறார்

(வானம் என்னும்)

அத்திமர இளங்கிளை துளிர்விட்டதும்
வசந்தத்தின் காற்று வீசியதே
வானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டதும்
வல்லமையோடு இயேசு வந்தாரே
பொல்லாதோரை ஒரு புறம் தள்ளிவிடவே
நல்லோரை தன்பக்கம் சேர்த்துக் கொள்ளவே
மகிமையின் இராஜாவே
நம்மை மீட்கவே கண்ணெதிரே வந்தாரே

(வானம் என்னும்)

நாட்டைக் கடந்து போகின்றேன்
வீட்டைக் காவல் காத்திடுங்கள்
என்றே எஜமான் சொன்னது போல்
இயேசு சொல்லி சென்றாரே
எப்போது வருவேன் அறியீரே
அதுவரை வீட்டைக் காத்திடுங்கள்
அன்று இயேசு சொன்னாரே
சொன்னபடி இன்று மீட்பர் வந்தாரே

(வானம் என்னும்)

5. ஒளி வந்தது

ஒளிவந்தது உன்மேல் ஒளிவந்தது
தேவனின் அருள்ஒளி வந்தது
எழுந்து நீ பிரகாசி - (2)
கர்த்தரின் மகிமை உன்மேல் உதித்தது
(ஒளிவந்தது)

உன் சூரியன் இனிமேல் மறைவதும் இல்லை
சந்திரன் இனிமேல் இருள்வதும் இல்லை
நல்லவர் இனிமேல் பிரிவதும் இல்லை
நன்மைகள் இனிமேல் குறைவதும் இல்லை
ஆவியில் நிறைந்து தேவனைத் துதிப்பாய்
கர்த்தரின் வசனம் காத்திடும் உன்னை
அல்லேலூயா அல்லேலூயா
(ஒளிவந்தது)

சென்றவர் மீண்டும் உன்னிடம் வருவார் - உன்
இருப்பிடம் தேடி அரசரும் நடப்பார்
நித்திய கிருபை நிலைத்திடும் உன்னில்
தேவனின் வலக்கரம் தாங்கிடும் என்றும்
வற்றாத நீர் ஊற்று பாய்கின்ற தோட்டமாய்
வளமாய் செழித்து நலமுடன் வாழ்வாய்
அல்லேலூயா அல்லேலூயா

(ஒளிவந்தது)

6. மாந்தரே மலைக்கு

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
மாந்தரே மலைக்கு வந்த மாந்தரே
செவியை கொஞ்சம் தாருங்கள் (மாந்தரே)
நற்செய்தி சொல்வேன் கேளுங்கள்

ஆவியின் எளிமை கொண்டோர்
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
பரலோக இராஜ்ஜியம் அவர்களுக்கே
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
துயரப்படுபவர் பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
ஆறுதலை அவர் அடைவாரே
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
சாந்த குணமுடையோர் பாக்கியவான்கள்
பூமியை அவர் சுதந்தரிப்பாரே
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
நீதியின் மேல் பசி தாகமுள்ளோர்
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
திருப்தியை அவர் அடைவாரே
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள் இரக்கம் அவர் பெறுவாரே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (2)
(மாந்தரே)

இதய சுத்தம் உள்ளோர்
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
தேவனை அவர் தரிசிப்பாரே
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
சமாதானம் செய்பவர் பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
அவர்கள் தேவனின் பிள்ளைகளே
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
நீதிக்காக துன்பம் அடைவோர்
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
தேவனின் ராஜ்ஜியம் அவர்களுக்கே
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
என்னின் நிமித்தம் தீமை மொழியும்
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
துன்பம் யாவும் தாங்கிக் கொண்டோர்
பாக்கியவான்கள் பாக்கியவான்கள்
நீங்கள்கூட பாக்கியவான்கள்
சந்தோசபட்டு களிகூருங்கள் (மாந்தரே)

7. தவிக்கிறேன் தவிக்கிறேன்

தவிக்கிறேன் தவிக்கிறேன் தாகத்துடன் தவிக்கிறேன்
ஜீவத் தண்ணீர் தாருமய்யா இயேசுவய்யா - (2)
துன்பம் தானே தொல்லைதானே
வாழுகின்ற காலமெல்லாம் கண்ணீர் தானே - (2)

(தவிக்கிறேன்)

எங்கள் சுமையை உம்மிடத்திலே
வைத்திட எமக்கு சொன்னீரே
எங்கள் பாவம் அனைத்தையும் நீரே
ஒருவரே சுமந்து சென்றீரே
உம்மைப்போல் எம்மை நேசிக்க
அன்பினால் எம்மை அணைக்க
உம்மைப்போல் எவரும்
உலகினில் ஒருவரும் இல்லையய்யா இயேசுவய்யா

(தவிக்கிறேன்)

இறைமகன் இயேசுவே மனிதனாய் பிறந்து
பாடுகள் பலவும் பட்டீரே
கல்வாரி மலையில் சிலுவையின் மீதில்
எமக்காய் நீரும் மரித்தீரே
மூன்றாம் நாளில் உயிர்த்தீர்
பரிசுத்த ஆவியைத தந்தீர்
முடிவில்லா ஆட்சியைத் தருகின்ற ராஜா
நீரே ஐய்யா இயேசுவய்யா

(தவிக்கிறேன்)

8. சத்தியநாதனே ஏசுவே

சத்தியநாதனே இயேசுவே
சாத்தானை வென்ற ஜோதியே
பத்தரை மாத்துத் தங்கமே
பாவியர் எமக்குத் தஞ்சமே

(சத்தியநாதனே)

ஜீவனைத் தந்து நம் ஜீவனைக் காத்தார்
ஜீவ ஊற்றில் நம் தாகத்தை தீர்த்தார் } 2
மேய்ப்பன் இல்லாத ஆடுகள் நமக்கு
நல்மேய்ப்பனாய் வந்து மீட்சியைத் தந்தார்

(சத்தியநாதனே)

விண்ணில் இருந்து மண்ணில் இறங்கி
வெண்பனி போலவே தூயவர் வந்தார் } 2
நோய்வாய்ப்பட்டோர்க்கு வைத்தியன் போல
பாவியர்க்காக தம் வருகை என்றார்

(சத்தியநாதனே)

நீதிக்கதைகள் உவமைகள் சொல்லி
வேதத்தின் உண்மைகள் விளங்கவே வைத்தார் } 2
பாவங்கள் நீங்கி வாழவே சொன்னார்
பரலோக இராஜ்யம் சமீபம் என்றார்

(சத்தியநாதனே)

மனித உருவில் தெய்வம் அவரே
மகிமை நிறைந்த கர்த்தர் அவரே } 2
அவனியெங்கும் அன்பைப் பொழிந்த
உலகின் ஒளியாம் ஏசுராஜாவே

(சத்தியநாதனே)

9. கானா ஊரு

கானா ஊரு கல்யாணத்த நடத்தினாரு
முதல் அற்புதத்த இயேசு அங்கே நிகழ்த்தினாரு
மூணு வருஷம் நற்செய்தி பரப்பினாரு
தன்னை முப்பதாண்டு அதற்கு தயார்படுத்தினாரு
(கானா ஊரு)

யோர்தான் நதி ஓரம் இயேசு நடந்து வந்தார்
இயேசு நடந்து வந்தார்
யோவானிடம் ஞானஸ்நானம் தானே பெற்றுக் கொண்டார்
தானே பெற்றுக்கொண்டார்
புறா வடிவில் இயேசுவிடம் தேவ ஆவி இறங்கி வந்தார்
தேவ ஆவி இறங்கி வந்தார்
இதோ எந்தன் நேச மகன் தேவன் குரல் கொடுத்தார்
தேவன் குரல் கொடுத்தார்
இவர் மீது என் பிரியம் வானிலிருந்து முழங்கினார்
வானிலிருந்து முழங்கினார் (கானா ஊரு)

இரண்டு மீனு ஐந்து அப்பம் பந்தி அவர் வைத்தாரே
பந்தி அவர் வைத்தாரே
சாப்பிட்ட மக்களங்கே ஐயாயிரம் இருந்தனரே
குருடரை பார்க்க வைத்தார்
செவிடரை கேட்க வைத்தார்-செவிடரை கேட்க வைத்தார்
ஊமைகளை பேச வைத்தார்
முடவர்களைநடக்க வைத்தார்-முடவர்களைநடக்க வைத்தார்
நோய்கள் பல தீர்த்து வைத்து
தேவ அன்பை பொழிந்தாரே-தேவ அன்பை பொழிந்தாரே
(கானா ஊரு)

நமக்காக இயேசுபிரான் எவ்வளவோ பாடுபட்டார் (2)
சிலுவையை முதுகின் மேல் சுமந்தே சென்றார் (2)
தன் இரத்தம் சிந்தி நம் பாவம் கழுவினார் (2)
மரணத்தை அடைந்து அவர் மரணத்தை வென்றார் (2)
நித்தியமான வாழ்விற்கு நம்மை அழைத்துச் செல்வார் (2)
(கானா ஊரு)

இறைவனின் வலது பக்கம் இயேசு அமர்ந்து உள்ளார் (2)
இரக்கத்தின் மறு ரூபம் என்றுமே ஜீவிக்கின்றார் (2)
பரலோக திறவுகோல் அவர் கையில் உள்ளது (2)
பூலோக மீதெங்கும் அவர் நாமம் சொல்லுவோம் (2)
எந்நாளும் நாமே அவர் புகழ் பாடுவோம் (2)
(கானா ஊரு)

சுகசீவ கீதங்கள்

VOL 2

1. தேடி வந்தோம் நம் தேவனை

தேடி வந்தோம் நம் தேவனை
செய்திடுவோம் ஆராதனை
ஆராதனை ஆராதனை ஆண்டவருக்கு ஆராதனை
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(தேடி வந்தோம்)

வானம் அவரது சிம்மாசனம்
பூமி தானே பாதாசனம்
ஆகாய விரிவும் பூமியின் நிறைவும்
நம் தேவன் மகிமை சாட்சிகள்
ஆராதனை...
(தேடி வந்தோம்)

கர்த்தரே நம் வெளிச்சம்
அவர் நாமம் சொன்னால் சுபிட்சம்
இரட்சிப்பின் தேவன் கிருபை நிச்சயம்
வேண்டி நின்றால் கிடைக்கும் கடாட்சம்
ஆராதனை...
(தேடி வந்தோம்)

மனச் சஞ்சலங்கள் ஓட்டுவார்
வாஞ்சையால் நம்மைக் கட்டுவார்
தேவ சமாதானம் தந்திடுவார்
உள்ளத்தில் சந்தோஷம் நிறைத்திடுவார்
ஆராதனை...
(தேடி வந்தோம்)

கர்த்தரை நாடுவோம் துன்பம் தீரும்
அவரைத் தேடுவோம் உள்ளம் மகிழும்
தேவனின் வல்லமை என்றும் விளங்கும்
நம் வாழ்வில் இன்பம் பொங்கிப் பெருகும்
ஆராதனை... (தேடி வந்தோம்)

2. உலக மக்களே ஒன்று கூடுங்கள்

உலக மக்களே ஒன்று கூடுங்கள்!
சந்தோஷமாகக் களிகூருங்கள்!
ஆடுவோம் பாடுவோம் கொண்டாடுவோம்!
நம் இயேசு பிறந்துவிட்டார் உலகின் மீட்பர் உதித்துவிட்டார்! 2
புதுயுகம் மலர்ந்தது! விடுதலை கிடைத்தது!
(உலக மக்களே)

ஏசாயா எழுதி வைத்தான் அன்று:
மேசியா வந்துவிட்டார் இன்று!
நமக்காகத் தன்னைத் தந்து பாவங்கள் இல்லாமல்
பிறந்துவிட்டாரே இயேசு பிறந்துவிட்டாரே -
நமக்காக தன்னைத் தந்து பாவங்கள் இல்லாமல்
பிறந்துவிட்டாரே இயேசு பிறந்துவிட்டாரே
இயேசு பிறந்துவிட்டாரே
(உலக மக்களே)

மனித உடல் தனக்காக எடுத்தாரே!
மன்னன் இயேசு பூமியில் பிறந்தாரே!
ஆதிமனிதன் வழி வந்த சாபங்கள் மாற்றிடவே
வந்துவிட்டாரே இயேசு வந்துவிட்டாரே!
ஆதிமனிதன் வழி வந்த சாபங்கள் மாற்றிடவே
வந்துவிட்டாரே இயேசு வந்துவிட்டாரே!
இயேசு வந்துவிட்டாரே!
(உலக மக்களே)

அவரே நம் ஆண்டவர்! அவரே நம் அண்ணன்!
அவரே நம் நண்பன்! அவரே நம் மணவாளன்!
அவரே நம் திராட்சைச் செடி!
தேவ அன்பைத் தந்து நம்மைக் காக்க வந்தாரே
இயேசு காக்க வந்தாரே! இயேசு காக்க வந்தாரே!
(உலக மக்களே)

3. ஆருயிரே கண்மணியே

ஆருயிரே கண்மணியே! இயேசு ராசாவே!
ஏழைத் தாயின் வயிற்றில் வந்து உதித்த ரோசாவே!
நீ கர்த்தர் செய்த அற்புதம் - நினைவில் அடங்காத அதிசயம்!
என் நெஞ்சில் ஓடுதய்யா! எண்ணங்கள் ஆயிரம்
ஆராரோ ஆரிரரோ ஆராரிரோ!
தாலேலோ! தாலேலோ! தாலேலோ!
(ஆருயிரே கண்மணியே!)

இந்த பூமியின் மேலே எத்தனை மாளிகை
உனக்காக காத்திருக்கிறது!
அரண்மனை வாசலெல்லாம் உன் வரவுக்காகத் திறந்து
இருக்குது!
அத்தனையும் விட்டுவிட்டு என் கண்ணே!
இந்த மண் குடிசைத் தரையிலே கிடக்கவே வந்தாயோ!
ஏனய்யா நேசய்யா என் இயேசய்யா
(ஆருயிரே கண்மணியே!)

செல்வச் சீமான்கள் வீட்டில் நீ பிறந்திருந்தால்
விதவிதமாய் துணிகள் போட்டிருப்பாய்!
தங்கமணி நகைகளிலே நீ ஜொலித்திருப்பாய் செல்ல மகனே!
அத்தனையும் விட்டு விட்டு என் பொன்னே!
கந்தல் துணிக்குள்ளே கைகால்கள் அசைக்கவே வந்தாயோ
ஏனய்யா நேசய்யா என் இயேசய்யா
(ஆருயிரே கண்மணியே!)

மனிதமனம் மாற்றிடுவாய் உயிரே!
இரட்சிப்பை நீ தந்திடுவாய்!
நீதிவழி சொல்லித் தந்து கனியே!
பிதாவிடம் அழைத்துச் செல்வாய்
இந்த பூமியை ஆளுவாய் ஐயா!
முடிவிலாத ராஜ்ஜியம் உனது தானய்யா!
ஏனய்யா நேசய்யா என் இயேசய்யா
(ஆருயிரே கண்மணியே!)

4. உன்னத தேவனே

உன்னத தேவனே! விண்ணக வெளிச்சமே!
கன்மலை நாதனே! பேரின்ப நதியே!
உம்மைத் தேடி வந்தோம் - பிதாவே நாடி வந்தோம்
ஒன்றுகூடி வந்தோம் - துதித்துப் பாடுகின்றோம்
(உன்னத தேவனே)

உம் சாட்சியில் எங்கள் இதயம் களிகூரும்
உம் வலக்கரம் எங்களையெல்லாம் தாங்கி நிற்கும்
காருண்ய கேடகத்தால் சூழ்ந்து கொள்வீர்
எங்கள் ஜெபங்களை இங்கு வந்து ஏற்றுக்கொள்வீர்.
(உன்னத தேவனே)

கூப்பிட்ட நாளில் நீர் பதிலைத் தந்தீர்
ஆத்மாவில் பலம் தந்து தைரியப்படுத்தினீர்
தாயின் கர்ப்பத்தில் எங்களைக் காப்பாற்றினீர்
எல்லாமே எமக்காய் செய்து முடிக்கின்றீர்
(உன்னத தேவனே)

தேவனே உம்மை உயர்த்துவேன்; ஸ்தோத்தரிப்பேன்;
நீர் என்றும் பெரியவர்; துதிக்குப் பாத்திரர்;
பிதாவே! உம் மகத்துவம் எல்லையற்றது
உம் வல்லமை எவ்வுலகிலும் நிகரற்றது
(உன்னத தேவனே)

5. வலைவீசி மீன் பிடித்தது போதும்

வலைவீசி மீன் பிடித்தது போதும்
நிலைமாறும் மனிதர்களைப் பிடிக்க வாருங்கள்
சொன்னார் இயேசு தன்னாலே-சென்றோம் நாங்கள் பின்னாலே
தெரிந்து கொண்டு எங்களை நம்ம இயேசு
ஆக்கிக் கொண்டார் சீடராய் நல்ல இயேசு
நம்ம இயேசு - நல்ல இயேசு - தங்க இயேசு
ஏலேலோ ஐலசா.... ஏலேலேலோ ஐலசா...
ஏலேலோ ஐலசா.... ஏலேலேலோ ஐலசா... (வலைவீசி)

அன்பு செய்து எங்களை இயேசுநாதர் போற்றினார்-ஏலேலோ
வேத வசனம் எங்களுக்கு நாளும் பொழுதும்
சாற்றினார் - ஏலேலேலோ
சிலுவைக்குச் செல்லும் முன்னர் எங்கள் மனம் தேற்றினார்
பரிசுத்த ஆவியை எங்களுக்குள்ளே ஊற்றினார்
எங்களுக்குள்ளே ஊற்றினார்
ஏலேலோ எலேஏலேஏலோ (வலைவீசி)

இயேசு வாழ்ந்த வாழ்க்கைக்கெல்லாம்
நாங்கள் நின்றோம் சாட்சி - ஏலேலோ
அவர் வரலாறாய் ஆனதற்கும்
தந்தோம் நாங்கள் அத்தாட்சி - ஏலேலேலோ
அவர் உயிர்த்தெழுந்து வந்த போதும் தந்தார் எமக்குக் காட்சி
அவர் பரலோகம் சென்றபோதும் கண்டோம் அந்த மாட்சி
கண்டோம் அந்த மாட்சி
ஏலேலோ எலேஏலேஏலோ (வலைவீசி)

வெளியரங்கமாகாத மறைபொருளும் இல்லை - ஏலேலோ
அறியப்படா ரகசியங்கள் இனி இங்கு இல்லை - ஏலேலோ
இருட்டில் நான் சொல்லுவதை
வெளிச்சத்தில் சொல்லுங்கள்
போதித்தார் இயேசு - புறப்பட்டோம் உலகெங்கும்
புறப்பட்டோம் உலகெங்கும் (வலைவீசி)

5. வலைவீசி மீன் பிடித்தது போதும்

வலைவீசி மீன் பிடித்தது போதும்
நிலைமாறும் மனிதர்களைப் பிடிக்க வாருங்கள்
சொன்னார் இயேசு தன்னாலே-சென்றோம் நாங்கள் பின்னாலே
தெரிந்து கொண்டு எங்களை நம்ம இயேசு
ஆக்கிக் கொண்டார் சீடராய் நல்ல இயேசு
நம்ம இயேசு - நல்ல இயேசு - தங்க இயேசு
ஏலேலோ ஐலசா.... ஏலேலேலோ ஐலசா...
ஏலேலோ ஐலசா.... ஏலேலேலோ ஐலசா... (வலைவீசி)

அன்பு செய்து எங்களை இயேசுநாதர் போற்றினார்-ஏலேலோ
வேத வசனம் எங்களுக்கு நாளும் பொழுதும்
சாற்றினார் - ஏலேலேலோ
சிலுவைக்குச் செல்லும் முன்னர் எங்கள் மனம் தேற்றினார்
பரிசுத்த ஆவியை எங்களுக்குள்ளே ஊற்றினார்
எங்களுக்குள்ளே ஊற்றினார்
ஏலேலோ எலேஏலேஏலோ (வலைவீசி)

இயேசு வாழ்ந்த வாழ்க்கைக்கெல்லாம்
நாங்கள் நின்றோம் சாட்சி - ஏலேலோ
அவர் வரலாறாய் ஆனதற்கும்
தந்தோம் நாங்கள் அத்தாட்சி - ஏலேலேலோ
அவர் உயிர்த்தெழுந்து வந்த போதும் தந்தார் எமக்குக் காட்சி
அவர் பரலோகம் சென்றபோதும் கண்டோம் அந்த மாட்சி
கண்டோம் அந்த மாட்சி
ஏலேலோ எலேஏலேஏலோ (வலைவீசி)

வெளியரங்கமாகாத மறைபொருளும் இல்லை - ஏலேலோ
அறியப்படா ரகசியங்கள் இனி இங்கு இல்லை - ஏலேலோ
இருட்டில் நான் சொல்லுவதை
வெளிச்சத்தில் சொல்லுங்கள்
போதித்தார் இயேசு - புறப்பட்டோம் உலகெங்கும்
புறப்பட்டோம் உலகெங்கும் (வலைவீசி)

6. ஆவியானவர் எனக்குள் வந்தார்

ஆவியானவர் எனக்குள் வந்தார்
பெலனே தந்தார் - ஆனந்தம் ஆனந்தமே!
பாவியாய் இருந்த என்மேல் அவரும்
கிருபை வைத்தார் - ஆனந்தம் ஆனந்தமே!
தந்தார் எனக்கு மறு ரூபம் ஆனந்தம் ஆனந்தமே!
வாழ்வில் இனிமேல் வசந்தம் தானே ஆனந்தம் ஆனந்தமே!
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!
ஆனந்தம் ஆனந்தம், ஆனந்தமே!

(ஆவியானவர்)

செய்த பாவம் அறிக்கையிட்டேன்
பாவ மன்னிப்பு பெற்றுக் கொண்டேன்
மனதை பரிசுத்தம் ஆக்கி வைத்தேன்
என் உடலை ஆலயம் ஆக்கி வைத்தேன்
வந்தார் வந்தார் வந்தாரே - பரிசுத்த ஆவி வந்தாரே
தந்தார் தந்தார் தந்தாரே - ஆவியின் வரங்கள் தந்தாரே
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!
ஆனந்தம், ஆனந்தமே!

(ஆவியானவர்)

தேவ ஆவி என்மேல் இருக்கின்றார்
அபிஷேகத்தாலே நிரப்புகின்றார்
சிறுமைப்பட்டோருக்கு நற்செய்தி
அறிவிக்க என்னோடு இருக்கின்றார்
கொடுத்தார் கொடுத்தார் கொடுத்தாரே
துதியின் உடையை கொடுத்தாரே
துடைத்தார், துடைத்தார், துடைத்தாரே
என் கண்ணீரெல்லாம் துடைத்தாரே
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!
ஆனந்தம் ஆனந்தமே!

(ஆவியானவர்)

ஆவியானவர் ஐக்கியம் போதும்
சுகங்கள் வேறு வேண்டாமே
உயிரைத் தந்தாலும் உலகைத் தந்தாலும்
இதற்கு ஈடு வேறு உண்டோ!
கேட்டார் கேட்டார் கேட்டாரே
என் விண்ணப்பத்தைக் கேட்டாரே
மீட்டார் மீட்டார் மீட்டாரே
என் ஆத்துமாவை மீட்டாரே!
ஆனந்தம் ஆன்ந்தம் ஆனந்தமே!
ஆனந்தம் ஆனந்தமே! (ஆவியானவர்)

7. என் உள்ளமே நீ

என் உள்ளமே நீ - இயேசுவையே பற்றிக் கொள்வாய்
இந்த உலக வாழ்க்கை பாலைவனம்
கர்த்தர் இரட்சிப்பை பெற்றுவிட்டால் சோலைவனம்
கானல் நீராய்க் காணும் உலகில்
கன்மலை தேவன் ஆறுதலே
காருண்ய தேவன் தேறுதலே
(என் உள்ளமே நீ)

உதட்டில் சிரிக்கும் மனிதர்
நெஞ்சத்தில் வஞ்சங்கள் கொள்வாரே
துன்பங்கள் சூழும் நேரத்திலே
துணை செய்யாமல் மறைவாரே
எல்லாம் இங்கு மாயம் மாயம்
இதயமெல்லாம் காயம் காயம்
மாறா அன்பைத் தருபவர்
நம்பிக்கை ஒளியாய் இருப்பவர்
விண்ணுக்கும் மண்ணுக்கும் மத்தியஸ்தர்
வழி நடத்தும் நித்தியஸ்தர்
இயேசுதானே! நம் இயேசுதானே!
(என் உள்ளமே நீ)

வந்தார் தேவன் வாசலில்
என் வாழ்க்கை அவர் கரங்களில்
இரவும் பகலும் எப்பொழுதும்
நமக்குத் துணை நம் தேவனே
பலத்தினாலும் இல்லை இல்லை
அதி வலிமையாலும் இல்லை இல்லை
உன் பலவீனத்தில் என் பலம்
பூரணமாய் விளங்கும் என்றார்
என் கிருபை உனக்குப் போதும்
என் ஆவியால் எல்லாம் ஆகும்
சொன்னாரே தேவன் சொன்னாரே (என் உள்ளமே நீ)

8. எவ்வளவு நல்லவர்

எவ்வளவு நல்லவர்-கர்த்தர் எவ்வளவு நல்லவர்
அவர் செய்கைகளைப் பாருங்கள் தெரியுமே!
எவ்வளவு நல்லவர்-கர்த்தர் எவ்வளவு நல்லவர்
கர்த்தர் பெரியவர்-கர்த்தர் அற்புதர்
கர்த்தர் அதிசயமானவை செய்பவர்
எவ்வளவு நல்லவர்-கர்த்தர் எவ்வளவு நல்லவர்
(எவ்வளவு நல்லவர்)

ஆதியிலே தம் ஜனத்தைப் பிரித்தெடுத்தார்
எகிப்திலிருந்து அவர்களை மீட்டுக் கொண்டார்
இஸ்ரவேலர் என்ற பெயர் வைத்தழைத்தார் - 2
ஒரு தேசத்தையே ஆக்கி அவர் கையில் கொடுத்தார் - 2
(எவ்வளவு நல்லவர்)

ஆடுகளை மேய்த்தவனை அரசன் ஆக்கினார்
அந்த தாவீது ராஜாவை மேன்மைப்படுத்தினார்
ராஜ்ஜியம் மேல் ராஜ்ஜியத்தை ஆளச் செய்தார் - 2
அவன் வம்சத்தில் தான் இயேசுவையே பிறக்க வைத்தார்-2
(எவ்வளவு நல்லவர்)

பிறக்கும் முன்னே நம்மை அவர் தெரிந்து வைத்தார்
நம் பெயரைக்கூட முன் கூட்டியே குறித்து வைத்தார்
நம் எல்லோரையும் உள்ளங்கையில் வரைந்து வைத்தார்-2
பெற்ற தாயைவிட மேலாகப் பாசம் வைத்தார் - 2
(எவ்வளவு நல்லவர்)

9. வருகிறார் இயேசு

வருகிறார் இயேசு வருகிறார் உலகை ஆளும் மன்னன் வருகிறார்!
ராஜாதிராஜன் வருகிறார்! தேவாதி தேவன் வருகிறார்!
ஓசன்னா பாடுங்கள்! துதிகளைச் செலுத்துங்கள்!
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா! ஓசன்னா!
(வருகிறார் இயேசு)

தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நிறைவேறும் நாள் இதுதானே!
இந்த ஊர்வலம் தானே! கழுதையின் மீதும் அதன்
குட்டியின்மீதும்
கம்பீரமாய் அமர்ந்து கர்த்தர் இயேசு வருகிறார்!
தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! } 2
ஆண்டவர் பெயரால் வருகிறார்
ஆசிபெற்றவர் அவரை வணங்குவோம்! - 2
ராஜாதி ராஜன் வருகிறார், தேவாதி தேவன் வருகிறார்
ஓசன்னா பாடுங்கள், துதிகளைச் செலுத்துங்கள்
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா! ஓசன்னா!
(வருகிறார் இயேசு)

தேவனின் நேசக்குமாரனே, வருகவே
யூத ராஜனே, அன்புநேயனே, வருகவே
ஓசன்னா பாடுங்கள், துதிகளைச் செலுத்துங்கள்
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா ஓசன்னா!
(வருகிறார் இயேசு)

முன்னும் பின்னுமாக திரளான ஜனங்கள்
இயேசுவுடன் சேர்ந்து நடந்து வருகிறார்!
வஸ்திரங்கள் எடுத்து வீதியில் விரிக்கிறார்!
மரக்கிளை தறித்து பாதையில் பரப்புகிறார்!
எருசலேம் நகரில் இயேசு பவனி வருகிறார்! } 2
நகரத்தார் யாவரும் யார் இவர் என்கிறார்!
இயேசு என்று தான் ஜனங்கள் சொல்கிறார்!
இயேசு என்று தான் ஜனங்கள் சொல்கிறார்!
ராஜாதிராஜன் வருகிறார்! தேவாதி தேவன் வருகிறார்!
ஓசன்னா பாடுங்கள் துதிகளை செலுத்துங்கள்!
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா ஓசன்னா!
(வருகிறார் இயேசு)

சுகஜீவ கீதங்கள்
VOL 3

1. ஜீவ ஒளி ஒன்று

ஜீவ ஒளி ஒன்று தோன்றுதே - அது
இயேசு கிறிஸ்து என்று தெரியுதே -2
என் ஆத்துமா வாஞ்சிக்கும் மீட்பர் இவர்தானே - 2
நம் தேவனின் நேச மகன் தானே - 2
(ஜீவ ஒளி)

அன்பு குறைந்து வரும் காலம் இந்த காலம் -2
பாவம் பெருகி வரும் உலகம் இந்த உலகம் -2
நாம் இயேசுவோடு சேர்ந்து கொள்ளும் நேரம் இந்த நேரம் - நம்
நெஞ்சிலுள்ள பாரம் எல்லாம் தீரும் இனி தீரும்
நேசர் வந்து நம்மையெல்லாம் அணைத்துக் கொள்வார்
பரலோக ராஜ்ஜியத்தில் இணைத்துக் கொள்வார்
(ஜீவ ஒளி)

இயேசு சிலுவை இரத்தம் ஜெயமே நமக்கு ஜெயமே - அவர்-2
பெயரைக் கேட்டாலே பயமே சாத்தானுக்கு பயமே -2
மனம் வருந்தி திருந்திட எடுப்போம் - உறுதி எடுப்போம்
இந்த உலக நாட்டங்களில் தடுப்போம் - உள்ளத்தைத் தடுப்போம்
மாம்ச இச்சைகளை உதறிடுவோம்
இரட்சிப்பை இயேசுவிடம் வேண்டிடுவோம்
(ஜீவ ஒளி)

2. துதித்து துதித்து பாடிடுவோம்

துதித்து துதித்து பாடிடுவோம்
இயேசுராஜனை நம் நேயனை
துதித்து துதித்து பாடிடுவோம்
இசைத்து இசைத்து சுவைத்து சுவைத்து
துதித்து துதித்து பாடிடுவோம்

ஆர்ப்பரித்து ஆர்ப்பரித்து
சங்கீதத்தால் ஆர்ப்பரித்து
ஸ்தோத்தரித்து ஸ்தோத்தரித்து
கர்த்தர் நாமம் ஸ்தோத்தரித்து

(துதித்து)

பத்து நரம்பு வீணையிலே
நாதங்களை நாம் எழுப்புவோம்
தம்புராவை மீட்டுவோம்
இயேசு நாமம் பாடுவோம்
பூரிகையை கையில் எடுப்போம்
ஆனந்தமாய் களி கூருவோம்
எக்காளத்துடன் - கைத்தாளத்துடன் - 2

(துதித்து)

சுர மண்டலத்தில் கீர்த்தனங்கள்
கர்த்தருக்கு நாம் சூட்டுவோம்
அனுதினமும் கூடுவோம்
ஆராதனை செய்திடுவோம்
மகத்துவமான கர்த்தர் செய்கையை
மகிழ்ந்து நாம் முழங்கிடுவோம்
கர்த்தர் உத்தமர் - அதி உன்னதர் (2)

(துதித்து)

3. உன்னைவிட்டு

உன்னைவிட்டு விலகாது என் கிருபை - என்றும்
நிலை பெயராது என் சமாதான உடன்படிக்கை
மலைகள் விலகினாலும் பருவதங்கள் மாறினாலும்
உன்னை விட்டு விலகாது என் கிருபை

(உன்னைவிட்டு)

இமைப் பொழுது உன்னை நான் கைவிட்டாலும் - உன்னை
நான் கைவிட்டாலும்
உருக்கமான இரக்கத்தால் சேர்த்துக் கொள்வேன்
உன்னை நான் சேர்த்துக் கொள்வேன்
அற்பகாலம் மூண்டதே கோபம் - அதனால்
இமைப் பொழுது மறைத்தேன் என்முகம் - மறைத்தேன்
என்முகம்
ஆனாலும் மனமுருகி, நித்திய கிருபையோடு
இரங்குவேன் உனக்கு நான் இரங்குவேன்

(உன்னைவிட்டு)

உன் பலகணிகளை பளிங்கு கற்களால் - பளிங்கு கற்களால்
உன் வாசல்களை மாணிக்க கற்களால்
உன் மதில்களை உசிதமான கற்களால்
அழகு செய்வேன் உன் வீட்டை நான் அழகு செய்வேன்
நீதியில் ஸ்திரப்படுவாய் கொடுமைக்கு தூரமாவாய்
கொடுமைக்கு தூரமாவாய்
பயமும், திகிலும் உன்னை அணுகுவதில்லை
உனக்கு விரோதமாய் கூடுவோர் - உன்
பட்சத்தில் அவர்கள் வருவார்கள்.

(உன்னைவிட்டு)

4. எல்லையில்லா பேரின்பம்

எல்லையில்லா பேரின்பம் அடைகிறேன் - பிதாவே
எல்லையில்லா பேரின்பம் அடைகிறேன்.
உம் சமூகத்தில் நான் வந்து நிற்கின்றபோது
எல்லையில்லா பேரின்பம் அடைகிறேன்
என் வலக்கரம் பிடித்து நீர் துணை நிற்கும்போது
எல்லையில்லா பேரின்பம் அடைகிறேன் - பிதாவே
எல்லையில்லா பேரின்பம் அடைகிறேன்
(எல்லையில்லா)

ஆலயத்தில் ஆராதனை செய்கின்றபோது
ஆன்மாவில் சுகம் வந்து நதிபோல பாயுதே
(எல்லையில்லா)

ஜெப வீட்டில் மனமுருகி ஜெபிக்கின்றபோது
நீர் என்னோடு ஒன்றாக இருப்பதை அறிகிறேன்
(எல்லையில்லா)

கண்போல எனைக் காக்கும் கன்மலையே
உம் பொன்னான பாதத்தை பணிந்து தொழுகிறேன்
(எல்லையில்லா)

தாய்ப் பசுவின் அணைப்பில் இருக்கின்ற கன்றுபோல்
சேயாக நான் உமது மடியில் மகிழ்கிறேன்
(எல்லையில்லா)

பரிசுத்த ஆவியில் நிறைகின்றபொழுது
புதுப்பெலன் அடைந்து சாட்சி தருகிறேன்
(எல்லையில்லா)

தொல்லை மிகுந்த உலகில் துயர் போக்கும் - பிதாவே
கிள்ளை போல் நான் உமது நாமத்தையே சொல்லுவேன்
(எல்லையில்லா)

5. இறங்கி வாரும்

இறங்கி வாரும் இறங்கி வாரும் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
எங்கள் மீது இறங்கி வாரும் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (இறங்கி வாரும்

கர்த்தரோடு இருக்கின்ற ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
எங்களோடு வாசம் செய்வீர் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
இயேசு மீது இறங்கி வந்த ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
எங்கள் நெஞ்சில் நிரம்பிடுவீர் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (இறங்கி வாரும்)

உடல் சோர்வை நீக்கிடுவீர் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
ஆத்ம பலம் தந்தடுவீர் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
ஜீவனைக் காக்கின்ற ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
நோய்களெல்லாம் போக்கிடுவீர் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (இறங்கி வாரும்)

அதிசயங்கள் புரிகின்ற ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
அற்புதங்கள் செய்திடுவீர் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
துன்பங்களை களைந்திடுவீர் ஆவியானவரே
-பரிசுத்த ஆவியானவரே
இன்ப வாழ்வை தந்திடுவீர் ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா - (4)
(இறங்கி வாரும்)

6. என் உள்ளம்

என் உள்ளம் மகிழுதே துள்ளியாடத் தோணுதே
என் வாழ்க்கையை இயேசுவுக்கு தந்த நாள் இது - அவர்
என்னை ஆட்கொண்ட நல்லநாள் இது
உடலெங்கும் பரவசப் பிரவாகமே
பிறக்குதே புதுப்பாடல் ஓராயிரம்
ஊரைக் கூட்டி பாடி களிப்பேனே
என் உள்ளம்

அத்திமரம் காய் காய்த்தது
திராட்சைக் கொடி பூ பூத்தது
குருவிகள் பாடும் காலம் வந்தது
என் நேசர் என்னோடு பேசினார்
என் உள்ளம்

என் இருதயத்தை கவர்ந்து கொண்டார்
அவர் நேசம் மதுரமானது
தென்றலும் வாடைக்காற்றும் வந்துவிட்டது
ஜீவ தண்ணீராய் நேசர் வந்தார்
என் உள்ளம்

மாரி காலம் சென்று விட்டது
மழை பெய்து ஓய்ந்து விட்டது
காட்டு புறாவின் சத்தம் காதில் கேட்குது
இன்பமான எந்தன் நேசர் என்னை அழைக்கிறார்
என் உள்ளம்

7. அடிக்கப்படும் ஆட்டைப்போல்

அடிக்கப்படும் ஆட்டைப்போல் இயேசுவை
பிடித்துச் செல்ல வந்தார்கள் பாவிகள்
கெத்செமனே தோட்டத்தில் நின்று
யூதாஸ் காட்டிக் கொடுத்தான் நீசரிடம் நேசரை
நெஞ்சம் தாங்கலயே நம்முடைய பாவத்திற்காய்
மீட்பராய் மண்ணில் வந்த - இயேசு
தன்னையே பலியாக தந்தார் - தன்
ஜீவனை விலையாகத் தந்தார். (அடிக்கப்படும்)

பிரதான ஆசாரியர் சபையிலே இயேசுவை
கொண்டுவந்து நிறுத்தினார்கள் நடுவிலே
செய்யாத குற்றத்திற்கு தண்டனை தரவேண்டி
பொய் சாட்சி தேடினார்கள் நகரிலே
சிலுவையில் அறையும் அனுமதிக்காக
தேசாதிபதி பிலாத்துவிடம் அழைத்துச் சென்றார்கள் நேசரை
அழைத்துச் சென்றார்கள் நேசரை
(அடிக்கப்படும்)

அரண்மனைக் கூடத்தில் பிலாத்து இயேசுவிடம்
விசாரணை நடத்தினான் விபரமாக
தண்டனைக்கு ஏதுவாய் குற்றங்கள் ஒன்றுமே
இல்லையென்பதை புரிந்து கொண்டான்
ஆனாலும் ஜனங்களின் கூச்சலுக்கு பயந்து
சிலுவையில் அறையவே ஒப்புக் கொடுத்தான்
சிலுவையில் அறையவே ஒப்புக் கொடுத்தான்
(அடிக்கப்படும்)

பிலாத்துவின் அரண்மனை போர்ச்சேவகர்
இயேசுவை மோசமாய் இம்சைப்படுத்தினர்
முள் முடியை எடுத்து தலையில் வைத்து இறுக்கினர்
முகத்திலே உமிழ்ந்து பரிகசித்தனர்
கோலால் தலையில் பலமாய் அடித்து
சிலுவையை சுமந்தே நடக்க வைத்தனர் - 2
(அடிக்கப்படும்)

கல் மனம் படைத்த கயவர்கள் இயேசுவை
கல்வாரி சிலுவையில் கிடத்தினர்
ஆணியால் அடித்து இரண்டு கள்வருக்கு
நடுவில் நிறுத்தினர் கொடியவர்
இயேசுவின் இரத்தம் ஆறாக ஓடியதே - அவர்
ஜீவன் அடங்கி பூமியெல்லாம் நடுங்கியதே - 2
(அடிக்கப்படும்)

8. உயிரோடு இருப்பவரை

உயிரோடு இருப்பவரை மரித்தோரில் நீங்கள்
வந்து தேடுவதென்ன?
மரியாளிடமும் மகதலேனா மரியாளிடமும்
கேட்டான் தேவதூதன்
உயிர்த்தார் உயிர்த்தார் இயேசு உயிர்த்தார்
விழித்தார் எழுந்தார் இயேசு எழுந்தார் இயேசு
உயிர்த்து எழுந்தார்
(உயிரோடு)

ஜீவனைத் தருகின்றவர் ஜீவனின்றி இருப்பாரா?
பூமியைப் படைத்தவரை இந்த பூமிதான்
மூடிக்கொள்ளுமோ?
மரணமே உன் கூர் எங்கே?
பாதாளமே உன் ஜெயம் எங்கே?
சாத்தானை இயேசு வென்று விட்டார்
சாதனை இயேசு புரிந்துவிட்டார்.
(உயிரோடு)

உயிர்த்தெழுந்த இயேசு கலிலேயா போனார் - தம்
சீடரைக் கண்டு பரவசமானார்
பசியால் இருக்கின்றேன் உணவு தாரும் என்றார்
மீனும் தேனும் தர விரும்பியே உண்டார்
கண்டதனால் விசுவாசித்தீர் - காணாமல்
விசுவாசிப்பவன் பாக்கியவான் இயேசு சொன்னார்.
(உயிரோடு)

உலகெங்கும் செல்லுங்கள் நற்செய்தி பரப்புங்கள்
அன்பாய் இயேசு சீடரை ஏவினார்
பாடுகள் அடைந்ததும் சிலுவையில் மரித்ததும்
மூன்றாம் நாள் உயிர்த்ததும் வேத வாக்கியம் நிறைவேற்றமே
சொல்லியே இயேசு ஆசீர்வதித்தார் - அவர்கள்
கண்காண விண்ணில் சென்றுவிட்டார்
பிதாவின் வலப்பக்கம் அமர்ந்துவிட்டார்.
(உயிரோடு)

9. அன்பே அன்பே

அன்பே அன்பே அன்பே அன்பே தேவ அன்பே - என்னை -(2)
எந்நாளும் அரவணைக்கும் கல்வாரி அன்பே - என்
உயிரோடு கலந்துவிட்ட ஜீவ அன்பே
அன்பே அன்பே அன்பே அன்பே தேவ அன்பே
(அன்பே அன்பே)

இயேசுவே உமது அன்பு நீளமானது - அகலமானது
நேசரே உமது அன்பு ஆழமானது - உயரமானது
இதை எடுத்துக் காட்டவே என் இயேசுவே
சிலுவையில் அறையப்பட்டீரோ
ரத்தத்தை சிந்தி விளங்க வைத்தீரோ - (2)
(அன்பே அன்பே)

ஏதேன் தோட்டத்தில் ஆதி பெற்றோர்
கர்த்தர் வார்த்தையை மீறி நடந்தனர்
பாவங்களில் விழுந்துவிட்டார்
தேவ சாபங்கள் அவர்மேல் மூண்டதே
இயேசுவே உமது சிலுவை மரணத்தில்
எங்கள் ஜீவன் மீண்டதே
நித்திய வாழ்வைக் கண்டதே - (2)
(அன்பே அன்பே)

இயேசுவே தேவனுக்கு கீழ்ப்படிந்தீர் - தாழ்மை கொண்டீர்
தம்மைத் தாமே வெறுமையாக்கி மனிதரானீர் - அடிமையானீர்
தேவன் உம்மையே அதிகம் உயர்த்தினார்
மகிமை நாமத்தை அருளினார்
உமது சிந்தை எமது பாக்கியம் - (2)
(அன்பே அன்பே)

சுக ஜீவ கீதங்கள்

VOL 4

1. வாழ்க்கைக்குத் தேவை

வாழ்க்கைக்குத் தேவை மனதில் அன்பு
மனித இனமே இதை நீ நம்பு
அன்பு இல்லையேல் எதுவும் இல்லையே
அன்பு இருந்தால் பரலோகம் கையிலே

(வாழ்க்கைக்கு)

அன்னதானம் செய்தாலும் அறிவு மிகவும் இருந்தாலும்
அந்நிய பாஷை பேசினாலும் தூதர் பாஷை பேசினாலும்
அன்பு இல்லையேல் எதுவும் இல்லையே
அன்பு இருந்தால் பரலோகம் கையிலே

(வாழ்க்கைக்கு)

மலையை நகர்த்தும் விசுவாசம் இருதயத்திலே இருந்தாலும்
உடலை தானம் கொடுத்தாலும் தீர்க்க தரிசனம் சொன்னாலும்
அன்பு இல்லையேல் எதுவும் இல்லையே
அன்பு இருந்தால் பரலோகம் கையிலே

(வாழ்க்கைக்கு)

நீடிய சாந்தம் கொண்டது தயவு மிகவும் உள்ளது
தன்னைத்தானே புகழாது அயோக்யமானதைச் செய்யாது
அன்பு இல்லையேல் எதுவும் இல்லையே
அன்பு இருந்தால் பரலோகம் கையிலே

(வாழ்க்கைக்கு)

அன்பு பொறாமை கொள்ளாது இருமாப்பை அடையாது
கோபம் அதற்கு கிடையாது தீங்கு என்றும் நினையாது
அன்பு இல்லையேல் எதுவும் இல்லையே
அன்பு இருந்தால் பரலோகம் கையிலே

(வாழ்க்கைக்கு)

அன்பு எதையும் தாங்கும் அன்பு எதையும் விசுவாசிக்கும்
அன்பு எதையும் நம்பும் அன்பு எதையும் சகிக்கும்
அன்பு இல்லையேல் எதுவும் இல்லையே
அன்பு இருந்தால் பரலோகம் கையிலே

(வாழ்க்கைக்கு)

2. கடல் மீது நடந்திடுவாய்

கடல் மீது நடந்திடுவாய் - நீ என்னை விசுவாசித்தால்
மலையைக் கூட நகர்த்திடுவாய் நீ என்னை விசுவாசித்தால்
இடர்களை தாண்டிடுவாய்-செந்தழலிலே
குளிர்ந்திடுவாய் நீ என்னை விசுவாசித்தால்
முழு இதயத்தோடு விசுவாசித்தால்
நீ என்னை விசுவாசித்தால்
(கடல் மீது)

என்னை விசுவாசிப்பவர் மரித்தாலும் பிழைப்பாரே
அவர் உயிர்ப்பாரே ஜீவன் பெறுவாரே
லாசரை எழுப்பினேனே
மாண்டவன் மீண்டானே - என்னைக் கண்டானே
(கடல் மீது)

சிங்கத்தின் கைக்குள் அகப்பட்ட
தானியேலை காத்தவர் நான் - மீட்டவர் நான்
உன்னையும் மீட்பேனே காலமெல்லாம்
துணை செய்வேனே என்றும் இரட்சிப்பேனே
(கடல் மீது)

கடலில் புயல் வீசியதே
படகில் சீடர் பயந்தனரே மிரண்டு நடுங்கினரே
காற்றை அடக்கி காத்தேனே
கரையில் நலமாய் சேர்த்தேனே அருள் புரிந்தேனே
(கடல் மீது)

மகனே மகளே வாருங்கள் என்மீது
விசுவாசம் வையுங்கள் திடம் கொள்ளுங்கள்
துன்பங்கள் யாவும் தீருமே நினைப்பதெல்லாம்
நிறைவேறுமே - வளம் சேருமே
(கடல் மீது)

3. அடைக்கலமே

அடைக்கலமே நாடி வந்தேன் எந்தன் தேவனே - உடைந்த
உள்ளத்தோடு தேடி வந்தேன் இயேசு இராஜனே
உற்றதுணை என்று இங்கு யாரும் இல்லையே
பற்றிக் கொள்ள உம்மைத் தவிர எவரும் இல்லையே

(அடைக்கலமே)

பணக்கஷ்டம் மனக் கஷ்டம் என்னை நெருக்குதே
கை கொடுக்கும் தெய்வமே கருணை காட்டுவீர்
துன்பம் துயரம் அதிகமாக என்னை வாட்டுதே
நுகத்தடியை எடுத்துப்போட ஓடி வாருமே ஐயா,

(அடைக்கலமே)

உலக சுகத்தில் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினேன்
அமைதி தேடி எங்கெங்கோ அலைந்து திரிகிறேன்
சமாதானம் விட்டுச் சென்ற மதுர இயேசுவே
நொருங்குண்ட இதயத்தை தேற்ற வாருமே ஐயா,

(அடைக்கலமே)

நோயினால் தாக்கப்பட்டேன் குணமளிப்பீரே
வாயினால் அறிக்கையிட்டேன் இரட்சித்தருள்வீரே
துதி கனம் மகிமையெல்லாம் உமக்கு செலுத்துவேன்
கதி நீரே எனக்கென்றும் கருணை நாதனே ஐயா,

(அடைக்கலமே)

4. இயேசு இயேசு இயேசு என்றால்

இயேசு இயேசு இயேசு என்றால் ஆசீர்வாதமே
இயேசு இயேசு இயேசு என்றால் சமாதானமே
இயேசு இயேசு இயேசு என்றால் உடலில் சுகமே
இயேசு இயேசு இயேசு என்றால் வாழ்வில் நலமே
இயேசு இயேசு இயேசு இயேசு எந்தன் சொந்தமே
இயேசு இயேசு இயேசு இயேசு எந்தன் பந்தமே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(இயேசு இயேசு)

இயேசுவை எந்நாளும் விசுவாசிப்பேனே
இயேசுவிடம் பாவங்களை அறிக்கை செய்வேனே
இயேசுவை நாள்தோறும் துதித்திடுவேனே
இயேசுவுக்கு நன்றிபலி செலுத்திடுவேனே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(இயேசு இயேசு)

இயேசு தானே ஆதியிலே வார்த்தையானவர்
இயேசு தானே ஜீவனுக்கு ஒளியானவர்
இயேசு தானே சத்தியமும் வழியும் ஆனவர்
இயேசு தானே தேவ அன்பின் ஊற்றானவர்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(இயேசு இயேசு)

இயேசு மீண்டும் உலகிற்கு வரப் போகிறார்
இயேசு இந்த பூமியை ஆளப் போகிறார்
இயேசுவுக்கு வாழ்க்கையை ஒப்புக் கொடுப்போம்
இயேசுவுக்கு வாசலை திறந்து வைப்போம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(இயேசு இயேசு)

5. என் எண்ணமெல்லாம்

என் எண்ணமெல்லாம் இயேசு மீது இருக்குதே - அவர்
வரவுக்காக ஏங்கி ஏங்கி தவிக்குதே
விண்ணின் வெளிச்சமாய் வருவாரே - இயேசு
விண்ணக பேரின்பம் தருவாரே.
(என் எண்ணமெல்லாம்)

திராட்சை செடியாய் இயேசு இருக்கிறார் - அந்த
செடியின் கொடியாய் நான் இருப்பேன்
கனி கொடா கொடிபோல் இல்லாமல்
ஆவியின் கனியால் நிறைந்திருப்பேன்
(என் எண்ணமெல்லாம்)

என் சொந்த ரட்சகர் இயேசு ஒருவரே - என்னை
ரட்சிக்க வல்லவர் அவர் தானே
பாவ மன்னிப்பை அவர் தருவார்
தேவ கிருபை அவர் அருள்வார்
(என் எண்ணமெல்லாம்)

அன்பின் வடிவம் இயேசு ஆண்டவர் - மன
உருக்கம் இரக்கம் எல்லாம் கொண்டவர்
ஜீவ பலியாய் தன்னை தந்தவர் - கண்
மணிபோல் என்னைக் காக்கின்றார்
(என் எண்ணமெல்லாம்)

என் சரீரம் ஒரு நாள் மடிந்தாலும் - இந்த
உலக வாழ்க்கை முடிந்தாலும்
நித்தியா நித்திய காலமே - என்
ஆத்துமா இயேசுவில் வாழுமே
(என் எண்ணமெல்லாம்)

6. கலங்காதே மனமே

கலங்காதே மனமே - கர்த்தர்
இயேசு கவலைகள் மாற்றுவார்
திகையாதே நெஞ்சமே திகையாதே - நம் - (2)
நேசர் துணையாய் வருவாரே - (2)
(கலங்காதே மனமே)

எகிப்து நாட்டில் யோசேப்பு
அடிமையாய் அடைந்தான் வேதனை
கர்த்தரின் கண்களில் தயவு பெற்றான் - (2)
இராஜாவுக்கு சமமாய் உயர்த்தப்பட்டான் - (2)
(கலங்காதே மனமே)

இயேசுவின் சீடர்கள் தாமாக
விரித்த வலையில் மீன், இல்லையே
இயேசு சொன்ன படகின் பக்கம் - (2)
வலை போட்டனர் மிகுந்தன மீன்களே - (2)
(கலங்காதே மனமே)

மீனின் வயிற்றில் மூன்று நாட்கள்
இருந்தான் யோனா கடலின் கீழ்
கர்த்தரை துதித்து விண்ணப்பித்தான் - (2)
நலமாய் மீண்டான் கரை சேர்ந்தான் - (2)
(கலங்காதே மனமே)

இயேசுவின் மீது திடம் கொண்டு
விசுவாசம் நீயும் வைத்துவிடு - உன்
வேதனை யாவும் தீர்த்திடுவார் - (2)
அமைதியை வாழ்வில் தந்திடுவார் - (2)
(கலங்காதே மனமே)

7. இதை நீ நம்பு

இதை நீ நம்பு - இயேசுவே
இரட்சண்ய கொம்பு
பரத்திலிருந்து வந்தவர், பரமேறி சென்றவர்
பூமியிலே நேசக்கொடி, நாட்டியவர் - இந்த
பூமியிலே நேசக்கொடி, நாட்டியவர் - இந்த

(இதை நீ)

துன்பமா, துயரமா, கவலையா, கண்ணீரா
ஓடு இயேசுவிடம் ஓடு, நாடு அவர் இரட்சிப்பை நாடு
உன் வேதனை யாவும் தீர்த்திடுவார்
விடுதலை உனக்குத் தந்திடுவார்.

(இதை நீ)

நோய்களா, நொடிகளா, தீராத வியாதிகளா
வந்துவிடு இயேசுவிடம் வந்துவிடு
முறையிடு அவர் சமூகத்தில் முறையிடு
தீராத வியாதியெல்லாம் தீர்த்திடுவார்
அற்புத சுகம் தந்து காத்திடுவார்

(இதை நீ)

தோல்வியா, துக்கமா, சோர்வா, ஏக்கமா
மண்டியிடு இயேசுவிடம் மண்டியிடு
மன்றாடு அவர் சன்னதியில் மன்றாடு - உன்
காரியம் யாவும் வாய்க்கச் செய்வார் - உன்
வாழ்க்கையை ஜெயமாய் மாற்றிடுவார்.

(இதை நீ)

8. உம்மால் கூடுமே

உம்மால் கூடுமே - தேவனே
உம்மால் கூடுமே - எல்லாமே
உம்மால் கூடுமே - தேவனே உம்மால் கூடுமே
முடியாது என்ற நிலை வந்தாலும்
நடக்காது என்று நன்கு தெரிந்தாலும்
(உம்மால் கூடுமே)

யோபுவின் வாழ்வில் எல்லாம் இழந்தான் - ஆனாலும்
உமது கிருபையில் திடம் கொண்டான்
அவன் மீது இறுதியில் இரக்கம் வைத்தீர்
இழந்ததை இரு மடங்காய் கிடைக்கப் பெற்றான்
(உம்மால் கூடுமே)

தாவீது போர் நடத்திச் சென்றான்
மனைவி மக்கள் சேனைகள் எல்லாம் இழந்தான்
ஆவியில் நிறைந்து ஜெபித்தான் அழுதான்
ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் மீட்டுக் கொண்டான்
(உம்மால் கூடுமே)

தோல்வியின் விளிம்பில் நின்றாலும்
வெற்றியாய் மாற்றித் தருவீரே
தீராத நோயில் விழுந்தாலும்
அற்புத சுகம் தந்து காத்துக் கொள்வீர்
(உம்மால் கூடுமே)

துன்பம் தொல்லைகள் சோதனைகள்
வாழ்வில் சூழ்ந்து நின்றாலும்
உம்மிடம் அடைக்கலம் ஆகிவிட்டால்
விடுதலை தந்து ஒளி தருவீர்
(உம்மால் கூடுமே)

9. நான் ஏங்கினேன்

நான் ஏங்கினேன் தூய அன்புக்காய் - தூய அன்புக்காய்
இயேசு ஒருவரே அதைத் தந்தாரே - அதைத் தந்தாரே
இதயத்தை திறந்தேன் இயேசுவிடம் - என்
வாழ்வைத் தந்தேன் நேசரிடம் - என்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

(நான் ஏங்கினேன்)

கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில்
நடந்தேன் நான் திசை தெரியாமல்
என்னைத் தேடி இயேசு வந்தார்
என்னைக் கையில் ஏந்திக் கொண்டார் - இனி
அவரின்றி நான் இல்லையே - என்
இயேசுவின்றி ஏதும் இல்லையே

(நான் ஏங்கினேன்)

விருந்து சாலைக்கு அழைத்தார் இயேசு
பறக்குதே அவர் நேசக் கொடி
அவர் தரும் நிழல் வாஞ்சையானது
அவர் தரும் கனி மதுரமானது - இனி
அவர் இன்றி நான் இல்லையே - என்
இயேசுவின்றி ஏதும் இல்லையே.

(நான் ஏங்கினேன்)

சுகு ஜீவ கீதங்கள்

VOL 5

1. புது வாழ்வு

புது வாழ்வை எனக்குத் தந்த இயேசு ராஜனே
புண்ணிய சீலனே அன்பு நேயனே
அல்லேலூயா பாடுவோம் ஆமென் என்று சொல்லுவோம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

(புது வாழ்வை)

சொந்த வாழ்க்கை வாழ்ந்து பார்த்தேன்
இன்பம் இல்லையே, அமைதி இல்லையே
நிலையான உறுதி இல்லையே
இயேசு எந்தன் வாழ்வில் வந்த பின்னரே
எந்நாளும் மகிழ்ந்திருக்கும் வரத்தைத் தந்தார், அவர்
என்னோடு துணையிருக்கும் சுகத்தைத் தந்தார்

(புது வாழ்வை)

இயேசுவுக்குள் வந்துவிட்டால் மன்னிப்பு உண்டு
இரட்சிப்பு உண்டு, நித்திய வாழ்வின் உறுதி உண்டு
இயேசுவுக்கு நம்மை ஒப்புக் கொடுத்தால்
நம் ஆத்துமாவை இரட்சகர் மீட்டுக் கொள்வார்
நம் ஜீவனை என்றும் காத்துக் கொள்வார்

(புது வாழ்வை)

2. இயேசுவே என்னை

இயேசுவே என்னை கண்நோக்கி பாரும்
உமதண்டையில் என்னைக் கிட்டி சேரும்
உமது மந்தையில் நானொரு ஆடு- என்னை
மேய்ச்சலில் நடத்தும் நீரே நல்ல மேய்ப்பன்

(இயேசுவே என்னை)

உம்மை அறியாமல் பல காலமே
வீணில் போக்கினேன் வெகு நாட்களை
என்னை ஒரு நாள் வந்து தொட்டீரே - என்
வாழ்க்கையில் வெளிச்சம் தந்தீரே

(இயேசுவே என்னை)

விசுவாசத்தோடு ஜெபிக்கையிலே - நீ
கேட்டதெல்லாம் நான் தருவேனே
சொன்னீரே இயேசு ராஜனே - வரம்
தந்தீரே தேவ தேவனே

(இயேசுவே என்னை)

பூமியில் இரண்டு பேர்களே
ஒருமனப்பட்டு கேட்டாலே
பரலோக பிதா அதை அருள்வாரே
சத்திய வார்த்தை தந்தீரே

(இயேசுவே என்னை)

தீமையை ஒருவர் செய்தாலும்
நன்மையை அவருக்கு செய்திடுவீர்
அன்பு வழியை போதித்தீரே
அருள்நாதரே உமக்கு ஸ்தோத்திரம்

(இயேசுவே என்னை)

3. ஒரு வார்த்தை

ஒரு வார்த்தை சொல்லும் போதும் - என்
ஆத்துமா குணமடையும் - ஆத்துமா குணமடையும்
பாவியாக இருக்கின்றேன் பரமனே மன்னியும்
இறைவனே என்னை இரட்சியும்
இறைவனே என்னை இரட்சியும்
(ஒரு வார்த்தை)

உலக சுகத்தில் மிதந்திருந்தேன்
கர்த்தரே உம்மை மறந்திருந்தேன்
நிலையற்ற வாழ்க்கை இது மாயை
நிலையான தேவனே நீர் தானே உண்மை
நிலையான தேவனே நீர் தானே உண்மை
(ஒரு வார்த்தை)

சிலுவையில் எனக்காய், தொங்கினீர்
என் இயேசுவே ரத்தம் சிந்தினீர்
என் மீறுதல் உம் உடலில் காயங்கள்
நான் செய்த பாவங்கள் உம் சிலுவை மரணம்
நான் செய்த பாவங்கள் உம் சிலுவை மரணம்
(ஒரு வார்த்தை)

நித்திய அழிவில் இருந்து என்னை
உம் சத்திய வசனம் காக்குமே
உத்தம இயேசுவே வருவீரே
நித்திய வாழ்வை எனக்குத் தருவீரே
நித்திய வாழ்வை எனக்குத் தருவீரே

(ஒரு வார்த்தை)

4. கேளும் கேளும்

கேளும் கேளும் தேவனே கேளும் - என்
விண்ணப்பத்தை செவியை, சாய்த்து கேளும்
நான் சிறுமையோடும் எளிமையோடும் வந்திருக்கிறேன்
உம் மீது பக்தியை வைத்திருக்கிறேன்.
(கேளும் கேளும்)

என் ஆத்துமாவை காத்துக் கொள்ளும் - நான்
உம்மையே நம்பி இருக்கிறேன் - என்னை
நீர் இரட்சித் தருள்வீர் (2)
(கேளும் கேளும்)

ஆண்டவரே எனக்கு நீர் இரங்குவீரே
நாள்தோறும் உம்மையே கூப்பிடுகிறேன்
என்னை கண்நோக்குவீர் (2)
(கேளும் கேளும்)

எம் ஆத்துமாவை மகிழ்ச்சி ஆக்கிடுவீர் - அதை
உம்மிடத்தில் உயர்த்துகிறேன் - உம்
கிருபையை தந்தருள்வீர் (2)
(கேளும் கேளும்)

ஆண்டவரே நீர் நல்லவர்
மன்னிக்கின்ற மனம் படைத்தவர்
என்னை தாழ்த்தி வணங்குகிறேன் (2)
(கேளும் கேளும்)

5. வெண்புறா

வெண்புறா வடிவில் இறங்கி வந்த ஆவியே
உன்னத பெலனாய் ஊற்றப்பட்ட ஆவியே
அக்னியால் பாவங்களை சுட்டெரிக்கும் ஆவியே
அனல் மூட்டி என்னை சுத்தமாக்கும் ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தேவ ஆவியே ஆவியே ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தூய ஆவியே ஆவியே ஆவியே
(வெண்புறா)

அபிஷேகத்தால் என்னை நிரப்புகின்ற ஆவியே
ஆட்கொண்டு என்னை வழி நடத்தும் ஆவியே
அணையாத தீபமாய் ஒளிவீசும் ஆவியே
ஆனந்த தைலமாய் பரிமளிக்கும் ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தேவ ஆவியே ஆவியே ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தூய ஆவியே ஆவியே ஆவியே
(வெண்புறா

கல்வாரி அன்பில் கனிந்து வந்த ஆவியே
காலியான பாத்திரத்தை நிரப்புகின்ற ஆவியே
நேச ஜுவாலையாய் எரிகின்ற ஆவியே
விசுவாசம் வளர்க்கும் மகிமையான ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தேவ ஆவியே ஆவியே ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தூய ஆவியே ஆவியே ஆவியே
(வெண்புறா)

பின்மாரி மழையாய் பெய்கின்ற ஆவியே
கன்மலை ஊற்றாய் பொங்கிவரும் ஆவியே
ஜீவநதியாய் பாய்ந்துவரும், ஆவியே
பாரெங்கும் பரவிய பரமனின் ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தேவ ஆவியே ஆவியே ஆவியே
ஆவியே ஆவியே ஆவியே - தூய ஆவியே ஆவியே ஆவியே
(வெண்புறா)

6. நேற்று இன்று என்றும்

நேற்று இன்று என்றும் மாறாதவர் - (இயேசு ஆண்டவர்) - 2
வெற்றி சிறந்த ரட்சகர் -இயேசு ஆண்டவர்
இயேசு ஆண்டவர் - அவர் பாவங்களை மன்னிப்பார்
நோய்களை தீர்ப்பார் (இக்கட்டிலிருந்து நமை மீட்பார்) - 2

(நேற்று)

பட்டினம் கிராமம் சுற்றி நடந்தார் - ஜெப
ஆலயம் சென்று உபதேசித்தார்
ராஜ்யத்தின் சுவிசேஷம் போதித்தார்
ஜனங்களின் தேவைகளை சந்தித்தார்

(நேற்று)

மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக
ஜனங்கள் இருப்பதை இயேசு பார்த்தார்
பன்னிரெண்டு சீடர்களை உடன் அழைத்தார்
ஜனங்களை நடத்த கட்டளையிட்டார்

(நேற்று)

தேவனின் திட்டப்படி வந்தாரே - அவர்
சித்தப்படி எல்லாமும் செய்தாரே
புதிய வானம் படைத்திடுவார் - இயேசு
புதிய பூமி ஆக்கிடுவார்

(நேற்று)

7. எந்நாளுமே

எந்நாளுமே என் இயேசுவே
உன் நாமமே என் ஜீவனே
இனிமையான திராட்சை இரசத்தைப் பார்க்கிலும் -
இன்பமானது உமது நேசம்

(எந்நாளுமே)

மெய்யான தேவன் நீர் தானே - என்
ஜெபங்களின் சத்தத்தை கேட்பவரே
உசிதமான கோதுமையால்
எங்களை போஷிக்கின்றீர் - எங்களை போஷிக்கின்றீர்
கன்மலையின் தேனை எங்களுக்கு ஊட்டுகின்றீர் -
எங்களுக்கு ஊட்டுகின்றீர்

(எந்நாளுமே)

உம்மிடத்தில் தேவ நதி புறப்பட்டதே - அது
புவி எங்கும் ஓடி செழிப்பாக்குதே
நிலங்களின் பயிர்களை ஆசீர்வதிக்கிறீர் - ஆசிர்வதிக்கிறீர்
உமது பாதையெல்லாம் நெய்யாக பொழிகின்றதே
நெய்யாக பொழிகின்றதே

(எந்நாளுமே)

மேய்ச்சல் உள்ள வெளிகளில் நிறைய ஆடுகள்
பள்ளத்தாக்கை தானியங்கள் மூடுகின்றதே
உலகெங்கும் துதியின் சத்தம் காதில் கேட்கின்றதே
காதில் கேட்கின்றதே
என்னுடைய நெஞ்சினிலே பூரிப்பு பொங்கிடுதே -
பூரிப்பு பொங்கிடுதே

(எந்நாளுமே)

8. இயேசு ராஜனே

இயேசு ராஜனே என்னை ஆளும் தேவனே - உம்
வருகையால் என்னை மாற்றினீர் - உம்
கிருபையால் என்னை தேற்றினீர்
இயேசு ராஜனே என்னை ஆளும் தேவனே

(இயேசு ராஜனே)

ஜீவ அப்பமாய் வந்தீரே
ஜீவ தண்ணீரை தந்தீரே
பரலோக வாசலாய் ஆனீரே
பள்ளத்தாக்கின் புஷ்பமாய் மலர்ந்தீரே

(இயேசு ராஜனே)

சத்திய சாட்சியாய் பிறந்தீரே
சாத்தானை எதிர்த்து வென்றீரே
நித்தமும் நற்செய்தி தந்தீரே
நேசத்தை போதித்து சென்றீரே

(இயேசு ராஜனே)

உள்ளதை உள்ளதென உரைக்கச் சொன்னீர்
இல்லதை இல்லதென கூறச் சொன்னீர்
பொய்களை வெறுத்து ஒதுக்கச் சொன்னீர்
உண்மை விளக்கை ஏற்றி வைத்தீர்

(இயேசு ராஜனே)

9. தேவாதி தேவனை

தேவாதி தேவனை துதித்திடுவோம்
கர்த்தாதி கர்த்தரை வணங்கிடுவோம்
அவர் கிருபை என்றும் உள்ளது
அவர் நல்லவர் அல்லேலூயா

(தேவாதி தேவனை)

வானங்களை ஞானமாய் படைத்தாரே
பூமியை நீர்மேல் பரப்பினாரே

(தேவாதி தேவனை)

அதிசயங்கள் பலவும் செய்தாரே
வானத்தில் சுடர்களை வைத்தாரே

(தேவாதி தேவனை)

பகலுக்கு சூரியனை தந்தாரே
இரவுக்கு சந்திரனை கொடுத்தாரே

(தேவாதி தேவனை)

செங்கடலை இரண்டாக பிளந்தாரே
தம் ஜனத்தை கடந்து போகச்செய்தாரே

(தேவாதி தேவனை)

இஸ்ரவேலை வனாந்திரத்தில் நடத்தினாரே
ஒரு தேசத்தையே சுதந்திரமாய் தந்தாரே

(தேவாதி தேவனை)

நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தாரே
நம் எல்லோருக்கும் ஆகாரம் கொடுத்தாரே

(தேவாதி தேவனை)

சுக ஜீவ கீதங்கள்
VOL 6

1. ஆலயம்

ஆலயம் ஆலயம் தேவ ஆலயம்
தேவன் நாமம் விளங்கும் தேவ ஆலயம்
ஆலயம் ஆலயம் தேவ ஆலயம்
தேவன் மகிமை தங்கும் தேவ ஆலயம் (ஆலயம்)

தேவ கிருபை உள்ளவர் உள்ளம் தேவ ஆலயம்
தேவனை நோக்கி இருப்பவர் நெஞ்சம் தேவ ஆலயம்
பரிசுத்தம் உள்ள மனங்களெல்லாம் தேவ ஆலயம்
தேவ வாஞ்சை நிறைந்த ஆத்மா தேவ ஆலயம்
(ஆலயம்)

ஒவ்வொரு மனிதனின் சரீரமும் தேவ ஆலயம்
அன்பும் நேசமும் கொண்டவரெல்லாம் தேவ ஆலயம்
இயேசுவை வணங்கும் இதயமெல்லாம் தேவ ஆலயம்
தேவனின் பார்வையில் நீங்களும் நானும் தேவ ஆலயம்
(ஆலயம்)

ஏழைக்கு இரங்கும் உள்ளமெல்லாம் தேவ ஆலயம்
நன்மைசெய்யும் மனிதரெல்லாம் தேவ ஆலயம்
உண்மையோடு இருப்பவரெல்லாம் தேவ ஆலயம்
தாழ்மையோடு இருப்பவரெல்லாம் தேவ ஆலயம்
(ஆலயம்)

ஆவியில் எளிமை கொண்டவர் நெஞ்சம் தேவ ஆலயம்
நீதியின் நிமித்தம் துன்பப்படுவோர் தேவ ஆலயம்
சாந்த குணத்தை கொண்டவர் இங்கே தேவ ஆலயம்
ஜெபத்தில் தரித்து இருப்பவரெல்லாம் தேவ ஆலயம்
(ஆலயம்)

2. தளர்ந்துபோன

தளர்ந்துபோன உள்ளங்களே இங்கே வாருங்கள்
உயிர்ப்பிக்கும் தேவனை நோக்கிப் பாருங்கள்
மனசோர்வுகளை அவர் மாற்றுவார்
மனகாயங்களை அவர் ஆற்றுவார்

(தளர்ந்து)

எந்தப் பக்கம் திரும்பினாலும் வேதனையா
தாங்கிடாத அளவிற்கு சோதனையா
திரும்பிய பக்கமெல்லாம் கடன் தொல்லையா
உதவி செய்ய ஒருவரும் வரவில்லையா
கர்த்தர் இயேசுவிடம் வந்து சேருங்கள்
அற்புதம் நடப்பதை நன்றாய்ப் பாருங்கள்

(தளர்ந்து)

எதிரிகளின் தாக்குதல் அதிகமானதா
காசுபணம் கையிருப்பு தீர்ந்து போனதா
அன்பு காட்டுவோர் ஆதரவு மறைந்து போனதா
உலக வாழ்வில் வெறுப்பு அதிகமானதா
கர்த்தர் இயேசுவிடம் வந்து சேருங்கள்
அற்புதம் நடப்பதை நன்றாய்ப் பாருங்கள்

(தளர்ந்து)

துவண்டுபோன உங்களை தூக்கி நிறுத்துவார்
மீண்டும் உங்கள் வாழ்வை உயர்த்திக் காட்டுவார்
உங்கள் கண்ணீரை துடைத்துப் போடுவார்
சந்தோசமே வாழ்க்கை என்று ஆக்கி காட்டுவார்
கர்த்தர் இயேசுவிடம் வந்து சேருங்கள்
அற்புதம் நடப்பதை நன்றாய்ப் பாருங்கள்

(தளர்ந்து)

3. இந்த பூமியின்

இந்த பூமியின் மேலே
அந்த வானத்தின் கீழே
நம் இயேசுவைப் போலே
ஒரு ரட்சகர் எங்குமே இல்லையே
இல்லவே இல்லவே இல்லையே - அவர்
நீதியானவர் - நேசம் மிகுந்தவர்
கிருபை உள்ளவர் மகிமை நிறைந்தவர்
(இந்த பூமியின்)

பாரம் சுமப்பவர் என்னிடத்தில் வாருங்கள்
இளைப்பாறுதல் நான் தருகிறேன்
அழைப்பவர் இயேசுவே-நம்மை அழைப்பவர் இயேசுவே
(இந்த பூமியின்)

இருட்டில் இருப்பவர் என்னிடத்தில் வாருங்கள்
ஜீவ ஒளியை நான் தருகிறேன்
அழைப்பவர் இயேசுவே நம்மை அழைப்பவர் இயேசுவே
(இந்த பூமியின்)

பசியாய் இருப்பவர் என்னிடத்தில் வாருங்கள்
ஜீவ அப்பம் நான் தருகிறேன்
அழைப்பவர் இயேசுவே - நம்மை அழைப்பவர் இயேசுவே
(இந்த பூமியின்)

தாகம் உள்ளவர் என்னிடத்தில் வாருங்கள்
ஜீவ தண்ணீர் நான் தருகிறேன்
அழைப்பவர் இயேசுவே - நம்மை அழைப்பவர் இயேசுவே
(இந்த பூமியின்)

பாவத்தை விடுங்கள், மனம் திரும்புங்கள்
பரலோக ராஜ்ஜியம் வாருங்கள்
அழைப்பவர் இயேசுவே - நம்மை அழைப்பவர் இயேசுவே
(இந்த பூமியின்)

4. என்னையும் ஒரு பொருட்டாக

என்னையும் ஒரு பொருட்டாக
எண்ணினீரே என் தேவா, இயேசு நாதா
உம்பாதம் பணிந்து நான் நன்றி சொல்வேன்
நன்றியய்யா நன்றியய்யா

(என்னையும்)

என் நெருக்கத்தில் கூப்பிடும் போது
செவி கொடுத்தீர் நன்றியய்யா
உபத்திரங்களில் இருந்து என்னை
விடுவித்தீரே நன்றியய்யா
உம்பாதம் பணிந்து நான் நன்றி சொல்வேன் - 2
நன்றியய்யா நன்றியய்யா

(என்னையும்)

எண்ணில் அடங்கா நன்மைகளை
எனக்கு செய்தீர் நன்றியய்யா
என் எல்லைகளில் சமாதானம்
வைத்து உள்ளீர் நன்றியய்யா
உம் பாதம் பணிந்து நான் நன்றி சொல்வேன்
நன்றியய்யா நன்றியய்யா

(என்னையும்)

உம்முடைய சத்தியத்தில் என்னை
நடத்துகிறீர் நன்றியய்யா
என்னுடைய பாவமெல்லாம்
மன்னித்து விட்டீர் நன்றியய்யா
உம் பாதம் பணிந்து நான் நன்றி சொல்வேன்
நன்றியய்யா நன்றியய்யா

(என்னையும்

5. கண்ணில் நிற்குதே

கண்ணில் நிற்குதே இயேசுவே
கல்வாரி சிலுவை காட்சியே
உள்ளம் உடைந்து போகுதே
உம் பாடுகள் நினைக்கும் போதிலே

(கண்ணில் நிற்குதே)

மாந்தரே ஏன் தான் பாவம் செய்தீர் - தேவன்
வார்த்தையை எதற்காய் மீறினீர்
விலையேறப் பெற்ற தேவ ரத்தம்
சிந்திட செய்தீரே பாவியரே
சிந்திட செய்தீரே பாவியரே

(கண்ணில் நிற்குதே)

சிலுவையில் இயேசுவை பார்க்கையிலே - என்
நெஞ்சில் துயரம் வெடிக்குதே
பாருங்கள் இயேசுவின் கோலத்தை
நம் பாவத்தால் வந்த அவலத்தை
நம் பாவத்தால் வந்த அவலத்தை

(கண்ணில் நிற்குதே)

மக்கள் நோக்கி பார்க்கின்றார்
போர் சேவகர் சுற்றி நிற்கின்றார்
புண்ணிய மூர்த்தியின் உடலெங்கும்
எண்ணில் அடங்கா காயங்களே
எண்ணில் அடங்கா காயங்களே

(கண்ணில் நிற்குதே)

பாவ நிவாரண பலியாக
தன்னையே தந்தார் இயேசுவே
கண்ணீர்விட்டு அழுவோமே
கரையட்டும் நம் பாவங்களே - அதில்
கரையட்டும் நம் பாவங்களே .

(கண்ணில் நிற்குதே)

6. வணங்கி

வணங்கி வணங்கி வாழ்த்திச் செய்வோம் ஆராதனை
பணிந்து பணிந்து போற்றிச் செய்வோம் ஆராதனை
மகிழ்ச்சியோடு மன்னனுக்கு ஆராதானை - மன,
நெகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஆராதனை
பக்தியோடு பரமனுக்கு ஆராதனை - முழு
சக்தியோடு தேவனுக்கு ஆராதனை
ஆராதனை ஆராதனை ஆராதனை
ஆண்டவருக்கு ஆராதனை ஆராதனை (வணங்கி)

உணவு உடைகள் கொடுப்பவருக்கு, வீடு வசதி தருபவருக்கு
ஆராதனை ஆராதனை
வாழ்க்கை தேவை சந்திப்பவருக்கு, ஆராதனை
வாழ்வில் ஜீவனாய் இருப்பவருக்கு ஆராதனை
ஆராதனை ஆராதனை ஆராதனை
ஆண்டவருக்கு ஆராதனை ஆராதனை (வணங்கி)

தேக திடனை தருபவருக்கு, ஆன்ம பலனை
கொடுப்பவருக்கு ஆராதனை ஆராதனை
காணும் உலகில் காப்பவருக்கு, காணாத உலகம் அழைப்பவருக்கு
ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை ஆராதனை
ஆண்டவருக்கு ஆராதனை ஆராதனை (வணங்கி)

வன்கண் ஆவியை தடுப்பவருக்கு,
பொறாமை ஆவியை ஓட்டுபவருக்கு
ஆராதனை ஆராதனை
எதிரி சூழ்ச்சியை உடைப்பவருக்கு,
எதிலும் ஜெயம் தருபவருக்கு, ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை ஆராதனை
ஆண்டவருக்கு ஆராதனை ஆராதனை (வணங்கி)

குடும்பம் பிள்ளைகள் காப்பவருக்கு,
வாழ்வில் சுபிட்சம் தருபவருக்கு
ஆராதனை ஆராதனை
செட்டையில் மறைத்து வைப்பவர்க்கு
என்றும் துணையாய் இருப்பவருக்கு ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை ஆராதனை
ஆண்டவருக்கு ஆராதனை ஆராதனை (வணங்கி)

7. இயேசுவே என் கன்மலையே

இயேசுவே என் கன்மலையே
மதுரமான தெளிதேனே - என்
வாழ்வின் ஜீவியமே - நித்தம்
எனைக் காக்கும் தெய்வமே
அல்லேலூயா அல்லேலூயா

(இயேசுவே)

அன்பு நேசரே உமது கண்களில்
ஆயிரம் சூரியன் பிரகாசமே
அருள் நாதரே உமது முகத்தில்
கருணை ஊற்றின் பெருவெள்ளமே
இயேசுவே உமது நாமம் வாழ்க வாழ்கவே

(இயேசுவே)

என் கண்ணீரைக் காணும்
தேவன் நீரே எனக்காக கண்ணீர் சிந்தும் கர்த்தரே
என் கண்ணீரைத் துடைக்க கரம் நீட்டும்
தயவு நிறைந்த யெகோவாயீரே
இயேசுவே உமது நாமம் வாழ்க வாழ்கவே

(இயேசுவே)

வாசல் கதவை தட்டுகின்ற மகிமையான இராஜனே
திறந்துவிட்டேன் வீட்டினுள் பிரவேசியும் மணவாளனே
இயேசுவே உமது நாமம் வாழ்க வாழ்கவே

(இயேசுவே)

8. பரலோகம்

பரலோகம் தந்த பரம ஆவியே
பூலோகம் போற்றும் புனித ஆவியே
என்னை நிரப்புவீர் அனல் மூட்டுவீர்
அபிஷேக வள்ளலே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(பரலோகம்)

என் இதயம் துதிக்கும் தூய ஆவியே
என் ஜீவனில் கலந்த ஜீவ ஆவியே
எனது சரீரம் உமது ஆலயம்
பரிசுத்தம் ஆக்குவீர் அக்னி ஜுவாலையே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(பரலோகம்)

என் தேவைகளை நீர் ஒருவரே அறிவீர்
பிதாவிடம் எனக்காய் பரிந்து பேசுவீர்
ஆவியின் வரங்கள் எனக்குத் தாருமே
அன்பின் கனியை எனக்கு அருளுமே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(பரலோகம்)

மென்மையான பனியாய் என்மேல் இறங்குவீர்
தென்றலாக வந்து என் மேல் வீசுவீர்
மேகஸ்தம்பமாய் முன் செல்லுவீர்
அக்னிஸ்தம்பமாய் வழி நடத்துவீர்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(பரலோகம்)

9. அன்பின் அவதாரம்

அன்பின் அவதாரம் ஆண்டவர் இயேசு
பண்பின் குலமாது கன்னி மரியாளின்
கருவின் கனியான கருணை நாதனே
(அன்பின் அவதாரம்)

இன்பத் திருநாமம் ஏந்திய ஏசுவே
தாவீது வம்சத்தின் வழித் தோன்றலே
யூத இராஜ சிங்கமே - யூத இராஜ சிங்கமே
(அன்பின் அவதாரம்)

உன்னதமானவர் பிரியகுமாரனே
முடிவில்லா இராஜ்ஜியத்தின் ராஜனே
உலக இரட்சண்யமே - உலக இரட்சண்யமே
(அன்பின் அவதாரம்)

சிலுவையில் இரத்தம் சிந்தி சமாதானம் தந்தவரே
பூலோக பரலோக வேந்தனே
மகிமையின் தேவனே - மகிமையின் தேவனே
(அன்பின் அவதாரம்)

மரணமில்லா வாழ்வு எமக்குத் தந்தவரே
எங்கள் கண்ணீரைத் துடைத்தவரே
உலகை ஜெயித்தவரே - உலகை ஜெயித்தவரே
(அன்பின் அவதாரம்)

சுகு ஜீவ கீதங்கள்

VOL 7

1. கர்த்தரின் பலத்த கரங்களிலே

கர்த்தரின் பலத்த கரங்களிலே
அடங்கி நாமும் இருந்திடுவோம்
ஏற்ற காலம் வரும்போது
அவரே நம்மை உயர்த்திடுவார்
அவர் நாமம் அதிசயமே
அவர் கிருபை என்றுமுள்ளதே

தடையை மாற்றும் தேவன் அவர்
நமக்கு முன்னே செல்கின்றார் } 2
எரிகோ மதிலை தகர்த்திடுவார்
முன்னேறிச் செல்ல துணை செய்வார் } 2
அவர் நாமம் அதிசயமே
அவர் கிருபை என்றுமுள்ளதே

சோர்ந்து போன உள்ளத்திற்கு
புதுபெலன் அவரே தந்திடுவார்
ஓடினாலும் இளைப்படைவதில்லை
நடந்தாலும் சோர்வடைவதில்லை
அவர் நாமம் அதிசயமே
அவர் கிருபை என்றுமுள்ளதே

நீதியின் சூரியன் அவர் தானே
விடிவெள்ளி வெளிச்சம் இயேசு தானே
வலப்பக்கம் நிழலாய் நின்றிடுவார்
எந்நாளும் நம்மைக் காத்திடுவார்

கர்த்தரின்

2. கர்த்தர் என் மேய்ப்பர்

கர்த்தர் என் மேய்ப்பர்
தாழ்ச்சி நான் அடையேன்
கர்த்தர் என் மீட்பர்
இகழ்ச்சி நான் அடையேன்
ஆர்ப்பரிப்பேன் மனமகிழ்வேன்
இயேசுவின் நாமத்திலே

(கர்த்தர்)

புல்லுள்ள நல்ல இடங்களிலே
அவர் என்னை நித்தமும் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீர் அருகினிலே
அவர் என்னைக் கொண்டு சேர்த்திடுவார்
ஆர்ப்பரிப்பேன் அகமகிழ்வேன்
இயேசுவின் நாமத்திலே

(கர்த்தர்)

மரண இருளின் பள்ளத்தாக்கிலே
பொல்லாப்புக்கு பயமின்றி நடந்திடுவேன்
என்ஆத்துமாவை தேற்றிடுவார்
நீதியின் பாதையில் நடத்திடுவார்

(கர்த்தர்)

என்னுடைய சத்துருக்கு முன்பாக
பந்தியை ஆயத்தம் செய்திடுவார்
என் தலையை எண்ணெயால் அபிஷேகம்
கர்த்தர் எனக்காய்ச் செய்திடுவார்.

(கர்த்தர்)

3. புல்லின்மேல் இறங்கும் பனியாக

புல்லின்மேல் இறங்கும் பனியாக
நம்மேல் இறங்கி வருகின்றார்
பரிசுத்த ஆவியானவர், அபிஷேக நாதனானவர்
அல்லேலூயா பாடி வரவேற்போம்
ஆனந்த களி கூறுவோம்.

(புல்லின்மேல்)

ஆறாகப் பெருகியே வருகின்றார்
அக்னியால் அபிஷேகம் தருகின்றார்
சத்திய ஆவியாய் நமக்குள் வருகின்றார்
முத்திரை மோதிரம் நமக்கு தருகின்றார்

(புல்லின்மேல்)

அன்பினால் நெஞ்சிலே நிறைகின்றார்
ஆதரவாய் நம்மோடு இருக்கின்றார்
தேவனே ஆவியாய் நம்மேல் வருகின்றார்
இன்றைக்கே விடுதலை நமக்கு தருகின்றார்

(புல்லின்மேல்)

தெய்வீக வல்லமை நமக்கு தருகின்றார்
தேவையான வரங்களை நமக்கு அருள்கின்றார்
ஆசீர்வாத மழையாக பொழிகின்றார்
அற்புதங்கள் நமக்கு செய்கின்றார்.

(புல்லின்மேல்)

4. தேவனை நம்பு

தேவனை நம்பு, தேவனை நம்பு
அவர் மகிமையை நீ காண்பாய்
இயேசுவை நம்பு, இயேசுவை நம்பு
அவர் சமாதானம் தந்திடுவார்
உன் வாழ்க்கையில் ஓர் அற்புதம்
அவர் இன்றே செய்திடுவார்
(தேவனை நம்பு)

தூய்மை உள்ளவர் அவர் தூய்மை உள்ளவர்
தீமையை காணாத சுத்தக் கண்ணனார்
நினைக்கின்றார் உன்னை நினைக்கின்றார்
நாடிவா துதிபாடி வா
(தேவனை நம்பு)

சர்வ வல்லவர் அவர் சர்வ வல்லவர்
உறங்கிடார் அவர் தூங்கிடார்
வருகின்றார் உன்னிடம் வருகின்றார்
ஜெயம் தருவார் உன் பயம் போக்குவார்
(தேவனை நம்பு)

உண்மையுள்ளவர் அவர் உண்மையுள்ளவர்
பொய் சொல்ல அவர் மனிதரல்லர்
அழைக்கின்றார் உன்னை அழைக்கின்றார்
வந்துவிடு உன்னைத் தந்துவிடு.
(தேவனை நம்பு)

5. தேவனின் ஜனமே

தேவனின் ஜனமே, தேவனின் ஜனமே
ஒன்று சேர்ந்து வாருங்களேன்
கர்த்தாதி கர்த்தர், இயேசுவின் நாமம்
துதித்துப்பாடுங்களேன்
அவர் வரும் நாள் சமீபமே
நாம் ஆயத்தமாயிருப்போம்

(தேவனின் ஜனமே)

மேகத்தின் மீது வந்திடுவாரே
பரிசுத்தவான்களுடன்
தேவனின் தூதர்கூடவே வருவார்
எக்காளத் தொனியுடனே
அவர் வரும் நாள் சமீபமே
நாம் ஆயத்தமாயிருப்போம்

(தேவனின் ஜனமே)

இமைப்பொழுதில் நாம் மறுரூபம் ஆவோம்
அவரோடு சேர்ந்திடுவோம்
துன்பமும் இல்லை துயரமும் இல்லை
பரலோகம் சேர்ந்திடுவோம்
அவர் வரும் நாள் சமீபமே
நாம் ஆயத்தமாயிருப்போம்

(தேவனின் ஜனமே)

நித்திய மகிழ்ச்சியில் நிலைத்திடுவோமே
பரலோக இராஜ்ஜியத்தில்
பசியும் இல்லை தாகமும் இல்லை
என்றென்றும் ஆனந்தமே
அவர் வரும் நாள் சமீபமே
நாம் ஆயத்தமாயிருப்போம்

(தேவனின் ஜனமே)

6. எபினேசரே

எபினேசரே என் இயேசுவே
யேகோவாயீரே என் தேவனே
காரிருள் போக்கும் பேரொளியே
கன்மலையே என் மீட்பரே
(எபினேசரே)

பூமியில் பாவிகள் மனம் திரும்ப
பரலோகம் களிகூர்ந்து மகிழ்ந்திடுமே
கிருபையின் காலத்தில் வாழ்கின்றோம்
இயேசுவின் அன்பை உணர்கின்றோம்
(எபினேசரே)

இயேசுவைப் பற்றும் விசுவாசத்தால்
தேவனின் பிள்ளைகள் ஆகிவிட்டோம்
அப்பா பிதாவே என்றழைக்கும்
உரிமையை நாமும் பெற்று கொண்டோம்
(எபினேசரே)

தேவனின் சித்தம் அறிந்திடுவோம்
அதை எண்ணி நாம் இங்கு வாழ்ந்திடுவோம்
ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லுவோம்
கர்த்தர் நாமம் துதித்து பாடிடுவோம்
(எபினேசரே)

7. எந்தன் தேவா

எந்தன் தேவா இயேசு நாதா
உம்மையல்லால் என்னைத் தேற்ற
வேறு தெய்வம் இங்கு இல்லை
கண்கண்ட தெய்வம் நீர்தானய்யா
ஜீவனுள்ள தேவன் நீர்தானய்யா
(எந்தன் தேவா)

நியமித்தீர் ஒரு ஓட்டத்தை
ஓடுகின்றேன் பொறுமையாக
போராடியே வாழுகின்றேன்
உம்மைத் தானே நம்பியுள்ளேன்.
(எந்தன் தேவா)

இவ் உலகில் நான் இருந்தும்
இவ் உலகம் எனது அல்ல
பரம கானான் தேசம் உண்டு
நிரந்தரமாய் அங்கு வாழ்வேன்
(எந்தன் தேவா)

மாறும் உள்ளம் மானிடர் உள்ளம்
உள்ளே ஒன்று வெளியே ஒன்று
மாறாத அன்பு வைத்தவரே
ஜீவன் தந்த இயேசு நீரே

(எந்தன் தேவா)

8. எல்லோரையும் நேசிப்பேன்

எல்லோரையும் நேசிப்பேன் நான்
ஒருவரையும் வெறுக்க மாட்டேன்
நல்லோரையும் நேசிப்பேன் தீயோரையும் நேசிப்பேன்
இயேசுவைப்போல் நேசிப்பேன் நான்
தெரிந்தோரையும் நேசிப்பேன் அந்நியரையும் நேசிப்பேன்
இயேசுவைப்போல் நேசிப்பேன் நான்
(எல்லோரையும்)

மழையைப் பாருங்க அது எல்லோர் மேலும் பெய்யுதே
நல்லவர் கெட்டவர் பேதம் அதற்கு என்றும் இல்லையே
இயேசு சொன்ன உண்மை இது நினைச்சுப் பாருங்க
இதில் உள்ள நீதியை எண்ணிப் பாருங்க
(எல்லோரையும்)

ஒருவர் நம்மைப் பகைத்தால் டோன்ட் ஒரிங்க
நாம் அவரைப் பகைக்கக் கூடாதுங்க
தீமையை நன்மையால் வென்றிடவேண்டும்
உலகெங்கும் போய் இதை சொல்லிட வேண்டும்.
(எல்லோரையும்)

கர்த்தரின் பிள்ளைகள் ஆகிவிட்டாலே
கசப்பும் வெறுப்பும் விட்டுவிட வேண்டும்
அன்பினால் அனைவரும் ஒன்றுபடுவோம்
ஆனந்த வாழ்க்கை வாழ்ந்திடுவோம்.
(எல்லோரையும்)

9. ஒரு தகுதியும் இல்லாத எனக்கு

ஒரு தகுதியும் இல்லாத எனக்கு தந்தீரே
உமது கிருபை (2)
இயேசு ராஜா நேச ரோஜா-ஸ்தோத்திரம் உமக்கு ராஜாதி ராஜா
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
(ஒரு தகுதியும்)

பயங்கர குழியில் கிடந்தேன் நான்
உளையான சேற்றில் புரண்டேன் நான்
அருட்கரம் கொண்டெனை தூக்கினீர்
கன்மலை மீது நிறுத்தினீர்.
(ஒரு தகுதியும்)

ஆதாம் ஏவாள் வழி வந்தோம்
பாவியாய் இங்கு வாழ்ந்திருந்தோம்
ஆவியில் மீண்டும் பிறக்க வைத்தீர்
தேவனின் பிள்ளையாய் மாற்றி விட்டீர்.
(ஒரு தகுதியும்)

சாலொமோன் ராஜாவுக்கு ஞானத்தை
அவர் கேட்டபடி நீர் தந்தீரே
உம்மை அதிகமாய் அறிகின்ற
ஞானத்தை எனக்கும் அருள்வீரே.
ஒரு தகுதியும்)

சுக ஜீவ கீதங்கள்
VOL 8

1. கிருபையின் தேவனே

கிருபையின் தேவனே ஸ்தோத்திரம்
மகிமையின் ராஜனே ஸ்தோத்திரம் } 2
அற்புத நாதரே ஸ்தோத்திரம்
ஆத்ம நேசரே ஸ்தோத்திரம் } 2

ஸ்தோத்திரம் அல்லேலூயா
ஸ்தோத்திரம் அல்லேலூயா
(கிருபையின் தேவனே)

சத்திய வழியில் நடத்திடும்
நித்திய தேவனே ஸ்தோத்திரம்
உத்தம பாதையைக் காட்டிடும்
உண்மையின் தேவனே ஸ்தோத்திரம்! } 2
(கிருபையின் தேவனே)

யார் கைவிட்டாலும் கைவிடா
கருணையின் தேவனே ஸ்தோத்திரம்
எம்மைவிட்டு விலகாத இயேசுவே
எந்நாளும் உமக்கே ஸ்தோத்திரம்! } 2
(கிருபையின் தேவனே)

மணவாட்டி சபையை நேசிக்கும்
மன்னவர் இயேசுவே ஸ்தோத்திரம்
நிலையான அன்பைத் தருகின்ற
நிறைவான அன்பரே ஸ்தோத்திரம்! } 2
(கிருபையின் தேவனே)

2. பொங்கிப் பொங்கி

பொங்கிப் பொங்கி வருகுதே ஊற்றுத் தண்ணீர்
கர்த்தர் இயேசு நமக்குத் தரும் ஜீவத் தண்ணீர்
அள்ளிப் பருகுவோம் தாகம் தீருமே
ஆத்துமாவிற்கு சுகம் சேருமே
(பொங்கிப் பொங்கி)

இந்த உலகம் தருவது கசப்புத் தண்ணீர்
கர்த்தர் அதைத் தொட்டுவிட்டால் மதுரமான நீர்
பளிங்கு போல தெளிவான தேவ தண்ணீர்
பரலோகம் நமக்குத் தரும் ஆத்ம தண்ணீர்
(பொங்கிப் பொங்கி)

பணமுமின்றி விலையுமின்றி கிடைக்கும் தண்ணீர்
அப்பத்தோடு புசிக்கவே ஏற்ற தண்ணீர்
இயேசு செய்த அற்புதத்தால் வந்த தண்ணீர்
திராட்சை ரசமாய் மாறிப் போகும் கிணற்று தண்ணீர்
(பொங்கிப் பொங்கி)

குடிக்கக் குடிக்கத் தாகம் தரும் உலகத் தண்ணீர்
வறண்டு போகக் கூடுமே நிலத்தின் தண்ணீர்
கன்மலை இயேசுவின் ஞானத் தண்ணீர்
வற்றாத நதியாக ஆன தண்ணீர்
(பொங்கிப் பொங்கி)

3. என் காதில்

என் காதில் கேட்குதே, மெல்லியதாய் தேவ சத்தம்!
தேவ சித்தமே நித்தம் நித்தமே!
செய்வேன் நான் என் பாக்கியமே!
(என் காதில்)

ஏதேன் தோட்டத்தில் முதலில் கேட்டது
கர்த்தரின் உள்ளத்தின் அன்பின் சத்தம்
பாவத்தில் விழுந்த ஆதி ஆதாம்
பயந்து மறைந்து கேட்ட சத்தம்!
(என் காதில்)

இயேசுவின் குரலை கேட்டான் சவுலே
தமஸ்குவின் வீதியில் சென்ற போதிலே
வானத்தின் ஒளியும் இறங்கி வந்தது
பவுலாய் மாறினான் பரம சீடனாய்!
(என் காதில்)

பாவியாய் இருக்கும் மானிட குலமே
தேவனின் சத்தம் கேட்டால் நலமே
அமைதியில் நிறையும் உங்கள் உள்ளமே
போற்றிப் புகழ்வோம் இயேசு நாமமே!
(என் காதில்)

4. என்னைக் காண்கின்ற தேவன்

என்னைக் காண்கின்ற தேவன் நீரே
என்னோடு பேசினீரே
என் கண்ணீரை துடைத்தீரே
உமக்கே நான் அடிமையானேன்!

(என்னை)

என் சிறுமையைப் பார்த்தீரே
என் தாழ்மையை நினைத்தீரே
என் உள்ளத்தை அறிந்த தேவன் நீரே
என்னை நீர் தேற்றினீரே!

(என்னை)

என் துன்பத்தின் வேளையிலே
என் குரலைக் கேட்டு வந்தீர்
என் இக்கட்டில் இருந்து மீட்டீரே
காருண்ய தேவன் நீரே!

(என்னை)

என் நெஞ்சத்தின் பாரம் மாற்றினீரே
என் இரட்சிப்பின் தேவன் நீரே
என் ஆத்மநேசர் வந்தீரய்யா!
நான் செய்த பாக்கியமே!

(என்னை)

5. Happy - ஆக இருக்க வேண்டுமென்றால்

Happy - ஆக இருக்க வேண்டுமென்றால்
ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொள்
Worship -ல் வந்து கலந்து கொள்
Fellowship -உன்னை மாற்றுமே!
(Happy - ஆக)

கடந்து வந்த பாதையெல்லாம் Sinful, Sinful, Sinful
இன்று முதல் உன் வாழ்க்கை Joyful, Joyful, Joyful
(Happy - ஆக)

இயேசு இல்லாத வாழ்க்கையெல்லாம்
Wasteful, Wasteful, Wasteful
இயேசுவிடம் நீ வந்துவிட்டால் Tasteful, Tasteful, Tasteful
(Happy - ஆக)

இயேசு காட்டும் அன்புதானே Graceful, Graceful, Graceful
அவர் நீட்டும் கரம்தானே Merciful, Merciful, Merciful
(Happy - ஆக)

இயேசுவின் வசனம் எல்லாமே Powerful, Powerful, Powerful
அவர் செய்யும் நன்மையெல்லாம் Wonderful, Wonderful, Wonderful
(Happy - ஆக)

6. எல்லோரும் என்னோடு

எல்லோரும் என்னோடு ஆடவாங்க!
இயேசுவைத் துதித்து பாட வாங்க!
கர்த்தர் எனக்குள் வந்த நாள் முதல்
எந்நாளும் எனக்கு இன்ப நாளே!

(எல்லோரும் என்னோடு)

வானம் நமக்காய் திறக்கின்றது
வாழ வழியும் கிடைக்கின்றது
பரலோகம் இறங்கி வருகின்றது
பரவசம் நெஞ்சில் நிறைகின்றது

(எல்லோரும் என்னோடு)

கர்த்தர் என்னை அலங்கரித்தார்
இரட்சிப்பின் வாஸ்திரம் உடுத்திவிட்டார்
மகிழ்ச்சியின் கீரிடம் தலையில் வைத்தார்
மணவாட்டியாக மாற்றிவிட்டார் - என்னை
மணவாட்டியாக மாற்றிவிட்டார்

(எல்லோரும் என்னோடு)

ஒன்றான மெய்த்தேவன் நமக்கு உண்டு
அவரோடு ஐக்கியம் என்றும் உண்டு
விடுதலை நாயகன் இயேசு தானே
வெற்றியின் வேந்தன் அவர் தானே

(எல்லோரும் என்னோடு)

7. ஆனந்தமே, பேரின்பமே

ஆனந்தமே, பேரின்பமே
இயேசுவின் நாமம் சுகம் தருமே! - (2)

(ஆனந்தமே)

இரட்சிப்பைத் தருபவரே
தேவகுமாரன் நீரே
உருகுதே எந்தன் உள்ளம்
பெருகுதே சந்தோஷமே
இதற்குமுன் கண்டதில்லை
இதுபோன்ற அனுபவம்!

(ஆனந்தமே)

கர்த்தரின் வேதமே
குறைவற்ற பொக்கிஷமே
பேதையை ஞானியாக்கும்
சத்திய சாட்சியாகும்
தேன்கூட்டில் வடிகின்ற
தேனைப் போல் மதுரமே!

(ஆனந்தமே)

வானமே சிங்காசனம்
பூமியே பாதபடி
கற்பனைக்கு எட்டவில்லை
கர்த்தரே உமது மேன்மை
கல்வாரி சிலுவை கீழே
வைத்தீரே ஆசீர்வாதம்!

(ஆனந்தமே)

8. சொல்லத் தெரியல இயேசுவே

சொல்லத் தெரியல இயேசுவே
உள்ளம் ஏங்குதே இயேசுவே
அளவற்ற உமதன்பை குறைவற்ற மெய்யன்பை
சொல்லத்தெரியல சொல்லத் தெரியல
(சொல்லத் தெரியல)

சஞ்சலங்கள் உள்ளத்தை வாட்டும் போதிலே
சமாதானம் தந்து என்னை தேற்றுகின்றீரே
உறக்கமின்றி புரண்டு நான் தவிக்கும்போதிலே
தாலாட்டுப் பாடி நீர் தூங்க வைக்கிறீர்-தூங்க வைக்கிறீர் - 2
(சொல்லத் தெரியல)

எங்கு நான் சென்றாலும் கூட வருகிறீர்
கேடகமாய் என்னை நீர் சூழ்ந்து கொள்கிறீர்
என்னை தாக்க எதிரிகள் வரும்போதிலே
என்னை தப்புவித்து தாங்கிக் கொள்கிறீர்-தாங்கிக் கொள்கிறீர்-2
(சொல்லத் தெரியல)

உலக பாரம் என்னை நெருக்கும் போதிலே
ஓடிவந்து என்னை ஏந்திக் கொள்கிறீர்
நம்பினோர் என்னைவிட்டு ஒதுங்கும் போதிலே
நாதனே நீர் என்னை
அணைத்துக் கொள்கிறீர் -அணைத்துக் கொள்கிறீர் - 2
(சொல்லத் தெரியல)

9. தாயின் சொல்லைத் தட்டாதே

தாயின் சொல்லைத் தட்டாதே
தந்தையின் சொல்லை மீறாதே
அவர்கள் சொல்லும் வார்த்தைகள்
உன் தலைக்கு கிரீடமே
அவர்கள் சொல்லும் வார்த்தைகள்
உன் கழுத்தில் மாலையே
(தாயின் சொல்லை)

ஞானம் உனக்கு வேண்டுமா கர்த்தருக்கு நீ பயப்படு
வேதம் சொல்லும் வழியினிலே விலகாமல் நீ நடந்திடு
தீயோர் பக்கம் சேராதே
பாவியின் வழியில் நில்லாதே
மறவாதே மறவாதே நீதி மொழியை மறவாதே!
(தாயின் சொல்லை)

இனிமையான வார்த்தைகள் எந்நாளும் நீ பேசுவாய்
மதுரமான தேனைப்போல் ஆத்துமாவை ஆற்றுமே
அகந்தை உனக்கு கூடாதே
தாழ்மையை அணிந்து உயர்ந்திடுவாய்!
மறவாதே மறவாதே நீதி மொழியை மறவாதே!
(தாயின் சொல்லை)

அதிக தூக்கம் கூடாதே
சோம்பல் தனங்களை விடுவாயே
எறும்பைப் பார்த்து கற்பாயே
முன்னேறும் ரகசியம் அறிவாயே
பொய்களை என்றும் பேசாதே
பேராசை உனக்கு வேண்டாமே
மறவாதே மறவாதே நீதி மொழியை மறவாதே!
(தாயின் சொல்லை)

சுக ஜீவ கீதங்கள்

VOL 9

1. கர்த்தரின் சந்நிதியில்

கர்த்தரின் சந்நிதியில் காத்திருக்கும் தேவ ஜனமே
தேவதேவனை போற்றிடுவோம்
ஆடிப்பாடி மகிழ்ந்திடுவோம்! - (2)
(கர்த்தரின்)

வாழ்வெல்லாம் இனி ஆனந்தமே
கர்த்தர் இயேசு தந்தார் ஆசீர்வாதமே! - (2)
(கர்த்தரின்)

ஆத்தும நேசர் நேசிக்கின்றார்
அன்புடன் நம்மை நடத்துகின்றார் - (2) - நம்
விண்ணப்பம் அவரிடம் வைத்துவிட்டால்
செய்து முடிக்க காத்திருக்கிறார்! - (2)
(கர்த்தரின்)

மலர்ந்த முகத்தைக் காட்டுகின்றார் - தம்
வலக்கரம் நீட்டி அழைக்கின்றார் - (2)
பிரியமாய் நம்மிடம் வருகின்றார் - நம்
உள்ளம் அவர்மேல் பொங்கிடுதே! - (2)
(கர்த்தரின்)

ஒன்றாய் சேர்ந்து துதித்திடுவோம்
ஒருமனதோடு ஜெபித்திடுவோம் - (2)
கர்த்தரின் வார்த்தைக்கு செவி கொடுப்போம்
அவர் மகிமையின் நாமம் நமஸ்கரிப்போம்! - (2)
(கர்த்தரின்)

2. நேசமானவர்

நேசமானவர், வாசமானவர்
அவர் மென்மையானவர் - என்றும் மேன்மையானவர்
நம் பரிசுத்த ஆவியானவர்

(நேசமானவர்)

பாவத்தை விட்டு விட்டாலே
பரிசுத்தம் ஆகிவிட்டாலே - நம் - (2)
உள்ளத்தை திறந்து வைத்திருந்தாலே
இதயத்தில் வாசம் செய்வாரே - (2)

(நேசமானவர்)

ஊற்றாக பெருகி வருகின்றார்
வற்றாத ஜீவ நதியானவர் - (2)
மெல்லிய காற்றாய் வீசுகின்றாரே
தேற்றரவாளன் ஆனவரே - (2)
(நேசமானவர்)

வான்புறா வடிவாய் வருகின்றார்
தேன்போல இனிமையாய் இருக்கின்றார்! - (2)
விண்ணின் ஒளியாய் வந்திடுவார்
கண்மணி போல காத்திடுவார்! - (2)

(நேசமானவர்)

3. ஆச்சரியமானவர்

ஆச்சரியமானவர் நம்ம இயேசு
அற்புதம் செய்பவர் நம்ம இயேசு
அதிசயமானவர் அவர் நாமம்
அகிலமெல்லாம் விளங்கும் அவர் மகிமை
அல்லேலூயா, ஓசன்னா - (4)

(ஆச்சரியமானவர்)

மோசேயின் கோலை நீட்டச் சொன்னார்
செங்கடல் இரண்டாய் பிளந்ததுவே - (2)
இஸ்ரவேலை நடக்க வழிவிட்டதே
தேவனே உம்மால் எல்லாம் கூடுமே! - (2)

(ஆச்சரியமானவர்)

பதினெட்டு வருடம் கூனியாக
இருந்தாளே ஒருத்தி பலவீனத்தால் - (2)
இயேசு வந்து தொட்டதால் நிமிர்ந்தாளே
தேவனே உம்மால் எல்லாம் கூடுமே! - (2)

(ஆச்சரியமானவர்)

எரிகோவின் வீதியில் ஒரு குருடன்
சத்தமிட்டு இயேசுவை கூப்பிட்டானே - (2)
இயேசு வந்து பார்வை தந்தார்
தேவனே உம்மால் எல்லாம் கூடுமே! - (2)

(ஆச்சரியமானவர்)

4. எந்தன் இயேசுவே

எந்தன் இயேசுவே, உம்மையன்றியே,
வேறு வழி இல்லையே, என்னை மீட்கவே! - (2)

(எந்தன் இயேசுவே)

பிறக்கும் முன்னே தெரிந்து கொண்டீரே
வாழ்வில் எனக்கு துணையும் நீரே - (2)
உலகம் என்னை பகைக்கும் போது
என்னைத் தாங்கும் தெய்வம் நீரே! - (2)

(எந்தன் இயேசுவே)

கொந்தளிக்கும் கடல் மேலே
தத்தளிக்கும் கப்பலானேன் - (2)
நங்கூரமாய் வந்த தேவனே
அமைதியை தந்த இயேசுவே! - (2)

(எந்தன் ஏசுவே)

எந்தன் ஆத்மா என்றும் வாழவே
ஜீவன் எனக்குத் தந்த தேவனே! - (2)
பரமவாசல் இயேசு நீரய்யா
பரலோகம் அழைத்துச் செல்லவே!! - (2)

(எந்தன் ஏசுவே)

5. மேலான நாமம் உள்ளவரே

மேலான நாமம் உள்ளவரே
ஸ்தோத்திர பலிக்கு பாத்திரரே - (2)
மகிமையோடு வந்திடுவீர்
மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம். - (2)

(மேலான நாமம்)

வானமும், பூமியும் படைத்தவரே
உயிர்களையெல்லாம் காப்பவரே - (2)
மேகங்கள் நடுவில் வருபவரே
சேனையின் கர்த்தர் நீர் தானே! - (2)

(மேலான நாமம்)

உலகின் ஒளியாய் வந்தவரே
உன்னத பெலனாய் இருப்பவரே - (2)
ஏழு கண்கள் உடையவரே
உள்ளத்தை ஆராய்ந்து பார்ப்பவரே! - (2)

(மேலான நாமம்)

அல்ஃபா, ஒமெகா ஆனவரே
இருந்தவர், இருப்பவர், வருபவரே! - (2)
சகலமும் புதிதாய் மாற்றிடுவீர்
சர்வ வல்ல தேவன் நீரே! - (2)

(மேலான நாமம்)

6. தேவன் தந்தார்

தேவன் தந்தார் - சத்திய வேதம்
வாழ்க்கைக்கு அது ஆதாரம் - (2)
(தேவன் தந்தார்)

பொய்வழி மாற்றும்
மெய்வழி காட்டும்
வேதமே அது சத்தியமே!
பொய்வழி மாற்றும்
மெய்வழி காட்டும்
வேதமே அது நித்தியமே!
(தேவன் தந்தார்)

நீதி, நியாயம், கற்றுத் தரும்
மாயை எதுவென்று புரியவைக்கும் - (2)
உணர்வைத் தந்து உயிர்ப்பிக்குமே
உள்ளத்தை என்றும் மகிழ வைக்கும் - (2)
(தேவன் தந்தார்)

வேதம் நமக்குத் தரும் சுகமே
தியானம் செய்வோம் அனுதினமே! - (2)
வேதம் படித்தால் சமாதானமே
வேதம் என்றும் அதிசயமே! - (2)
(தேவன் தந்தார்)

வேதம் தருவது பரிசுத்தமே
வேதத்தால் வருவது என்றும் நலமே! - (2)
வேதத்தை பிரியமாய் வாசிப்போம்
வசனத்தை மனதில் விசுவாசிப்போம். - (2)
(தேவன் தந்தார்)

7. தன் ஜீவன் தந்தார்

தன் ஜீவன் தந்தார் என் ஜீவன் ஆனார்
என் வாழ்க்கை இயேசுவுக்கே - (2)
என் நெஞ்சமே என் நேசமே
என்றென்றும் இயேசுவுக்கே. - (2)

(தன் ஜீவன்)

நிம்மதியில்லாத இந்த உலகில்
இன்னல்கள் வந்தாலுமே - (2)
இயேசுவே எந்தன் வேதனை நீங்க
புதுபெலன் தந்திடுவார். - (2)

(தன் ஜீவன்)

என்னை மறவாத தேவ மைந்தன்
அவரிடம் தஞ்சமானேன் - (2)
இதயத்தின் வாஞ்சை அறிந்திடுவாரே
தயவுடன் அருள்புரிவார் - (2)

(தன் ஜீவன்)

திரளான மீட்பு தருகின்றார் இயேசு
சிறுபிள்ளை போல் ஆனேன் - (2)
கிருபையும் என்மேல் வைத்திடுவாரே
அவர் பாதம் பணிந்திடுவேன் - (2)

(தன் ஜீவன்)

8. நெஞ்சத்தின் நன்றியெல்லாம்

நெஞ்சத்தின் நன்றியெல்லாம்
எப்படி நான் சொல்வேனய்யா
இயேசய்யா, எங்க நேசய்யா (2)

(நெஞ்சத்தின்)

பாதாளம் போக வைக்கும்
பாவங்களை செய்தேன்னய்யா
ஓடிவந்து தாங்கிக் கொண்டீரே
இரட்சிப்பினால் காத்துக் கொண்டீரே
இயேசய்யா, எங்க நேசய்யா (2)

(நெஞ்சத்தின்)

புதிய ஆவி தந்தீரே
புதிய இதயம் தந்தீரே
புதிய கிருபை தந்தீரே
புதிய சிருஷ்டியானேனே
இயேசய்யா, எங்க நேசய்யா (2)

(நெஞ்சத்தின்)

உலக மக்களிடம் என்னை நீர் பிரித்தெடுத்தீர் - (2)
உமக்காக தெரிந்துக் கொண்டீரே
உள்ளமெல்லாம் பொங்கி வழியுதே
இயேசய்யா, என் நேசய்யா (2)

(நெஞ்சத்தின்)

9. இதுவரையிலும் நம்மைக் காத்த தேவன்

இதுவரையிலும் நம்மைக் காத்த தேவன்
இனிமேலும் காப்பாரே! - (2)
நம்மை நேசிக்கும் பரமபிதா
ஒரு நாளும் கைவிடாரே! - (2)

(இதுவரையிலும்)

தீர்க்கதரிசி எலியாவை
காகத்தைக் கொண்டு உணவளித்தார் - (2)
எலியாவைப் போஷித்த பரலோக தேவன்
நம் பசி தாகம் தீர்ப்பாரே! - (2)

(இதுவரையிலும்)

பவுலும், ஷீலாவும் நடு நிசியில்
ஜெபித்து, துதித்து பாடினார்கள் - (2)
சிறைக்கதவெல்லாம் தானாய் திறந்தது
கட்டுகள் யாவும் அவிழ்ந்ததுவே! - (2)

(இதுவரையிலும்)

விசுவாசம் ஒரு போதும் குறையாமல்
கர்த்தருக்காக காத்திருப்போம் - (2)
தேவைகள் எல்லாம் சந்திப்பார் ஏசு
நன்மைகள் யாவும் செய்திடுவார். - (2)

(இதுவரையிலும்)

சுக ஜீவ கீதங்கள்

VOL. 10

1. இரட்சிப்பின் ஊற்றாய்

இரட்சிப்பின் ஊற்றாய் இயேசு வந்தார்
கல்வாரி அன்பை ஊற்றுகின்றார்
ஜீவ மார்க்கம் அவர்தானே
மானிட உருவில் வந்தாரே (இரட்சிப்பின்)

நாம் இனிமேல் நாமல்ல
இயேசுதானே நமக்குள்ளே
மாற்றிவிட்டார் நம்மை மாற்றிவிட்டார்
தேவனின் பிள்ளையாய் ஏற்றுக் கொண்டார்
யாவரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போம்
யாவரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போம்.
(இரட்சிப்பின்)

காத்துக் கொள்வோம் நம்மை காத்துக் கொள்வோம்
விசுவாசத்தால் நம்மை காத்துக் கொள்வோம்.
தந்திடுவார் கர்த்தர் தந்திடுவார்
ஜீவ கிரீடம் தந்திடுவார்
யாவரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போம்
யாவரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போம்.
(இரட்சிப்பின்)

செய்திடுவோம் நாம் செய்திடுவோம்
இயேசுவின் ஊழியம் செய்திடுவோம்
கனம் பண்ணுவார் நம்மை கனம் பண்ணுவார்
உன்னத தேவன் கனம் பண்ணுவார்
யாவரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போம்
யாவரும் சேர்ந்து ஸ்தோத்தரிப்போம்.
(இரட்சிப்பின்)

2. நாதா, இயேசுநாதா

நாதா, இயேசுநாதா
எங்கள் பெலனாய் வந்த தேவா
இராஜா நேச இராஜா
எங்கள் மெய்யான தெய்வம் நீரே

பொங்குதே எந்தன் உள்ளம்
நீர் செய்த நன்மைகளால்

(நாதா, இயேசுநாதா)

சேனையின் கர்த்தர் மலையின் மேல்
ஆயத்தம் செய்தீரே நல்விருந்தை
துடைத்தீர் எனது கண்ணீரெல்லாம்
நீக்கினீர் எனது நிந்தைகளை

(நாதா, இயேசுநாதா)

கடலின் அலைகள் கொந்தளிக்கும்
தேவனே உமது வல்லமையால்
சர்வ பூமியின் தேவன் நீரே
என்னையும் மேன்மையாய் வைத்தீரய்யா

(நாதா, இயேசுநாதா)

ஆனந்தக் களிப்பில் பாடுகிறேன்
நித்திய மகிழ்ச்சி தந்தீரய்யா
உமது பார்வையில் கனம் பெற்றேன்
என் மேல் சிநேகம் வைத்தீரய்யா

(நாதா, இயேசுநாதா)

3. ஒவ்வொரு நாளும்

ஒவ்வொரு நாளும் புதிதாக
உமது கிருபை இருக்கின்றதே
எந்தன் ஜீவியம் மாற்றிவிட்டீர்
இயேசுவே உமக்கு ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
(ஒவ்வொரு நாளும்)

ஜென்ம பாவம் சுயநலமே
போன இடமே தெரியலையே
கன்ம பாவம் நீக்கிவிட்டீர்
கர்த்தர் இயேசுவே ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
(ஒவ்வொரு நாளும்)

கண்களின் இச்சை தீமைகளை
அகற்றிப் போட்டீர் ஆண்டவரே
ஜீவனப் பெருமை. பண ஆசை
எடுத்துப் போட்டீர் ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
(ஒவ்வொரு நாளும்)

தயவும் அன்பும் காட்டுகின்ற
உள்ளத்தை எனக்கு தந்தீரே
எனக்குள் இயேசுவே வாழுகின்றீர்
என்றென்றும் உமக்கே ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே
(ஒவ்வொரு நாளும்)

4. அண்ணன்மாரே, தம்பிமாரே

அண்ணன்மாரே, தம்பிமாரே வாங்க
அக்காமாரே தங்கைமாரே வாங்க
அம்மாமாரே ஐயாமாரே வாங்க
அண்ணன்மாரே தம்பிமாரே வாங்க
நல்லசெய்தி சொல்லுவேன் நின்னு கொஞ்சம் கேளுங்க
எந்நாளும் எப்போதும் சந்தோஷமே
(அண்ணன்மாரே)

இதுவரை வாழ்ந்த வாழ்க்கையெல்லாம்
சொல்லிக் கொள்ள ஒன்னுமே இல்லையே
எதற்காகப் பிறந்தோம், எதற்காக வாழ்ந்தோம்
எங்கே நாம் போகப் போகிறோம்
இந்த நேரத்தில் இத நினைச்சிப் பாருங்க
உங்க வாழ்க்கை தான் இப்ப மாற வேணுங்க
(அண்ணன்மாரே)

மனிதர் செய்த பாவங்களெல்லாம் மன்னித்து
இரட்சிப்பை தந்திடவே
இயேசு வந்தார் நம்மை அழைக்க புதிய பாதையில்
நடத்திச்செல்ல
நல்ல மேய்ப்பர் நம்ம இயேசுங்க
அவர் பின்னால் பொவோம் வாருங்க
(அண்ணன்மாரே)

இந்த உலகம் என்றும் நமக்கு சொந்தம்
இல்லவே இல்லையே
பரம கானான் தேசம் ஒன்று கர்த்தர் வைத்தார் நமக்காக
நம்ம வீடு அங்கே தானுங்க
எந்த நாளும் இன்பம் தானுங்க
(அண்ணன்மாரே)

5. எம்மாத்திரம் நான்

எம்மாத்திரம் நான் எம்மாத்திரம்
இயேசுவே என்னை நீர் நினைப்பதற்கு
என் இயேசுவே, என் நேசரே,
என் தேவனே, என் இராஜனே.
(எம்மாத்திரம்)

கைவிரலாலே படைத்தீரே
வானமும், சந்திரன், நட்சத்திரமும்
நோக்கிப் பார்த்து வியக்கின்றேன்
அதிசயம், அதிசயம், அதிசயமே.
(எம்மாத்திரம்)

என்னையும் தேடி வந்தீரே
அன்பினால் என்னை அணைத்தீரே
மகிமையின் கிரீடம் வைத்தீரே
படைப்பின் ஆளுகை தந்தீரே
(எம்மாத்திரம்)

கர்த்தரின் நாமம் பூமியெங்கும்
மேன்மை நிறைந்து இருக்கின்றதே
உமது மகத்துவம் வைத்தீரே
வானாதி வானங்கள் மேலாக
(எம்மாத்திரம்)

6. ஒரு நாளல்ல. இரு நாளல்ல

ஒரு நாளல்ல. இரு நாளல்ல எங்கள்
வாழ்நாள் முழுவதுமே
இயேசுவே உம்மை துதித்திடுவோம்
கீதங்கள் பாடி மகிழ்ந்திடுவோம்
இயேசுவுக்கு ஜெய கீதமே
இயேசுவுக்கு ஜெய கீதமே
(ஒரு நாளல்ல)

கண்ணீரோடு ஜெபிக்கவே கற்றுத் தந்தீரே
ஆவியோடு ஜெபிக்கவே சொல்லித் தந்தீரே
உம் கிருபை ஒன்றே போதுமே
எங்கள் வாழ்க்கை இன்பமாய் மாறுமே
(ஒரு நாளல்ல)

பரலோகம் ஒன்றையே நாடுங்கள் அதன்
நீதியை தேடுங்கள்
பரலோக இரகசியம் இதைப் போலவே
விளங்க வைத்தீரே
உம் கிருபை ஒன்றே போதுமே
எங்கள் வாழ்க்கை இன்பமாய் மாறுமே
(ஒருநாளல்ல)

பிதாவின் சித்தத்தை செய்கின்றீர்
உம் வழியில் நடக்கின்றோம்
விடுதலை தந்த பரிகாரியே எங்கள் நேசரே
உம் கிருபை ஒன்றே போதுமே
எங்கள் வாழ்க்கை இன்பமாய் மாறுமே
(ஒரு நாளல்ல)

7. மாறிடுதே, மறைந்திடுதே

மாறிடுதே, மறைந்திடுதே
இந்த மானிடர் காட்டும் அன்பு
இயேசுவே உமது அன்பு எந்நாளும் பவுர்ணமியே
(மாறிடுதே)

உந்தன் வீட்டாரே உனது சத்துருவே
மெய்யாய் சொன்னீரே உமது சத்தியத்தை
அனுபவத்தில் கண்டேனே
அழுகின்றேன் அமைதியில்லை
அழுகின்றேன் அமைதியில்லை
(மாறிடுதே)

பழகி வந்தவர்கள் என்னை பகைத்தாரே
கலங்கக் கண்டேனே எனது உள்ளமெல்லாம்
நொறுங்குண்ட இதயத்தின் காயங்களை கட்டுவீரே
காயங்களை கட்டுவீரே
(மாறிடுதே)

உம் முகம் பார்க்க வேண்டும்
உம் மடி எனக்கு வேண்டும்
கருணையின் கரம் வேண்டும்
உமதன்பை ருசிக்க வேண்டும்
அர்ப்பணித்தேன் ஆத்துமாவை
ஆண்டவரே அரவணைப்பீர்
ஆண்டவரே அரவணைப்பீர்
மாறிடாதே எந்தன் இயேசுவின் தூயஅன்பு
(மாறிடுதே)

8. நம் வாழ்வில் சந்தோஷம்

நம் வாழ்வில் சந்தோஷம்
தருகின்றார் நம் இயேசு
அவர் நாமம் சொன்னால் சந்தோஷம்
அவர் வார்த்தை கேட்டால் சந்தோஷம்
சந்தோஷம் சந்தோஷம் எந்நாளும் நமக்கு சந்தோஷம்
சந்தோஷம் சந்தோஷம் எந்நாளும் நமக்கு சந்தோஷம்
(நம் வாழ்வில் சந்தோஷம்)

இயேசுவை ஏற்றுக் கொண்டால் சந்தோஷம்
பாவத்தை விட்டுவிட்டால் சந்தோஷம்
இரட்சிப்பை பெற்றுக் கொண்டால் சந்தோஷம்
ஞானஸ்நானம் எடுத்தால் சந்தோஷம்
சந்தோஷம் சந்தோஷம் எந்நாளும் நமக்கு சந்தோஷம்
சந்தோஷம் சந்தோஷம் எந்நாளும் நமக்கு சந்தோஷம்
(நம் வாழ்வில் சந்தோஷம்)

வேதத்தை வாசித்தால் சந்தோஷம்
ஜெபத்தில் இருந்தால் சந்தோஷம்
ஆவியில் நிறைந்தால் சந்தோஷம்
ஆராதனை தருமே சந்தோஷம்
சந்தோஷம் சந்தோஷம் எந்நாளும் நமக்கு சந்தோஷம்
சந்தோஷம் சந்தோஷம் எந்நாளும் நமக்கு சந்தோஷம்
(நம் வாழ்வில் சந்தோஷம்)

நன்மைகள் செய்தால் சந்தோஷம்
உண்மையாய் இருந்தால் சந்தோஷம்
அன்பைக் காட்டினால் சந்தோஷம்
உதவிகள் செய்தால் சந்தோஷம்
(நம் வாழ்வில் சந்தோஷம்)

9. ஒத்தாசை வருமே உனக்கு

ஒத்தாசை வருமே உனக்கு
சீயோன் மலையில் இருந்து
கர்த்தரை நோக்கி காத்திருப்பாய்
தயவுடன் உன்னை நடத்திடுவார்.

(ஒத்தாசை வருமே உனக்கு)

ஒரு தீங்கும் ஒரு போதும் உன்னை அணுகாது
எந்தப் பொல்லாப்பும் ஒரு நாளும் உன்னை நெருங்காது
இஸ்ரவேலை காக்கின்ற தேவன்
எந்நாளும் உன்னை காத்திடுவார்.

(ஒத்தாசை வருமே உனக்கு)

பகல் நேரம் சுடுகின்ற வெயிலாய் இருந்தாலும்
இரவினிலே காணுகின்ற நிலவாய் இருந்தாலும்
உன்னை சேதப்படுத்தாது
உன் தேவன் துணையாய் இருக்கின்றார்.

(ஒத்தாசை வருமே உனக்கு)

உன் போக்கை, உன் வரத்தை கர்த்தர் காத்திடுவார்
உன் கால்கள் தள்ளாட விட்டுவிட மாட்டார்
உனக்குள் இருக்கும் ஆத்துமாவை
கர்த்தர் என்றும் காத்திடுவார்.

(ஒத்தாசை வருமே உனக்கு)

சுக ஜீவ கீதங்கள்
VOL 11

1. மாட்சிமை நிறைந்தவரே

மாட்சிமை நிறைந்தவரே
வல்லமை உள்ளவரே
இராஜ்ஜியமும் மகத்துவமும் உமக்கே என்றுமே
ஆராதனை. ஆராதனை எந்நாளும்
இயேசுவுக்கே. (2)

(மாட்சிமை நிறைந்தவரே)

இயேசுவே நீர் தானே
ஆளுகை செய்கின்றீர்
செல்வம் உயர்வெல்லாம்
நீர் தான் தருகின்றீர்.

(மாட்சிமை நிறைந்தவரே)

வானத்திலும். பூமியிலும்
உள்ளவை உமக்கே தான்
மகிமையும், ஜெயமுமெல்லாம்
உமது கரத்திலே.

(மாட்சிமை நிறைந்தவரே)

சுகஜீவ கீதங்களால்
உம்மையே துதிக்கின்றோம்
பரிசுத்த தேவன் நீரே
ஸ்தோத்திரம் உமக்கன்றோ.

(மாட்சிமை நிறைந்தவரே)

2. என்னை அழைத்த

என்னை அழைத்த எந்தன் தேவனே
உமக்கே ஊழியம் செய்ய வந்தேனே
என்னை நானே தந்துவிட்டேன்
உமக்கே தான் என்றென்றுமே.

(என்னை அழைத்த)

சோர்ந்து போன ஆத்துமாவை
ஆற்றித் தேற்றும் நேசர் நீரே
தளர்ந்து போன கரங்களையே
திடப்படுத்தும் தெய்வம் நீரே

(என்னை அழைத்த)

இயேசுவே உம்மை நம்பி வந்தேன்
கனி கொடுக்கும் மரமானேன்
ஜீவ தண்ணீர் எனக்குத் தந்தீர்
தேவரீர் என் துதியும் நீரே.

(என்னை அழைத்த)

எந்தன் வழியை அறிந்தவரே
இதயமெல்லாம் நிறைந்தவரே
உம்மைவிட்டு பிரியமாட்டேன்
நேசத்தாலே இழுத்துக் கொண்டீர்

(என்னை அழைத்த)

3. அன்பு நேசரே

அன்பு நேசரே. ஆருயிரே
உம்மை நான் தேடுகின்றேன்
காணாமல் வாடுகின்றேன்
பாடல் கேட்டு வாருமே
நிம்மதியைத் தாருமே

(அன்பு நேசரே)

பாலஸ்தீன தேசத்தில் திராட்சைத் தோட்ட நடுவிலே
எனக்காக மலர்ந்த மருதோன்றி பூங்கொத்தே
பாடல் கேட்டு வாருமே
நிம்மதியைத் தாருமே

(அன்பு நேசரே)

நேசத்தால் வருகின்ற சோகத்தினாலே
துவண்டுபோய் இருக்கின்றேன் தேற்ற
வருவீரே
பாடல் கேட்டு வாருமே
நிம்மதியைத் தாருமே

(அன்பு நேசரே)

இன்ப நேசரே. நீர் எனக்கு சொந்தமே
ரூபவதி தான் உமக்கு சொந்தமே
பாடல் கேட்டு வாருமே
நிம்மதியைத் தாருமே

(அன்பு நேசரே)

4. பயப்படாதே

பயப்படாதே, பயப்படாதே
ஜீவ தேவன் இயேசு சொன்னார்
உனக்கு எதிராய் எவர் வந்தாலும்
ஏழு வழியாய் ஓடிடுவார்
(பயப்படாதே)

துன்பம் உன்னை சூழ்ந்து கொண்டாலும்
கடன் சுமையால் நெருக்கப்பட்டாலும்
இயேசுவை நோக்கி கூப்பிடுவாய்
சத்தத்தை கேட்டு விடுவிப்பாரே.
(பயப்படாதே)

உன் மேல் இரக்கம் காட்டிடுவார்
சகாயம் செய்ய வந்திடுவார்
வலது கரத்தால் தாங்கிடுவார்
உனது விளக்கை ஏற்றிடுவார்
(பயப்படாதே)

உனக்கு முன்பாய் கர்த்தரையே
காலம் முழுதும் வைத்திருப்பாய்
உனது இதயம் மகிழ்ந்திடுமே
கர்த்தரோடு இணைந்திடுமே
(பயப்படாதே)

5. தாளத்தோடு

தாளத்தோடு பாட்டுப்பாடி ஆடிக் கொண்டாடு
இயேசு நாமம் உயர்ந்ததென்று மகிழ்ந்து கொண்டாடு
உலகமெங்கும் இயேசு ராஜ்ஜியம்
சீக்கிரமாய் வரப்போகுது.

(தாளத்தோடு)

உண்மையான சந்தோஷம் எங்கேயென்று தேடிப் பார்
கர்த்தரின் சபை தானே சந்தோஷம்
உற்சாகமாய் ஓடி வா, உன்னதரை நாடி வா.

(தாளத்தோடு)

பூமியிலே புத்தகங்கள் எத்தனையோ கோடி உண்டு
புத்தகத்தில் சிறந்தது வேதப் புத்தகம்
நாள்தோறும் படித்திடுவாய், நன்மைகளை
பெற்றிடுவாய்

(தாளத்தோடு)

கர்த்தருக்கு காணிக்கை தாராளமாய் தந்து பார்
கொடுத்தவர்கள் ஒரு போதும் தாழ்ந்ததில்லையே
தசம பாகம் கொடுத்துப் பார், உயரும் போது
நினைத்துப் பார்.

(தாளத்தோடு)

6. இயேசுவின் அன்பு

இயேசுவின் அன்பு நெருக்குதே என்னை
உருகுதே நெஞ்சம் அவர் அன்பினால்
இயேசுவால் புதிய சிருஷ்டியாய் ஆனேன்
எல்லாம் புதிதாய் மாறியதே.

(இயேசுவின் அன்பு)

இயேசுவின் சிந்தை இதயத்தில் ஏந்தி
வாழ்ந்திடுவேனே ஜீவிய நாளெல்லாம்
பாவியை மீட்க பாரினில் வந்த
இயேசுவை என்றும் துதித்திடுவேனே

(இயேசுவின் அன்பு)

எனக்குள் அன்பு நிறைந்திருந்தாலே
கர்த்தர் எனக்குள் நிலைத்தே இருப்பாரே
பூரண அன்பு பயத்தை போக்கும்
ஒருவருக்கொருவர் அன்பு செய்வோமே

(இயேசுவின் அன்பு)

தேவனின் பலத்த சத்துவத்தாலே
வரங்களை பெற்றோம், ஊழியம்
செய்கின்றோம்
பரிசுத்த ஜீவயம் வாழ்ந்திடுவோமே
ஜெபத்திலே என்றும் நிலைத்திருப்போமே

(இயேசுவின் அன்பு)

7. ஆத்துமாவே

ஆத்துமாவே என் ஆத்துமாவே
கர்த்தர் அற்புதர்
கீதமானார், ஜீவனானார்
அவரை மறவாதே
நல்லவர், வல்லவர், இயேசுவே இரட்சகர்
(ஆத்துமாவே)

ஆராய முடியாத காரியம் செய்கிறார்
எண்ணியே முடியாத அதிசயம் செய்கிறார்
பெலத்தினிலே அவர் பெரியவர்
ஞானத்தில் வல்லவர்,
நல்லவர், வல்லவர், இயேசுவே இரட்சகர்
(ஆத்துமாவே)

வெண்கல வாசல்களின் கதவுகள்
உடைக்கின்றார்
இரும்பு தாழ்ப்பாள்களை அவரே முறிக்கின்றார்
மறைவிடத்தில் இருக்கின்ற பொக்கிஷம் தருகின்றார்
நல்லவர், வல்லவர், இயேசுவே இரட்சகர்
(ஆத்துமாவே)

கர்த்தரின் காருண்யம் எத்தனை பெரியது
இன்றைக்கே தருகின்றார் இரட்டிப்பாய் நன்மைகள்
இன்று முதல் நம் கர்த்தர் ஆசீர்வதிக்கின்றார்.
நல்லவர், வல்லவர், இயேசுவே இரட்சகர் - 2
(ஆத்துமாவே)

8. கண்ணீரால்

கண்ணீரால் உமது பாதத்தை
கழுவிட வந்தேனே இயேசய்யா
எத்தனைபேர் கைவிட்டாலும்
கைவிடாத இயேசய்யா

(கண்ணீரால்)

அன்னாளின் விண்ணப்பம் கேட்டீரே நாதா
கர்ப்பத்தின் கனி தந்தீரே
ஆகாரின் கண்ணீரை கண்டீரே தேவா
இரக்கத்தால் இரட்சித்தீரே
இந்நாளில் எந்தன் துயர்
தீர்க்க வாரும் ராஜா - இயேசு ராஜா
எந்தன் உயிரான நேச ரோஜா

(கண்ணீரால்)

உபவாசம் இருந்தாளே எஸ்தர் ராஜாத்தி
முடிந்ததே காரியம் மாறுதலாய்
ரூத் என்னும் பெண்ணிற்கு போவாசின்
கண்ணில் தயவு நீர் கிடைக்கச் செய்தீர்
கிருபையின் பார்வை என் மீது திருப்பும்
ராஜா இயேசு ராஜா எந்தன் உயிரான நேச ரோஜா

(கண்ணீரால்)

9. இந்த உலகம்

இந்த உலகம் வனாந்திரம் - ஒரு வனாந்திரம்
இன்பக் கானான் சென்றிடுவோம்-நாம் சென்றிடுவோம்.

கோரஸ்: நடப்போம், நடப்போம், நடந்திடுவோம்
சத்தியப் பாதையில் நடந்திடுவோம்.

(இந்த உலகம்)

எகிப்து நாட்டில் எல்லோரும்
அடிமை வாழ்வை வாழ்ந்தோமே
கர்த்தர் மீட்டு வந்தாரே
கவலையின்றி பின் செல்வோம்.

(இந்த உலகம்)

பயணத்தில் தொல்லைகள் பல உண்டு
கர்த்தர் கிருபையால் நடத்திடுவார்
வானத்து மன்னாவால் போஷிக்கிறார்
தண்ணீரால் தாகத்தை தீர்க்கின்றார்.

(இந்த உலகம்)

பத்துக் கட்டளை தந்தாரே
அதன்படி நடக்கச் சொன்னாரே
நன்மையால் நம்மை நிறைத்தாரே
நித்திய வாழ்வுக்கு அழைத்தாரே

(இந்த உலகம்)

சுகசு ஜீவ கீதங்கள்
VOL. 12

1. ஸ்தோத்திரமே - ஸ்தோத்திரமே

<u>பல்லவி</u>

ஸ்தோத்திரமே - ஸ்தோத்திரமே தேவனுக்கு ஸ்தோத்திரமே
ஆனந்தமே அடைவோமே இயேசுவை பாடி மகிழ்வோமே
அல்லேலூயா - அல்லேலூயா
தேவனுக்கு தினமும் ஸ்தோத்திரமே

(ஸ்தோத்திரமே)

<u>சரணம் 1</u>

சம்பூர்ண மழையை பெய்யச் செய்கிறார்
ஏழைகளை தயவாய் நடத்துகிறார்
வீடு வாசல் தந்தே போஷிக்கிறார்
விடுதலை அளித்தே நேசிக்கிறார்

(ஸ்தோத்திரமே)

<u>சரணம் 2</u>

நீதியின் பலிகள் செலுத்திடுவோம்
நியாயாதி பதியை நம்பிடுவோம்
ஒடுக்கப் பட்டோரை தாங்குகிறார்
நெருக்கத்தில் தேவன் அடைக்கலமே

(ஸ்தோத்திரமே)

<u>சரணம் 3</u>

காத்தர் நமக்கு வெளிச்சமானார்
காருண்ய கேடயம் அவரானார்
இயேசுவே நமக்கு துணையானார்
இதயம் மகிழ்ந்தே ஸ்தோத்தரிப்போம்

(ஸ்தோத்திரமே)

2. இசையை மீட்டியே

<u>பல்லவி</u>

இசையை மீட்டியே
கீதம் பாடுவோம்
நாத சொரூபனை
புகழ்ந்து பாடுவோம்.

(இசையை)

<u>சரணம் 1</u>

ஆனந்த சத்தங்கள் சபையில் கேட்கட்டும்
வாத்திய கருவிகள் - தேவ கானங்கள் எழுப்பட்டும்
பத்து நரம்பிலே வீணை முழங்கட்டும்
ஏழு சுவரங்களும் விண்ணை எட்டட்டும்

(இசையை)

<u>சரணம் 2</u>

இயேசுராஜனை இசையில் வாழ்த்துவோம்
மகர யாழுடன் மன்னனைப் பாடுவோம்
தேவராகங்கள் காற்றில் மிதக்கட்டும்
தேவதூதர்கள் கேட்டு மகிழட்டும்

(இசையை)

<u>சரணம் 3</u>

ஸ்துதிகள் ஸ்தோத்திரம் சேர்ந்து செலுத்துவோம்
பூரிகை வாத்தியம் தொனிக்க பாடுவோம்
கீத சத்தத்தால் தேவனைப் போற்றுவோம்
ஆராதனை பேரின்பமே

(இசையை)

3. வந்தாரே வந்தாரே

பல்லவி

வந்தாரே - வந்தாரே இயேசு வந்தாரே
தந்தாரே - தந்தாரே வார்த்தை தந்தாரே
மன்னாதி மன்னன் இறங்கி வந்தாரே
மகிமையின் வாசலை திறந்து வைத்தாரே
(வந்தாரே)

சரணம் 1

பாவிகளின் நேசராய் இயேசு வந்தாரே
அவர்களோடு பந்தியிருக்க கர்த்தர் வந்தாரே
பூமியில் அக்கினி போடவந்தாரே - அது
பற்றியே எரிவதை பார்க்க வந்தாரே
(வந்தாரே)

சரணம் 2

சத்தியத்தை போதிக்க இயேசு வந்தாரே
சாத்தானின் கிரியைகளை அழிக்க வந்தாரே
பரிசுத்த ஆவியை ஊற்ற வந்தாரே - தம்
பிதாவின் சித்தத்தை செய்ய வந்தாரே
(வந்தாரே)

சரணம் 3

அன்பினால் நம்மையெல்லாம் ஆளவந்தாரே
துன்பங்களை போக்கிடவே இயேசு வந்தாரே
நோய்களை தீர்த்திடவே மீட்பர் வந்தாரே
நித்திய வாழ்வுக்கு அழைக்க வந்தாரே.
(வந்தாரே)

4. சிலுவைக் கொடி

<u>பல்லவி</u>

சிலுவைக்கொடி சிலுவைக்கொடி பறக்கணுமே
தேசமெங்கும் நேசக்கொடி ஜொலிக்கணுமே
சிலுவைக்கொடி - சிலுவைக்கொடி
நேசக்கொடி - நேசக்கொடி

<u>சரணம் 1</u>

வறுமையை விரட்டுகின்ற கிருபைக்கொடி
வளமான வாழ்வைத் தரும் கர்த்தர் கொடி
பரலோகம் காட்டுகின்ற இயேசுக்கொடி
பரவசம் பொங்க வைக்கும் நேசர்கொடி

(சிலுவைக்கொடி)

<u>சரணம் 2</u>

வெள்ளம் போல் சத்துரு எதிர்த்து வந்தாலும்
தடுத்தே நிறுத்திடும் ஆவிக்கொடி
இயேசுவோடு இறங்கிவந்த மீட்புக்கொடி
ஏற்றமுடன் பறக்கின்ற ஜெயக்கொடி

(சிலுவைக்கொடி)

<u>சரணம் 3</u>

கொல்கொதா மலையின்மேல் சிலுவைக்கொடி
இயேசுராஜன் ஏற்றிவைத்த வெற்றிக்கொடி
உலகமெல்லாம் பறக்கின்ற அன்புக்கொடி
இரட்சிப்பின் சின்னமாய் விளங்கும்கொடி

(சிலுவைக்கொடி)

5. வாலிபரே வாருங்களேன்

<u>பல்லவி</u>

வாலிபரே வாருங்களேன் இயேசு அழைக்கின்றார்
கன்னியரே வாருங்களேன் இயேசு அழைக்கின்றார்
இதுவே நேரம் வருவீர்
ஸ்பீடாய் ஓடுது காலம் (வாலிபரே)

<u>சரணம் 1</u>

சீக்கிரமாக இயேசுவின் வருகை
இருப்பதை தெரிந்துக் கொள்வீர்
அதற்கு முன்பாக ஆயத்தமாக
இருந்திட அழைக்கின்றார்
போதும் போதும் ஜாலி போதும்
Holy வாழ்க்கை வாழ வாருங்கள் (வாலிபரே)

<u>சரணம் 2</u>

கிருபையின் காலம் முடியுமுன்பாக
வேகமாய் வந்திடுவீர்
நியாயத்தீர்ப்பு நாளில் கர்த்தர் முன்பாக
நிற்பது கடினமன்றோ
போதும் போதும் ஆசை போதும்
Blessing வாழ்க்கை வாழ வாருங்கள். (வாலிபரே)

<u>சரணம் 3</u>

உன்னத வாழ்வின் அனுபவம் கண்டால்
உலகம் மாயை தானே
இயேசு காட்டும் ஜீவ மார்க்கம்
நடந்திட வாருங்களேன்
போதும் போதும் செய்த பாவம்
Heavenly Kingdom காண வாருங்கள் (வாலிபரே)

6. கண்ணீரை துடைப்பதற்கு

பல்லவி

கண்ணீரை துடைப்பதற்கு
ஒருவரும் வரவில்லையா
வந்துவிடு இயேசுவிடம்
உன்னை அறிந்த தேவன்

(கண்ணீரை)

சரணம் 1

பெருமூச்சினால் நீ இளைத்துவிட்டாயே
துயரத்தில் நனைந்ததே கண்கள் இரண்டும்
பெலனற்ற உன்னை விடுவிக்க இயேசு
வருகின்றார் உன்னிடம் இப்பொழுதே

(கண்ணீரை)

சரணம் 2

ஏக்கங்கள் உன்னை வாட்டிடும்போதும்
மனமே குழப்பத்தில் தவித்தாலும்
உந்தன் குரலை கேட்பார் இயேசு
இடுக்கண் களைந்தே ரட்சிப்பாரே.

(கண்ணீரை)

சரணம் 3

புல்லைப்போல உலர்ந்தாய் நீயே
சாய்ந்த நிழலாய் ஆகிவிட்டாயே
கர்த்தர் உனக்கு இரங்கிடுவாரே
தயவாய் உன்னை நடத்திடுவார்.

(கண்ணீரை)

7. ஞானத்தையும் புத்தியையும்

பல்லவி

ஞானத்தையும் புத்தியையும் அருள்பவர்
கிருபையை எனக்கு தருபவர்
இவரது ரத்தத்தால் பரிசுத்தம் ஆனேன்
அவரே எந்தன் இயேசு இரட்சகர்
இயேசு இரட்சகர் இயேசு இரட்சகர்
இயேசு இரட்சகர் இயேசு இரட்சகர்

(ஞானத்தையும்)

சரணம் 1

மகிமையின் தேவன் வருகிறார்
சீயோன் மலையில் அமர்கிறார்
சாந்த குணத்தையை கொண்ட மாந்தரை
கர்த்தர் அவரே உயர்த்துகிறார்.

(ஞானத்தையும்)

சரணம் 2

இயேசுவை கெஞ்சி அழைக்கின்றேன்
நெருக்கத்தை அறிக்கை செய்கிறேன்
வறண்ட நிலத்தைப் போல் எந்தன் ஆத்துமா
தேவன் மீதில் தாகம் கொண்டதே

(ஞானத்தையும்)

சரணம் 3

கர்த்தர் மிகவும் பெரியவர்
புகழும் கனமும் நிறைந்தவர்
என்னை அறிந்தவர் இதயம் நிறைந்தவர்
நித்திய வழியில் நடத்திடுவார்.

(ஞானத்தையும்)

8. எத்தனை விதமாய் இயேசு

பல்லவி

எத்தனை விதமாய் இயேசு
அன்பை நம்மேல் பொழிகின்றார்
உலகிலே எங்குமே
கிடைக்காத தேவ அன்பு

(எத்தனை)

சரணம் 1

மனதுருகும் அன்பினால்
நேசிக்கும் அன்பர் இயேசு
இரக்கத்தை கூட்டிடுவார்
நேசரின் அன்பினிலே

(எத்தனை)

சரணம் 2

தயை உள்ள அன்பை நாம்
கர்த்தரில் காணுகிறோம்
கிருபையால் மீட்பர் அன்பு
பொங்கி பெருகுதே

(எத்தனை)

சரணம் 3

ஜீவனையே இயேசு தந்தார்
தியாகத்தின் அன்பினால்
பரிதவிக்கும் அன்பினால் - நம்
உள்ளத்தில் வாசமானார்.

(எத்தனை)

9. ஜல் ஜல்

<u>பல்லவி</u>

ஜல் ஜல் ஜல் ஜல் வண்டியிலே
போவோம் போவோம் போவோமே
இரட்சிப்பு என்னும் ஊருக்கு (ஜல் ஜல்)
பயணம் போவோமே
தந்தன தந்தன தானா
தந்தன தந்தன தானா
தந்தன தந்தன தனனா
தந்தன தந்தன தானா
தந்தன தந்தன தானா
தந்தன தந்தன தனனா

<u>சரணம் 1</u>

பயணம் போகும் பாதையெல்லாம்
மேடு பள்ளம் ஏராளம்
குறுகலான வழியினிலே (ஜல் ஜல்)
வண்டி கட்டி செல்கின்றோம்

<u>சரணம் 2</u>

காசோ பணமோ செலவில்லை
இலவசமாக சென்றிடலாம்
ஜீவ அப்பம் கிடைத்திடுமே
பசியை நீங்க போக்கிடலாம் (ஜல் ஜல்)
பசியை நீங்க போக்கிடலாம்

<u>சரணம் 3</u>

திராட்சை ரசமும் குடித்திடலாம்
களைப்பு நீங்கி சுகம் பெறலாம்
பயணத்தின் முடிவில் இருக்கின்றதே
கர்த்தரின் தேசம் பரலோகம் (ஜல் ஜல்)
கர்த்தரின் தேசம் பரலோகம்

"சுகு ஜீவ கீதங்கள்"
(VOL - 13)

1 பரிசுத்த ஆவி வருகின்றார்

பல்லவி

பரிசுத்த ஆவி வருகின்றார் நம்மேல்
அற்புதங்கள் நடத்திடுவார்
அபிஷேகத்தாலே நிறைந்திடுவோமே
அனல் கொண்டு எழுவோமே (2) (பரிசுத்த)

சரணம் 1

ஆதியில் தேவ ஆவியானவர்
ஜலத்தின் மேலே அசை வாடினார் (2)
இன்றோ நமது இதயந்தனிலே
இருந்தே நம்மை ஆளுகின்றார் (2)
(பரிசுத்த)

சரணம் 2

தேவ அன்பின் வடிவானவர்
தூய ஆவி நமதானவர் (2)
இயேசுவால் வந்த சத்திய ஆவி
இனிதாய் நம்மை நடத்திடுவார் (2)
(பரிசுத்த)

சரணம் 3

மேகமாய் இறங்கி வந்தாரே
நமக்குள் வல்லமை தந்தாரே (2)
மகிமையின் ஆவி மகத்துவமான
அதிசயம் பலவும் செய்தாரே (2) (பரிசுத்த)

2 மானிடரே வார்த்தை ஒன்று

பல்லவி

மானிடரே வார்த்தை ஒன்று
சொல்லிடுவேன் கேளீர்
வாழ்வு தரும் வார்த்தை இது
கேட்டிடவே வாரீர் (2) (மானிடரே)

சரணம் 1

வலப்புறம் இடப்புறம் சாயாதீர்
கால்களை தீமைக்கு விலக்கிடுவீர் (2)
கண்கள் நேராக நோக்கட்டுமே
பார்வை செம்மையாய் இருக்கட்டுமே (2)
(மானிடரே)

சரணம் 2

வாயையும் நாவையும் காத்திடுவீர்
ஆத்தும ஜீவன் நிலைபெறுமே (2)
நற்செய்தி எலும்பினை உறுதியாக்கும்
வாய்மொழி மகிழ்ச்சியை தந்திடுமே (2)
(மானிடரே)

சரணம் 3

மேன்மையை நீங்கள் விரும்பினாலே
முதலில் தேவை தாழ்மை தானே (2)
பயப்படுவீர் கர்த்தருக்கு
ஞானத்தின் ஆரம்பம் அதுதானே (2)
(மானிடரே)

3 மனசுக்குள்ளே மனசுக்குள்ளே

பல்லவி

மனசுக்குள்ளே மனசுக்குள்ளே பொங்குதே ஆனந்தமே
ஜெயமே கொண்டார் ஜெயமே கொண்டார்
இயேசு மகா ராஜன் (2)
வானத்தையும் பூமியையும் ஆளுகிறார் நம்ம இயேசு (2)
கூடிடுவோம் பாடிடுவோம் ஆடிடுவோம் ஆனந்தமே(2)
(மனசுக்குள்ளே)

சரணம் 1

சாபங்கள் பாவங்கள் நீக்கி விட்டார்
துக்கங்கள் எல்லாமே போக்கிவிட்டார் (2)
கவலை இல்லை கண்ணீரும் இல்லை
எல்லாமே இயேசு மாற்றி விட்டார் (2)
(மனசுக்குள்ளே)

சரணம் 2

சோதனை வேதனை சந்தித்தாரே
இயேசுவும் பாடுகள் அடைந்தாரே (2)
சோதிக்கப்படும் நமக்கு எல்லாம்
உதவி செய்ய வல்லவரே (2)
(மனசுக்குள்ளே)

சரணம் 3

சீக்கிரமாக வந்திடுவேன்
சொன்னாரே இயேசு யோவானிடம் (2)
நீதியுடன் தூய்மையுடன்
தேவனிடம் சேர்ந்திடுவோம் (2)
(மனசுக்குள்ளே)

4. போதாதே ஐயா போதாதே

பல்லவி

போதாதே ஐயா போதாதே
எத்தனை நன்றி சொன்னாலும் (2)
செய்த நன்மைகள் கொஞ்சமல்ல
எடுத்துச் சொல்ல வார்த்தை இல்ல (2)
(போதாதே)

சரணம் 1

எப்பக்கமும் நான் நெருக்கப்பட்டேன்
அன்பால் என்னை மீட்டுக் கொண்டீர் (2)
கலக்கம் அடைந்தேன் நொறுக்கப்பட்டேன் (2)
கருணையின் கரத்தால் மீட்டுக் கொண்டீர் (2)
(போதாதே)

சரணம் 2

உலக சுமைகள் என்னை அழுத்த
தவித்தேன் தாங்க முடியாமல் (2)
ஓடி வந்து தாங்கிக் கொண்டீர் (2)
எந்தன் சுமையை ஏற்றுக் கொண்டீர் (2)
(போதாதே)

சரணம் 3

இயேசுவே என்னை அர்ப்பணித்தேன்
உமது ஊழியம் செய்திடவே (2)
உலகம் எங்கும் சென்றிடுவேன் (2)
உமது வார்த்தை சொல்லிடுவேன் (2)
(போதாதே)

5. பூமியின் மேலே

பல்லவி

Above the Earth
Below the Sky
There is one and the only SaviourHe is Jesus, He is Jesus - 2
Jesus I love you, Jesus I love you, Jesus I love you

பூமியின் மேலே
வானத்தின் கீழே - நம்
இரட்சகர் ஒருவரே - 2
அவர் இயேசு அவர் இயேசு - 2
இயேசுவை நேசிக்கிறேன் - 3

சரணம் 1

Jesus Came to this Earth for me
Jesus shed his blood for me - 2
Jesus died on the cross for me
Jesus rose from the dead for me - 2
Jesus I love you, Jesus I love you, Jesus I love you,

இயேசு உலகில் வந்தார் எனக்காக
இயேசு ரத்தம் சிந்தினார் எனக்காக - 2
இயேசு சிலுவை மரணம் எனக்காக
இயேசு உயிர்த்தார் எனக்காக - 2
இயேசுவை நேசிக்கிறேன் - 3

சரணம் 2

I Praise you my lord Jesus
I worship you my lord Jesus - 2
I hail you my lord Jesus
I glorify you my lord Jesus - 2
Jesus I love you, Jesus I love you, Jesus I love you,

இயேசுவே உம்மை நான் துதிக்கின்றேன்
இயேசுவே உம்மை நான் ஆராதிக்கின்றேன்
இயேசுவே உம்மை நான் புகழ்கின்றேன்
இயேசுவே உம்மை நான் உயர்த்துக்கின்றேன்
இயேசுவை நேசிக்கிறேன் (3)

Above the Earth
Below the Sky
There is one and the only Saviour - 2
He is Jesus, He is Jesus - 2
Jesus I love you, Jesus I love you, Jesus I love you

6 இறங்கி வருகின்றது

பல்லவி
இறங்கி வருகின்றது
தேவ வல்லமை? தேவ வல்லமை
நமக்குள்ளே கிரியை செய்யும் வல்லமை
அற்புதங்கள் நடக்க செய்யும் வல்லமை
வல்லமை? தேவ வல்லமை
தேவ வல்லமை? தேவ வல்லமை

சரணம் 1
சாத்தானை எதிர்த்து நிற்கும் வல்லமை
சத்தியங்கள் போதிக்கின்ற வல்லமை (2)
பெலவீனம் மாற்றுகின்ற வல்லமை
பெலத்தால் இடைக்கட்டும் வல்லமை (2)
வல்லமை? தேவ

சரணம் 2
பயங்களை போக்குகின்ற வல்லமை
தைரியத்தை தருகின்ற வல்லமை (2)
எதிரிகளை வீழ்த்துகின்ற வல்லமை
எதிலும் ஜெயம் கொள்ளும் வல்லமை (2)
வல்லமை? தேவ

சரணம் 3
பரிசுத்த ஆவிதரும் வல்லமை
பரலோகம் ஊற்றுகின்ற வல்லமை (2)
ஊழியங்கள் செய்ய வைக்கும் வல்லமை
உன்னதத்தில் சேர்க்கின்ற வல்லமை(2)
வல்லமை? தேவ

7. ஏங்குதே என் மனம்

பல்லவி

ஏங்குதே என் மனம்
நேசரை காணவே (2)
தேடினேன் எங்குமே
இதுவரை காணேனே (2) (ஏங்குதே)

சரணம் 1

இன்பம் நிறைந்த எந்தன் நேசர்
வார்த்தை நான் கேட்கணுமே (2)
தங்கம் போன்ற அவரின் ரூபம்
உடனே நானும் பார்க்கணுமே (2) (ஏங்குதே)

சரணம் 2

குளிர்ச்சியான மாலை நேரம்
எந்தன் நேசர் வருவாரே (2)
குன்றின் மீதும் மலையின் மீதும்
கலைமான் போல துள்ளி வருவார் (2)
(ஏங்குதே)

சரணம் 3

இயேசு மீது வைத்த நேசம்
திரள் தண்ணீர்கள் தணித்திடாதே (2)
தென்றல் போல என்னை அணைத்து
தேற்ற வேண்டும் என் நேசரே (2)
(ஏங்குதே)

8. எந்த நேரமும் என் இயேசுவே

பல்லவி

எந்த நேரமும் என் இயேசுவே
உம் நினைவே எனதாகுமே (2)
இந்த உலகின்மேல்? என் நாட்டமெல்லாம் (2)
நீங்கி போகணுமே (2)
(எந்த நேரமும்)

சரணம் 1

எவையெல்லாம் இன்பமென்று
இதயத்தில் நினைத்தேனோ (2)
அவையெல்லாம் துன்பங்களே
மெய்யாய் உணர்ந்தேனே (2)
இயேசு என்னும் நாமம் ஒன்றே
தாங்கிடுதே தேற்றிடுதே (2)
(எந்த நேரமும்)

சரணம் 2

இருட்டில் நான் திரிந்தலைந்தேன்
குருடன் நடப்பதைப் போல் (2)
இயேசு வந்தார் என்னைத் தொட்டார்
கண்களைத் திறந்தாரே
கண்ணீரால் நன்றி சொல்வேன் (2)
என் சிலுவை சுமந்து செல்வேன் (2)
(எந்த நேரமும்)

சரணம் 3

என் வாழ்வில் பல மனிதர் வருவார் போவாரே (2)
நிலையில்லா உலகினிலே நிரந்தரம் ஏதுமில்லை (2)
இறுதிவரை என்னோடு இருப்பவரே இயேசுதானே (2)
(எந்த நேரமும்)

9. உலகம் போற போக்கிலே

பல்லவி

உலகம் போற போக்கிலே
ஓடுகின்ற ஜனங்களே
மாய வலைகள் கிடக்குது
போற வழியிலே (2)
நில்லுங்க கொஞ்சம் நில்லுங்க (2)
(உலகம் போற)

சரணம் 1

பெருமையும் அகந்தையும்
தூக்கி எறிந்து போடுங்க
தீய வழி புரட்டுவாய்
கர்த்தர் தானே வெறுக்கிறார் (2)
சத்தியத்தை நாடுங்க சத்தியத்தை நாடுங்க
(உலகம் போற)

சரணம் 2

பாவங்களை மறைப்பவன்
வாழ்வடைய மாட்டான் (2)
அறிக்கை செய்து விடுபவன்
இரக்கம் பெற்று கொள்கிறான் (2)
நன்மைகளை அடைகிறான் நன்மைகளை அடைகிறான்
(உலகம் போற)

சரணம் 3

திமானின் தலையின் மேல்
ஆசீர்வாதம் தங்குமே (2)
த்தமமாய் நடந்தால்
திரமாய் நடக்கலாம்
நித்தமுமே. மகிழ்ச்சிதான் நித்தமுமே. மகிழ்ச்சிதான்
(உலகம் போற)

சரணம் 4

கர்த்தர் தரும் வார்த்தைகள்
ங்க ஏற்று கொள்ளுங்க (2)
தேவன் தரும் ஞானத்தை
தையல் போல நாடுங்க (2)
த்தியோடு வாழுங்க புத்தியோடு வாழுங்க
(உலகம் போற)

சுகஜீவ கீதங்கள்
VOL - 14

1 ஒரு மனதாய்

பல்லவி

ஒரு மனதாய் சபையோரே
துதித்திட வருவீரே
ஒரு குரலில் கர்த்தரையே
போற்றியே பாடிடுவீர் (2)

தேவநாமம் உயரட்டுமே
மகிமை இங்கே இறங்கட்டுமே (2) (ஒரு மனதாய்)

சரணம் 1

உலகத்தில் கிடைக்கும் இன்பமெல்லாம்
நொடிப் பொழுதில் தான் மறைந்திடுதே (2)
கர்த்தரின் பாதத்தில் அமர்ந்தாலே
பொங்கிடும் நித்திய பேரின்பமே(2) (ஒரு மனதாய்)

சரணம் 2

மகிமையின் ராஜன் வருகின்றார்
வாழ்த்திட யாவரும் வாருங்களேன் (2)
உயர்த்துவோம் நமது ஆத்துமாவை
இரட்சிப்பின் தேவன் இயேசுவிடம் (2)
(ஒரு மனதாய்)

சரணம் 3

கர்த்தர் நமக்கு போதிப்பார்
நடக்கும் வழியை காட்டிடுவார் (2)
கண்களை நம்மேல் வைத்திடுவார்
யோசனை நமக்குச் சொல்லிடுவார் (2) (ஒரு மனதாய்)

2. நதியோரம்

பல்லவி

நதியோரம் உள்ள தோட்டம் போலே
உன் வாழ்வை இயேசு செழிப்பாக்குவார் (2)
தாழ்மையோடு நீ இருந்தால் - இயேசு
கிருபையை தந்தருள்வார் (2)
(நதியோரம்)

சரணம் 1

பரவிச் செல்லும் ஆறுகளைப் போல்
ஆசீர்வாதம் உன்னிலே பெருகச் செய்குவார்
(2)
சந்தன மரங்களைப் போல்
மணம் வீசி ஓங்கி உயர்ந்திடுவாய் (2)
(நதியோரம்)

சரணம் 2

கர்த்தர் தரும் சுக வாழ்வு
துளிர்த்து காய்த்து கனிதருமே (2)
அதிகாலை சூரியன் போல்
இயேசுவின் அன்பு உதித்திடுமே (2)
(நதியோரம்)

சரணம் 3

கர்த்தருக்குள் மகிழ்ந்திருப்பாய்
உயர்ந்த இடத்தில் வாசம் செய்வாய் (2)
உன் நீதி முன் செல்லுமே
கர்த்தரின் மகிமை தாங்கி வருமே (2)
(நதியோரம்)

3. கலிலேயா கடலிலே போகின்றோம்

பல்லவி

ஓஹையா ஓஹையா ஐலசா ஐலசா
கலிலேயா கடலிலே போகின்றோம்
கர்த்தரோடு படகிலே போகின்றோம் (2)
அன்பான ஆண்டவர் நம்மோடு
ஆத்துமாக்கள் கிடைக்குமே வலைபோடு (2)
(கலிலேயா)

சரணம் 1

அலை புரண்டு வந்தாலும் கவலை இல்லை
பெருங்காற்று வீசினாலும் பயமும் இல்லை (2)
இயற்கையெல்லாம் கர்த்தருக்கு அடங்கிடுமே (2)
நம் பயணம் அமைதியாக நடந்திடுமே (2)
ஓஹையா ஓஹையா ஓஹையா ஐலசா (2)
(கலிலேயா)

சரணம் 2

சொந்த பந்தம் எல்லாமே விட்டு வந்தோம்
மீட்பரிடம் நாமெல்லாம் தஞ்சமானோம் (2)
மனம் திரும்பி அவர் பின்னால் செல்லுகின்றோம் (2)
மகிழ்ச்சியோடு சுவிசேஷம் சொல்லுகின்றோம் (2)
ஓஹையா ஓஹையா ஓஹையா ஐலசா (2)
(கலிலேயா)

சரணம் 3

பரமபிதா அன்பெல்லாம் இயேசு மேலே
இயேசுவின் அன்பெல்லாம் நம்ம மேலே (2)
அவர்மீது விசுவாசம் வைத்திடுவோம் (2)
அவர் வசனம் நாமெல்லாம் கைக்கொள்வோம் (2)
ஓஹையா ஓஹையா ஐலசா ஐலசா (2)
(கலிலேயா)

4 My Dear Heavenly Father

My Dear Heavenly Father
Come to me in my Heart
Mighty Holy Lord of Lords
You are my life, Oh God! (2)

Oh God, God of Gods
Heavenly God
Oh Lord, Lord of Lords
Mighty Lord (2)

அன்பின் பரம தந்தையே
உள்ளத்தில் வாருமே
வல்ல தூய தேவ தேவனே
நீரே எந்தன் ஜீவனே (2)
இராஜாதி ராஜனே பரமனே
கர்த்தாதி கர்த்தரே வல்லவரே (2)

Every day you meet our needs
Thank you merciful God
What a love you are showing us
Wonderful, Graceful Lord (2)

Faithful Truthful God
Living Loving God
Graceful Mercyful God
Caring, Sharing God (2) My Dear

தேவைகள் தினமும் சந்திக்கின்றீர்
நன்றி தேவனே
என்ன அன்பு காட்டுகின்றீர்
அற்புத நாதனே (2)
மெய்யானவர் உயிருள்ளவர்
அன்புள்ளவர் காக்கின்றவர் (2)
(அன்பின்)

You are my guide forever more
Everlasting God
Hold my hand, Lead my way
You are my saviour, Lord

Faithful Truthful God
Living Loving God
Graceful Mercyful God
Caring, Sharing God (My Dear)

நித்தியமும் நீரே வழி
அனாதி தேவனே
கரம் பற்றி நடத்துவீர்
எந்தன் இரட்சகரே (2)

மெய்யானவர் உயிருள்ளவர்
அன்புள்ளவர் காக்கின்றவர் (2);
(My Dear)

5 சொன்னால் போதுமே

பல்லவி

சொன்னால் போதுமே இயேசு நாமமே
உள்ளமே மகிழ்ச்சியால் துள்ளுதே
வாலிப உலகமே நினைத்துப் பார்த்தாலே
சொந்தமே பந்தமே எல்லாம் இயேசுவே (2)

சரணம் 1

இந்த உலகிலே இயேசு வாழ்ந்தது
முப்பத்தி மூணு வருசமும் ஆறுமாசமும் (2)
அதற்குள்ளாகவே என்ன சாதனை
பூமியெங்கும் பார்க்கிறோம் அவரின் ராஜ்யமே (2)
(சொன்னால் போதுமே)

சரணம் 2

சாத்தான் என்பவன் நோய்க்கு தகப்பனே
பாவம்தானே வியாதிக்கெல்லாம் மம்மியானவள் (2)
நல்ல டாக்டரோ நம்ம இயேசுவே
நேற்று இன்று என்றுமே சுகம் தருகிறார். (2)
(சொன்னால் போதுமே)

சரணம் 3

திரும்ப வருகிறார் சீக்கிரம் இயேசுவே
வேதம் நமக்குச் சொல்லுதே காத்திருப்போமே (2)
வந்து நம்மையே அழைத்துச் செல்லுவார்
பரலோகம் அங்கு என்றும் ஆனந்த வாழ்க்கையே (2)
(சொன்னால் போதுமே)

6. ஆராதனை ஆராதனை

பல்லவி

ஆராதனை ஆராதனை
ஆராதனை ஆராதனை

பரலோக தேவனுக்கு ஆராதனை
இன்பமான இயேசுவுக்கு ஆராதனை
ஆவியான தேவனுக்கு ஆராதனை
திரியேக தேவனுக்கு ஆராதனை

ஆராதனை

சரணம் 1

ஆபிரகாமின் தேவனுக்கு ஆராதனை
ஈசாக்கின் தேவனுக்கு ஆராதனை (2)
யாக்கோபின் தேவனுக்கு ஆராதனை
யோசேப்பின் தேவனக்கு ஆராதனை (2)

ஆராதனை

சரணம் 2

தாவீதின் தேவனுக்கு ஆராதனை
தானியேலின் தேவனுக்கு ஆராதனை (2)
எலியாவின் தேவனுக்கு ஆராதனை
எலிசாவின் தேவனுக்கு ஆராதனை (2)

ஆராதனை

சரணம் 3

கர்த்தாதி கர்த்தருக்கு ஆராதனை
இராஜாதி ராஜனுக்கு ஆராதனை (2)
நம்முடைய ஆண்டவர்க்கு ஆராதனை
நாளெல்லாம் தேவனுக்கு ஆராதனை (2)

ஆராதனை

7 என்றும் மாறா

பல்லவி

என்றும் மாறா தேவனை தேடுங்கள்
வருவார் உங்கள் மத்தியிலே வேகமாய்
(2)
இரண்டு பேர்கள் கூடினாலும்
இயேசு அங்கே இருக்கிறார்
(2)
(என்றும் மாறா)

சரணம் 1

தேவனின் பிரசன்னம் இறங்குமே
பெருகுமே வல்லமை அதிகமாய் (2)
ஜீவிய நாளெல்லாம் துதிக்க வேண்டுமே (2)
அதுவே வாழ்வில் தருமே நமக்கு பேரின்பமே..(2)
(என்றும் மாறா)

சரணம் 2

தங்கம் வெள்ளியை காட்டிலும் இயேசுவே
அவரே தான் நமது செல்வமே (2)
தேவனின் வார்த்தைகள் நிலைக்கும் சத்தியமே (2)
இரட்சகர் நீதி நியாயம் எல்லாம் நித்தியம் நித்தியமே (2)
(என்றும் மாறா)

சரணம் 3

கர்த்தரின் மகிமை விளங்குமே மேன்மையாய்
பூமியில் எங்குமே கீர்த்தியாய் (2)
இயேசுவை பற்றியே தியானம் செய்வோமே (2)
இனிதாய் இருக்கும் இதயம் மகிழும் பூரிக்குமே (2)
(என்றும் மாறா)

8. கல்வாரி சிலுவையில்

பல்லவி

கல்வாரி சிலுவையில் அறையும்போது
எப்படி துடித்தீரோ இயேசையா (2)
குற்றம் செய்தது நாங்களையா
தண்டனை ஏற்றீரே இயேசையா (2)

(கல்வாரி)

சரணம் 1

வழி தப்பிப்போன ஆடுகளாய்
பூமியில் மானிடர் வாழ்ந்திருந்தோம் (2)
அவரவர் வழியில் திரிந்தோம் அலைந்தோம்
தேடியே வந்து மீட்டீரே (2)

(கல்வாரி)

சரணம் 2

உமது நீதியை தந்தீரே
எமது அக்ரமம் சுமந்தீரே (2)
வருகின்ற பாடுகள் முன்பே தெரிந்தும்
உம்மையே பலியாய் தந்தீரே (2)

(கல்வாரி)

சரணம் 3

வெண்கல சர்ப்பம் வனாந்திரத்தில்
உயர்த்தி வைக்கப்பட்டது போல் (2)
உம்மை சிலுவையில் நிறுத்தினீரே
நோக்கிப் பார்த்து பிழைக்கின்றோம் (2)

(கல்வாரி)

9. சில விதைகள் விதைக்கையிலே

பல்லவி
விதையை விதைக்க செல்கிறவன்
விதைக்கவே புறப்பட்டான்
காதுள்ள எவரும் கேட்பீரே
கவனமாய் நீதியை அறிவீரே (2)

சரணம் 1
சில விதைகள் விதைக்கையிலே
வழியருகே விழுந்தனவே
ஆகாயத்து பறவைகளே
வந்து கொத்தி சென்றனவே (2)
விதையை விதைக்க

சரணம் 2
சில விதைகள் பாறையிலே
விழுந்து சீக்கிரம் முளைத்தனவே
வெயிலும் ஏற காய்ந்தனவே
வேரில்லாமல் தீய்ந்தனவே (2)
விதையை விதைக்க

சரணம் 3
சில விதைகள் விழுந்தனவே
முள்ளுள்ள இடங்களிலே
முட்கள் வளர்ந்து போனவுடன்
விதைகளை நெருக்கி போட்டனவே (2)
விதையை விதைக்க

சரணம் 4
சில விதைகள் வளர்ந்தனவே
நல்ல நிலத்தில் பயிராக
முப்பது அறுபது நூறாக
பலனை அவைகள் தந்தனவே (2)
விதையை விதைக்க

சுகு ஜீவ கீதங்கள்

VOL. 15

1. உயிருள்ளதாய் இருக்கின்றது

பல்லவி

உயிருள்ளதாய் இருக்கின்றது
உன்னதரின் சபையானது
நம் இயேசுவே தலையானவர்
மணவாளனாய் இருக்கின்றவர்

(உயிருள்ளதாய்)

சரணம் 1

ஒரே ஒரு சரீரத்திலே
அவயவங்கள் அநேகமே
கிறிஸ்துவின் சபையினிலே
நாமெல்லாம் அங்கங்களே

(உயிருள்ளதாய்)

சரணம் 2

ஆவியானவர் ஒருவர் தானே
வரங்கள் எத்தனையோ
தம்முடைய சித்தப்படி
பகிர்ந்து கொடுக்கின்றார்

(உயிருள்ளதாய்)

சரணம் 3

காட்டிடுவார் நம் கர்த்தர்
மேன்மையின் வழிகளையே
நாடிடுவோம் நல் வரங்கள்
தருவார் ஆவியானவர்

(உயிருள்ளதாய்)

2. நேரமே இந்த நேரமே

பல்லவி

நேரமே இந்த நேரமே
உனக்கு தேவை இயேசுவே (2)
மாற்றுவார் உன்னை மாற்றுவார்
உள்ளம் புதிதாய் மாறுமே (2)
(நேரமே)

சரணம் -1

சோம்பல் அகன்று போகுமே
படிப்பது மனதில் பதியுமே (2)
கல்வியின் ஆவியை ஊற்றுவார்
பட்டங்கள் நீயும் வாங்குவாய் (2)
(நேரமே)

சரணம் -2

T.V. யில் Interest குறையுமே
பாவ எண்ணங்கள் மறையுமே (2)
வேதத்தை வாசிக்க தோன்றுமே
ஜெபத்தில் ஆர்வம் கூடுமே (2)
(நேரமே)

சரணம் -3

உயரும் வழிகள் பிறக்குமே
புதிய வாசல்கள் திறக்குமே (2)
கர்த்தரின் தயவை நாடவே
சபைக்கு வரவே விரும்புவாய் (2)
(நேரமே)

3. வாசம் செய்கின்றார்

பல்லவி

வாசம் செய்கின்றார் இயேசு நமக்குள்ளே
பூரண அன்பாலே நம்மை நடத்துகின்றார் (2)
உலகத்தை அதனால் ஜெயிக்கின்றோம்
உண்மையாய் நாமும் நடக்கின்றோம் (2)
(வாசம் செய்கின்றார்)

சரணம் (1)

சத்திய வசனம் நல்ல பெலனும் தந்தாரே. தந்தாரே
நீதியின் ஆயுதம் நிறைய நமக்கு கொடுத்தாரே. கொடுத்தாரே.
நீடிய சாந்தம் அறிவும் தயவும் அளித்தாரே. அளித்தாரே.
இருதயத்தின் நிறைவால் சேர்ந்தே நாமும் பாடிடுவோம், பாடிடுவோம்
(வாசம் செய்கின்றார்)

சரணம் (2)

திடன் கொள் என்று இயேசு நமக்கு சொன்னாரே. சொன்னாரே
தைரியம் தந்து சோதனை மேற்கொள்ள வைத்தாரே. வைத்தாரே
முன்னேறிச் செல்ல கர்த்தர் உதவி செய்தாரே. செய்தாரே
ஜெயமுள்ள ஜீவியம் நமக்குக் கற்று கொடுத்தாரே. கொடுத்தாரே
(வாசம் செய்கின்றார்)

சரணம் 3

தட்டுங்கள் திறப்பார் கேளுங்கள் கொடுப்பார் என்றாரே என்றாரே
தேடுங்கள் கிடைக்கும் கண்டடைவீரென்று உரைத்தாரே உரைத்தாரே
கிறிஸ்தவம் என்னும் வீட்டை இந்த பூமியிலே, பூமியிலே
விசுவாசம் என்னும் பாறையின் மீது கட்டிடுவோம், கட்டிடுவோம்
(வாசம் செய்கின்றார்)

4. திரும்புங்களேன்

பல்லவி

திரும்புங்களேன் - மனம் திரும்புங்களேன்
இயேசுவின் பக்கம் வாருங்களேன் (2)
(திரும்புங்களேன்)

அனுபல்லவி

மகிழ்ச்சி பெருகுமே
அமைதி நிறையுமே
சுகமே கிடைக்குமே (2)
இயேசு இன்று தருகிறார்
(திரும்புங்களேன்)

சரணம் 1

சிலுவையின் உபதேசம் தேவ பெலன்
இரட்சிக்க படுகின்ற உங்களுக்கு (2)
கிறிஸ்துவின் உபதேசம் கேட்டாலே
பூரண ஆசீர்வாதம் பெறுவீரே (2)
(திரும்புங்களேன்)

சரணம் 2

தேவன் தமது ஐஸ்வரியத்தால்
கிறிஸ்து இயேசுவின் மகிமையினால் (2)
உங்கள் குறைகளை நிறைவாக்குவார்
ஆமென் ஆமென் சொல்லுங்களேன் (2)
(திரும்புங்களேன்)

பரமனின் அழைப்பை ஏற்றுக் கொள்வீர்
இலக்கை நோக்கி ஓடிடுவீர் (2)
உங்கள் பெயர்கள் எழுதப்படும்
தேவனின் ஜீவ புத்தகத்தில் (2)
(திரும்புங்களேன்)

5. சூப்பர் ஃபாஸ்ட் ட்ரயினுதான்

பல்லவி

சூப்பர் ஃபாஸ்ட் டிரயினுதான்
புறப்பட போகுது
தேவ இராஜ்யம் **Destination**
சீக்கிரம் ஏறுங்க

(சூப்பர் ஃபாஸ்ட்)

சரணம் 1

நாம் வாழும் வாழ்க்கை இது
பயணம் போன்றது (2)
பிறப்பு முதல் இறுதி வரை
எல்லாம் பயணமே (2)

(சூப்பர் ஃபாஸ்ட்)

சரணம் 2

நாம் செல்லும் இடம் வருமுன்
வூர்கள் எத்தனையோ (2)
ஏறிடுவார் இறங்கிடுவார்
புதுப்புது பயணிகள் (2)

(சூப்பர் ஃபாஸ்ட்)

சரணம் 3

கடைசிவரை இறங்காமல்
பயணம் செய்தாலே (2)
சேர்ந்திடுவோம் பரலோகம்
இயேசு வரவேற்பார். (2)

(சூப்பர் ஃபாஸ்ட்)

6. நாசியிலே சுவாசமுள்ள

பல்லவி

நாசியிலே சுவாசமுள்ள
மனிதரையே நீ நம்பாதே (2)
இயேசு சொன்னாரே
இயேசு சொன்னாரே (2)
(நாசியிலே)

சரணம் 1

வேலை ஆக வேண்டுமென்றால்
உள்ளம் உருக பேசுவார் (2)
காரியம் ஆன பின்னே
ஒதுங்கியே ஓடுவார் (2)
ஒதுங்கியே ஓடுவார்
(நாசியிலே)

சரணம் 2

நெஞ்சுக்குள்ளே வஞ்சனையே
உதட்டின் மேலே தேனுமே (2)
இதயம் முழுதும் கேடுகள்
கொண்டவன் மனிதனே (2)
கொண்டவன் மனிதனே
(நாசியிலே)

சரணம் 3

கர்த்தரையே நோக்கிப் பார்
கஷ்டங்கள் எல்லாம் தீருமே (2)
தீமையில் இருந்து உன்னையே
விடுவிப்பார் இயேசுவே (2)
விடுவிப்பார் இயேசுவே
(நாசியிலே)

சரணம் 4

இரக்கமும் மன உருக்கமும்
நிறைந்தவர் நமது தேவனே (2)
தயவுள்ள தூய அன்பாலே
நடத்துவார் நம் பிதா
நடத்துவார் நம் பிதா (2)
(நாசியிலே)

7. சந்தோஷம் அடைந்தாலே

<u>பல்லவி</u>

சந்தோஷம் அடைந்தாலே
சங்கீதம் பாட வேண்டும் (2)
துன்பத்தின் வேளையிலே
ஜெபம் நாம் செய்ய வேண்டும் (2)
யாக்கோபின் கடிதம் படித்தோமே
அதன்படி நாமும் நடப்போமே (2)
(சந்தோஷம்)

<u>சரணம் 1</u>

ஒருவரிடம் ஒருவர் குற்றங்களை
அறிக்கை செய்து ஜெபிக்கணுமே (2)
நீதிமானின் ஊக்கமான வேண்டுதலே
அதிக பெலனாய் இருக்கின்றதே (2)
(சந்தோஷம்)

<u>சரணம் 2</u>

வியாதிபட்ட ஒருவரையே
சபைக்கு கொண்டு வரவேண்டும் (2)
மூப்பர்கள் கூடி ஜெபித்தாலே
தேவன் சுகமே தருவாரே (2)
(சந்தோஷம்)

<u>சரணம் 3</u>

நீடிய பொறுமை கொண்டிடுவீர்
இதயத்தில் உறுதி வந்திடுமே (2)
யோபுவின் வாழ்க்கை அறிவீரே
இரண்டு மடங்கு ஆசீர்வாதமே (2)
(சந்தோஷம்)

8. பரம தேவன் ஞான ரூபன் வந்தாரே

பல்லவி

பரம தேவன் ஞான ரூபன் வந்தாரே
வானம் பூமி ஆளும் இயேசு வந்தாரே (2)
ஜெயமுடன் புன்னகை மலர்ந்திட மன்னர் வந்தாரே
கம்பீரமான நடையுடன் ராஜன் வந்தாரே (2)
(பரமதேவன்)

சரணம் 1

வெள்ளை குதிரையில் பவனி வருபவர் மணவாளன்
லீலி புஷ்பங்கள் உதடுகள் உள்ளவர் இனியவர்
(2)
உள்ளங்கையில் ஏழுதாரகை உடையவர்
இவரே தான் நமக்கு என்றும் சிநேகிதர்
துதிகள் ததீம் ததீம் தாம் தூபம் ததீம்
ததீம் தாம் துதிகள் தூபம் எழும்ப
ஆடலும் பாடலும் தாளமும் இசைய
(பரமதேவன்)

சரணம் 2

ஆட்டுகுட்டியானவர் விவாகம் வந்தது
அவரின் மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் (2)
பிரகாசமுள்ள மெல்லிய வஸ்திரம் அணிந்தாளே
கல்யாண விருந்துக்கு நம்மை அழைத்தார் மகிழ்வோமே
துதிகள் ததீம் ததீம் தாம் தூபம் ததீம்
ததீம் தாம் துதிகள் தூபம் எழும்ப
ஆடலும் பாடலும் தாளமும் இசைய
(பரமதேவன்)

9. நடக்க வாருங்கள்

பல்லவி

நடக்க வாருங்கள் நடக்க வாருங்கள்
இயேசுவின் வழியிலே நடக்க வாருங்கள் (2)
உடைக்க வாருங்கள் உடைக்க வாருங்கள்
சாத்தானின் கோட்டையை உடைக்க வாருங்கள் (2)
(நடக்க வாருங்கள்)

சரணம் 1

மெய்யான நீதியில் நிற்க வாருங்கள்
தேவனின் சாயலாய் இருக்க வாருங்கள் (2)
வீணான சிந்தனை விட்டு விடுங்கள்
பேராசைகளை நீங்கள் தூக்கிப்போடுங்கள் (2)
(நடக்க வாருங்கள்)

சரணம் 2

சகலவித வெறுப்புகளை நீக்கிப்போடுங்கள்
கோபமும் மூர்க்கமும் அகற்றிப்போடுங்கள் (2)
ஒருவர் மேல் ஒருவர் தயவு காட்டுங்கள்
நன்மையான வார்த்தைகளை பேசிப்பழகுங்கள் (2)
(நடக்க வாருங்கள்)

சரணம் 3

இயேசு தந்த அன்பிலே நிலைக்க வாருங்கள்
கனிகள் கொடுக்கும் மரமாக வளர வாருங்கள் (2)
கர்த்தர் தந்த வார்த்தைகளை கேட்க வாருங்கள்
சந்தோஷமாகவே வாழ வாருங்கள் (2)
(நடக்க வாருங்கள்)

சுக ஜீவ கீதங்கள்
VOL. 16

1. உதடுகளின் கனியான ஸ்தோத்திரபலி

பல்லவி

உதடுகளின் கனியான ஸ்தோத்திரபலி
உண்மையுள்ள தேவனுக்கு செலுத்திடுவோம்
ஆராதனை செய்ய வாருங்கள்
ஆனந்த சத்தத்தோடு

(கோரஸ்)

துதிக்கின்றோம் துதிக்கின்றோம் இயேசு நாமத்தை
மகத்துவம் நிறைந்ததான தேவ நாமத்தை
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
(உதடுகளின்)

சரணம் 1

கர்த்தரே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்
அவரே தான் நம்மையெல்லாம் உண்டாக்கினார்
(உதடுகளின்)

சரணம் 2

துதியுடன் மகிழ்வுடன் வந்து சேருங்கள்
தேவனை வாசலில் புகழ்ந்து பாடுங்கள்
(உதடுகளின்)

சரணம் 3

கர்த்தரின் கிருபை என்றுமுள்ளது
பூமியின் குடிகளே தெரிந்து கொள்ளுங்கள்
(உதடுகளின்)

சரணம் 4

மேய்ப்பரின் மேய்ச்சலின் ஆட்டு மந்தையே
மேலான குரலிலே போற்றி பாடுங்கள்.
(உதடுகளின்)

2. இயேசப்பா எங்க இயேசப்பா

பல்லவி

இயேசப்பா எங்க இயேசப்பா
எனக்குள் வருவீர் நேசப்பா (2)
I Need you Daddy
I Love you Daddy (இயேசப்பா)

சரணம் 1

எந்த நாளுமே என்னோடுதான்
Daddy இயேசுவே இருக்க வேண்டுமே (2)
I Need you Daddy
I Love you Daddy (இயேசப்பா)

சரணம் 2

பரலோகத்தின் தரிசனமே
Daddy இயேசுவே தரவேண்டுமே (2)
I Need you Daddy
I Love you Daddy (இயேசப்பா)

சரணம் 3

என் வாழ்க்கையை Full ஆகவே
Daddy இயேசுவே நடத்த வேண்டுமே (2)
I Need you Daddy
I Love you Daddy (இயேசப்பா)

சரணம் 4

எனக்கு வேண்டிய நாலேட்ஜெல்லாமே
Daddy இயேசுவே கொடுக்க வேண்டுமே (2)
I Need you Daddy
I Love you Daddy (இயேசப்பா)

3. தாயாக இயேசு

பல்லவி

தாயாக இயேசு தேற்றுகின்றார்
தந்தையாக நம்மை நடத்துகின்றார்
எல்லாமே நமக்கு இயேசுதானே
என்றுமே நமக்கு இயேசுதானே
(தாயாக இயேசு)

சரணம் 1

இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருந்து
நல்ல பங்கை தெரிந்து கொள்வோம்
உலக கவலைகள் உட்புகவே!
இயேசு இடமே தர மாட்டார்!
தர மாட்டார்! தர மாட்டார்
(தாயாக இயேசு)

சரணம் 2

விதவைத் தாயை பார்த்த இயேசு
அழாதே என்று சொன்னாரே
மரித்துப் போன அவள் மகனை
தொட்டார் இயேசு! உயிர் பெற்றான்!
உயிர் பெற்றான்! உயிர் பெற்றான்!
(தாயாக இயேசு)

சரணம் 3

நம்மை திக்கற்ற பிள்ளைகளாய்
இயேசு விடவே மாட்டாரே
சீக்கிரம் வருவேன் உங்களிடம் -
தேற்றும் வார்த்தை இயேசு சொன்னார்!
இயேசு சொன்னார்! இயேசு சொன்னார்!
(தாயாக இயேசு)

4.எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும்

பல்லவி

எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும்
என் இயேசுவே கண்ணுக்குத் தெரிகின்றார்
சகலமும் அவரின் படைப்புகளே
அவருக்காகவே படைப்புகளே.

(எங்கு பார்த்தாலும்)

சரணம் -1

வானத்து சூரியன் பார்க்கின்ற போது
நீதியின் சூரியன் தெரிகின்றார்
பிரகாசமுள்ள நட்சத்திரங்கள்
ஜீவ ஒளியை காட்டிடுதே.

(எங்கு பார்த்தாலும்)

சரணம் -2

வானாதி வானங்கள் நோக்கிடும் போது
கர்த்தரின் மகத்துவம் காண்கின்றேன்.
பூரண சந்திரன் குளிர் ஒளியில்
இயேசுவின் கருணை தெரிகின்றதே.

(எங்கு பார்த்தாலும்)

சரணம் -3

சர்வ வல்லவர் இயேசு தானே
பூமியும், கடலும் சாட்சிகளே
மலைகளை நிமிர்ந்து பார்க்கின்றேன்
கன்மலை ராஜனை காண்கின்றேன்.

(எங்கு பார்த்தாலும்)

5. கரம் ஒன்று

பல்லவி

கரம் ஒன்று தொடக் கண்டேன் 2
நிமிர்ந்தேன் இயேசு நின்றார் 2
அரவணைத்தார் ஏந்திக் கொண்டார் 2
குழந்தையைப் போல் ஆனேன் 2
(கரம் ஒன்று)

சரணம் 1

அவரை நான் அறியும் முன்னே
அவர் என்னை தெரிந்து கொண்டார் 2
எந்தன் இயேசு தந்திடுவார்
வேண்டுதல் எல்லாமே 2
(கரம் ஒன்று)

சரணம் 2

இயேசு தானே மெய்யான
திராட்சை செடியானவர் 2
அவரில் நான் அதிகமாக
கனிகள் கொடுக்கும் கொடியாவேன் 2
(கரம் ஒன்று)

சரணம் 3

என்னை விடவும் பெரிதாக
கிரியைகள் செய்திடுவீர் 2
சொன்னாரே நம் இயேசு
தம்முடைய சீடரிடம் 2
(கரம் ஒன்று)

6. அழைக்கின்றேன் அழைக்கின்றேன்

பல்லவி

அழைக்கின்றேன் அழைக்கின்றேன்
இயேசப்பாவை அழைக்கின்றேன்
அப்பா பிதாவே அப்பா பிதாவே
சொல்லி நானும் அழைக்கின்றேன்
(அழைக்கின்றேன்)

சரணம் 1

இதுவரை எவரும் காட்டவில்லை
இதுபோல் உயர்ந்த நேசத்தையே
ஈரம் நிறைந்த கண்களினால்
என்னை இழுத்தார் என் இயேசு
(அழைக்கின்றேன்)

சரணம் 2

பார்த்தார் பாவங்கள் உணர்த்தப் பட்டேன்
அணைத்தார் உலகை மறந்து விட்டேன்
கொடுத்தார் தமது ஜீவனையே
சிந்திய ரத்தத்தால் கழுவப்பட்டேன்
(அழைக்கின்றேன்)

சரணம் 3

மலைமேல் பிரசங்கம் செய்தாரே
கடலின் ஓரம் உபதேசமே
வனாந்திர இடத்தில் அற்புதங்கள்
செய்தே இரட்சித்தார் என் இயேசுவே
(அழைக்கின்றேன்)

7. LET US SING

பல்லவி

LET US SING LET US SING NEW SONG NOW
LET THEM SING IN THE HEAVEN THIS NEW SONG.
STANDING NEAR BY SEA OF GLASS
VICTORS WILL BE SINGING THIS SONG

LET US SING

பாடுவோம் பாடுவோம் புதுப் பாடலை
பாடட்டும் பரலோகம் இந்தப் பாடலை
கண்ணாடி கடலின் அருகில் நின்று
ஜெயம் கொண்டோர் பாடுவார் இந்த பாடலை

(பாடுவோம்)

சரணம் 1

LET US BE DONE WITH SORROW FUL SONG
COME AND SING NOW JOYFUL SONG
SINGING WITH THE SOUND OF ALLELUYA
SING WITH THE LOUD AND JOYFUL VOICE

(LET US SING)

துன்பம் தரும் பாடல்கள் போதும் போதுமே
இன்பம் தரும் பாடல்களை பாட வாருங்கள்
அல்லேலூயா சத்தத்தோடு சேர்ந்து பாடுங்கள்
ஆரவாரத்துடனே மகிழ்ந்து பாடுங்கள்

(பாடுவோம்)

சரணம் 2

GREAT AND WONDERFUL IS OUR GOD
JUST AND TRUTHFUL ARE HIS WAYS
WHO SHALL NOT FEAR OUR MIGHTY LORD
ALL NATIONS COME AND WORSHIP HIM

(LET US SING)

பெரியவர் அற்புதர் நம் தேவனே
நீதியும் உண்மையும் அவர் வழிகள்
அவர் மேல் பயமில்லா மனிதர் யார்
நாடுகள் எல்லாம் வந்து ஆராதிக்குமே

(பாடுவோம்)
(LET US SING)

8. நாட்டு மக்களே செவிகொடுத்து

பல்லவி

நாட்டு மக்களே செவிகொடுத்து
கேட்டு பாருங்க சுவிசேஷமே - 2
(நாட்டு மக்களே)

தாணாண தணணா தாணாண தணணா
தாணாண தாணாண தாணாண தணண்ணா
தாணா தணண்ணா தாணா தணண்ணா - 2

வாட்டும் கவலைகள் மறைந்து போகுமே
நாட்டமெல்லாம் இயேசு மீது வந்து விடுமே
(நாட்டு மக்களே)

சரணம் 1

ஒருவன் உங்கள் கன்னத்தில் அறைந்தாலே
அவனுக்கு மறுகன்னம் காட்டிடுவீர் } 2
பழிக்கு பழி வாங்குவது இந்த உலகின் நீதி
மன்னித்து அருள்வது பரலோக நீதி. } 2
(நாட்டு மக்களே)

சரணம் 2

சகோதர அன்பிலே நிலைத்திருங்கள்
சிநேகித நேசம் கலந்து விடுங்கள் } 2
பகைத்து வாழ்ந்தால் சாத்தானின் பிள்ளைகள்
சேர்ந்து வாழ்ந்தால் தேவனின் பிள்ளைகள்! } 2
(நாட்டு மக்களே)

சரணம் 3

பூமிக்கு உப்பாய் நீங்கள் இருங்கள்
சாரமற்று போகாமல் பார்த்து கொள்ளுங்கள் } 2
உலகத்தின் வெளிச்சம் நீங்க தானே
மலைமேல் இருக்கும் பட்டினம் தானே } 2
(நாட்டு மக்களே)

9. தனித்திருக்கும் குருவியைப் போல்

பல்லவி

தனித்திருக்கும் குருவியைப் போல்
தவிக்கிறேன் நான் தூக்கமின்றி
என் தேவனே என் சத்தத்தை
கேட்பிரே தயாபரனே
(தனித்திருக்கும்)

சரணம் 1

கடலின் நடுவே ஓடும் கப்பலாய்
என் நாட்கள் பூமியில் ஓடிடுதே
தாயின் கர்ப்பத்தில் இருந்து புறப்பட வைத்தீர்
என் வாழ்க்கை எந்நாளும் போராட்டமே
(தனித்திருக்கும்)

சரணம் 2

பசும்பொன்னாக சொக்க வெள்ளியாக
சர்வ வல்லவர் இருக்கின்றீர்
நான் போகும் வழியை அறிகின்ற தேவனே
நீர் என்னை சோதித்தீர் பொன்னாக மாற்றுவீர்
(தனித்திருக்கும்)

சரணம் 3

மின்னலின் ஒளியை கைக்குள் அடக்கி
வைத்திருக்கும் வல்ல தேவனே
சகலமும் செய்ய உம்மால் கூடும்
நீர்செய்ய நினைத்தது தடையின்றி நடக்கும்.
(தனித்திருக்கும்)

சுக ஜீவ கீதங்கள்
VOL. 17

1. யேகோவா தேவனை

பல்லவி

யேகோவா தேவனை வாழ்த்த வந்தோம்
இயேசுவின் நாமத்தை உயர்த்த வந்தோம். } 2
தேசத்தின் எல்லையெங்கும் எதிரொலிக்குதே
கர்த்தருக்கு நாம் செய்யும் ஆராதனை } 2

நித்திய தேவனுக்கு ஆராதனை
சத்திய நாதனுக்கு ஆராதனை } 2
ஆராதனை ஆராதனை ஆராதனை 2

சரணம் 1

சீனாய் மலையின் மேல் தேவனோடு
மோசே இருந்தான் உலகை மறந்து } 2
கர்த்தரின் ஐக்கியத்தில் இருந்தாலே
கவலைகள் நம்மை நெருங்காதே } 2
(நித்திய தேவனுக்கு)

சரணம் 2

ஸ்துதியின் தூபம் எழுப்புகின்றோம்
ஸ்தோத்திர பலிகள் செலுத்துகின்றோம் } 2
தேவ செய்திகள் கேட்கின்றோம்
வேத வசனங்கள் தியானிக்கின்றோம் } 2
(நித்திய தேவனுக்கு)

சரணம் 3

தேவனின் சபைக்கு வந்தோமே
துபெலன் நாமும் அடைந்தோமே } 2
ஜீவியம் ஜெயமாய் இருப்பதற்கு
ஆவியின் வல்லமை பெற்றோமே } 2
(யேகோவா தேவனுக்கு)

2. ஒவ்வொரு நாளும் என்னை

பல்லவி

ஒவ்வொரு நாளும் என்னை – அதிகாலை
எழுப்பிடுவாரே இயேசு –தவறாமல்
ஆனந்தமாக பாடுகின்றேன்
தேவனின் நாமம் உயரட்டுமே } 2

சரணம் 1

வீட்டை விட்டு வெளியே
புறப்படும் போது } 2
இயேசுவே துணையாக
என்னோடு வருகின்றார்
தன் தோளில் சுமக்கின்றார் } 2

ஒவ்வொரு நாளும்

சரணம் 2

நான் போகும் இடத்தில்
எல்லாமே எனக்கு } 2
ஜெயமாக்கி தருகின்றார்
அவர் சொல்ல ஆகிடுமே
எல்லாமே கூடிடுமே. } 2

ஒவ்வொரு நாளும்

சரணம் 3

தேவனின் அன்பு இயேசுவின் செயலில்
ததும்பியே வழிகின்றதே } 2
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
என் இயேசு ராஜனுக்கே } 2

ஒவ்வொரு நாளும்

3. வாலிப கூட்டம் நடுவிலே

பல்லவி

வாலிப கூட்டம் நடுவிலே
வருகின்றார் - இயேசு வருகின்றார்
உங்கள் life style மாற்றவே
வருகின்றார் இயேசு வருகின்றார்
2

நல்ல பழக்கங்கள் வந்திடுமே
கெட்ட பழக்கங்கள் போய் விடுமே
(வாலிப கூட்டம்)

சரணம் 1

Computer முன்னால் இருப்பதே
உலகம் என்று எண்ணாதே
அதிக பணம் தான் சந்தோஷமா
தப்பு கணக்கு போடாதே
2
(வாலிப கூட்டம்)

சரணம் 2

குடிப்பதும் discoவும்
உங்கள் ஜீவனை காக்காதே
இருட்டில் செய்யும் பாவமெல்லாம்
ஆத்தும நஷ்டம் ஆகிடுமே.
2
(வாலிப கூட்டம்)

சரணம் 3

உங்கள் நடுவில் வந்திருக்கும்
இயேசுவை welcome செய்திடுவீர்
புதிய வாழ்வை தந்திடுவார்
உங்களை ஒப்பு கொடுப்பீரே
2
(வாலிப கூட்டம்)

4. இராஜா இராஜா நேச இராஜா

பல்லவி

இராஜா இராஜா நேச இராஜா
சாரோனின் ரோஜா ராஜாதி ராஜா
பதினாயிரம் பேர்களில் அழகானவா - மிக அழகானவர் } 2
வெண்மையும் சிவப்பும் நிறமானவர் - நல்ல நிறமானவர்
(இராஜா இராஜா)

சரணம் 1

இயேசுவின் கண்களை நோக்கினாலே } 2
நதியோரம் தங்கும் புறாக்கண்களே
கன்னங்கள் கந்தவர்க்க பாத்திகளே } 2
வாசமுள்ள புஷ்பம் போல் இருக்கின்றதே.
(இராஜா இராஜா)

சரணம் 2

என் இயேசு கரங்களை பார்க்கின்றேன் } 2
பச்சைக்கல் பதித்த தங்க வளையலே
அவரின் அங்கமெல்லாம் என்ன சொல்லுவேன் } 2
ரத்தினங்கள் இழைத்த யானைத்தந்தமே
(இராஜா இராஜா)

சரணம் 3

அவரின் இதயத்தின் மேல் என்னை } 2
முத்திரையை போல வைத்துக் கொள்வார்
பாதாளம் போலவே கொடியதானதே } 2
நெஞ்சத்தின் வைராக்யம் நெருப்பானதே.
(இராஜா இராஜா)

5. சோர்ந்து போன உள்ளமே

பல்லவி

சோர்ந்து போன உள்ளமே
துவண்டு விடாதே } 2
விழுந்து கிடக்கும் உன்னையே
இயேசு தூக்கி நிறுத்துவார் } 2

(சோர்ந்து போன)

சரணம் 1

எத்தனை எத்தனை உயிர்களை
இயேசு படைத்தார் பூமியிலே
அத்தனை உயிரும் போஷிக்கின்றார்
தேவைகளெல்லாம் சந்திக்கின்றார் } 2
படைத்ததெல்லாம் நன்றாக
இருப்பதே தேவன் சித்தமே } 2

(சோர்ந்து போன)

சரணம் 2

பிறக்கும் போது உலகிலே
கொண்டு வந்தது ஒன்றுமில்லை
உலகை விட்டு போகையில்
கொண்டு போவது ஒன்றுமில்லை } 2
இருக்கும் போது கர்த்தருக்கு
பயந்து வாழ்ந்தால் தோல்வி இல்லை } 2

(சோர்ந்து போன)

சரணம் 3

பாரமெல்லாம் இயேசு மீது
உடனே நீயும் வைத்து விடு
கவலை எல்லாம் கொட்டி விடு
வருத்தமெல்லாம் சொல்லிவிடு } 2
நெஞ்சத்தின் வேதனை மாற்றிடுவார்
புதிய பாதை காட்டிடுவார் } 2

(சோர்ந்து போன)

6. ரொம்ப ரொம்ப நல்லவர்

பல்லவி

ரொம்ப ரொம்ப நல்லவர் நம்ம இயேசுவே
நன்மைகளை செய்பவர் நம்ம இயேசுவே } 2
அவரை நம்பினால் வாழ்க்கை உயருமே
அவரை (இயேசு) நாடினால் எல்லாம் ஜெயமே } 2

நல்லவர் நல்லவர் இயேசு நல்லவர்
வல்லவர் வல்லவர் இயேசு வல்லவர் } 2

சரணம் 1

உலகமெங்கும் இயேசு அலை வீசுதே
இதயமெல்லாம் மகிழ்ச்சி பொங்கி பெருகுதே } 2
சிலுவை நாதனிடம் வந்து சேருங்கள்
செம்மையான வழியில் நடத்திடுவார் } 2
(ரொம்ப ரொம்ப நல்லவர்)

சரணம் 2

புறப்பட்டு வருகுதே இயேசு வல்லமை
நோய்களெல்லாம் விலகி ஓடி போகுதே } 2
இயேசுவின் நாமம் சொல்லி பாருங்க
விடுதலை கிடைக்கும் உங்கள் உள்ளத்தில் } 2
(ரொம்ப ரொம்ப நல்லவர்)

சரணம் 3

கர்த்தர் இயேசுவை பின்பற்றுவோம்
அவரின் வருகைக்காய் காத்திருப்போம் } 2
ஊரெங்கும் பரவட்டும் வேத வசனங்கள்
பூமியெங்கும் எழுப்புதல் உண்டாகட்டும். } 2
(ரொம்ப ரொம்ப நல்லவர்)

7. கை கூடி வந்ததே காரியமே

பல்லவி

கை கூடி வந்ததே காரியமே
மெய்யான தேவன் நம்மோடு இருப்பதால் } 2
வையக மெங்கும் ஓங்கட்டுமே
நம் தேவன் மகிமையின் நாமமே } 2

(கை கூடி)

சரணம் 1

தம்புரு இசைத்து கம்பீர குரலில்
சங்கீதம் பாடிடுவோம் } 2
தேவனின் காதில் கேட்கட்டுமே
மேரிபாவின் தண்ணீர் புறப்படுமே } 2

(கை கூடி)

சரணம் 2

சத்தியம் பூமியில் முளைக்கின்றதே
நீதி தலை மேல் பார்க்கின்றதே } 2
நித்திய தேவன் தருகின்றார்
நன்மைகளெல்லாம் பெருகிடுதே } 2

(கை கூடி)

சரணம் 3

ஒத்தாசை செய்யும் உன்னத தேவன்
வெளிச்சத்தில் நம்மை நடத்துகின்றார் } 2
பயமே நமக்கு வேண்டாமே
ஆசீர்வதிப்பார் உண்மையின் தேவன் } 2

(கை கூடி)

8. காலை முதல் மாலை வரை

பல்லவி

காலை முதல் மாலை வரை
இரவு முதல் Morning வரை
நீ செய்வதெல்லாம் சரியா } 2
நீ செய்வதெல்லாம் சரியா

Think பண்ணிப்பார் (3)
எண்ணி எண்ணி பார் (3)

சரணம் 1

நேரத்தை எல்லாம் தூக்கத்திலே
வீணில் போக்கி விடலாமா } 2
மூனரை வருட ஊழியத்தில்
இயேசுவின் உழைப்பை எண்ணிப்பார் } 2

(காலை முதல்)

சரணம் 2

சோம்பல் என்பது உனக்குள்ளே
இருந்தால் நாளை என்னாகும் } 2
கர்த்தரின் வருகை சீக்கிரமாய்
இருப்பதால் ஆயத்தம் ஆகிடுவாய் } 2

(காலை முதல்)

சரணம் 3

பாவங்கள் செய்ய தூண்டுகின்ற
வழியில் நீயும் போவாயோ } 2
இயேசுவை நோக்கி வருவாயே
அவர் வழி ஜீவியம் செய்வாயே } 2

(காலை முதல்)

9. ALMIGHTY GOD

ALMIGHTY GOD MY HOLY GOD
HEAVENLY EVERLASTING LIVING GOD } 2
LORD OF TRINITY
COME TO ME, COME TO ME, COME TO ME } 2
சர்வ வல்லவர் எந்தன் தூயவர்
பரம நித்யரான ஜீவ தேவன் } 2
திரியேக தேவனே
வாருமே என்னிடம் வாருமே } 2

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

சரணம் 1

I FEEL SO DOWN FOR MY SIN
HOLD ME LIFT ME MAKE ME FINE
எனது பாவத்தால் சோர்வு அடைகிறேன்
ஏந்துவீர் உயர்த்துவீர் நலமாக்குவீர்
O LAMB FOR ME YOU ARE SLAIN
CLEANSE ME, WASH ME I AM THINE
எனக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியே
தேவனே என்னை சுத்தமாக்குவீர்
(AL MIGHTY GOD)

சரணம் 2

O MY LIGHT LEAD ME IN YOUR WAY
POUR ME FILL ME WITH YOUR POWER
வெளிச்சமே நடத்துமே உமது வழியிலே
ஊற்றுமே வல்லமைஅபிஷேகமே

ANOINT ME GIVE ME YOUR GIFTS
HOLY SPRIT CHANGE ME.
தாருமே ஆவியே வரங்களையே
மாற்றுவீர் என்னையே உம்மைப் போலவே
(AL MIGHTY GOD)

சுகஜீவ கீதங்கள்
Vol - 18
1. பனி போல இறங்கி

பல்லவி

பனி போல் இறங்கி வருகின்றதே
இயேசுவின் முடிவில்லா இரக்கங்களே } 2

லீலி புஷ்பம் இதழ் போல
நமது உள்ளம் மலர்கின்றதே } 2

சரணம் : 1

அருவியை போல அன்பு
இயேசுவில் இருந்து வழிகின்றதே } 2

நீர் பாய்ந்த தோட்டமாக
நமது மனமும் செழிக்கின்றதே } 2

சரணம் : 2

மழையை போல பொழிகின்றார்
கிருபையை இயேசு நம் மேலே } 2

பேரின்ப நதியாக
நம்மை நோக்கி வருகின்றார் } 2

சரணம் : 3

ஆடுகள் நம்மை தெரிந்தாரே
நல்ல மேய்ப்பர் நம் இயேசு } 2

புல்லுள்ள இடங்களிலே
நல்ல மேய்ச்சலை தந்திடுவார் } 2

உ. சிலுவைக்கு முன்பாக

பல்லவி
சிலுவைக்கு முன்பாகவே
நான் வந்து நிற்கையிலே
என் மனக் கண்கள் திறக்கின்றதே
உண்மைகள் புரிகின்றதே } 2
இயேசுவே மீட்பரே ராஜனே கர்த்தரே (2)

சரணம் 1
என்னுடைய குற்றங்களை
சிலுவையில் உணர்த்தினீரே } 2
உடைந்ததே என் உள்ளமே
தெளிந்ததே என் சிந்தையே } 2

சரணம் 2
என்னுடைய இயலாமையை
சிலுவையில் காட்டினீரே } 2
உம்மை நோக்கி பார்த்தேனே
உயிர் மீட்சி அடைந்தேனே } 2

சரணம் 3
தேவனே உமதன்பை
சிலுவையில் விளங்க வைத்தீர் } 2
எனக்காக நீர் மரித்தீர்
உம்மால் நான் வாழ்கின்றேன் } 2

3. உன்னை அறிந்த தேவனே

பல்லவி

உன்னை அறிந்த தேவனே தெரிந்து கொள்ள வா வா
தெளிந்த புத்தி உனக்கு தருவார் உடனே வா வா } 2
சத்தியத்தை அறியவா தேவ பக்தி பெருகவா
விசுவாசத்தில் நிற்க வா } 2
இயேசுவுக்கு கீழ்படிந்து நடக்க வா

சரணம் 1

போதுமென்ற மனதுடனே இருந்தால்
கர்த்தர் உன்மேல் பிரியமாக இருப்பார் } 2
ஒவ்வொரு நாளுமே உனக்கு நல்ல உணவுமே
உடுக்க நல்ல உடையுமே கர்த்தர் உனக்கு கொடுப்பார் } 2

சரணம் 2

கையும் காலும் கர்த்தர் உனக்கு கொடுத்தார்
கண்ணும் காதும் எல்லாம் உனக்கு தந்தார் } 2
உபயோகப் படுத்துவாய் முன்னேறி செல்லுவாய்
வெற்றியெனும் படிமேலே வேகமாய் ஏறுவாய் } 2

சரணம் 3

நன்மைகளை செய்ய நீயும் பழகுவாய்
நீதிகளை அதிகமாக நாடுவாய் } 2
அன்பினை கூட்டுவாய் விரும்பியே கொடுப்பாய்
சாந்த குணம் பொறுமை உனக்குள்ளாக பெருகட்டும் } 2

4. என் இயேசுவே என் இயேசுவே

பல்லவி

என் இயேசுவே என் இயேசுவே
எப்போதும் எனக்கு போதுமே } 2
இயேசுவின் இதயத்தில் நான் இருக்கிறேன்
எனக்குள் இயேசு ஜீவிக்கிறார் } 2

சரணம் 1

பழைய சுபாவங்கள் விட்டுவிட்டேன்
புதிய ஜீவனை பெற்றுக்கொண்டேன் } 2
பாவ சந்தோஷங்கள் ஒதுக்கிவிட்டேன்
ஆவியின் சிந்தை ஆட்கொண்டதே } 2

சரணம் 2

எனக்குள் இயேசு பேசுகின்றார்
எல்லாமே எனக்கு போதிக்கின்றார் } 2
வசனத்தால் ஜீவியம் காத்துக் கொண்டேன்
வருகின்ற காரியம் அறிந்து கொண்டேன் } 2

சரணம் 3

சத்திய நாதன் அழைக்கின்றார்
சகலரும் அவரிடம் வாருங்களேன் } 2
எனது சாட்சியை கேட்டீரே
இயேசுவை ஏற்று கொள்வீரே } 2

5. சிறகடித்து பறக்கின்றதே

பல்லவி

சிறகடித்து பறக்கின்றதே
உள்ளம் இன்ப வானத்திலே
மனமாற்றம் அடைந்ததினால்
இயேசு வழி ஜீவிக்கின்றேன் } 2

Happy Happy இயேசு வந்தால் } 2
Happy Happy இயேசு வந்தால்

சரணம் 1

நம்பிக்கை துளிர்க்கின்றதே
வாழ்க்கை ஜெயமாய் நடக்குமென்று } 2
செய்வதொன்றும் வீணில்லை
கர்த்தர் வார்த்தை தந்தாரே } 2

சரணம் 2

நான் என்ன பேச வேண்டும்
மேய்ப்பர் எனக்கு சொல்வாரே } 2
வேலை நன்றாய் செய்வதற்கு
வேண்டிய ஞானம் தருவாரே } 2

சரணம் 3

யாரிடத்தில் பழக வேண்டும்
தேவன் எனக்கு போதிப்பாரே } 2
இயேசு என்னோடிருப்பதினால்
எந்நாளும் எனக்கு சந்தோஷமே } 2

6. வரப்போகிறார் இயேசு வரப்போகிறார்

பல்லவி

வரப்போகிறார் இயேசு வரப்போகிறார்
சீக்கிரமாக இயேசு வரப்போகிறார் } 2
உண்மையுள்ளவர் வரப்போகிறார்
உயர வானில் இயேசு வரப்போகிறார் } 2

சரணம் 1

அடையாளங்கள் வந்துவிட்டன
ஆண்டவர் இயேசு வரப்போகிறார் } 2
கடைசி காலம் இது தானே
கர்த்தர் இயேசு வரப்போகிறார் } 2

சணம் 2

ஆரவாரத்தோடு வரப்போகிறார்
எக்காளத் தொனியோடு இறங்கி வருவார் } 2
மகிமையோடு இயேசு வரப்போகிறார்
மகத்துவம் நிறைந்து வரப்போகிறார் } 2

சரணம் 3

மேகத்தின் நடுவே வரப்போகிறார்
மேன்மையாய் இயேசு வரப்போகிறார் } 2
தூதர்கள் சூழ இயேசு வரப்போகிறார்
தூய்மையின் நாதர் வரப்போகிறார் } 2

சரணம் 4

ஆயத்தமாய் நாமும் இருப்போமே
காலம் இனியும் செல்லாதே } 2
எந்த நேரமும் நாம் காத்திருப்போம்
இயேசுவின் இரண்டாம் வருகைக்காக } 2

7. நானும் என்

பல்லவி

நானும் என் வீட்டாரும் என்றால்
கர்த்தரையே ஸ்தோத்தரிப்போம்
அன்புள்ள ஆண்டவரே
எங்களை அர்ப்பணித்தோம்
இயேசுவின் நாமமே ஜெயமே - நானும் என்

சரணம் 1

நடந்து வந்த வழியினிலே
கடந்து வந்த பாதையிலே } 2
இதுவரை காப்பாற்றினீர்
இனி மேலும் காப்பாற்றுவீர் } 2

சரணம் 2

பகலிலும் இரவிலும் நாங்கள்
வேதத்தை தியானம் செய்கின்றோம் } 2
செய்வதெல்லாம் வாய்க்கச் செய்வீர்
செல்வங்கள் பெருகச் செய்வீர் } 2

சரணம் 3

அதிசயமாக எங்களை
தேவனே உலகில் படைத்தீரே } 2
கர்த்தரின் மகிமை விளங்கட்டுமே
களிகூர்ந்து நாங்கள் துதிக்கட்டுமே } 2

8. ஓ என் நேசரே

பல்லவி

ஓ என் நேசரே எந்தன் தேவனே
நெஞ்சை விட்டு நீங்காத இன்ப இயேசுவே } 2
இந்த உலகின் மக்களை காப்பவர்
இயேசுவே ஒருவரே இயேசு ஒருவரே } 2

சரணம் 1

பெத்லகேமில் உதித்த உன்னத மெய்யொளி
உலகை ஆள வந்ததே மீட்பின் பேரொளி } 2
களி கூருவாய் சீயோன் குமாரியே
ஆடுவாய் பாடுவாய் குரலை உயர்த்தியே } 2

சரணம் 2

முன்பாக தூதனை அனுப்பினீரே
அவனை கொண்டு வழியை ஆக்கினீரே } 2
இறங்கியே வந்தீர் தேவ குமாரனே
நீதியின் சூரியன் நீர்தானே } 2

சரணம் 3

தாவீதின் வம்சத்தில் வந்தவரே
ரட்சண்ய கொம்பாய் ஆனவரே } 2
சமாதானமே கொண்டு வந்தீர்
உலகின் ரட்சகர் எங்கள் மேய்ப்பரே } 2

9. ஓடி போகுதே நாட்கள் சீக்கிரம்

பல்லவி

ஓடி போகுதே நாட்கள் சீக்கிரம் } 2
ஓடி போகுதே நாட்கள்
இயேசுவிடம் வந்து விடுங்கள்
தயங்காமல் வந்து விடுங்கள்
அருமை ரட்சகர் அழைக்கின்றார்
ஆண்டவர் இயேசு அழைக்கின்றார்

சரணம் 1

அநியாயம் செய்பவன் இன்னும் } 2
அநியாயம் செய்யட்டுமே
நீதியை செய்பவன் இன்னும் } 2
நீதியை அதிகம் செய்யட்டுமே

சரணம் 2

அவரவர் செயல்களின் படியே } 2
நான் தரப்போகும் பலனே
என்னோடு கூட வருமே } 2
சொல்கின்றார் நம் இயேசு ராஜா

சரணம் 3

தாகமாய் இருப்பவர் எவரும் } 2
என்னிடம் உடனே வரட்டும்
இயேசுவின் அழைப்பை ஏற்பீர் } 2
ஜீவ தண்ணீரை பெறுவீர்

சுகஜீவ கீதங்கள்

Vol - 19

1. தேசமெங்கும் சுவிசேஷம்

பல்லவி

தேசமெங்கும் சுவிசேஷம் சொல்ல வேணுமே
எல்லோரும் இரட்சிப்பை அடைய வேணுமே 2
சீக்கிரமாய் முடிவு வரப்போகுதே
இப்போதே ஜீவனையே காக்க வேணுமே 2

சரணம் : 1

பேழைக்குள் எல்லோரும் வந்துவிடுங்கள்
நோவா அழைத்தார் உலக மக்களை 2
உள்ளே வந்து தப்பியது எட்டு பேர்களே
மற்ற ஜனம் வராமல் அழிந்து போனாரே 2

சரணம் : 2

நிம்மதியை தேடி அலைகின்ற
மனிதர்களை எண்ணிட முடியவில்லையே 2
பாருங்கள் என்னிடம் இளைப்பாருங்கள்
அழைக்கின்றார் இயேசு ஏற்றுக்கொள்ளுங்கள்
2

சரணம் : 3

இரக்கத்தை விரும்பியே இயேசு வந்தார்
பாவிகள் மனம் திரும்ப இயேசு வந்தார் 2
பிணிகளை சுகமாக்க கர்த்தர் வந்தார்
உன்னத பெலத்தினால் நிரப்ப வந்தார் 2

2. என் நேசப் பிதாவே

என் நேசப் பிதாவே இயேசுவே - 2
இயேசுவே இன்ப இயேசுவே - 2
(என் நேசப் பிதாவே)

என்னை நினைத்து எனக்குள் வந்து
என்னை நடத்தும் இயேசுவே - 2
(என் நேசப் பிதாவே)

சரணம் 1
வானத்தில் இருந்து இறங்கி வந்த
ஜீவ அப்பம் இயேசு தானே - 2
எனது சரீரம் பிட்டு கொடுத்தேன் - 2
புசித்து ஜீவன் பெறுவீர் என்றார் - 2
(என் நேசப் பிதாவே)

சரணம் 2
இயேசு தானே நல்ல மேய்ப்பர்
அவரை ஆடுகள் அறியும் தானே - 2
நல்ல மேய்ப்பன் ஆட்டிற்காக - 2
தனது ஜீவன் தருவான் என்றார். - 2
(என் நேசப் பிதாவே)

சரணம் 3
இயேசு நமது வாசல் ஆனார்
அவரே நமக்கு வழியும் ஆனார் - 2
மீட்பர் வழியாய் உள்ளே வந்தால் - 2
நல்ல மேய்ச்சல் காண்போம் நாமே - 2
(என் நேசப் பிதாவே)

3. மெய்யான ஒளியாய் வந்தீரே தேவா

பல்லவி
மெய்யான ஒளியாய் வந்தீரே தேவா
இருட்டை நீக்கி போட்டீரே நாதா 2
உலகம் எனக்கு தந்ததெல்லாம் தாங்க முடியா சோகங்களே
இயேசுவே செய்தீரே எனக்காக தியாகங்களே 2
-மெய்யான

சரணம் - 1
மனிதர் எனக்கு தந்தது மனக்காயங்களே
இயேசுவே நீர் செய்தது உபகாரங்களே 2
எங்கும் நான் பார்க்கின்றேன் வேஷங்களே
நேசரே உம் வார்த்தையே ஔஷதமே 2
-மெய்யான

சரணம் - 2
படைத்த போது மனிதனில் மாசு இல்லையே
பிறகு அவன் தேடி கொண்டான் உபாயங்களே 2
உலகத்தின் தோற்ற மெல்லாம் மாயங்களே
தேவனிடம் இருப்பதெல்லாம் நியாயங்களே 2
-மெய்யான

சரணம் - 3
மாந்தர்களின் வார்த்தையெல்லாம் பொய்யானவை
வேதத்தின் சத்தியங்கள் மெய்யானவை 2
துன்மார்க்கர் பேச்செல்லாம் தீதானவை
கர்த்தர் காட்டும் பாதைகள் செம்மையானவை 2
-மெய்யான

4. எனக்கென்று இடம் ஒன்று

பல்லவி

எனக்கென்று இடம் ஒன்று
பரலோகத்தில் தேவன் வைத்தாரே 2
அழகானது அது நிலையானது
இயேசு தந்த வாஸஸ்தலம் 2
எனக்கென்று

சரணம் - 1

தேவனிடம் இருந்து இறங்கி வருகுதே
பரிசுத்த நகரம் புதிய எருசலேம் 2
மணவாட்டியின் அலங்காரத்தை
அதில் நான் கண்டேனே 2
எனக்கென்று

சரணம் - 2

பரலோகத்தில் உண்டானதே
கேட்கின்றேன் பெரும் சத்தமே 2
தேவனின் இருப்பிடமே
இருப்பது என்னிடமே 2
எனக்கென்று

சரணம் - 3

கண்ணீர் யாவுமே இயேசு துடைத்தார்
மரணம் இல்லையே துக்கம் இல்லையே 2
புதிய வானம் புதிய பூமி
கண்டேனே என் கண்களால் 2
எனக்கென்று

5. கர்த்தருக்கு காத்திருப்போம்

பல்லவி

கர்த்தருக்கு காத்திருப்போம் - அவர்
வழிகளை பின்பற்றுவோம் 2
பூமியை சுதந்தரிப்போம் - நல்
உயர்வை அடைந்திடுவோம் 2
தேவ ராஜியமே நமக்குள் வந்ததே

சரணம் : 1

நீதிமான்களின் இரட்சிப்பு
கர்த்தரால் வந்திடுமே 2
இக்கட்டு காலத்திலே
நம் தேவன் அடைக்கலமே 2
கர்த்தருக்கு

சரணம் : 2

இயேசு நமக்கு உதவிடுவார்
தீமைகளை விலக்கிடுவார் 2
கர்த்தரின் மேல் நம்பிக்கை
எந்நாளும் வைத்திடுவோம் 2
கர்த்தருக்கு

சரணம் : 3

தேவன் தந்த வேதத்தை
இதயத்தில் பதித்திடுவோம் 2
நமது நடைகள் பிசகாது
கால்கள் எங்கும் இடராது 2
கர்த்தருக்கு

6. என்னை மாற்றுமே

பல்லவி
என்னை மாற்றுமே 2
எந்தன் இயேசுவே
உம்மை போலவே
என்னை மாற்றுமே
இயேசுவே இயேசுவே எந்தன் இயேசுவே

சரணம் 1
உந்தன் சுவாபமே 2
எனக்கு வரணுமே
உங்கள் தயவுதான்
எனக்கு வேணுமே (2) என்னை மாற்றுமே

சரணம் 2
உம்மை போலவே 2
அன்பு காட்டவே
எனக்கு இயேசுவே
சொல்லித் தரணுமே (2) என்னை மாற்றுமே

சரணம் 3
ஊழியங்களை
செய்ய இயேசுவே 2
எனக்கு தேவனே
கருணை காட்டுமே (2) என்னை மாற்றுமே

சரணம் 4
தாழ்மையோடு நான்
என்றும் வாழவே 2
எனக்கு அருளுவீர்
உமது கிருபையே (2) என்னை மாற்றுமே

7. அன்பினால்

பல்லவி

அன்பினால் என்னை இயேசு
கவர்ந்து விட்டார் - என்
உணர்வோடு கலந்து விட்டார் 2
என் ஆத்துமாவை ஆளுகின்றார்-என்னில் 2
ஆவியாக வாசமானார்.

(அன்பினால்)

சரணம் 1

இயேசு ராஜன் சிந்தையே
எனக்குள்ளாகவே 2
வேண்டுமே
வேண்டுகின்றேன்.

(அன்பினால்)

சரணம் 2

கமும் மனத்தாழ்மையும்
றுக் கொள்ளுவேன் 2
இயேசுவிடம் - நான்
று கொள்ளுவேன்

(அன்பினால்)

சரணம் 3

இயேசு எந்தன் சுமைகளை
று கொள்ளுவார் 2
ஆளப்பாறுதல்
திடுவார்.

(அன்பினால்)

சரணம் 4

விசேஷம் இயேசு
ண்டு வந்தாரே 2
கெங்கும் அதைநான்
ண்டு செல்வேன்

(அன்பினால்)

8. வருவீரே – வருவீரே

பல்லவி

வருவீரே – வருவீரே
எனக்குள்ளாக வருவீரே
வருவீரே வருவீரே வருவீரே

சரணம் : 1

சத்திய ஆவியே வருவீரே
நித்திய ஆவியே வருவீரே 2
தேவ ஆவியே வருவீரே
தூய ஆவியே வருவீரே 2

சரணம் : 2

அன்பின் ஆவியே வருவீரே
மகிமை ஆவியே வருவீரே 2
நல்ல ஆவியே வருவீரே
கிருபை ஆவியே வருவீரே 2

சரணம் : 3

அற்புத ஆவியே வருவீரே
அதிசய ஆவியே வருவீரே 2
இயேசு ஆவியே வருவீரே
பிதா ஆவியே வருவீரே 2

9. இயேசு உன்னை நேசிக்கிறார்

பல்லவி

இயேசு உன்னை நேசிக்கிறார்-நீ
தனியே இருப்பதில்லை 2
உன்னோடு அவர் இருக்கின்றார்
இதை நீயும் அறிந்திடுவாய் 2
(இயேசு)

சரணம் 1

தாயின் வயிற்றில் இருந்த நாள் முதல்
இன்று வரையிலும் உன்னை 2
நடத்துகின்ற தேவன் அவரே
இனிமேலும் நடத்திடுவார் 2
(இயேசு)

சரணம் 2

துன்ப நாளில் உன்னை ஏந்தி
நடந்தார் மீட்பர் இயேசு 2
செழிப்புள்ள நாட்கள் காண்பாய் நீயே
கர்த்தரின் கரங்கள் உன்னோடு 2
(இயேசு)

சரணம் 3

சிலுவை நிழலில் வைத்தார் மீட்பு
கருணையின் தேவன் அன்பினால் 2
பூமியின் மீது தேவ ராஜ்யம்
எழுப்பிட நீயும் உடனே வா 2
(இயேசு)

சுகஜீவ கீதங்கள்

Vol - 20

1. நீரோடைக்கு ஏங்கும்

பல்லவி

நீரோடைக்கு ஏங்கும் மானைப்போல்
எந்தன் ஆத்துமா உம்மைத்தேடுது } 2
இயேசுவே இயேசுவே உமதன்பு வேண்டுமே - 2
நீரோடைக்கு.....

சரணம் 1

தாகத்தோடு உம்மை நான் நினைக்கிறேன்
வாஞ்சையோடு உம்மை நான் தேடுகிறேன் } 2
ஆலயத்தில் இருந்து நான் உம்மை காணவே - 2
ஆசையை சுமந்து நான் வருகிறேன் - 2
நீரோடைக்கு.....

சரணம் 2

ஜீவனுள்ள காலமெல்லாம் உம்மை நோக்கியே
என்னுடைய உதடுகள் துதித்திடுமே } 2
ஜீவனை பார்க்கிலும் கிருபை நல்லது - 2
கண்டேன் தேவனின் மகிமையை - 2
நீரோடைக்கு.....

சரணம் 3

உமது செட்டை நிழலிலே களி கூருவேன்
உறங்கும் போதும் உம்மை நான் தியானிக்கிறேன் } 2
என்னை தாங்கி நிற்குதே தேவ கரமே - 2
உம்மையே பற்றுதே எந்தன் ஆத்துமா - 2
நீரோடைக்கு.....

2. ஒப்புக்கொடு ஒப்புக்கொடு உன்னை

பல்லவி

ஒப்புக்கொடு ஒப்புக்கொடு உன்னை
இயேசுவுக்கு ஒப்புக்கொடு உன்னை } 2
உன் வாழ்விலே அற்புதங்கள்
இயேசு செய்திடுவார் } 2

ஒப்புக்கொடு.....

சரணம் 1

இதுவரை உனது இஷ்டம் போல
வாழ்ந்தது போதும் ஒப்புக்கொடு } 2
முழுமனதோடு ஒப்புக்கொடு
இயேசுவுக்கு உன்னை ஒப்புக்கொடு } 2

ஒப்புக்கொடு.....

சரணம் 2

தேவ ராஜ்ஜியம் உனக்குள்ளே
இயேசு ராஜன் கொண்டு வந்தார் } 2
இதுவே என்றும் நிரந்தரமே
இயேசுவுக்கு உன்னை ஒப்புக்கொடு } 2

ஒப்புக்கொடு.....

சரணம் 3

ஆதியில் வார்த்தை அவர் ஆனார்
அவரே உனக்கு தேவன் ஆனார் } 2
பிதாவின் நேச மகனான
இயேசுக்கு உன்னை ஒப்புக்கொடு } 2

ஒப்புக்கொடு.....

3. புதிதானதே

பல்லவி

புதிதானதே என் மனம் புதிதானதே
இயேசு வந்ததாலே புதிதானதே - 2
எனக்குள் இருந்த பழைய மனுஷன் தான்
இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டானே } 2

சரணம் 1

மனம் போன போக்கிலே வாழ்ந்தேனே
கீழ்ப்படியாமலே இருந்தேனே } 2
ஆகாய அதிகாரப்ரபுவாகிய
அந்தகார ஆவிக்குள் கிடந்தேனே } 2
புதிதானதே என் மனம் புதிதானதே - 2

சரணம் 2

முன்பு நான் தேவனுக்கு தூரமானேன்
இன்று நான் இயேசுவால் நெருங்கிவந்தேன் } 2
சிலுவையால் பகையை அழித்தாரே
பிதாவோடு என்னை இணைத்தாரே } 2
புதிதானதே என் மனம் புதிதானதே - 2

சரணம் 3

கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை எழுப்பினார்
அவரோடு உன்னதத்தில் அமர்த்தினாரே } 2
இயேசுவுக்குள் பிறக்கும்படி செய்தாரே
தேவனின் பிள்ளையாக மாற்றினாரே } 2

புதிதானதே.....

4. வாரும் பரிசுத்த ஆவியே

பல்லவி

வாரும் பரிசுத்த ஆவியே
வரவேண்டும் உமது அபிஷேகம் } 2
இயேசுவால் இறங்கி வந்தவரே
எனக்குள்ளாக வருவீரே } 2

வாரும் ...

சரணம் 1

எங்கள் சரீரமே
உமது ஆலயமே } 2
என்றென்றுமே ஆவியானவர்
வாசம் செய்கின்றீர் } 2

வாரும் ...

சரணம் 2

மீட்கப்பட்டோமே
உம்மால் நாங்களே } 2
முத்திரையாக உம்மை நாங்கள்
பெற்று கொண்டோமே } 2

வாரும் ...

சரணம் 3

அச்சாரமானவரே
அன்பின் ஆவியே } 2
சகலத்தையும் எங்களுக்கு
போதித்து உணர்த்துகின்றீர் } 2

வாரும் ...

5. எந்தன் புறாவே

பல்லவி

எந்தன் புறாவே எந்தன் புறாவே
உன் நேசர் அழைக்கின்றேன்
என் மணவாட்டியே என் ரூபவதியே
என் பிரியமே வா வா } 2
தென்றலே அருகில் வா
நேசமே எழுந்து வா } 2

- எந்தன் புறாவே

சரணம் 1

மணவாளியே உன் நாவின் கீழ்
தேனும் பாலும் இருக்கின்றதே } 2
லீபனோனின் வாசனை போல்
உனது வஸ்திரம் மணம் வீசுது } 2

- எந்தன் புறாவே

சரணம் 2

அழகானது உனது முகம்
உன் சத்தம் நானும் கேட்கணுமே } 2
உன் கன்னங்கள் பார்க்கும் போது
வெடித்த மாதுளம் பழம் போன்றது } 2

- எந்தன் புறாவே

சரணம் 3

உன் கண்கள் என்னை வென்றது
மனதில் மகிழ்ச்சியை தருகின்றது } 2
அருமை ரூபமே இனிமை கீதமே
இதயத்தில் பதிந்த இன்பமுள்ளவளே } 2

- எந்தன் புறாவே

6. உயிருள்ள நம் தேவன்

பல்லவி

உயிருள்ள நம் தேவன் - என்றும்
நம்மோடு இருக்கின்றார்
உண்மையுள்ள நம் இயேசு - என்றும்
நம்மோடு இருக்கின்றார்
வாலிபனே கன்னிகையே
இதை நீ உணர்ந்திடுவாய் } 2

உயிருள்ள....

சரணம் 1

இளம் வயது முதற்கொண்டு
தாவீது துதித்தானே } 2
இஸ்ரவேல் தேசம் முழுமைக்கும் அவனை
இராஜாவாக தேவன் அபிஷேகித்தார். } 2

உயிருள்ள....

சரணம் 2

எகிப்தின் சிறையினிலே
யோசேப்பு வாடினானே } 2
அவனோடு கர்த்தர் இருந்ததினாலே
தேசத்தின் அதிபதி ஆக்கினாரே } 2

உயிருள்ள....

சரணம் 3

நடத்தையில் அன்பினிலே
வார்த்தையில் ஒழுக்கத்திலே } 2
இளமை முதல் முன் மாதிரியாக
பிறருக்கு நீயும் விளங்கிடுவாய் } 2

உயிருள்ள....

7. சிலுவை நடுவில்

பல்லவி

சிலுவை நடுவில் இயேசு நின்று
அழைக்கின்றார் உன்னை அழைக்கின்றார் } 2
உன்னிடம் இருப்பதை அவரிடம் கொடுப்பாய்
அவரிடம் இருப்பதை உனக்கு தருவார் } 2
சிலுவை நடுவில்...

சரணம் 1

உன் நிந்தையை அவர் வாங்கிக் கொள்வார்
அவரின் மகிமையை உனக்கருள்வார் } 2
உன் வறுமையை அவர் ஏற்றுக் கொள்வார்
அவரின் செல்வத்தை உனக்கு தருவார் } 2
சிலுவை நடுவில்...

சரணம் 2

உன் பாவங்கள் அவரே சுமப்பார்
அவரின் நீதியை உன் மேல் வைப்பார் } 2
உன் தண்டனை அவரே ஏற்றார்
அவரின் மீட்பை நீயும் பெற்றாய் } 2
சிலுவை நடுவில்...

சரணம் 3

உன் மரணம் அவரே அடைந்தார்
அவரின் வாழ்வை உனக்கு ஈந்தார் } 2
உனது சாபம் தன்மேல் சுமந்தார்
அவரின் Blessing உனக்கு கொடுத்தார் } 2
சிலுவை நடுவில்...

8. நான் போகும் இடமெல்லாம்

பல்லவி

நான் போகும் இடமெல்லாம்
என் இயேசு ராஜாவை
ஸ்தோத்தரிப்பேன் துதித்திடுவேன்
ஆர்ப்பரித்து பாடிடுவேன்
பயம் போக்கும் ஜெய கிறிஸ்து
என்னோடு இருக்கின்றார் } 2

சரணம் 1

பூமிக்கு வானம் எப்படியோ
தேவனின் கிருபை அப்படியே } 2
பாவங்கள் நமக்கு தூரமாக
கிழக்கு மேற்காய் ஆக்கினாரே } 2

நான் போகும்....

சரணம் 2

கர்த்தர் நம்மை மண் என்று
நினைவு கூர்ந்து பார்க்கின்றார் } 2
நமது உருவம் பிறக்கும் முன்னே
தேவன் தாமே அறிகின்றார் } 2

நான் போகும்....

சரணம் 3

நமது வாயை நன்மையினால்
தேவன் திருப்தி ஆக்குகிறார் } 2
அவரை நான் ஸ்தோத்தரிப்பேன்
துதித்து துதித்து போற்றிடுவேன் } 2

நான் போகும்....

9. முழு மனதோடு உமைநான்

பல்லவி

முழுமனதோடு உமைநான்
தேடுகிறேன் தேவா
வெளிப்படுவீரே இப்பொழுதே - என்
ஆவியிலே நாதா (முழு மனதோடு)

சரணம் 1

இதயத்திலே தூய்மையுடன்
உமைநான் தொழுது கொள்வேன் } 2
நீதியையும் அமைதியையும்
அன்பையும் நாடிடுவேன் } 2
(முழு மனதோடு)

சரணம் 2

தேவனின் ஆவியினால்
நடத்தப்படுகின்றேன் } 2
ஆகையினால் நம் பிதாவின்
பிள்ளையாய் இருக்கின்றேன் } 2
(முழு மனதோடு)

சரணம் 3

அழைத்தீரே தெரிந்து கொண்டு
நன்றி சொல்கின்றேன் } 2
எல்லாமே நன்மைக்கென்று
இருப்பதை அறிகின்றேன். } 2
(முழு மனதோடு)

சுகஜீவ கீதங்கள்
Vol - 21
1. உன்னை நான் ஆசீர்வதிப்பேன்

பல்லவி

உன்னை நான் ஆசீர்வதிப்பேன்
உன்னை நான் பெருகச்செய்வேன் } 2
ஆபிரகாமை ஆசீர்வதித்த தேவன்
மணமக்களே உங்களை ஆசீர்வதிக்கிறார். } 2

உன்னை

சரணம் -1

தேவன் சாயலாய் நம்மை படைத்தார்
ஆணும் பெண்ணுமாகவே உண்டாக்கினார் } 2

உன்னை

சரணம் -2

ஏற்ற துணையாய் ஒரே மாம்சமாய்
இறுதிவரை இருவரும் சேர்ந்து வாழுங்கள் } 2

உன்னை

சரணம் -3

பலுகிப் பெருகுங்கள் பூமியை நிரப்புங்கள்
தேவன் தந்த யாவையும் ஆளுகை செய்யுங்கள் } 2

உன்னை

2. முழுநிலவாய் முகம் மலரும்

பல்லவி

முழுநிலவாய் முகம் மலரும்
புது மணமகளே
புது பொலிவாய் கம்பீரமாய்
புது மணமகனே } 2

வாழ்த்து

தேவன் உங்களை சம்பூர்ணமாய் ஆசீர்வதிக்கின்றார்
இயேசு உங்களை கரங்கள் தொட்டு ஆசீர்வதிக்கின்றார் } 2

முழுநிலவாய்

சரணம் 1

இன்பத்திலும் துன்பத்திலும்
வாழ்விலும் தாழ்விலும்
உறுதியோடு வாழ்வீரே
துணையாக இருப்பீரே } 2

முழுநிலவாய்

சரணம் 2

சுகத்திலும் துக்கத்திலும்
ஆரோக்கியத்திலும் நோயிலும்
பிரியாமல் இருப்பீரே
திருமணத்தை காப்பீரே } 2

முழுநிலவாய்

சரணம் 3

உங்களை இணைத்தவர்
கர்த்தர் என்பதை மறவாதீர்
ஜெயமுள்ள ஜீவியம்
இனிதாக நடத்துவீர் } 2

முழநிலவாய்

3. கர்த்தர் தந்தாரே கர்த்தர் தந்தாரே

பல்லவி

கர்த்தர் தந்தாரே கர்த்தர் தந்தாரே
ஏற்ற துணையைதான் இந்த நாளிலே } 2
ஸ்தோத்தரிப்போம் ஸ்தோத்தரிப்போம் இன்ப இயேசுவை
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம் மணமக்களை } 2

சரணம் : 1

ஆதிநாளிலே ஆதாமுக்கு
ஏவாளை துணையாக தந்தாரே } 2
இந்த நாளிலே இந்த ஜோடியை
தேவன் தானே சேர்த்து வைத்தாரே } 2

கர்த்தர் தந்தாரே

சரணம் 2

ஆபிரகாமுக்கு சாராளையே
மனசுக்கேற்ற மனைவியாக்கினாரே } 2
அந்த தம்பதியர் போல இவர்களை
இனிதாக வாழவே வாழ்த்திடுவோம் } 2

கர்த்தர் தந்தாரே

சரணம் :3

ரெபேக்காளை ஈசாக்கிடம் இதயம் விரும்பும்
மங்கையாக இணைத்து வைத்தாரே } 2
இந்த இருவரும் அவர்கள் போலவே
இன்பமாக வாழ வாழ்த்திடுவோம் } 2

கர்த்தர் தந்தாரே

4. கானா ஊரிலே நடந்த கல்யாணம்

பல்லவி

கானா ஊரிலே நடந்த கல்யாணம்
கலந்து கொண்டாரே நம்ம இயேசுவே
குறையில்லாமலே நடந்த கல்யாணம்
நிறைவாகவே இயேசு நடத்தினார்

கானா ஊரிலே

சரணம் :1

பாதியிலே திராட்சை ரசம் தீர்ந்து போனாலும்
இயேசு செய்த அற்புதத்தால் நிறைந்து வழிந்ததே } 2
கற்சாடி ஆறில் ஊற்றப்பட்ட தண்ணீர்
சுவை கூடிய ரசமாக மாறி போனதே } 2

கானா ஊரிலே

சரணம் :2

கல்யாணத்தில் இயேசு வந்துவிட்டாலே
கச்சிதமாய் எல்லாமே நடந்து விடுமே } 2
கடைசிவரை சுவை மாறா திராட்சை ரசம் போல்
தம்பதிகள் வாழ்க்கை இனித்திடுமே } 2

கானா ஊரிலே

சரணம் :3

இங்கு நடந்த கல்யாணம் நல்ல கல்யாணம்
இயேசுவின் ஆசீர்வாதம் நிறைந்த கல்யாணம் } 2
புது மணத்தம்பதிகள் பல ஆண்டுகள் வாழட்டுமே
ஆயிரங்கால பயிர்களாக செழித்து ஓங்கட்டுமே } 2

கானா ஊரிலே

5. மனைவியிடம் அன்பு காட்டுங்கள்

பல்லவி

மனைவியிடம் அன்பு காட்டுவாய்
நேசமுள்ள நல்ல கணவனே
கணவனுக்கு கீழ்ப்படிவாய்
பாசமுள்ள நல்ல மனைவியே } 2

மனைவியிடம்

அனுபல்லவி

மணவாட்டி சபைக்குதான்
கிறிஸ்துவே தலையானவர் } 2
குடும்பத்திலே மனைவிக்குத் தான்
கணவன்தானே தலையானவன் } 2

மனைவியிடம்

சரணம் 1

பரலோக தேவனின் சட்டம் இது
குடும்பம் தழைத்திட திட்டம் இது } 2
ஈருடல் ஓர் உயிர் ஆகிடுவீர்
இருமனம் ஒன்றாய் இசைந்திடுவீர் } 2

மனைவியிடம்

சரணம் 2

சாந்தமே மனைவியின் அலங்காரம்
அமைதியே அவளுக்கு அழகுமுகம் } 2
இதயத்தில் நிறைந்த நற்குணமே
தேவனின் பார்வையில் பொக்கிஷமே } 2

மனைவியிடம்

சரணம்:3

பெலவீனப் பாண்டம் பெண்ணாவாள்
அறிந்து நடக்கும் ஆணாவீர் } 2
விவேகம் நிறைந்த இல்லறத்தை
கற்புடன் நடத்துவீர் நல்லறமாய் } 2

மனைவியிடம்

6. மணமகளே மணமகனே

பல்லவி

மணமகளே மணமகனே
We wish you happy Life
We wish you Long Life } 2
Happy married Life
Happy married Life } 2
கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாரே

சரணம் : 1

இருவரும் ஒருவர் ஆக
இணைந்தே வாழ்ந்திடுவீர்
இல்லறமே நல்லறமாய்
இனிதாக நடத்திடுவீர் } 2

Happy married

சரணம் :2

ஒவ்வொரு நாளும் நீங்கள்
ஐ லவ் யூ சொல்லுவீர்
சமாதானமாய் வாழ்ந்திடுவீர்
குழந்தைகளை பெற்றிடுவீர் } 2

Happy married

சரணம் :3

உங்களின் வாழ்வின் நடுவினிலே
இயேசுவை வைத்திடுவீர்
காட்டிடுவார் நல்வழியை
இறுதி வரை உங்களுக்கே } 2

Happy married

7. வாழ்க வாழ்கவே

பல்லவி

வாழ்கவே வாழ்கவே மணமக்கள் நீங்களே
இயேசுவின் நாமத்தினால்
உங்களை வாழ்த்துகின்றோம்

சரணம் -1

கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழ்ந்தே இருப்பீர்
ஆசீர்வாதம் பெற்றவரே
உங்களின் ஆத்துமா தேவனில் என்றுமே
களிகூர்ந்து இருக்கட்டுமே

வாழ்கவே வாழ்கவே

சரணம் -2

கர்த்தரின் கையிலே அலங்கார கிரீடமாய்
உங்களை வைத்திடுவார்
தேவனின் கரத்திலே ராஜமுடியுமாய்
நீங்கள் இருந்திடுவீர்

வாழ்கவே வாழ்கவே

சரணம் -3

உங்கள் மேல் பிரியமாய் கர்த்தர் இருக்கின்றார்
உங்களை காத்திடுவார்
சந்ததி விளங்கவே இன்ப வாழ்க்கையை
தேவனில் வாழ்ந்திருப்பீர்

வாழ்கவே வாழ்கவே

8. நடத்தி தந்தாரே

பல்லவி

நடத்தி தந்தாரே இயேசு நடத்தி தந்தாரே
இந்த கல்யாணம் இயேசு நடத்தி தந்தாரே
நன்றி இயேசுவே உமக்கு நன்றி தேவனே

சரணம் :1

மாப்பிள்ளைக்கேற்ற மணமகளாய்
பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளையாய்
கர்த்தர் இணைத்து வைத்தாரே
ஜோடி பொருத்தம் சூப்பர் தான்

நடத்தி தந்தாரே

சரணம் :2

வான தூதர்கள் வந்தாரே
வாழ்த்துக்கள் சொல்லி மகிழ்ந்தாரே
கர்த்தர் சேர்த்து வைத்தாரே
மனிதர் பிரிக்காதிருப்பாரே

நடத்தி தந்தாரே

சரணம் :3

மணமக்கள் வாழ்வின் மையமாய்
இயேசு என்றும் இருப்பாரே
மங்களம் மங்களம் மங்களமே
மங்களமே சுப மங்களமே

நடத்தி தந்தாரே

9. கர்த்தருக்கு பயந்து நடந்தால்

பல்லவி

கர்த்தருக்கு பயந்து நீ நடந்தால்
உன்னை பாக்யவான் என்பார்கள்
கர்த்தருக்கு பயந்து நீ நடந்தால்
உன்னை பாக்யவதி என்பார்கள்

கர்த்தருக்கு

சரணம் - 1

உந்தன் வீட்டின் ஓரங்களில்
கனிதரும் திராட்சை கொடிபோல
உம் மனைவி எந்நாளும்
உன்னோடு இருப்பாளே

கர்த்தருக்கு

சரணம் 2

உனது பந்தியை சுற்றிலுமே
உந்தன் பிள்ளைகள் யாவருமே
ஒலிவ மரத்தின் கன்றுகள் போல்
உன்னோடு சேர்ந்து இருப்பார்கள்

கர்த்தருக்கு

சரணம் - 3

சீயோனிலிருந்து கர்த்தர் உன்னை
என்றென்றும் ஆசீர்வதிப்பாரே
உந்தன் பிள்ளைகளின் பிள்ளைகளை
காண்பாயே நீ காண்பாயே

கர்த்தருக்கு

சுகஜீவ கீதங்கள்
Vol - 22

1. அபிஷேகமே

அல்லேலூயா ஆமென் அல்லேலூயா - 4

பல்லவி

அபிஷேகமே அபிஷேகமே
அக்கினியின் அபிஷேகமே } 2
எங்களின் மத்தியில் இறங்கிடுவீர்
இதயங்கள் எல்லாம் நிரப்பிடுவீர் } 2

அனுபல்லவி

பரிசுத்த ஆவி வந்தாலே
பகலைப்போல ஆக்கிடுவார் } 2
ஒளியாய் நம்மேல் வீசிடுவார்
அற்புத வல்லமை விளங்கிடுமே } 2

சரணம் 1

ஆனந்தமே ஆனந்தமே
பரிமள தைலமே } 2
துயரத்தை மாற்றிடும் ஆவியே
துதியின் மகிமை ஆடையே } 2

பரிசுத்த ஆவி.....

சரணம் 2

ஜீவ நதியே ஜீவ நதியே
பொங்கி வரும் ஜீவ நதியே } 2
எங்களின் தாகம் தீர்த்திடுவீர்
எங்களில் வாசம் செய்திடுவீர் } 2

பரிசுத்த ஆவி.....

2. சகோதரனே சகோதரியே

பல்லவி

சகோதரனே சகோதரியே
இன்பமான சங்கீதம் பாட வாருங்கள் } 2
நெஞ்சுக்குள்ளே பொங்குகின்ற
ஆனந்த உணர்வோடு ஆட வாருங்கள் } 2

அனுபல்லவி

கூடுவோம் பாடுவோம் ஆடுவோம்
இயேசுவின் நாமத்தை போற்றுவோம் } 2

சரணம் 1

பாடுகள் தீர்ந்ததே போராட்டம் ஓய்ந்ததே
சமாதானம் சந்தோஷம் வந்துவிட்டதே } 2

சகோதரனே.....

சரணம் 2

கடனெல்லாம் அடைந்ததே கவலை நீங்கிபோனதே
உழைக்கின்ற பணமெல்லாம் கையில் நிற்குதே } 2

சகோதரனே.....

சரணம் 3

நம்மோடு இருக்கிறார் நல்ல மேய்ப்பர் இயேசுவே
சுகமான வாழ்வை நமக்கு தந்தாரே } 2

சகோதரனே.....

3. சருவ வல்லவரே

பல்லவி

சருவ வல்லவரே சகலமும் படைத்தவரே - 2
எங்கள் மன்றாட்டை கேட்க வருவீரே - 2
ஆராதனை தேவனுக்கே பரலோக நாதனுக்கே - 2

சரணம் - 1

சருவ வியாபியே சருவ ஆளுனரே - 2
ஞானத்தில் பூரணரே மகிமை உமக்கன்றோ - 2
ஆராதனை தேவனுக்கே பரலோக நாதனுக்கே - 2

சரணம் - 2

ஜீவன் உள்ளவரே ஜெயமுள்ள கிறிஸ்துவே - 2
மீட்பின் நாயகரே ஸ்தோத்திரம் உமக்கன்றோ - 2
ஆராதனை தேவனுக்கே பரலோக நாதனுக்கே - 2

சரணம் -3

நீதியின் தேவனே நித்திய மானவரே - 2
வார்த்தை நீர் தானே வருவீர் எம்மிடமே - 2
ஆராதனை தேவனுக்கே பரலோக நாதனுக்கே - 2

4. வரவேணுமே

பல்லவி

வரவேணுமே என் தேவனே
எனக்குள்ளே தெய்வீக பிரசன்னமே } 2
இறங்கட்டுமே பரலோகத்தின்
தேவனின் சக்கினா மகிமையே } 2

சரணம் 1

தெய்வீக பிரசன்னம் இருந்தால் அங்கே
தேவனின் மகிமை வெளிப்படுமே } 2
தேவனின் மகிமை வெளிப்படுமே - 2

வரவேணுமே....

சரணம் 2

செய்கின்ற காரியம் ஜெயமாகுமே
கிடைக்கின்ற தரிசனம் நிறைவேறுமே } 2
கிடைக்கின்ற தரிசனம் நிறைவேறுமே - 2

வரவேணுமே.....

சரணம் 3

பாவங்கள் நீங்கி பரிசுத்தமே
இயேசுவின் மீட்பினால் பெற்றுக் கொண்டோம் } 2
இயேசுவின் மீட்பினால் பெற்றுக் கொண்டோம் - 2

வரவேணுமே.....

சரணம் 4

துதிகளின் மத்தியில் பரிசுத்தரே
வாசமே செய்கின்றார் அறிந்திடுவோம் } 2
வாசமே செய்கிறார் அறிந்திடுவோம் - 2

வரவேணுமே.....

5. எந்தன் விண்ணப்பம்

பல்லவி

எந்தன் விண்ணப்பம் கேட்பீரே
எந்தன் இயேசுவே தேவ மைந்தனே } 2

ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம் இயேசு ராஜனை
ஸ்தோத்தரிப்போம், ஸ்தோத்தரிப்போம் அன்பின் நேசரை } 2

சரணம் 1

மாம்சமான யாவரும் உம்மிடத்திலே
ஜெபத்துடன் ஓடி வருவாரே } 2

எந்தன்.....

சரணம் 2

உம்முடைய இரட்சண்யம் தேவரீரே
பூமியில் எங்குமே சென்றிடுமே } 2

எந்தன்.....

சரணம் 3

இரங்குவீர் எங்களுக்கு இயேசு ராஜனே
உங்கள் முகம் எங்கள் மேல் வெளிச்சம் தானே } 2

எந்தன்.....

சரணம் 4

கர்த்தர் தாமே எங்களை நடத்திடுவீர்
யாவரும் மகிழ்ந்தே ஆர்ப்பரிப்போமே } 2

எந்தன்.....

6. கர்த்தரே தெய்வமென்று

பல்லவி

கர்த்தரே தெய்வமென்று
ஏற்று கொள்பவர்கள் - நல்ல
பாக்கியம் பெற்றவர்கள் - நல்ல
பாக்கியம் பெற்றவர்கள் } 2

அனுபல்லவி

தேவனுக்கு மகிமை செலுத்திடுவோம் - 2

சரணம் - 1

உங்கள் எல்லைகளில் சமாதானம் வைத்தாரே
துதியுடன் கர்த்தரையே பாடியே கொண்டாடுவோம்
கர்த்தரே.....
தேவனுக்கு மகிமை செலுத்திடுவோம் - 2

சரணம் - 2

நல்ல உணவுகளால் நம்மை போஷிக்கின்றார்
உயிருள்ள நாளெல்லாம் துதிப்போம் நம் தேவனை
கர்த்தரே.....
தேவனுக்கு மகிமை செலுத்திடுவோம் - 2

சரணம் -3

உங்கள் வீடுகளை கர்த்தர் காக்கின்றார்
ஜீவ வார்த்தை தந்தார் இயேசுவில் மகிழ்ந்திருப்போம்
கர்த்தரே....
தேவனுக்கு மகிமை செலுத்திடுவோம் - 2

7. என்னை நடத்தும்

பல்லவி

என்னை நடத்தும் என் இயேசுவே
உம்மை நோக்கி காத்திருக்கிறேன் -என்னை } 2
வெட்கப்பட்டு போக விடமாட்டீர் - என்னை
வெட்கப்பட்டு போக விடமாட்டீர் } 2

சரணம் -1

பெரிதாகவே இருக்கின்றதே
என்னுடைய பாவமெல்லாம் } 2
உமது நாமத்தினால்
மன்னிப்பை தந்திடுவீர் } 2

என்னை நடத்தும்.....

சரணம் -2

என்னுடைய துன்பங்களை
இயேசுவே நீர் பார்க்கின்றீர் } 2
கருணையை காட்டிடுவீர்
காருண்ய தேவன் நீரே } 2

என்னை நடத்தும்.....

சரணம் -3

நல்லவராய் உத்தமராய்
கர்த்தாவே இருக்கின்றீர் } 2
பாவிகள் எங்களுக்கு
வழியை காட்டிடுவீர் } 2

என்னை நடத்தும்...

8. கடலோரம் இயேசு

பல்லவி

ஏலேலோ ஏலேலோ ஏலேலோ
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ

கடலோரம் இயேசு நடந்து வருகிறார் } 2
நமக்காக இயேசு நடந்து வருகிறார்
நிம்மதியாய் நாம் வாழ } 2
நிலைத்து நின்று நாம் வாழ
நமக்காக இயேசு நடந்து வருகிறார் } 2
நன்மைகளின் நாயகன் நடந்து வருகிறார்

சரணம் 1

திரளான ஜனங்கள் கூடி நிற்கின்றார் } 2
தேவ வசனம் கேட்கவே காத்து நிற்கின்றார்
இயேசுவின் உபதேசம் ஏற்றுக் கொள்ளவே } 2
நேசரிடம் மாந்தர் நெருங்கி வருகின்றார்
கடலோரம் இயேசு.....

சரணம் 2

நம்முடைய சுயத்தை இயேசு பாதத்தில் } 2
வைத்து விட்டால் மீட்பர் நமக்குள் வருவார்
கர்த்தர் நம்மை ஆளுகை செய்யும் போதிலே } 2
கடல் அலையைப் போல் உள்ளம் துள்ளி ஆடுதே
கடலோரம் இயேசு.....

சரணம் 3

உலகத்தின் பின்னே போகும் மனிதரே } 2
உயிருள்ள தேவனை நோக்கிப் பாருங்கள்
குறைகளெல்லாம் நீங்கி போய் விடும் தானே } 2
நிறையுள்ள வாழ்க்கை வாழ்ந்திடுவீரே
கடலோரம் இயேசு...

9. திசையெங்கும் செல்வேன்

பல்லவி

திசையெங்கும் செல்லுவேன் இசையோடு பாடுவேன்
அசைவில்லா விசுவாசம் வைத்தேன் என் தேவனே
தேவனே மகா ராஜனே தேவனே மகா ராஜனே } 2

சரணம் 1

எக்காள தொனியில் ஓங்கிய குரலில்
கின்னர இசையில் கீர்த்தனங்கள் பாடுவேன் } 2
சங்கீத ஸ்வரங்களால் ஆர்ப்பரித்து பாடுவேன்.
மகிமையின் தேவனை துதி செய்து மகிழுவேன்
துதி செய்து மகிழுவேன். } 2

திசையெங்கும்.....

சரணம் 2

சம்பூர்ண ஆசீர்வாதம் தருகின்ற தேவனே
உம்முடைய வெளிச்சத்தில் வெளிச்சத்தைக் காண்கிறேன் } 2
பேரின்ப நதியினால் தாகத்தைத் தீர்க்கிறேன்
நாளெல்லாம் உமது சத்தியத்தை சொல்லுவேன்
சத்தியத்தை சொல்லுவேன் } 2

திசையெங்கும்.....

சரணம் 3

பரிசுத்த ஸ்தலத்தில் தேவனை துதிப்பேன்
புதுப்பாடல் பாடியே கர்த்தரை போற்றுவேன் } 2
ஆகாய விரிவை பார்த்து நான் பாடுவேன்
மாட்சிமை நிறைந்த நாமத்தை உயர்த்துவேன்.
நாமத்தை உயர்த்துவேன். } 2

திசையெங்கும்.....

சுகஜீவ கீதங்கள்
Vol - 23

1. மகிமையின் தேவனே

பல்லவி

மகிமையின் தேவனே உம்மை துதிக்கிறோம் } 2
அற்புதமானவரே உம்மை உயர்த்துகிறோம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா – 2

சரணம் - 1

இஸ்ரவேல் மேய்ப்பரே எங்களின் மீட்பரே } 2
திரும்பி வாருமே கண்ணோக்கி பாருமே
அல்லேலூயா...

சரணம் - 2

உன்னதமானவரே இராஜாதி இராஜனே } 2
விண்ணப்பம் கேட்டிடுவீர் விருப்பம் நிறைவேற்றுவீர்
அல்லேலூயா...

சரணம் - 3

யுத்தத்தில் வல்லவரே சேனைகளின் கர்த்தரே } 2
ஜெயம் தரும் நாதரே பயம் போக்கும் இரட்சகரே
அல்லேலூயா...

2. பரிசுத்த அலங்காரத்துடனே

பல்லவி

பரிசுத்த அலங்காரத்துடனே
கர்த்தரை தொழுது கொள்ள வாருங்களேன் } 2
பரலோக தேவனின் சன்னிதானத்தில்
பணிந்து வணங்கிட வாருங்களேன் } 2

அனுபல்லவி

வானங்கள் மகிழட்டும் பூமி பூரிப்பாகட்டும்
தேவனின் கீர்த்தியை கடல்கள் முழங்கட்டும் } 2

சரணம் - 1

மகிமையை தேவனுக்கு செலுத்திடுவோம்
அவரின் பிரஸ்தாபம் எடுத்து சொல்லுவோம் } 2
- வானங்கள்.....

சரணம் - 2

தேவனே உயர்ந்தவர் உன்னதரே
காட்டு விருட்சமெல்லாம் சொல்லுகின்றதே } 2
- வானங்கள்.....

சரணம் - 3

கர்த்தரில் என்றும் அன்பு கூறுங்கள்
தீமையை அறவே வெறுத்து விடுங்கள் } 2
- வானங்கள்....

சரணம் -4

தேவனே வெளிச்சத்தை தந்தாரே
மகிழ்ச்சியை பூமியில் நிறைத்தாரே } 2
- வானங்கள்....

3. பரலோக இராஜாவே

பல்லவி

பரலோக இராஜாவே
பரிசுத்த நல்தேவனே } 2
உம்மையே நாங்கள் நம்பியுள்ளோம்
உம்மிடம் நாங்கள் வந்து விட்டோம் } 2
பரலோக இராஜாவே பரிசுத்த நல்தேவனே

கோரஸ்

ஸ்தோத்திரமே தேவனுக்கே
ஸ்தோத்திரமே இயேசுவுக்கே } 2

சரணம் - 1

நாங்கள் நினைப்பதற்கும் வேண்டி கொள்வதற்கும் - 2
மேலான செயல்களையே எமக்கு செய்கின்றீர் - 2
பரலோக.....

ஸ்தோத்திரமே தேவனுக்கே ஸ்தோத்திரமே இயேசுவுக்கே -2

சரணம் - 2

புதிய விடியலையே தேவனில் கண்டோமே - 2
உமது நாமத்திலே வல்லமை இருக்கின்றதே - 2
பரலோக.....

ஸ்தோத்திரமே தேவனுக்கே ஸ்தோத்திரமே இயேசுவுக்கே -2

சரணம் - 3

பெரியோர் சிறியோரை ஆசீர்வதிக்கின்றீர் - 2
எங்கள் குடும்பத்தையே பெறுக செய்கின்றீர் - 2
பரலோக.....

ஸ்தோத்திரமே தேவனுக்கே ஸ்தோத்திரமே இயேசுவுக்கே -2

4. உலகமெங்கும் இயேசு வார்த்தையே

பல்லவி

உலகமெங்கும் இயேசு வார்த்தையே
வேகமாக பரவி செல்லுதே } 2
சுகத்தையும் தந்து பலத்தையும் தந்து
தாங்கியே நடத்தியே செல்லுதே } 2

சரணம் - 1

தேவ வார்த்தையே ஜீவன் உள்ளது
வல்லமை நிறைந்ததாய் இருக்கின்றது } 2
உலகமெங்கும்.....

சரணம் - 2

இரண்டு பக்கமும் கூர்மையுள்ளதாய்
கருக்குள்ள பட்டயம் ஆகின்றது } 2
கருக்குள்ள பட்டயம் ஆகின்றது - 2
உலகமெங்கும்.....

சரணம் - 3

ஆத்துமாவை ஆவியை பிரிக்கத்தக்கதாய்
கணுக்களை ஊனை குத்துகின்றது } 2
கணுக்களை ஊனை குத்துகின்றது - 2
உல்கமெங்கும்.....

சரணம் - 4

இருதயத்தின் நினைவுகள் எவையென்று
நெஞ்சினில் யோசனை வகுத்து தருகுது } 2
நெஞ்சினில் யோசனை வகுத்து தருகுது - 2
உலகமெங்கும்.....

5. மண்ணின் மேல் நான்

பல்லவி

மண்ணின் மேல் நான் இருந்தாலும்
விண்ணின் அனுபவம் அடைகின்றேன்
இயேசு என்னோடு இருப்பதினால்
எதிலும் எனக்கு ஜெயம் தானே } 2

கோரஸ்

இயேசுவால் வந்த சுகம்
எந்நாளும் வேண்டுமே } 2

சரணம் - 1

ஏனோக்கு உம்மோடு நடந்தானே
அதை போல் நானும் நடக்கணுமே
இயேசுவால்...

சரணம் - 2

உம்மிடம் நோவா கிருபை பெற்றான்
அதை போல் எனக்கும் கிடைக்கணுமே
இயேசுவால்

சரணம் - 3

கிதியோன் பயத்தை போக்கினீரே
யுத்தத்தில் ஜெயத்தை தந்தீரே
இயேசுவால்

சரணம் - 4

உலகத்தில் இருக்கும் அவனை விட
எனக்குள் இருப்பவர் பெரியவரே
இயேசுவால்

6. தனிமை உன்னை

பல்லவி

தனிமை உன்னை வாட்டும் போது
உனக்கு தேவை இயேசுவே
வேதனையில் நீ வெதும்பும் போது
உனக்கு தேவை இயேசுவே

கோரஸ்

அப்பா என்று நீ கூப்பிடுவாய்
மகனே என்று அவர் வருவாரே
அப்பா என்று நீ கூப்பிடுவாய்
மகளே என்று அவர் வருவாரே - தனிமை

சரணம் - 1

மனைவி மக்கள் இருந்தாலும்
சொந்தங்கள் பந்தங்கள் இருந்தாலும்
தனிமை உன்னை சூழும் போது
இயேசுவே உனக்கு துணையாவார் - தனிமை

சரணம் - 2

மனதில் சோர்வுகள் வரும் போது
மன்னவன் இயேசு மருந்தாவார்
நடைகள் உனக்கு தளரும் போது
நாதன் இயேசுவே பெலனாவார் - தனிமை

சரணம் - 3

தோல்வியை வெற்றியாய் மாற்றிடுவார்
தாகம் தீர்ப்பார் நீரூற்றாய்
வாழ்க்கை முழுவதும் இயேசுவானால்
இன்பமே உனது வாழ்வாகும் - தனிமை

7. மஜா மஜா என்று

பல்லவி

மஜா மஜா என்று அலையாதே
ஜல்சா ஜல்சா என்று திரியாதே
இது தான் உலகம் என்று எண்ணாதே
வேறு உலகம் உண்டு மறவாதே

சரணம் - 1

குடிப்பழக்கம் உன்னை அழித்திடுமே
குடியை விட்டால் வாழ்க்கை செழித்திடுமே
போதை வஸ்து உயிரை குடித்திடுமே
விட்டு விட்டால் ஆயுள் நிலைத்திடுமே

மஜா

சரணம் - 2

கர்த்தர் கொடுத்த நேரம் பொன்னானது
மறந்து விட்டால் வாழ்க்கை வீணானது
உனக்குள்ளே இயேசு வந்தால் இன்பமானது
இல்லாவிட்டால் உலகம் துன்பமானது

மஜா

சரணம் - 3

உலக சுகம் உன்னை சீர்குலைக்குமே
குடும்பத்தில் அமைதி நீங்கி போகுமே
மனந்திரும்பு உன் போக்கு மாறிடுமே
இயேசு தரும் புது வாழ்வு சுகம் தருமே

மஜா

8. மாறாதவர் இயேசு மாறாதவர்

பல்லவி

மாறாதவர் இயேசு மாறாதவர்
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
அதிகம் ஆகுமே அன்பு அதிகமாகுமே
இயேசு ராஜன் அன்பு அதிகமாகுமே.

கோரஸ்

கர்த்தர் பிரியம் என்றுமே மாறாதே
நேசர் கருணை என்றுமே மாறாதே
தேவ கிருபை என்றுமே மாறாதே
மீட்பர் நேசம் என்றுமே மாறாதே

சரணம் - 1

மாறிப்போகுமே மனங்கள் மாறிப்போகுமே
மனிதர்களின் மனங்கள் மாறிப்போகுமே
மாறிபோகுமே சொற்கள் மாறிப்போகுமே
மாந்தர்களின் சொற்கள் மாறிப்போகுமே

கர்த்தர் பிரியம்

சரணம் - 2

கலங்குகின்ற நெஞ்சம் உள்ளவர்கள்
இயேசுவினால் நிச்சயம் தேற்றப்படுவார்
அடைக்கலமே தந்து நம்மை காப்பார்
அனுகூல துணையும் அவரே ஆவார்

கர்த்தர் பிரியம்

சரணம் - 3

இயேசு தேவனை என்றும் போற்றிப்பாடுவோம்
கர்த்தர் இயேசு ராஜனை துதித்து பாடுவோம்
முடிவில்லாத தேவ ராஜ்ஜியத்தை
இயேசு கிறிஸ்து நமக்கு தந்திடுவார்

கர்த்தர் பிரியம்

9. கீழ்ப்படிந்தாலே ஜெயமே

பல்லவி

கீழப்படிந்தாலே ஜெயமே கர்த்தருக்கு
கீழ்ப்படிந்தாலே ஜெயமே
தேவனின் சித்தம் அறிந்திடுவோம்
அதன்படி நாமும் நடந்திடுவோம்

சரணம் - 1

ஆபிரகாம் கீழ்ப்படிந்தானே
திரளான ஜாதிகளின் தகப்பனானானே

சரணம் - 2

தாவீது கீழப்படிந்தானே
இஸ்ரவேல் தேசத்தின் இராஜனானானே

சரணம் - 3

ஏசாயா கீழ்ப்படிந்தானே
தேவனின் தீர்க்கதரிசியானானே

சரணம் - 4

தேவ குமாரன் கீழ்ப்படிந்தாரே
மேலான நாமம் தேவன் தந்தாரே

சுகஜீவ கீதங்கள்
Vol - 24

1. அல்லேலூயா சொல்வோம்

பல்லவி

அல்லேலூயா சொல்லுவோம்
ஆமென் என்போம்
தேவனை துதித்திடுவோம்
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்
போற்றுகின்றோம் புகழுகின்றோம்

சரணம் - 1

இருபத்து நான்கு மூப்பருடன்
சேர்ந்து கர்த்தரை தொழுது கொள்வோம்
சேர்ந்து கர்த்தரை தொழுது கொள்வோம்

அல்லேலூயா

சரணம் - 2

பரலோக ஜீவன்கள் நான்குடனே
சேர்ந்து விழுந்து பணிந்திடுவோம்
சேர்ந்து விழுந்து பணிந்திடுவோம்

அல்லேலூயா

சரணம் - 3

பரிசுத்த நாதனை சத்திய தேவனை
ஆர்ப்பரித்து துதி செய்வோம்
ஆர்ப்பரித்து துதி செய்வோம்

அல்லேலூயா

2. கண்ணீரோடு விதைப்பவர்கள்

பல்லவி

கண்ணீரோடு விதைப்பவர்கள்
கம்பீரமாய் அருப்பார்கள்
கஷ்டங்கள் இன்று சகித்தாலே
சுக வாழ்வை கர்த்தர் தருவாரே

சரணம் - 1

தெற்கே பாயும் வெள்ளங்களை
திருப்பி விடுவது போலவே
மாற்றுவார் கர்த்தர் சிறையிருப்பை
கண்ணீரோடு...

சரணம் - 2

கர்த்தர் நமக்கு செய்கின்றார்
பெரிய காரியம் இப்போதே
இதனால் நாமும் மகிழ்ந்திடுவோம்
கண்ணீரோடு...

சரணம் - 3

கர்த்தரை நம்பி இருப்பீரே
அசைக்க படவே மாட்டீரே
சீயோன் மலையை போல் இருப்பீரே
கண்ணீரோடு...

3. இயேசு இராஜாவே

பல்லவி

இயேசு இராஜாவே உமது அன்பு தான்
என்னை நெருக்குதே என்னை உருக்குதே

சரணம் - 1

உமது பாதையெல்லாம் முட்கள் நிறைந்ததாய்
இருக்க காண்கிறோம் எமக்காய் நொறுங்கினீர்
இயேசு இராஜாவே

சரணம் - 2

சாத்தான் சோதனையில் தேவன் சித்தத்திற்கே
உம்மை தாழ்த்தினீர் மீட்பை எமக்கு தந்தீர்
இயேசு இராஜாவே

சரணம் - 3

உமது இராஜ்ஜியத்தை அன்பாய் கட்டினீரே
உமது இரத்தத்தையே விலையாய் தந்தீரே
இயேசு இராஜாவே

4. இயேசுவின் நாமமே

பல்லவி

இயேசுவின் நாமமே சொன்னாலே போதுமே
இரட்சிப்பை அடைவீரே
வேதமே சொல்கின்றதே ஆ.. ஆ...
வேதமே சொல்கின்றதே

சரணம் - 1

தேவனின் வசனத்தால் கேள்வி வரும்
கேள்வியினால் விசுவாசம் வரும்
பூமியெங்கும் இதுவே சுவிஷேசமே - 2
இயேசுவின்...

சரணம் -2

மரித்தோரில் இருந்து இயேசுவையே
தேவன் அவரை எழுப்பினாரே
இதை நீ வாயினால் அறிக்கையிடு - 2
இயேசுவின்...

சரணம் - 3

இயேசுவை வணங்கிட வந்திடுவீர்
கர்த்தரின் பாதம் பணிந்திடுவீர்
ஐஸ்வர்ய தேவன் ஆசீர்வதிப்பார் - 2
இயேசுவின்...

5. இன்றைய உலகத்திலே

பல்லவி

இன்றைய உலகத்திலே எங்கள் இயேசுவே
புது வாழ்வை தருகின்ற மீட்பர் நீர் தானே

சரணம் - 1

பூமியெங்குமே வாழும் ஜனத்திற்கு
ஆத்தும மீட்டை தருகின்ற தேவன்
இயேசு நீர் தானே

இன்றைய...

சரணம் -2

உண்மை ஒன்றே தான் முடிவு பரியந்தம்
நிலைத்தே நிற்கும் என்பதை
எமக்கு போதித்த தேவனே

இன்றைய...

சரணம் - 3

எங்கள் கண்ணீரை ஆனந்த க்ண்ணீராய்
உமது வார்த்தை மாற்றி போடும்
நிச்சயம் நிச்சயமே

இன்றைய...

6. நம்ப முடியலே

பல்லவி

நம்ப முடியலே என்னால் நம்ப முடியலே
எனக்குள் வந்த மாற்றத்தை நம்ப முடியலே
இறக்கை கட்டி பறக்குதே
எந்தன் உள்ளமே

சரணம் - 1

இயேசுவின் சிலுவையை எண்ணி பார்க்கிறேன்
மீட்பரின் தியாகத்தை நினைத்து பார்க்கிறேன்
நன்றியோடு நேசரை நான் துதிக்கிறேன்
நம்ப முடியலே

சரணம் - 2

அன்று செய்த அற்புதங்கள் இன்றும் இயேசுவே
அதிகமாக செய்கின்றார் உலகமெங்குமே
நன்றியோடு நேசரை நான் துதிக்கிறேன்
நம்ப முடியலே

சரணம் - 3

இயேசு மீது நான் வைத்த விசுவாசமே
என்னை வாழ வைக்குதே எந்த நாளுமே
நன்றியோடு நேசரை நான் துதிக்கிறேன்.
நம்ப முடியலே

7. வானமே தேவனை

பல்லவி

வானமே தேவனை துதிக்கவா
பூமியே மகிமையை செலுத்தவா

நம்மேல் பிரியம் வைக்கின்றார்
தேவன் மிகவும் நல்லவரே
இரட்சிப்பின் ஆடையை உடுத்துகிறார்
கர்த்தர் மிகவும் பெரியவரே

சரணம் - 1

கீர்த்தனங்கள் பாடியே துதித்திடுவோம்
நடனங்கள் ஆடியே மகிழ்ந்திடுவோம்
கர்த்தருக்கு உரிய கனம் செய்வோம்

வானமே...

சரணம் - 2

தேவனை துதித்தல் இன்பமானது
அதுவே நமக்கு ஏற்றதானது
நம்மை நோக்கி நேசர் வருகின்றார்

வானமே...

சரணம் - 3

தேவனின் இராஜ்ஜியம் நிலையானது
இராஜ்ஜியத்தின் மகிமையை நாம் சொல்லுவோம்
தலைமுறை தோறும் ஆளுகை செய்வார்.

வானமே...

8. எத்தனையோ முறை

பல்லவி

எத்தனையோ முறை நான் எண்ணி பார்க்கிறேன்
என்னையும், உன்னையும் காப்பவர் அப்பா இயேசுவே
போடு போடு போடு ஸ்டெப்பு நல்லா போடு
ஆடு ஆடு ஆடு ஆனந்தமாய் ஆடு

சரணம் - 1

நம்மோடு இயேசு இருந்தாலே போதும்
வாதை நம் கூடாரத்தை அணுகாது எப்போதும்
போடு போடு போடு ஸ்டெப்பு நல்லா போடு
ஆடு ஆடு ஆடு ஆனந்தமாய் ஆடு

சரணம் - 2

அன்பு என்றால் இயேசு, இயேசு என்றால் அன்பு
இயேசுவுக்குள் இருந்தால் எந்நாளும் இன்பம்
சொல்லி சொல்லி பாடு, பாடி பாடி ஆடு
இயேசுவே இரட்சகர் ஊரை கூட்டி கொண்டாடு

சரணம் - 3

இயேசுவின் செட்டையில் அடைக்கலம் கிடைக்குதே
கர்த்தரின் சத்தியம் கேடயம் ஆகுதே
நாடு நாடு நாடு தேவனையே நாடு
முழு உள்ளத்தோடு கர்த்தரையே பாடு

சரணம் - 4

உன்னதமானவர் மறைவில் இருக்கிறோம்
சர்வ வல்லவர் நிழலில் தங்குவோம்
ஓடு ஓடு ஓடு இயேசுவிடம் ஓடு
அவரின் பாதம் அமர்ந்து உறவாடு

9. ஒருவனாய் இருக்கையில் அழைத்தீரே

பல்லவி

ஒருவனாய் இருக்கையில் அழைத்தீரே
விசவாச வீரன் ஆபிரகாமை
அவனை அழைத்து ஆசீர்வதித்து
பெருகவே செய்தீர் என் தேவனே

கோரஸ்

தேவாதி தேவா தேவா
தேவாதி தேவா தேவா

சரணம் - 1

சீயோனுக்கு தேவன் ஆறுதல் செய்தீர்
வனாந்தரமெல்லாம் ஏதேன் ஆக்கினீர்
சந்தோஷமும், மகிழ்ச்சியும், துதி கீதமும்
என் காதில் நாதா ஒலிக்கின்றதே

சரணம் - 2

உமது ஜனங்கள் செவி கொடுப்பார்
வேதம் உம்மில் வெளிப்படுமே
உமது வசனங்கள் வெளிச்சமாய்
வைத்தீர் மக்கள் மனந்திரும்ப

1. ராஜாவே உயர்ந்தவரே

ராஜாவே உயர்ந்தவரே
ஸ்தோத்திரம் துதி உமக்கே
கர்த்தாவே பெரியவரே
ஸ்தோத்திரம் துதி உமக்கே } 2

கோரஸ்

ராஜா ராஜா இயேசு ராஜா
நாதா நாதா இயேசு நாதா } 2

சரணம் - 1

காலையிலே என் சத்தத்தை
கேட்டருள்வீர் பதில் தருவீர் } 2
உந்தன் நாமம் நேசிக்கும் என்னை
கண்ணோக்கி பார்த்திடுவீர் } 2

ராஜா ராஜா...

சரணம் - 2

சீயோனில் இருந்தெனக்கு
இரட்சிப்பை கொண்டு வருவீர் } 2
சிறுமை உள்ள எங்களுக்கெல்லாம்
அடைக்கலமானவரே } 2

ராஜா ராஜா...

சரணம் - 3

கண்மணிப்போல் காத்திடுவீர்
கரம் நீட்டி அணைத்துக் கொள்வீர் } 2
உம்மில் நான் அன்பு கூருவேன்
என் பெலனே என் தேவனே } 2

ராஜா ராஜா...

2. இருக்கிறார் இருக்கிறார்

பல்லவி

இருக்கிறார் இருக்கிறார்
இயேசு இருக்கிறார்
என்னோடு கூடவே
இயேசு இருக்கிறார்

சரணம் - 1

ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபுடன்
இருந்த இயேசு என்னோடு இன்றும் இருக்கிறார்
இருக்கிறார்...

சரணம் - 2

தண்ணீரை கடக்கும் போதும் எந்தன் இயேசுவே
என்னோடு இருந்து என்னை காத்துக் கொள்கிறார்
இருக்கிறார்...

சரணம் - 3

அக்கினியில் நடக்கும் போது எந்தன் இயேசுவே
என்னோடு இருப்பதினால் என்னைப் பற்றாதே
இருக்கிறார்...

சரணம் - 4

திடன் கொள்வேன் என்னோடு இயேசு இருப்பதால்
அவர் சித்தம் நன்றாக செய்திடுவேன்.
இருக்கிறார்...

3. வரப்போகிறார் - வரப்போகிறார்

வரப்போகிறார் - வரப்போகிறார்
இயேசு மீண்டும் வரப்போகிறார்
சீக்கிரம் வரப்போகிறார்
வானத்தில் வரப்போகிறார்

கோரஸ்

ஆசையோடு நாமும் காத்து இருப்போமே
பார்த்து இருப்போமே - எதிர்ப்
பார்த்து இருப்போமே

வரப்போகிறா...

சரணம் - 1

கறையின்றி பிழையின்றி சமாதானமாய் சந்நதியில்
தேவனிடம் சேரும்படி ஜாக்கிரதை உள்ளவராய்
ஆயத்தமாய் இருப்போம் கர்த்தரின் வருகைக்காய்

ஆசையோடு...

சரணம் - 2

பரிசுத்தம் உள்ளவராய் தேவ பக்தி நிறைந்தவராய்
இரட்சகரை வரவேற்க பூமியிலே எல்லோரும்
வானத்தை பார்த்திருப்போம் கர்த்தரின் மகிமைக்காய்

ஆசையோடு...

சரணம் - 3

எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்று நம் தேவன்
நீடிய பொறுமையுடன் கிருபையின் வாசலையே
திறந்தே வைத்துள்ளார் உடனே வாருங்களேன்.

ஆசையோடு...

4. எத்தனையோ நாமங்கள் தேவனே

எத்தனையோ நாமங்கள் தேவனே
அத்தனையும் உமக்கு பொருந்துதே
ஏகோவா தேவனே
எபிநேச பிரபுவே
இம்மானுவேலரே இயேசுவே } 2

எத்தனையோ....

சரணம் - 1

எல்ரோகி நாமம் உள்ளவர்உள்ளவர்
எங்களை காண்கின்ற தேவனாம் தேவனாம் } 2
எல் எலியோன் நாமத்தை
உடையவர் என்பது
அதியுன்னது தேவன் ஆகுமே } 2

எத்தனையோ....

சரணம் - 2

எல்ஷடாய் நாமம் என்பது என்பது
சருவ வல்லவர் ஆகுமே ஆகுமே } 2
எகோவா ஏலோகி
இஸ்ரேல் என்பது
இஸ்ரவேல் தேவனென்று விளங்குமே } 2

எத்தனையோ....

சரணம் - 3

என்றென்றும் உயிரோடு இருப்பவர் இருப்பவர்
எல் ஓலம் என்றே அழைக்கின்றோம் அழைக்கின்றோம் } 2
நமக்கென்றும் துணையாய்
நம்மோடு இருப்பதால்
எகோவா ஷம்மா என்று சொல்கிறோம் } 2

எத்தனையோ....

5. சத்திய ஆவியே

சத்திய ஆவியே
தேற்றரவாளனே
இயேசுவினாலே வானத்திலிருந்து
இறங்கி வந்தவரே - எம்மோடு இருப்பவரே } 2

கோரஸ்

ஆவியே தேவ ஆவியே
ஆவியே தூய ஆவியே
ஆவியே நேச ஆவியே
ஆவியே ஞான ஆவியே } 2

சரணம் - 1

இயேசு சொன்னதெல்லாம்
நினைவு படுத்துவீர் } 2
பரிசுத்த ஆவியே
சகலமும் போதிப்பீர் } 2

ஆவியே...

சரணம் - 2

அனுப்பி வைத்தாரே
இயேசு உம்மையே } 2
புறப்பட்டு வந்தீரே
பிதாவிலிருந்து நீர் } 2

ஆவியே...

சரணம் - 3

அன்பின் ஆவியே
ஜீவ ஊற்று நீர் } 2
அக்கினி ஆவியே
இயேசுவின் சாட்சி நீர் } 2

ஆவியே...

6. ஜெபத்தை கேட்பவரே

ஜெபத்தை கேட்பவரே
கண்ணீரை காண்பவரே } 2
தேவ் பிதாவே என்னை நோக்குமே
பரம பிதாவே என்னை தேற்றுமே } 2

ஜெபத்தை...

சரணம் - 1

உடைந்த உள்ளமுடன்
தேவரீர் உமக்கு முன்பாகவே } 2
வந்து நானும் நிற்கின்றேன்
எந்தன் காயங்கள் கட்டிடுவீர் } 2

ஜெபத்தை...

சரணம் - 2

யாரிடம் போவேன் நான்
நித்திய வசனம் உம்மிடமே } 2
உயிர்ப்பிக்கும் ஆவி உள்ளவரே
எந்தன் உயிராய் ஆனவரே } 2

ஜெபத்தை...

சரணம் - 3

உமது தேவ சமூகத்திலே
எனது சத்தம் கேட்கட்டுமே } 2
தேவனின் பாதத்தில் வைத்தேனே
எந்தன் விண்ணப்பம் கேட்டிடுவீர் } 2

ஜெபத்தை...

7. அழைக்கின்றேன் அழைக்கின்றேன்

அழைக்கின்றேன் அழைக்கின்றேன்
ஆழத்தில் இருந்து அழைக்கின்றேன்
அழைக்கின்றேன் அழைக்கின்றேன்
கர்த்தாவே உம்மை அழைக்கின்றேன்

அனுபல்லவி

உமது வார்த்தை நம்பி நானும்
இருக்கின்றேன் } 2

சரணம் - 1

விடியும் பொழுது எப்போதென்று
காத்துக் கிடக்கும் மனிதர் போல் } 2
ஏங்கிடுதே உம்மை காண
எனது ஆத்துமா } 2

அழைக்கின்றேன்

சரணம் - 2

எந்தன் நல்ல தேவனே
கிருபையும் மீட்பும் சத்தியமும் } 2
உம்மிடத்தில் மாத்திரமே
உண்டு அல்லவா } 2

அழைக்கின்றேன்

சரணம் - 3

மன்னிக்கும் மனது உமக்குண்டு
பயந்து நானும் நடக்கின்றேன் } 2
நீரே எந்தன் தெய்வமன்றோ
பாக்கியம் பாக்கியமே } 2

அழைக்கின்றேன்

8. என் நேசரே - உம்மோடு நான்

பல்லவி

என் நேசரே - உம்மோடு நான்
என்னோடு நீர் - ஒன்றாகுவோம் } 2
ஆயத்தமாய் நான் இருக்கிறேன்
மணவாளனே கண்ணோக்குவீர் } 2

கோரஸ்

வல்லவர் நல்லவர் கிருபையுள்ளவர்
என்றென்றும் என்னவரே } 2

சரணம் - 1

எந்தன் கண்கள் மூடும் உறங்கும் போது - 2
இதயம் மட்டுமே உமக்காகவே - 2
விழித்தே ரூபனே காத்திருக்குமே - 2
வல்லவர்...

சரணம் - 2

என்னை இழுத்துக் கொள்ளும் ஓடி வருவோம் - 2
உமக்குள்ளாகவே நாங்கள் யாவரும் - 2
இராஜனே என்றுமே மகிழ்ந்திருப்போம் - 2
வல்லவர்...

சரணம் - 3

மதுரமான நாதர் எந்தன் நேசர் - 2
அழகு உள்ளவர் இன்பமானவர் - 2
உமது கைகள் என்னை வந்து
அணைத்துக் கொள்ளட்டும் } 2
வல்லவர்...

9. உயிருள்ள தேவன் இயேசுவே

உயிருள்ள தேவன் இயேசுவே
உலகம் எங்கும் சொல்லுவேன்
நம்மோடு இருந்து நடத்துகின்றாரே
எந்நாளும் இயேசுவே } 2

அழைக்கிறார் இயேசு வந்திடுவீரே
உலகத்தின் மாந்தர்களே } 2

சரணம் - 1

ஜீவ அப்பம் நமக்கு அவர்தானே
ஜீவ தண்ணீர் அருந்த தருகின்றார் } 2
இயேசுவே நமக்கு வாசலானார்
நல்ல மேய்ப்பராய் இருக்கின்றார்

அழைக்கிறார்

சரணம் - 2

உலகத்தின் தோற்றம் முதற்கொண்டு
அடிக்கப்பட்டு வந்த ஆடானார்
கர்த்தரின் தூய ரத்தத்தினால்
நாமெல்லாம் சுத்தம் ஆக்கப்பட்டோம்

அழைக்கிறார்

சரணம் - 3

தேவ ராஜ்ஜியம் இயேசு கொண்டு வந்தார்
நம்மை ஆளுகை செய்கின்றார்
அவரை நோக்கி சென்றிடுவோம்
மறு ரூபம் ஆகி சேர்ந்திடுவோம்

அழைக்கிறார்

சுகஜீவ கீதங்கள்

Vol - 26

1. கரம் தட்டி பாடுவோம்

பல்லவி

கரம் தட்டி பாடுவோம் கரம் தட்டி பாடுவோம் } 2
கர்த்தரின் செய்கைகளைக் பாடுவோம் - 2
ஸ்தோத்திர பலிகள் செலுத்தியே நாமும் } 2
பொருத்தனை செய்திடுவோம் - 2

அனுபல்லவி

துதியுங்கள் தேவனையே என்றுமே உள்ளது அவர் கிருபை - 2

சரணம் 1

யோசனையில் பெரியவரே செயல்களில் வல்லரே! - 2
கர்த்தாவின் கண்களெல்லாம் மனிதரின் பலிகளிலே - 2
ஆயிரம் தலைமுறை கிருபை செய்வார் - 2

துதியுங்கள்.....

சரணம் 2

மாம்சமான யாவருக்கும் தேவனே கர்த்தரானார் - 2
அவராலே கூடாத அதிசயம் ஏதும் உண்டோ - 2
ஆயிரம் தலைமுறை கிருபை செய்வார் - 2

துதியுங்கள்.....

சரணம் 3

நன்மைகளை செய்கின்றார் ஆரோக்கியம் தருகின்றார் - 2
சமாதான தேவன் அவர் சத்திய நாதன் அவர் - 2
ஆயிரம் தலைமுறை கிருபை செய்வார் - 2

துதியுங்கள்.....

2. வாசம் வீசிடும்

பல்லவி

வாசம் வீசிடும் சாரோனின் ரோஜாவே
உமதன்பை ருசித்திட என் உள்ளம் ஏங்குதே
என் உள்ளம் ஏங்குதே } 2

ராஜா இயேசு ராஜா ரோஜா நேச ரோஜா - 2

சரணம் 1

ஒரு வார்த்தை சொல்லும் போதும் என்ஜீவன்
பிழைக்குமே
மன்னாதி மன்னன் நீரே எங்கே நீர் தோட்டமானீர் } 2
உறவாட வேண்டும் உம்மோடு
கதிமோட்சம் எனக்கு தரவேண்டும் } 2

ராஜா...

வாசம் வீசிடும் சாரோனின் ரோஜாவே

சரணம் 2

எனக்காக கட்டி வைத்தீர் பரலோக மாளிகை
அங்கே நான் வாழ வேண்டும்
உம்மோடு சேர்ந்து என்றும் } 2
இறங்கியே மீண்டும் வருவீர்
எனை அங்கு அழைத்துச் செல்லவே } 2

ராஜா...

வாசம் வீசிடும் சாரோனின் ரோஜாவே

3. வானமும் பூமி

வானமும் பூமி இயற்கையெல்லாம் படைத்தார் நம் இயேசு - 2
ஆண்டவர் படைப்பு அவரின் கையில் அடங்கியிருக்கிறதே - 2
சர்வ சிருஷ்டி நாதனே நாதனே } 2
எங்கள் இயேசு தேவனே தேவனே

சரணம் 1

செங்கடல் இரண்டாய் பிளக்குதே } 2
யோர்தான் பின்னிட்டு ஓடுதே
மலைகள் குலுங்கி குன்றுகள் அதிர்ந்து } 2
தேவனைக் கண்டு நடுங்குதே

சர்வ சிருஷ்டி....

சரணம் 2

பாறை Fountain ஆகுதே } 2
வேண்டிய தண்ணீர் கிடைக்குதே
வானத்தில் இருந்து மன்னா இறங்கி } 2
வயிற்றுப் பசியை போக்குதே

சர்வ சிருஷ்டி.....

சரணம் 3

தேவனே உம்மிடம் ஜெபிக்கின்றோம் } 2
எங்கள் விண்ணப்பம் கேட்கின்றீர்
வானதூதர் அனுப்பிக்கொடுத்து } 2
அற்புதம் எனக்கு செய்கின்றீர்

சர்வ சிருஷ்டி.....

4. நாட்டு நடப்ப

பல்லவி

நாட்டு நடப்ப பார்க்கும் போது
மனசு குழம்பி தவிக்குது
இயேசுவிடம் வந்தால் தானே
விடிவு நமக்கு கிடைக்குது } 2

அனுபல்லவி

லேட்டு பண்ணாதே திரும்பி பார்க்காதே
இயேசுவை விட்டா வேறுவழி நமக்கு இல்லையே } 2

சரணம் 1

உனக்கு என்ன வேண்டும் என்று இயேசு கேட்கிறார்
வேண்டிடுவாய் அதை உனக்கு கர்த்தர் செய்வாரே } 2

லேட்டு பண்ணாதே...

சரணம் 2

பேராசை பணத்தாசை விலகி நீ வருவாய்
பரலோக செல்வங்களை இயேசுவே தருவார் } 2

லேட்டு பண்ணாதே...

சரணம் 3

வேதனையில் வெந்து நீ நொந்தது போதும்
ஆனந்த வாழ்வுக்காக அழைக்கிறார் இயேசு } 2

லேட்டு பண்ணாதே...

இயேசுவை விட்டா வேறுவழி நமக்கு இல்லையே - 3

5. சாத்தானே சாத்தானே உனக்கு இடமில்லை

சாத்தானே சாத்தானே உனக்கு இடமில்லை
இங்கு உனக்கு இடமில்லை
உனக்கு இடமில்லை - இங்கு உனக்கு இடமில்லை
என் இயேசு ராஜா இங்கே இருக்கிறார்
என் இயேசு ராஜா என்னோடிருக்கிறார்
உனக்கு இடமில்லை - இங்கே உனக்கு இடமில்லை!

உலகம் முழுவதுமே ஆட்டி படைக்கின்றாய் } 2
வஞ்சக வலையில் மனிதர்களை மாட்ட வைக்கின்றாய் }
உன்னை தூக்கி எறியவே இயேசு வந்தாரே - 2
சாத்தானே...

பொய்யின் தகப்பனே நித்திய பொய்யனே } 2
திருடவே கொல்லவே அழிக்க வந்தவனே }
உன்னையே ஒழிக்கவே இயேசு வந்தாரே - 2
சாத்தானே...

இயேசுவின் இரத்தத்தினால் எங்களை } 2
உனக்கு இங்கு வேலையில்லை ஓடி போய்விடு }
அந்தகார இருளை போக்க இயேசு வந்தாரே - 2
சாத்தானே...

6. பறவைகளுக்கு கூடு உண்டு

பல்லவி

பறவைகளுக்கு கூடு உண்டு
நரிகளுக்கு குழியும் உண்டு
இந்த உலகிலே என் இயேசுவே
தலைசாய்க்க உமக்கு இடமில்லையே
இளைப்பாறவே நிழல் இல்லை } 2

சரணம் 1

பகலெல்லாம் ஊழியம் செய்தீரைய்யா
இரவெல்லாம் பிதாவிடம் ஜெபித்தீரைய்யா } 2
பரலோகம் நாங்கள் அடைந்திடவே - 2
ஓடாக தேய்ந்து உழைத்தீரைய்யா - 2

பறவைகளுக்கு...

சரணம் 2

பரிசேயர் சதுசேயர் முள்ளாகவே
எந்நாளும் உம்மை வதைத்தார்களே } 2
நிந்தனைக்கு நடுவே பாவிகளை - 2
நேசித்து நற்செய்தி தந்தீரைய்யா - 2

பறவைகளுக்கு...

சரணம் 3

உலகினில் உதித்த நாள் முதலாய்
பாடுகளின் நடுவில் நடந்தீரைய்யா } 2
சிலுவை மரணம் உமதாக்கினீர் - 2
நிலையான வாழ்வை எமதாக்கினீர் - 2

பறவைகளுக்கு ...

7. என் பேச்செல்லாம் என் மூச்செல்லாம்

பல்லவி

என் பேச்செல்லாம் என் மூச்செல்லாம்
இயேசு தானே என் இயேசு தானே } 2
என் உயிரெல்லாம் என் உடலெல்லாம்
இயேசு தானே இயேசு தானே } 2

சரணம் 1

என் நாடி நரம்பெல்லாம் இயேசு தானே
என் உணர்விலும் அணுவிலும் இயேசு தானே } 2
ஓடுகின்ற இரத்தமெல்லாம் இயேசு தானே
என் ஆத்துமாவின் கீதமெல்லாம் இயேசு தானே } 2

என்...

சரணம் 2

காலையிலும் மாலையிலும் இயேசு தானே
பகலும் இரவிலும் இயேசு தானே } 2
கனவிலும் நனவிலும் இயேசு தானே
ஆடலிலும் பாடலிலும் இயேசு தானே } 2

என்...

சரணம் 3

வார்த்தையின் தேவன் எனக்குள்ளே
வாழ்வு தரும் வசனங்கள் தந்தாரே } 2
என்னுடைய சிந்தையெல்லாம் இயேசு தானே
இதயத்தின் துடிப்பெல்லாம் இயேசு தானே } 2

என்...

8. பரலோக ராஜ்ஜியம் கொண்டு வந்தாரே

பரலோக ராஜ்ஜியம் கொண்டு வந்தாரே } 2
தேவனின் மைந்தன் கிறிஸ்து இயேசுவே
நிறைவுள்ளதாய் இருக்கின்றதே } 2
இன்பமுள்ளதாய் இருக்கின்றதே

சிறுமந்தையே ராஜ்ஜியத்தையே } 2
நம் பிதாவே உனக்கு தருகின்றார்

முழுசுகம் உனக்கு கிடைத்திடுமே } 2
நூறு சதவீதம் பலன் தருமே
பிசாசின் கிரியை அழிக்கப்பட்டு } 2
தேவனின் ராஜ்ஜியம் நிலைத்திடுமே

சிறுமந்தையே.....

தேவனின் ராஜ்ஜியம் புசிப்பதல்ல } 2
குடித்து சும்மா கிடப்பதல்ல
சமாதானம் நீதி நிறைந்ததுவே } 2
ஆவியின் சந்தோஷம் பெருகிடுமே

சிறுமந்தையே.....

உலகம் எங்கும் சொல்லப்படுமே } 2
சகல ஜாதி மக்களிடமே
ராஜியத்தின் சுவிஷேசம் சாட்சியாக } 2
அப்போது தானே முடிவு வரும்

சிறுமந்தையே...

9. தேவ மைந்தனே உமது பாதத்தில்

தேவ மைந்தனே உமது பாதத்தில் } 2
வடியும் இரத்தமே என்னை கழுவட்டும்
இந்த நாள்வரை எந்தன் உள்ளத்தின்
பாவக்கறைகள் நீங்கி போகட்டும்

கல்வாரி சிலுவையே எனது நெஞ்சையே - 2
குற்றங்கள் உணர வைத்தென்னை மாற்றி } 2
உம்மண்டை சேர்க்கின்றதே

தேவ மைந்தனே...

பேதுருவை நீர் பார்த்த பார்வை } 2
எனக்குள்ளும் பாய்கின்றதே
அவனைப் போல் நானும் மனம் கசந்து } 2
இங்கே அழுகின்றேன் உம் பாதத்தில்

தேவ மைந்தனே...

மனமாற்றம் அடைகின்றேன் நாதா } 2
புது சிருஷ்டி ஆக்கிடுவீரே
மாயை உலகில் இருந்தென்னை } 2
விடுவித்து பரிசுத்தம் அடையசெய்வீர்

தேவ மைந்தனே...

சுகஜீவ கீதங்கள்

Vol - 27

1. புதுப்பாட்டை நானும்

புதுப்பாட்டை நானும் கர்த்தருக்கு பாடுவேன்
அவர் செய்த அதிசயம் எடுத்து நான் சொல்லுவேன் }2

வலக்கரத்தாலே ஓங்கிய புயத்தால்
இரட்சிப்பை தேவன் உண்டாக்கினார் }2

புதுப்பாட்டை...

பூமியின் குடிகளே நீங்கள் எல்லோரும்
ஆனந்தமாக ஆர்ப்பரியுங்கள் }2

புதுப்பாட்டை...

சுரமண்டலத்தால் கீர்த்தனம் செய்வேன்
கேட்கட்டும் எங்கும் கீதத்தின் சத்தமே }2

புதுப்பாட்டை...

ஆறுகள் எல்லாம் கர்த்தருக்கு முன்பாய்
கைதட்டி பாடுமே கம்பீரமாகவே }2

புதுப்பாட்டை...

2. என் தேவனே உம்முடைய

என் தேவனே உம்முடைய வார்த்தைகளை
நான் கேட்பேன் }2
அதன்படி நானும் என்றும் நடந்திடுவேன் - 2
என் தேவனே...

எதை உண்பேன் எதை குடிப்பேன் எதை
நானும் உடுத்திடுவேன்
இதுபோல் கவலைகள் படமாட்டேன் எனது
தேவைகள் நீர் அறிவீர்
என் தேவனே...

பரலோகத்தில் பொக்கிஷங்கள் சேர்த்தே
நான் வைப்பேனே
பூச்சியும் துருவும் கெடுக்காதே திருடர்
திருடவும் மாட்டாரே
என் தேவனே...

என்னுடைய பெலவீனங்கள் ஏற்றுக்கொண்டீர்
பெலன் அடைந்தேன்
தேவன் கரத்தை பற்றி கொள்வேன்
ஜீவனின் பாதையில் சென்றிடுவேன்.
என் தேவனே...

3. முத்திரை மோதிரமாக

முத்திரை மோதிரமாக என்னை
வைத்துக் கொள்வீரே
எந்தன் தேவனே எந்தன் தேவனே } 2

கர்த்தர் கையில் அலங்கார கீரிடம் ஆனேனே
தேவனின் கரத்தில் ராஜமுடியாயிருப்பேனே } 2
புதிய பெயரை தந்தார் கர்த்தர் எனக்கு தந்தார்
எந்தன் மீதிலே பிரியமாகவே தேவன் இருக்கின்றார்

கர்த்தர் எனக்கு நித்திய வெளிச்சமானாரே
தேவனே எனக்கு மகிமையாக இருக்கின்றார் } 2
தூய ஆவி வந்தார் தேவ வார்த்தை தந்தார்
எந்தன் மீதிலே பிரியமாகவே தேவன் இருக்கின்றார்

பனியைபோல கர்த்தர் என்னில் வருகிறார்
லீலிபுஷ்பம் போல நானும் மலருவேன் } 2
திராட்சை செடியாய் செழிப்பேன் கர்த்தர் வழியில் நடப்பேன்
எந்தன் மீதிலே பிரியமாகவே தேவன் இருக்கின்றார்

முத்திரை மோதிரமாக.....

4. இயேசுவே இயேசுவே

இயேசுவே இயேசுவே நன்றி இயேசுவே } 2
காலமெல்லாம் உமக்கே தான் நன்றி இயேசுவே

நன்றிபலி நன்றிபலி செலுத்திடுவோம்
நம்மை தேடிவந்த இயேசுவுக்கே

நம்பி வந்தேன் உம்மிடமே உதவிகள் செய்தீரே - 2
செய்த நன்றி ஒரு போதும் மறக்கமாட்டேனே - 2

நன்றிபலி...

எனக்கு முன்பாய் வைத்தீரே திறந்த வாசலையே - 2
ஒருபோதும் ஒருவனுமே பூட்ட முடியாதே - 2

நன்றி பலி...

உயிர்த்தெழுந்த வல்லமையால் என்னை விடுவித்தீர் - 2
சுகம் தந்து ஜெயம் தந்து காத்து நடத்துகிறீர் - 2

நன்றி பலி...

5. என்வாழ்விலே

என்வாழ்விலே இன்பதென்றலை
வீசசெய்தீரே என் இயேசுவே } 2

துன்பம் யாவுமே தூரமாக்கினீர்
என்ன ஆனந்தம் தந்தீரைய்யா } 2

எந்தன் கன்மலை ஆன தேவனே
நான் நம்புவது உம்மால் வந்ததைய்யா } 2
துன்பம் யாவுமே தூரமாக்கினீர்
என்ன ஆனந்தம் தந்தீரைய்யா

என்வாழ்விலே...

உமது செயல்களை நினைவுகூருவேன்
எனது கீதத்தின் சத்தம் கேட்டீரே } 2
துன்பம் யாவுமே தூரமாக்கினீர்
என்ன ஆனந்தம் தந்தீரைய்யா

என்வாழ்விலே...

உமது வேதமே எனக்கு ஆறுதல்
காலம் முழுவதும் காத்துக் கொள்ளுவேன் } 2
துன்பம் யாவுமே தூரமாக்கினீர்
என்ன ஆனந்தம் தந்தீரைய்யா

என்வாழ்விலே...

விடியற்காலமே உம்மை தேடுகிறேன்
எனது மாம்சமே உம்மை வாஞ்சிக்குதே } 2
துன்பம் யாவுமே தூரமாக்கினீர்
என்ன ஆனந்தம் தந்தீரைய்யா

என்வாழ்விலே...

எனது படுக்கையில் உம்மை நினைக்கிறேன்
இரவு முழுவதும் உமது தியானமே } 2
துன்பம் யாவுமே தூரமாக்கினீர்
என்ன ஆனந்தம் தந்தீரைய்யா

என்வாழ்விலே...

6. நடக்கின்றார் இயேசு

நடக்கின்றார் இயேசு நடக்கின்றார் - 2
அன்பின் தெய்வமாய் தியாக செம்மலாய் } 2
இயேசு நடக்கின்றார்

சமாரிய கிராமத்திலே கிணற்றின் ஓரத்திலே
உள்ளூர் பெண்ணிடத்தில் நற்செய்தி சொன்னாரே
ஜாதி பேதத்தை உடைத்தாரே

சத்திய சாட்சியாக பூமியில் வந்தாரே - 2
இயேசுவின் ராஜ்ஜியம் அரசரும் அறியவில்லை
உலகிற்கு புரியவில்லை
நடக்கின்றார் இயேசு நடக்கின்றார்

கொல்கதா மலை நோக்கி இயேசு வந்தாரே - 2
சுமந்த சிலுவையிலே இயேசுவை அறைந்தாரே
மரணத்தை வென்றாரே
நடக்கின்றார் இயேசு.....

7. எங்கே நீ போகின்றாய்

எங்கே நீ போகின்றாய் நண்பனே நீ பதில் சொல்லுவாய் - 2
மேலானதை நாடிடுவாய் வேதம் சொல்வதை மறவாதே
எங்கே நீ போகின்றாய் நண்பனே நீ பதில் சொல்லுவாய்

இயேசுவையே பின் செல்ல வாலிபரே எழுந்திடுவீர் - 2

நீ தானே நல்ல மாடல் வார்த்தை ஒழுக்கத்திலே - 2
பிறரிடம் நீ காட்டும் அன்பினிலே கிறிஸ்துவின் விசுவாச வீரனே - 2
இயேசுவையே.....

முயற்சி உனக்கு இருந்தாலே கர்த்தர் பலனை தருவாரே - 2
இதனை நீயே சிந்தித்து பார்ப்பாய் வெற்றியின் சிகரம் அடைந்திடுவாய் - 2
இயேசுவையே...

உனது சிலுவை சுமந்திடுவாய் உலகத்தை பின்னே தள்ளிடுவாய் - 2
இயேசு உனக்கு தந்திடுவாரே நூறு மடங்காய் எல்லாமே - 2
இயேசுவையே.....

8. பாரபட்சம் இல்லாத

பாரபட்சம் இல்லாத எந்தன் இயேசுவே } 2
உமது பார்வை என் மீதுபடியட்டுமே
யார் துடைப்பார் எந்தன் கண்ணில் வழியும் கண்ணீரை } 2
உமது கரம் என்னை நோக்கி வர வேண்டுமே

அமைதியின்றி எந்நாட்கள் ஓடும்போதிலே } 2
உமது கரம் எந்நெஞ்சை வருட வேண்டுமே
ஒரு வார்த்தை சொல்லிடுவீர் அலைகள் அடங்குமே } 2
இயேசுவே வாருமே எல்லாம் மாறுமே

எந்தபக்கம் போவதென்று எனக்கு தெரியல } 2
எனக்கு ஒரு தரிசனம் தாரும் இயேசுவே
உலகத்தின் பின்னே போக விரும்பல } 2
இயேசுவே வாருமே எல்லாம் மாறுமே

உமது அன்பு முகத்தை எனக்கு காட்டுமே } 2
இயேசுவே உம்மை நோக்கி ஓடி வருவேன்
உமக்கே ஊழியம் செய்ய வருவேன் } 2
இயேசுவே வாருமே எல்லாம் மாறுமே

பாரபட்சம் இல்லாத.....

9. இயேசுவின் இரத்தத்தில்

இயேசுவின் இரத்தத்தில் ஜெயம் உண்டு
இயேசுவின் இரத்தத்தில் சுகம் உண்டு } 2
இயேசுவின் இரத்தமே வல்லமையே
இயேசுவின் இரத்தத்தில் விடுதலையே } 2
இயேசுவின் இரத்தமே கோட்டையே
அதுவே நமக்கு அடைக்கலமே } 2

இயேசுவின் இரத்தம் கழுவிடுமே
நமது பாவங்கள் முழுவதுமே } 2
சாத்தனின் கோட்டையை உடைத்திடுமே
தீமையின் நுகத்தை முறித்திடுமே } 2

இயேசுவின் இரத்தமே கோட்டையே
அதுவே நமக்கு அடைக்கலமே

நோய்கள் எல்லாம் தீர்ந்திடுமே
இயேசுவின் இரத்தம் தெளித்தாலே } 2
வியாதிகள் சொஸ்தம் ஆகிடுமே
இயேசுவின் இரத்தம் பூசினாலே } 2

இயேசுவின் இரத்தமே...

இயேசுவின் இரத்தம் மீட்பாகும்
நம்மை அதுவே பாதுகாக்கும் } 2
சிலுவையில் சிந்தின இயேசு இரத்தம்
தேவனின் இராஜியத்தில் நம்மை சேர்க்கும் } 2

இயேசுவின் இரத்தத்தில்...

Vol - 28

1. என் தேவனே மனப்பூர்வமாய்

என் தேவனே மனப்பூர்வமாய் எனைத்தந்தேனே } 2
ராஜாக்களே குடிமக்களே இதை கேட்பீரே

எனது இதயம் நாளும் கர்த்தரையே அதை தேடும் - 2
ஸ்தோத்திரங்கள் செலுத்தியே எனது உதடுகள் பாடும் - 2
என் தேவனே...

கர்த்தர் நடந்து வருகையிலே இந்த பூமி நடுங்குதே - 2
வானமே திறக்குதே மேகம் மழையை பொழியுதே -2
என் தேவனே...

ஆளுகை எனக்கு தந்தீர் எந்தன் வல்லமை தேவனே - 2
கீர்த்தனங்கள் பாடுவேன் சகல ஜனமே வீழ்த்தியே - 2
என் தேவனே...

2. தேவனின் தோட்டத்தில் பூத்திருக்குதே

தேவனின் தோட்டத்தில் பூத்திருக்குதே
எனக்கென்று வாடாத பூ ஒன்று
ஜீவ வாசனை நிறைந்த பூவது
இயேசு எனக்கு தந்தார் இரட்சிப்பு } 2

பரலோகத்தின் இரட்சிப்பு Free ஆகவே கிடைக்கின்றதே - 2

கிருபை என்னும் நிலத்தினிலே
விசுவாசமாகிய செடியினிலே
பூ பூத்ததே மலர் மலர்ந்ததே
இரட்சிப்பென்னும் வாசம் வீசியதே } 2

பரலோகத்தின்...

இயேசுவை எதிர்த்தான் சவுல் என்பவன்
ஒளியாக அவன் மேல் வந்தாரே
இரட்சித்தாரே அழைத்தாரே
பவுலாக மாறி ஊழியம் செய்தான் -2 } 2

பரலோகத்தின்...

பூமியில் எங்கும் உள்ளவரே
இயேசுவை நோக்கி பாருங்களேன்
இரட்சிப்பையே பெற்றுக் கொள்வீர்
தேவனை கிட்டி சேருங்களேன் -2 } 2

பரலோகத்தின்...

3. வாசப்படி வந்து நின்றார்

வாசப்படி வந்து நின்றார்
மெல்ல கதவை தட்டி நின்றார்
திறந்தேன் கதவை இயேசு வந்து நின்றார்
இயேசு உள்ளே வந்தார் } 2

எனக்குள் இயேசு இருப்பதால்
எல்லாம் எனக்கு இருக்குதே } 2
இயேசு இல்லா வாழ்க்கையிலே
எல்லாம் இருந்தும் ஒன்றுமில்லை } 2

வாசப்படி...

இயேசுதானே நமக்கெல்லாம்
நல்ல செய்தி கொண்டுவந்தார் } 2
சமாதானம் என்பதை
சுவிசேஷம் ஆக்கினார் } 2

வாசப்படி...

எந்தன் வீட்டை இயேசு வந்து
ஜெபவீடாய் மாற்றினார் } 2
என்னை ஆளும் தேவனை
எந்த நாளும் போற்றுவேன் } 2

வாசப்படி...

4. இயேசுவை நானே நேசிக்கிறேனே

இயேசுவை நானே நேசிக்கிறேனே
கர்த்தர் இயேசுவை நேசிக்கிறேனே
நான் அவரை அறிய முன்பாக என்மேல்
நேசம் அவரே வைத்தாரே } 2

அன்பாகவே நம் தேவனே
என்றென்றுமே இருக்கின்றாரே } 2

தாவீதையே தன் உயிரைப்போல்
யோனத்தான் நேசித்தானே } 2
அதை விடவும் மேலாகவே நேசித்தார்
மனுக்குலத்தை நம் இயேசுவே } 2

தம்முடைய சீடரெல்லாம்
தம்முடனே பரலோகத்தில் } 2
இருந்திடவே பிதாவிடமே
வேண்டினார் மனதுருகி நம் இயேசுவே } 2

கிருபாசனம் அருகே நான்
சென்றிடுவேன் சேர்ந்திடுவேன் } 2
இரக்கத்தையே பெற்றேன் நான்
இயேசுவின் மாறா கிருபையினால் } 2

இயேசுவை நானே.....

5. தேவ சபைக்கு போவோம்

தேவ சபைக்கு போவோம் என்று சொன்னார்கள்
கேட்டபோது எனது உள்ளம் மகிழ்ந்ததே } 2
எருசலேம் வாசல்களில் எந்தன் கால்கள்
இங்கே வந்து நிற்க காண்கிறேன் } 2

வருவீர் தேவ சபைக்கு -2

தேவனின் ஜனங்களே இங்கே வாருங்கள்
கர்த்தரின் நாமம் துதிக்க வாருங்கள் } 2
தாவீதின் வம்சத்தின் சிங்காசனங்களே
அங்கே தான் இருக்கின்றது } 2

வருவீர் தேவ சபைக்கு..

வேண்டிக்கொள்வீர் எல்லோருமே
எருசலேம் சமாதானம் பெருகட்டுமே } 2
உங்களை என்னை நேசிக்கும் யாவரும்
சுகமாக இருக்கட்டுமே } 2

வருவீர் தேவ சபைக்கு..

உங்கள் வீடென்னும் அரண்மனையில்
சமாதானம் சுகமெல்லாம் நிறையட்டுமே -2 } 2
உங்கள் வாழ்வினில் நன்மைகள் உண்டாக
தேவ ஆலயம் வந்திடுவீர் -2 } 2

வருவீர் தேவ சபைக்கு..

தேவ சபைக்கு போவோம் என்று சொன்னார்கள்
கேட்டபோது எனது உள்ளம் மகிழ்ந்ததே

6. கீதம் ஆனவரே

கீதம் ஆனவரே சங்கீதமானவரே -2
நாதா இயேசு நாதா -2

கீதம் ஆனவரே...

ஆதியும் நீர் தானே அந்தமும் நீர்தானே -2
சொந்தங்கள் தேடி வந்தீரே -2
பாரினில் வந்தீரே
பாரினில் வந்தீரே

கீதம் ஆனவரே...

ஜோதிகளின் பிதாவானீர் பாதைகளின் தீபமானீர் -2
பெரிய வெளிச்சம் கண்டோமே -2
மகிழ்ச்சி பெருக செய்தீரே
மகிழ்ச்சி பெருக செய்தீரே

கீதம் ஆனவரே...

ஜாதிகளை திரளாக்கினீர் பூமியெங்கும் நிரம்பினாரே -2
நீதியை நிலையாக்கினீர் -2
உமது நாமம் அதிசயமே
உமது நாமம் அதிசயமே

கீதம் ஆனவரே...

7. வாலிப வயதில் நினைப்பாய்

வாலிப வயதில் நினைப்பாய்
சிருஷ்டிகர் இயேசு நேசரை } 2
இளவயது மாறுமுன்னே
உன்மேல் விழுந்த கடமையது } 2

வாலிப வயதில்.....

உனது இதயத்தின் சஞ்சலங்கள் உடனே
நீங்கி போகட்டுமே - 2 } 2
உனது உடலின் தீங்குகளெல்லாம் அகன்று
போக செய்திடுவார் - 2 } 2

வாலிப வயதில்.....

உன்னிடம் இருக்கும் ஆகாரம் தண்ணீர்கள்
மேலே போட்டிடுவாய் - 2 } 2
நாட்கள் அநேகம் ஆன பின்னாலே
அதனின் பலனை காண்பாயே - 2 } 2

வாலிப வயதில்.....

விருந்து ஆயத்தம் செய்யப்படும்
சந்தோஷமாக இருப்பதற்கு - 2 } 2
களிப்பை தருமே திராட்சை ரசமே
பணமோ உனக்கு அவசியமே - 2 } 2

வாலிப வயதில்.....

8. சுற்றி வந்தார் நம் இயேசு

சுற்றி வந்தார் நம் இயேசு
கிராமங்கள் பட்டிணங்கள் } 2
ஆலயம் சென்றார் உபதேசம் செய்தார்
ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் எங்கும் சொன்னார்

சுற்றி வந்தார்...

ஜனங்களின் மேலிருந்த வியாதிகள் நோய்களையே - 2
நீக்கி விட்டாரே சுகம் தந்தாரே மனதுருகும் இயேசு - 2

சுற்றி வந்தார்...

தேவனின் ஆவியானவர் கர்த்தரின் மேல் அமர்ந்தார் - 2
கட்டுண்டோரை விடுதலையாக்க இயேசு வந்தாரே - 2

சுற்றி வந்தார்...

துயரப்படுகின்ற மனிதர் யாவருக்கும் - 2
ஆறுதல் தந்து நீதியை செய்ய இயேசு வந்தாரே - 2

சுற்றி வந்தார்...

9. இதயத்திலிருந்து

இதயத்திலிருந்து உதடுகள் வழியாய் } 2
இயேசுவே உமக்கு நன்றி ஐயா
சமாதானம் தந்தீர் சந்தோஷம் தந்தீர் } 2
சகல நன்மைகள் எனக்கு செய்தீர்

நன்றி நன்றி நன்றி நன்றி ஐயா } 2
ஸ்தோத்திரம் உமக்கே இயேசய்யா

தனிமையில் இருந்தேன் தவித்திருந்தேன் } 2
தேடியே வந்து துணையானீர்
அன்பின் கனியை எனக்கு தந்தீர் } 2
கிருபையின் கரத்தால் அரவணைத்தீர்
நன்றி நன்றி.....

நோய்களை தீர்த்தீர் சுகம் தந்தீர் } 2
நாயகனே உமக்கு நன்றி ஐயா
கஷ்டங்கள் தீர்த்தீர் செழிப்பை தந்தீர் } 2
இயேசுவே உமக்கு நன்றி ஐயா
நன்றி நன்றி.....

விடுதலை தந்தீர் வினை தீர்த்தீர் } 2
தீமைகள் எல்லாம் அகற்றி விட்டீர்
உமது நாமம் சொன்னால் போதும் } 2
கேட்பவை எல்லாம் கிடைக்கின்றதே
நன்றி நன்றி.....

Vol - 29

1. ஆதியில் வார்த்தை இருந்தது

ஆதியிலே வார்த்தை இருந்தது
அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது
தேவனிடத்தில் இருந்த வார்த்தை
தேவனாக இருந்தது

ஜீவன் அவரில் இருந்தது
ஒளியும் ஆனது
அந்த ஒளி மனுக்குலத்தின்
வெளிச்சமானது

ஆதியிலே...

வார்த்தை சரீரமானது
கிறிஸ்து உருவிலே
கிருபையின் நாதனாக
சத்திய வடிவமாய்

ஆதியிலே...

நமக்குள் வாசம் செய்கிறார்
மகிமை காண்கிறோம்
இயேசுவின் மூலமாய்
பிதாவை காண்கிறோம்.

ஆதியிலே...

2. ஆவியின் கனியை

ஆவியின் கனியை தருகின்ற தேவன்
இயேசுவே நீர் தானே
அன்பின் வழியில் எங்களை நடத்தும்
நேசர் நீர்தானே

இயேசுவே வழி, இயேசுவே சத்தியம்
இயேசுவே ஜீவன் ஆனவரே

அன்பு, சந்தோஷம், சமாதானம்,
பொறுமை, தயவு நற்குணமே
விசுவாசம், இச்சையடக்கம், சாந்தம்
இயேசுவால் பெற்றோமே

ஆவியின்...

மரியாளின் வயிற்றில் பிறந்தீரே
இயேசுவே பூமியில் உதித்தீரே
ஏற்றக்காலம் வந்தவுடன்
தேவன் உம்மை அனுப்பினாரே

ஆவியின்...

இயேசுவின் சிலுவையை குறித்தே
மேன்மை நாமும் பாராட்டுவோம்
கிறிஸ்துவின் அச்சு அடையாளம்
நமது சரீரத்தில் தரிப்போமே

ஆவியின்...

3. கீர்த்தியும் புகழ்ச்சியுமாகவே

கீர்த்தியும் புகழ்ச்சியுமாகவே
கர்த்தர் நம்மை வைப்பாரே
பூமியின் ஜனங்கள் யாவரிலும்
கர்த்தர் நம்மை தெரிந்தாரே

கீர்த்தியும்...

சமாதானத்தை தேவன்
கட்டளை இடுவேன் என்கிறார்
முந்தின ஆலய மகிமையிலும்
பிந்தின ஆலயம் மகிமையே
பெரிதாக இருக்கும் என்று
சேனையின் கர்த்தர் சொல்கிறார்

கீர்த்தியும்...

கர்த்தரின் வார்த்தை வருகின்றதே
திடன் கொள் என்று கேட்கின்றதே
தேசத்தின் ஜனங்கள் யாவருமே
வேலையை நடத்துங்கள் என்கிறார்
இருக்கிறேன் உங்களுடன்
கர்த்தர் நமக்கு சொல்கிறார்

கீர்த்தியும்...

வல்லமையுள்ள தேவன்
நமக்கு நடுவில் இருக்கிறார்
பயப்படாதே என்று நம்மை
பார்த்து அவரும் சொல்கிறார்
அன்பின் நிமித்தம் கர்த்தர் நம்மில்
சந்தோஷமாக மகிழ்கிறார்

கீர்த்தியும்...

4. மாட்சிமை நாமமே

மாட்சிமை நாமமே உலகெங்கும் உடையவர்
இரக்கமும் உண்மையும் - தேவ
அன்புமே உள்ளவர்

அனுபல்லவி

மகிமைக்கு இயேசு பாத்திரரே
நமக்கெல்லாம் உதவி செய்பவரே
இயேசுவின் அன்புதான் - நம்
வாழ்வின் ஆதாரமே

ஜீவியகாலம் முழுவதும் - தேவ
நம்பிக்கை அவரில் வைத்தேனே
விடுதலை நாயகன் தோன்றினார்
இரட்சிப்பின் தேவன் இயேசுவே

பரிசுத்த ஸ்தலத்தில் என்னையே – உடன்
அழைக்கவே மீட்பர் வந்தாரே
புதிய மார்க்கம் கண்டேனே
நித்திய ஜீவன் அடைந்தேனே

வருகிறார் இயேசு வருகிறார் – அவர்
தாமதம் செய்யவே மாட்டாரே
விசுவாசம் எனக்குள் இருப்பதால்
பிழைப்பேன் நானும் தேவனால்

5. என் ஜீவனின் பெலனானவர்

என் ஜீவனின் பெலனானவர்
என் தேவனே ஒளியானவர்
பாடிடுவேன் சங்கீதம்
தேவனையே துதிப்பேனே

என் ஜீவனின்...

அனுப்பினீரே ஒத்தாசையை
பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தெனக்கு
ஆதரிப்பீர் எந்நாளுமே

என் ஜீவனின்...

என் மனதின் விருப்பங்களை
நயவுடன் கர்த்தாவே நிறைவேற்றினீர்
ஆலோசனை தந்தீரைய்யா

என் ஜீவனின்...

வானத்திலிருந்து கேட்பீரே
எனது ஜெபத்தை என் தேவனே
கொடியேற்றுவோம் தேவ நாமத்திலே

என் ஜீவனின்...

6. இருந்தவரே இருப்பவரே

இருந்தவரே இருப்பவரே
சீக்கிரமாய் வரப்போகும் எங்கள் இயேசுவே
சதாகாலமும் எமக்காகவே பிதாவிடம்
வேண்டுதல் செய்பவரே
அல்லேலூயா அல்லேலூயா...

ஒரே ஒரு முறை நீர் மரித்தீர்
சதாகாலமும் உயிரோடு இருக்கிறீர்
வரப்போகிறீர் மறுபடியும்
எக்காள தொனியுடனே

அல்லேலூயா...

ஆயிரம் ஆண்டுகள் உமது ஆட்சியே
மலரப்போகுதே இந்த பூமியில்
ராஜாவே எங்கள் இயேசுவே
ஆளுகை செய்வீரே

அல்லேலூயா...

பரவட்டும் உமது சுவிசேஷமே
உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம்
எல்லோருமே பெற்றுக்கொள்ளட்டும்
இலவசமாக இரட்சிப்பையே

அல்லேலூயா...

7. அன்பாகவே தேவன் இருக்கின்றார்

அன்பாகவே தேவன் இருக்கின்றார்
அன்பில்லாதவன் நமது தேவனை
அறிந்திடவே மாட்டானே

தம்முடைய ஒரே மைந்தனையே
நமக்காக அனுப்பியே தந்தாரே
இதனால் உலகில் வெளிப்பட்டதே
தேவன் நம்மேல் வைத்த மாறா அன்பே
அன்பாகவே...

தேவனால் அன்பு உண்டானதே
அன்புள்ளோன் தேவனால் பிறந்தவனே
அவன்தானே தேவனை அறிந்தவனே
ஒருவரில் ஒருவர் அன்புக் கூருவோம்
அன்பாகவே...

அன்பினில் ஒருவன் நிலைத்திருந்தால்
தேவனும் அவனில் நிலைத்திருப்பார்
பூரண அன்பினில் பயமில்லையே
தேவனில் நாமும் அன்புக் கூருவோம்
அன்பாகவே...

8. தேசத்தின் ஜனங்களே நீங்களே

தேசத்தின் ஜனங்களே நீங்களே
கலங்காமல் பயமின்றி இருங்களேன்
கர்த்தர் யுத்தம் செய்கின்றார்
ஜெயத்தை நமக்கு தருகின்றார்

தேவன் முன்னே செல்கின்றார்
அவர் பின்னே நாமெல்லாம் சென்றிடுவோம்

சேனைகளின் கர்த்தர் நம்முடனே
எதிரிகள் சிதறியே போவாரே
கர்த்தரையே பணிந்து கொள்வீர்
கம்பீர சத்தத்தோடு துதிப்பீரே

தேவன் முன்னே...

தேவனை நீங்கள் நம்பிடுவீர்
அப்பொழுது யாவரும் நிலைத்து நிற்பீர்
தேவ மனிதரை சார்ந்து கொள்வீர்
காரிய சித்தியை அடைவீரே

தேவன் முன்னே...

மிகுந்த பலனை கர்த்தர் தந்தார்
யாவரும் தோத்திரம் செலுத்திடுவீர்
வாத்திய கருவியை எடுத்துக் கொண்டு
கர்த்தரின் ஆலயம் வந்திடுவீர்

தேவன் முன்னே...

9. என் இயேசுவே நல்ல மேய்ப்பரே

என் இயேசுவே நல்ல மேய்ப்பரே
முழு உள்ளத்தோடு உம்மை துதிப்பேன்
பெரிதாகவே இருக்கின்றதே
என் தேவனே உமது மகிமை

பரிசுத்தரே ஆலயத்தில்
உம்மை நாளும் பணிந்து கொள்கிறேன்
உமது வார்த்தையால் இந்த உலகையே
எந்தன் ராஜனே நீர் படைத்தீர்

என் இயேசுவே...

உயர்ந்தவரே கர்த்தாவே
தாழ்மையுள்ளவரை நோக்கி பார்க்கிறீர்
அகந்தை உள்ளவரை தூர நின்று நீர்
எந்தன் ராஜனே அறிந்து கொள்கிறீர்

என் இயேசுவே...

துன்பத்திலே நான் நடந்தாலும்
எந்தன் பரமனே விடுவிக்கிறீர்
உமது கிருபை என்றும் உள்ளது
வலது கரத்தால் என்னை இரட்சிப்பீர்.

என் இயேசுவே...

சுகஜீவ கீதங்கள்

Vol - 30

1. தேவ பிரசன்னமே இறங்கியே வருகுதே

தேவ பிரசன்னமே இறங்கியே வருகுதே - 2
தேவனின் மகிமை நம்மையெல்லாம்
பரிசுத்த ஸ்தலத்தில் மூடுதே } 2
தேவ பிரசன்னமே...

தேவனின் நல்ல தூதர்கள்
நம்மை சுற்றிலும் இங்கே நிற்கிறார் } 2
தேவனின் மகிமை நம்மையெல்லாம்
பரிசுத்த ஸ்தலத்தில் மூடுதே } 2
தேவ பிரசன்னமே...

தேவனின் தூய அக்கினி
இங்கு நமக்குள்ளே இறங்கி வருகுதே } 2
தேவனின் மகிமை நம்மையெல்லாம்
பரிசுத்த ஸ்தலத்தில் மூடுதே } 2
தேவ பிரசன்னமே...

வானத்தின் அபிஷேகமே
அது நமக்குள்ளே நிரம்பி வழியுதே } 2
தேவனின் மகிமை நம்மையெல்லாம்
பரிசுத்த ஸ்தலத்தில் மூடுதே } 2
தேவ பிரசன்னமே...

2. ஆராதனை ஆராதனை

ஆராதனை ஆராதனை
அன்பின் வடிவமே எங்கள் தேவனே } 2
ஆதியில் வார்த்தையாய் இருந்த தேவனே
ஆதியில் எங்களை நடத்தும் இயேசுவே
ஆதியில் வார்த்தையாய் இருந்த தேவனே
என்றுமே எங்களை ஆளும் நேசரே

ஆராதனை...

ஜீவபலியாகவே எங்களை
உமக்கு தர வந்தோமே ஸ்தோத்திரம் } 2
எங்கள் சரீரமே பரிசுத்தமாய்
ஒப்புகொடுக்க வந்தோமே ஸ்தோத்திரம் } 2

ஆதியில்...ஆளும் நேசரே

தேவ வசனம் எங்களில் நிலைக்கவே
பக்தியுடன் உம்மையே பாடுவோம் } 2
மனத்தாழ்மையும் சாந்தத்தையும்
நீடிய பொறுமையும் தாருமே } 2

ஆதியில்...ஆளும் நேசரே

சமாதானமாகவே யாவரும்
இருக்கவே வேண்டுதல் செய்கிறோம் } 2
எங்கள் அன்புதான் மாயமற்றதாய்
இருக்கவே கிருபையாய் நடத்துமே } 2

ஆதியில்...ஆளும் நேசரே

3. சீனாய் மலைமேலே

சீனாய் மலைமேலே மேகத்தின் வழியாக
இறங்கி வந்தீரே எங்கள் தேவனே } 2

ஆராதனை ஐயா ஆராதனை
ஆராதனை அன்பே ஆராதனை } 2
சீனாய் மலைமேலே...

எங்கள் குரலை கேட்பீரே
மறுமொழி எமக்கு தருவீரே } 2
மறுமொழி எமக்கு தருவீரே - 2
சீனாய் மலைமேலே...

வழியில் எங்களை காப்பதற்கு
தூதரை முன்பாய் அனுப்பிடுவீர் } 2
தூதரை முன்பாய் அனுப்பிடுவீர் - 2
சீனாய் மலைமேலே...

மோசேயோடு இருந்ததுபோல்
எங்களோடும் இருந்திடுவீர் } 2
எங்களோடும் இருந்திடுவீர் - 2
சீனாய் மலைமேலே...

வானத்தை எமக்காய் திறப்பீரே
நல்ல பொக்கிஷம் அருள்வீரே } 2
நல்ல பொக்கிஷம் அருள்வீரே - 2
சீனாய் மலைமேலே...

4. ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்

ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் நீரே
ஸ்தோத்திரம் துதி உமக்கே - 2 } 2

அழைக்கின்றோம் உம்மையே தேவா
ஆராதனை செய்கின்றோம் நாதா } 2
உண்மைகள் விளங்கவே நன்மைகள் பெருகவே
எங்களின் மத்தியில் வந்திடுவீர் } 2

ஆபிரகாமின்...

மோசே அழைத்தான் வந்தீரே
தாவீது கூப்பிட்டான் வந்தீரே } 2
கர்மேல் மலையின் மேலே இருந்து
எலியாவின் விண்ணப்பம். கேட்டீரே } 2

ஆபிரகாமின்...

மாம்சமான யாவர் மீதும்
பரிசுத்த ஆவியை ஊற்றினீரே } 2
அபிஷேகம் பெற்றோம் பாடுகின்றோம்
எங்களின் இதயத்தில் வந்தீரே } 2

ஆபிரகாமின்...

5. ஆராதிக்க வந்தோமே

ஆராதிக்க வந்தோமே ஆராதிக்க வந்தோமே - 2
எங்கள் தேவனே எங்கள் ராஜனே - 2
ஆராதிக்க ...

ஆவி, ஆத்துமா, சரீரமே - 2
அர்ப்பணித்து வந்தோமே ஆர்ப்பரித்து வந்தோமே - 2
ஆராதிக்க ...

தேவனின் தயவை நாடி வந்தோம்
விண்ணப்பத்தோடு கூடிவந்தோம் } 2
ஆவி, ஆத்துமா, சரீரமே - 2
அர்ப்பணித்து வந்தோமே ஆர்ப்பரித்து வந்தோமே - 2
ஆராதிக்க ...

எங்களின் நடுவில் வந்திடுவீர்
எங்களின் வேண்டுதல் கேட்டிடுவீர் } 2
ஆவி, ஆத்துமா, சரீரமே - 2
அர்ப்பணித்து வந்தோமே ஆர்ப்பரித்து வந்தோமே - 2
ஆராதிக்க ...

அன்றாட தேவைகள் சந்திக்கின்றீர்
அதிசயங்களையே காண வைத்தீர் } 2
ஆவி, ஆத்துமா, சரீரமே - 2
அர்ப்பணித்து வந்தோமே ஆர்ப்பரித்து வந்தோமே - 2
ஆராதிக்க ...

6. உயிரோடு கலந்தவரே உமக்கே ஸ்தோத்திரம்

உயிரோடு கலந்தவரே உமக்கே ஸ்தோத்திரம் - 2
இயேசுவே உமக்கே ஸ்தோத்திரம் - 2

பயிரை வளர்க்கும் நீராகவே
எங்களை வளர்க்கும் இயேசுவே } 2
உமக்கே ஸ்தோத்திரம் - 2

உயிரோடு...

எங்கள் விண்ணப்பம் கேட்பவரே
எங்கள் ஜெபத்தை கேட்பவரே } 2
உமக்கே ஸ்தோத்திரம்

உயிரோடு...

இருளை போக்கும் ஒளியாக
எங்கள் வாழ்வில் வந்தவரே } 2
உமக்கே ஸ்தோத்திரம்

உயிரோடு...

தேவ சபையில் எழுந்தவரே
எங்கள் பெலனாய் ஆனவரே } 2
உமக்கே ஸ்தோத்திரம்

உயிரோடு...

7. என்னை தேடி வந்த தெய்வமே

என்னை தேடி வந்த தெய்வமே என் இயேசு ராஜாவே
என்னை முற்றிலும் மாற்றி போட்டீரே
என்னை அனுதினம் நடத்துகிறீர் } 2

என்னை...

உமது பாதத்தின் அருகினிலே
அமர்ந்தால் பாவ பெண் ஒருத்தி } 2
கண்ணீர் விட்டு அழுதாளே
அவளின் பாவம் மன்னித்தீர் } 2
அவளின் பாவம் மன்னித்தீர்

என்னை...

உமது நாமத்தின் மேலே நான்
எனது நம்பிக்கை வைப்பேனே } 2
பிதாவின் பிரியம் உம்மேலே
மேகத்தின் சத்தம் கேட்டோமே } 2
மேகத்தின் சத்தம் கேட்டோமே

என்னை...

சிறிய குழந்தைகள் உம்மிடத்தில்
வரவே விரும்பி அழைத்தீரே } 2
குழந்தை உள்ளம் உள்ளவர்க்கே
தேவ இராஜ்ஜியம் என்றீரே } 2
தேவ இராஜ்ஜியம் என்றீரே

என்னை...

8. தேனிலும் இனிய நாமமே

தேனினும் இனிய நாமமே தேவனே உமது நாமமே
தேவனே உம்மை துதிக்கவே வந்தோம் - 2
மகிமை நிறைந்தவரே மகிமை நிறைந்தவரே
தேனினும்...

பரிசுத்த ஆலயத்தில் இருக்கின்ற என்தேவனே - 2
உமது கண்கள் மனிதர்களை பார்க்கின்றதே தேவனே-2
தேனினும்...

கர்த்தரை பாடிடுவேன் நன்மைகள் செய்தாரே - 2
தேவன் உம்மை தேடுகின்ற உணர்வுகள் தந்தீரே - 2
தேனினும்...

என்னை பெற்றவர்கள் என்னை கைவிட்டாலும் - 2
கைவிடாத என் தேவனே என்னை சேர்த்துக்கொள்வீர்-2
தேனினும்...

9. பெரிதான இரட்சிப்பு இரட்சிப்பு

பெரிதான இரட்சிப்பு இரட்சிப்பு } 2
இயேசு கொண்டு வந்தது வந்தது

விலையேறப் பெற்றது பெற்றது } 2
ஈடு இணை இல்லையே இல்லையே

பெரிதான...

தேவனின் அன்பினால் கிடைக்கப் பெற்றது } 2
தேடிவந்து தந்தார் நமது இரட்சகர்

பெரிதான...

விலைமதிப்பு இல்லாதது இந்த இரட்சிப்பு } 2
இயேசுவின் இரத்தத்தால் வாங்கபெற்றது
இயேசுவின் இரத்தத்தால் வாங்கபெற்றது

பெரிதான...

தேவனின் அன்பினால் இணைக்க பெற்றது } 2
தேடிவந்து தந்தார் நமது இரட்சகர்

பெரிதான...

காலத்தை கடந்து நிற்கும் இந்த இரட்சிப்பு } 2
கர்த்தர் நமக்கு தந்தது நித்திய இரட்சிப்பு
கர்த்தர் நமக்கு தந்தது நித்திய இரட்சிப்பு

பெரிதான...

தேவனின் அன்பினால் இணைக்க பெற்றது } 2
தேடிவந்து தந்தார் நமது இரட்சகர்

பெரிதான...

பூமியிலே எல்லோருக்கும் பொதுவானது } 2
புரிந்து கொண்டு வருவீரே பெற்றுக்கொள்ளவே
புரிந்து கொண்டு வருவீரே பெற்றுக்கொள்ளவே

பெரிதான...

தேவனின் அன்பினால் இணைக்க பெற்றது } 2
தேடிவந்து தந்தார் நமது இரட்சகர்

பெரிதான...

சுகஜீவ கீதங்கள்

Vol - 31

1. ஆசீர்வதிக்கும் தேவனே

ஆசீர்வதிக்கும் தேவனே
அன்பின் வடிவம் இயேசுவே
உலகில் வாழும் ஜனங்களை
உமது வழியில் நடத்துமே } 2

இயேசுவின் ஆசீர்வாதமே
என்றும் நமக்கு வேண்டுமே

எங்களின் மேலே உம்முகமே
பிரகாசிக்க வேண்டுமே } 2
தேவனின் இரக்கம் எங்கள் மேல்
இறங்கியே வரட்டுமே } 2
ஆசீர்வதிக்கும்...

இயேசுவின் ஆசீர்வாதமே
என்றும் நமக்கு வேண்டுமே

உலகின் மக்கள் எல்லோருமே
உம்மை துதித்து மகிழட்டுமே } 2
கம்பீரமாக பாடியே உம்மை
போற்றி புகழட்டுமே } 2
ஆசீர்வதிக்கும்...

இயேசுவின் ஆசீர்வாதமே
என்றும் நமக்கு வேண்டுமே

பூமி தனது பலனையே எமக்கு
தரவே வேண்டுமே } 2
இயேசுவே எங்கள் தேவனே
கருணை காட்டிட வேண்டுமே } 2
ஆசீர்வதிக்கும்...

இயேசுவின் ஆசீர்வாதமே
என்றும் நமக்கு வேண்டுமே } 2

2. சீயோன் மலையருகே நாங்கள் வந்தோமே

சீயோன் மலையருகே நாங்கள் வந்தோமே - 2
தேவனே உமது மகிமை இங்கே
இறங்கி வரவேண்டும் } 2

இயேசு (3) ராஜா (3)
இயேசு ராஜாவே
இயேசு (3) ராஜா (3)
எங்கள் ராஜாவே } 2

எங்கள் காலமெல்லாம் உமது கைகளிலே - 2
எங்களின் எதிரிகள் கரத்திற்கு எம்மை
தப்பிட வைத்திடுவீர் } 2

இயேசு...

உமது இரட்சண்யமே என்றும் விளங்கட்டுமே - 2
உமது பிரியம் எங்களின் மேல் என்றென்றும் இருக்கட்டுமே - 2

இயேசு...

தேவனின் நாமத்தையே நாங்கள் துதிக்கின்றோம் - 2
யாக்கோபின் தேவனை எந்நாளும் கீர்த்தனம் செய்கின்றோம் 2

இயேசு...

3. கர்த்தாவே கூப்பிட்டேன்

கர்த்தாவே கூப்பிட்டேன் - 2
நெருக்கத்தில் உம்மை கூப்பிட்டேன் என் - 2
நீர் நல்லவரே பெரியவரே இன்பமானவரே - 2
கர்த்தாவே...

தேவனை நோக்கி என் ஆத்துமா
அமர்ந்தே இருப்பதை அறிவீரே } 2
தேவனே எனக்கு கன்மலை இரட்சிப்பு
உயர்ந்த அடைக்கலம் ஆனவரே - 2
நீர் நல்லவரே பெரியவரே இன்பமானவரே - 2
கர்த்தாவே...

தேவனே உடனே எழுந்தருள்வீர்
பகைவர்கள் சிதறி ஓடட்டுமே } 2
நீதிமான்கள் உமக்கு முன்பாய்
ஆனந்த சந்தோஷம் அடையட்டுமே - 2
நீர் நல்லவரே பெரியவரே இன்பமானவரே - 2
கர்த்தாவே...

மனிதர்கள் எங்கள் தலையின் மேல்
ஏறிப்போக வைத்தீரே } 2
தீயை தண்ணீரை கடந்து வந்தோம்
செழிப்பான இடத்தில் சேர்த்தீரே - 2
நீர் நல்லவரே பெரியவரே இன்பமானவரே - 2
கர்த்தாவே...

4. நன்றி இயேசுவே

நன்றி இயேசுவே 2
காலமெல்லாம் உமக்கு தான்
நன்றி இயேசுவே

Jesus is our LORD
Jesus is our GOD
Jesus is our LIFE, Jesus is our LIFE } 2

நம்பி வந்தேன் நான்
உதவி செய்தீரே
செய்த நன்றி ஒருபோதும்
மறக்க மாட்டேன் நான் } 2

Jesus...

திறந்த வாசலை எனக்கு
முன்பாய் வைத்தீரே
ஒரு போதும் ஒருவனுமே
பூட்ட முடியாதே } 2

Jesus...

சகலமும் படைத்தவரே
மகிமை என்றும் உமக்குதான்
துதி உமக்கு ஸ்தோத்திரமே
எந்தன் இயேசுவே } 2
Jesus is our LORD
Jesus is our GOD
Jesus is our LIFE, Jesus is our LIFE
Jesus is our LORD, Jesus is our LIFE
Jesus is our GOD, Jesus is our LIFE

5. தூய மனதுடனே உம்மிடம் வந்தோமே

தூய மனதுடனே உம்மிடம் வந்தோமே
ஆராதனை செய்ய வந்தோம் - 2
அன்பின் தெய்வமே ஆத்ம நேசரே } 2
இன்ப தேவனே எங்கள் ஜீவனே

தூய மனதுடனே...

பூர்வ காலத்திலே } 2
நீர் செய்த அதிசயங்கள்
நினைவு கூர்ந்திடுவேன் ஐயா
நினைவு கூர்ந்திடுவேன்

அன்பின் தெய்வமே...

உமது செயல்களையே } 2
நாளும் தியானிக்கிறேன்
தினமும் யோசிக்கின்றேன் ஐயா
தினமும் யோசிக்கின்றேன்

அன்பின் தெய்வமே...

பூமியின் நடுவினிலே } 2
இரட்சிப்பை செய்கின்றீர்
எந்தன் ராஜாவே ஐயா
இயேசு ராஜாவே

அன்பின் தெய்வமே...

6. உன் ஆத்துமா வாழ்வது போல்

உன் ஆத்துமா வாழ்வது போல
நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து
சுகமாய் இருக்க வேண்டுகிறேன்

பிரியமானவனே பிரியமானவளே - 2
Many many happy returns of the day - 2

சத்தியத்திலே நீயே நடக்கின்றாய்
உண்மைக்கு நீயே சாட்சியானாய் } 2
உன்னை நினைத்து சந்தோஷமே - 2
பிரியமானவனே...

உனது அன்பை காட்டுகின்றாய்
உத்தமமாக நடக்கின்றாய் } 2
தேவன் விரும்பும் பாத்திரமே - 2
பிரியமானவனே...

தீமையை அகற்றி விலக்கிவிட்டாய்
நன்மையை நாடி செல்கின்றாய் } 2
என்றும் உனக்கு சமாதானமே - 2
பிரியமானவனே...

உன் ஆத்துமா வாழ்வது போல
நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து
சுகமாய் இருக்க வேண்டுகிறேன் - 2
பிரியமானவனே..

7. மதுரமான இயேசு

மதுரமான இயேசு
நம்மை அழைக்க வந்தார் 2 } 2
வந்திடுவீர் ஜனமே
தேவனிடத்தில் சேர - 2

மதுரமான இயேசு...

அதிகமான கிருபையை
ஆவியானவர் அருள்கிறார் } 2
பெருமையுள்ள மனிதரையே
தேவன் எதிர்த்து நிற்கிறார் } 2

மதுரமான இயேசு...

கர்த்தரிடத்தில் யாவரும்
தாழ்மையோடு இருப்பீரே } 2
உங்களையே நம் தேவன்
உயர்த்தியே மகிழ்வாரே } 2

மதுரமான இயேசு...

பரத்திலிருந்து வருகின்ற
ஞானத்தையே நாடுவேன் } 2
தூய்மையும் நீதியும்
நிறைந்ததாய் இருக்குதே } 2

மதுரமான இயேசு...

8. ஏங்குதே எனது மனமும் ஏங்குதே

ஏங்குதே எனது மனமும் ஏங்குதே இயேசு ராஜா
சிலுவையின் கீழ் உமதன்மை எனக்குள் ஊற்றிடுமே
சிலுவையின் கீழ் உமதன்மை எனக்குள் ஊற்றிடுமே
ஏங்குதே எனது மனமும் ஏங்குதே இயேசு ராஜா

நேசரே உமது சத்தத்தையே
நானும் கேட்க வேண்டுமே } 2
எனக்காக இறங்கி வந்தீர்
பிரியமான என் இயேசுவே } 2

ஏங்குதே...

உமது வாயின் வார்த்தைகளை
நானும் காத்து நடப்பேனே } 2
பெரிதான காரியங்கள்
எனக்காக செய்திடுவீர் } 2

ஏங்குதே...

தேவனே உம்மை வேண்டிக்கொள்வேன்
எனது வேண்டுதல் ஏற்றுக்கொள்வீர் } 2
எனது எல்லை பெரிதாக்குவீர்
தீங்கு என்னை அணுகாது } 2

ஏங்குதே...

9. அழைக்கின்றார் இயேசு

அழைக்கின்றார் இயேசு அழைக்கின்றாரே
அக்கரைக்கு போவோம் என்று அழைக்கின்றாரே
வாருங்களேன் படகில் ஏறுங்களேன்

நம் இயேசுவோடு நாம் பயணம் செய்வோமே } 2
படகில் போவோமே

அழைக்கின்றார் இயேசு...

பலமாய் மிகுந்த பலமாய் } 2
சுழல் காற்று உண்டாகுமே
அலை மோதி வீசிடுமே
மோதிடுமே படகின் மேல்

அழைக்கின்றார் இயேசு...

கப்பலில் கடலில் கப்பலில் } 2
நம்மோடு இயேசு இருக்கின்றார்
அவரை நாம் அணுகிடுவோம்
எழுவார் கேட்பார்

அழைக்கின்றார் இயேசு...

சொல்வார் இயேசு சொல்வார் } 2
காற்றை இயேசு அதட்டிடுவார்
இரையாதே கடலே என்பார்
அமைதி நிலவும்

அழைக்கின்றார் இயேசு...

சுகஜீவ கீதங்கள்
Vol - 32

1. கர்த்தரையே எக்காலமும்

கர்த்தரையே எக்காலமும்
ஸ்தோத்தரிப்பேன்
துதி செய்வேன் } 2
அவர் துதியே எப்போதுமே
என் நாவில் இருந்திடுமே } 2

துதித்தலே இன்பமாகும்
ஸ்தோத்திரமே ஆனந்தமே } 2

சரணம் - 1

கர்த்தருக்குள் என் ஆத்துமா
மேன்மை பாராட்டுமே } 2
சிறுமை உள்ள எல்லோருமே
அதைக் கேட்டு மகிழ்வார்கள் } 2

துதித்தலே...

சரணம் - 2

தேவனையே நான் தேடினேன்
எனக்கவர் செவி கொடுத்தார் } 2
எனது பயங்கள் எல்லாம் அவரே
நீக்கியே போட்டாரே } 2

துதித்தலே...

சரணம் - 3

கர்த்தர் நல்லவர் என்பதையே
ருசித்து பாருங்களேன் } 2
அவர்மேலே நம்பிக்கை வைப்பவரெல்லாம்
பாக்கியம் செய்தவரே } 2

துதித்தலே...

2. பரலோக நித்தியராஜா

பல்லவி

பரலோக நித்தியராஜா
எங்கள் இயேசுவே
என்றென்றும் எங்களில் வாழும்
ஜீவனின் ராஜாவே

எமையாளும் இயேசுவே
உமை நாடி வந்தோமே
கர்த்தாதி கர்த்தர் நீரே

பரலோக நித்தியராஜா.....

சரணம் 1

பரிசுத்த அழைப்பையே தந்தீரே எமக்குத்தான்
பரலோக கிருபையால் அருள் செய்தீரே
முடிவில்லா ராஜ்ஜியத்தின் இராஜாதி ராஜாவே
கர்த்தாதி கர்த்தர் நீரே

பரலோக நித்தியராஜா.....

சரணம் 2

தந்தீரே வார்த்தையே நற்பொருளை எமக்குத்தான்
பரிசுத்த ஆவியினால் நிரப்பினீரே
முடிவில்லா ராஜ்ஜியத்தின் இராஜாதி ராஜாவே
கர்த்தாதி கர்த்தர் நீரே

பரலோக நித்தியராஜா.....

சரணம் 3

அன்புள்ள ஆவியையே தந்தீரே எமக்குத்தான்
பலமுள்ள ஆவியையே வைத்தீரே
முடிவில்லா ராஜ்ஜியத்தின் இராஜாதி ராஜாவே
கர்த்தாதி கர்த்தர் நீரே

பரலோக நித்தியராஜா.....

3. தேவன் போட்ட மதிலை

தேவன் போட்ட மதிலை தாண்டி வராதே
ஆசீர்வாத மதிலை தாண்டி வராதே } 2
இயேசு தந்த வார்த்தைகளை மீறாதே
வெற்றி வாழ்வின் ரகசியத்தை விடாதே } 2

உன்னையும் என்னையும் காப்பவர் இயேசுவே - 2
தேவன் போட்ட.....

இரட்சிப்பென்னும் மதிலை இயேசு போட்டாரே
நம்மையெல்லாம் உள்ளே கொண்டு வந்தாரே } 2
மேய்ப்பராக இயேசு முன்னே செல்கிறார்
அவரின் பின்னே நம்மை அழைத்து செல்கிறார் } 2
உன்னையும் என்னையும் காப்பவர் இயேசுவே - 2
தேவன் போட்ட.....

ஞானஸ்தான மதிலை இயேசு போட்டாரே
தேவ ஆவி நமக்குள்ளாக வந்தாரே } 2
வரங்கள் எல்லாம் இயேசு நமக்கு தந்தாரே
புதிய ஜீவன் நமக்குள்ளாக வைத்தாரே } 2
உன்னையும் என்னையும் காப்பவர் இயேசுவே - 2
தேவன் போட்ட.....

அக்கினியின் மதிலாய் தேவன் தாமே இருக்கிறார்
தேவ மகிமை அதற்குள்ளாக இருக்குதே } 2
மதிலை விட்டு வெளியே நீயும் போகாதே
ஆசீர்வாதம் உனக்குள்ளாக பெருகுமே } 2
உன்னையும் என்னையும் காப்பவர் இயேசுவே - 2

தேவன் போட்ட.....

4. பூமி Happy ஆகிடுதே

பூமி Happy ஆகிடுதே
Islands எல்லாம் மகிழ்ந்திடுதே
இயேசு கிறிஸ்து வருகின்றார்
இராஜ்ஜியம் கொண்டு வருகின்றார்

தேவனே - நம்
இயேசுவே

பூமி Happy...

சரணம் - 1

அக்கினியே செல்கிறதே
அவருக்கு முன்னே செல்கிறதே
தேவனே - நம் இயேசுவே

பூமி Happy...

சரணம் - 2

வானத்திலே மின்னல்களே
பூமியெல்லாம் அதிர்கின்றதே
தேவனே - நம் இயேசுவே

பூமி Happy...

சரணம் - 3

காண்கின்றார் மக்களெல்லாம்
உன்னத தேவனின் வல்லமையே
தேவனே - நம் இயேசுவே

பூமி Happy...

சரணம் - 4

மகிழ்கின்றதே சீயோனே
மகிமையின் தேவன் இயேசு என்றே
தேவனே - நம் இயேசுவே

பூமி Happy...

5. தேவனே எந்தன்

பல்லவி

தேவனே - எந்தன் தேவனே
தேவனே - எந்தன் தேவனே - நானும்
உம்மையே தேடுகிறேன்
தாகமாய் இருக்கிறேன்

சரணம் 1

இயேசுவே உந்தன் வீட்டிலே } 2
உம்மையே நானும் பார்க்கவே
ஆசையாகவே நானும் இருக்கிறேன்
வல்லமை காணவே - நானும்
உம்மையே தேடுகிறேன்
தாகமாய் இருக்கிறேன்

தேவனே...

சரணம் 2

தண்ணீரைத் தேடும் நிலத்தை போல் } 2
என் உள்ளம் உம்மை நாடுதே
காலம் முழுவதும் துணையாகவே
வருவீரே தேவனே - நானும்
உம்மையே தேடுகிறேன்
தாகமாய் இருக்கிறேன்

தேவனே...

சரணம் 3

உம்மிடம் இருக்குதே - என் } 2
இரட்சிப்பும் பெலனுமே
ஊற்றினேன் என் இதயத்தை - உம்
சமூகத்திலே - நானும்
உம்மையே தேடுகிறேன்
தாகமாய் இருக்கிறேன்

தேவனே...

6. வாருமே தேவனே வாருமே

பல்லவி

வாருமே தேவனே வாருமே
எங்களை நோக்கியே பாருமே } 2

ல ல ல ல லா
ல ல ல ல லா } 2

சரணம் - 1

ஆனந்தமாகவே பாடுவோம்
மகிழ்ச்சியோடு நாங்கள் ஆடுவோம் - 2

வாருமே தேவனே.....

ல ல ல ல லா
ல ல ல ல லா } 2

சரணம் - 2

கிருபையால் எங்களை நடத்துவீர்
எங்குமே சத்தியம் சொல்லுவோம் - 2

வாருமே தேவனே.....

ல ல ல ல லா
ல ல ல ல லா } 2

சரணம் - 3

காண்டாமிருகத்தின் கொம்பைப்போல்
எங்களின் கொம்மை உயர்த்துவீர்

வாருமே தேவனே.....

ல ல ல ல லா
ல ல ல ல லா } 2

சரணம் - 4

ஆலயத்தில் எங்களை நாட்டுவீர்
கேதுரு மரத்தைப் பொல் வளருவோம்

வாருமே தேவனே.....

ல ல ல ல லா
ல ல ல ல லா } 2

வாருமே தேவனே.....

7. கல்வாரி சிலுவையிலே

பல்லவி

கல்வாரி சிலுவையிலே - இயேசுவின்
கதறலை கேட்கின்றேன் } 2
கண்ணீரும் ரத்தமுமே
கொல்கொதா மலையில் வழிகின்றதே } 2

சரணம் - 1

உலகின் பாவங்கள் எல்லாமே
சிலுவையில் இயேசுவே சுமந்தீரே } 2
தேவனும் உம்மை கைவிட்டார்
உமது வேதனை யார் அறிவார் } 2

கல்வாரி சிலுவையிலே.....

சரணம் - 2

எங்களின் பாடுகள் ஏற்றீரே
துக்கங்கள் யாவும் சுமந்தீரே } 2
அக்கிரமக்காரரில் ஒருவராய்
எண்ணப்பட்டீர் இயேசுவே } 2

கல்வாரி சிலுவையிலே.....

சரணம் - 3

தாகத்தில் சிலுவையில் தவித்தீரே
காடியை கலந்து கொடுத்தாரே } 2
முடிந்தது என்று சொன்னீரே
ஆவியை ஒப்புக் கொடுத்தீரே } 2

கல்வாரி சிலுவையிலே.....

8. பிதாவே குமாரனே

பல்லவி

பிதாவே குமாரனே
பரிசுத்த ஆவியே
நிரப்பிடுவீர் எங்களையே
தேவ பிரசன்னத்தால் (2)

ஆராதனை ஆராதனை
தேவனுக்கே செலுத்துகிறோம் (2)

சரணம் - 1

பூமியின் ஜனங்களையே
கர்த்தாவே உமக்காக படைத்தீரே (2)

ஆராதனை...

சரணம் - 2

சருவ வல்லவரே
உமது துதியை சொல்லிவருவோம் (2)

ஆராதனை...

சரணம் - 3

மகத்துவம் உள்ளவரே
மாறாத தேவன் நீர்தாமே (2)

ஆராதனை...

சரணம் - 4

எங்களையே மீட்டவரே
உமது கிருபையால் அழைத்தவரே (2)

ஆராதனை...

9. மகிமையின் ஜெய தேவனே

பல்லவி

மகிமையின் ஜெய தேவனே
கிருபையின் என் நாதனே - ஆஆ..
மகிமையின் ஜெய தேவனே

சரணம் - 1

புழுதியில் இருந்து எளியவனை - 2
உயர்த்திடும் கர்த்தர் நீர் தாமே - 2
மேன்மக்கள் வரிசையில் வைக்கின்றீர் - 2
ஆஆ.. மகிமையின்.....

சரணம் - 2

காக்கின்றீர் உமது ஜனங்களையே - 2
வானத்தில் இருந்து பார்க்கின்றீர் - 2
எங்களின் கண்ணீரை துடைக்கின்றீர் - 2
ஆஆ.. மகிமையின்.....

சரணம் - 3

பாறையில் இருந்து தண்ணீரை - 2
புறப்பட வைத்த நல்தேவனே - 2
செல்வங்கள் எமக்கு தருபவரே - 2
ஆஆ.. மகிமையின்.....

சுகஜீவ கீதங்கள்
Vol - 33

1. காண கண் கோடி

பல்லவி

காண கண் கோடி வேண்டுமே
காண கண் கோடி வேண்டுமே
தேவனின் தேவாலயம்
தேவனின் தேவாலயம்

அனுபல்லவி

ஆராதனை ஆராதனை
தேவனின் சந்நிதியில்

சரணம் - 1

சேராபீன்களே மேலாகவே
நிற்கின்றார்களே
துதிக்கின்றார்களே

ஆராதனை.....

சரணம் - 2

பரிசுத்தர் பரிசுத்தரே பரிசுத்தரே
சேனைகளின் கர்த்தரையே
துதிக்கின்றார்களே

ஆராதனை.....

சரணம் - 3

கர்த்தரை கெம்பீரமாய்
பாடிடுவோம்
ரட்சண்ய கன்மலையை
போற்றிப் புகழ்வோமே

ஆராதனை.....

2. எங்கள் இயேசுவே

பல்லவி

எங்கள் இயேசுவே
கொண்டு வந்தீரே
பரலோக ராஜியமே

அனுபல்லவி

புதிதான வானமே புதிதான பூமியே
உண்டாக்கினீர் எமக்காகவே
எங்கள் இயேசுவே....

சரணம் 1

காத்திருக்கின்றோம் - இந்த பூமியிலே - உமது
ராஜியம் பெற்றுக் கொள்ளவே
அந்த நாளே நீக்கிரமாய் வந்திட வேண்டுகிறோம்
எங்கள் இயேசுவே.....

சரணம் 2

பழைய வானம் அகன்றிடுமே
பழைய பூமி ஒழிந்திடுமே
நீதி நிறைந்த புது உலகம் காணவே வேண்டுமே
எங்கள் இயேசுவே....

சரணம் 3

இயேசுவை அறியும் அறிவினிலே
நாங்கள் வளர வேண்டுமே
எந்த நாளும் எந்த நேரமும் மகிமை தேவனுக்கே
எங்கள் இயேசுவே....

3. மனமே நீ

பல்லவி

மனமே - நீ ஏனோ கலங்குகிறாய் - நம்
இயேசு வந்திடுவார் - உன் கவலை மாற்றுவார்
மனமே.....

அனுபல்லவி

உன் துக்கங்கள் யாவும் தீருமே
அதி சந்தோஷமாக மாறுமே
மனமே.....

சரணம் 1

உருக்கம் நிறைந்த இயேசு இருக்கிறார்
இரக்கத்தை அவரிடம் கெஞ்சிடுவாய்
தயவு உனக்கு காட்டிடுவார்
மனமே.....

சரணம் 2

நெருக்கத்தை நீக்கி விடுவிப்பார் - உனக்கு
சகாயர் இயேசுவை நீதி உனக்கு செய்திடுவார்
மனமே.....

சரணம் 3

பூமியின் மேலே நிழலைப்போல் - நமது
நாட்கள் இரக்கின்றதே தேவன் இடத்தில் நீ திரும்பு
மனமே.....

4. உதயமானவரே

பல்லவி

உதயமானவரே எங்களின் நெஞ்சினிலே
நீதியின் சூரியனே தாவீதின் சந்ததியே

சரணம் 1

நம் தேவனின் கட்டளைகள் நிறைவேற்ற வந்தவரே
இதயம் கவர்ந்தவரை - நம் இதயம் கவர்ந்தவரே
உதயமானவரே....

சரணம் 2

பாவிகளை மனந்திரும்ப அழைத்திடவே - வந்தவரே
சாரோனின் ரோஜாவே சாரோனின் ரோஜாவே
உதயமானவரே....

சரணம் 3

சாத்தானை வீழ்த்திடவே உலகத்தில் வந்தவரே
தேவனின் திருமகனே - நம் தேவனின் திருமகனே
உதயமானவரே....

சரணம் 4

ஏழைகளின் தன்பங்களை போக்கிடவே வந்தவரே
அல்பாவே ஒமேகாவே அல்பாவே ஒமேகாவே
உதயமானவரே....

5. நான் எங்கு சென்றாலும்

நான் எங்கு சென்றாலும்
என் இயேசு வருகின்றார்

அனுபல்லவி

வருகின்றார் வருகின்றார்
வருகின்றார் என்னோடு வருகின்றார்

சரணம் 1

அன்று மோசேயோடு இருந்ததுபோல் இன்று என்னோடு
இருக்கின்றார் இருக்கின்றார் இருக்கின்றார்
நான் எங்கு.....

சரணம் 2

நான் உயிரோடு இருக்கும் நாளெல்லாம் - என்னை எவரும்
எதிர்த்து நிற்பதில்லை நிற்பதில்லை - நிற்பதில்லை
நான் எங்கு.....

சரணம் 3

நான் கலங்கொண்டு இருப்பேனே - நான்
திடமனதாய் - இருந்திடுவேன் இருந்திடுவேன் இருந்திடுவேன்
நான் எங்கு.....

6. என் இயேசுவே

பல்லவி

என் இயேசுவே உமதன்பையே
நாடி வந்தேன் நாடி வந்தேன்
உம் மார்பிலே தலை சாய்க்கவே
இடம் தாருமே இடம் தாருமே

என் இயேசுவே.....

சரணம் 1

உம் கண்களால் என் உள்ளத்தை
நீர் காண்கிறீர் நீர் அறிகிறீர்

என் இயேசுவே.....

சரணம் 2

பெலவீனமே என் பாத்திரம்
உம் பெலனே எனை தாங்குமே

என் இயேசுவே.....

சரணம் 3

பகையானதே இவ்வுலகமே
கரம் நீட்டியே எனை ஏற்பீரே

என் இயேசுவே.....

சரணம் 4

உம் பாதமே என் ராஜியம்
உமதைக்கியமே என் ஜீவியம்

என் இயேசுவே.....

7. மேலே வானத்திலே

பல்லவி

மேலே வானத்திலே
கீழே ஆழத்திலே
ஆசீர்வாதங்கள் தேவன்
நம்மில் வைத்தாரே

அனுபல்லவி

துணையாய் இருப்பவரே
சருவ வல்லவரே

சரணம் 1

கர்த்தரின் செட்டைகளின் கீழே
அடைக்கலமாக வந்தோமே
நிறைவான பலனே
அவராலே வருமே

துணையாய்.....

சரணம் 2

நம்மை கர்த்தர் உயர்த்தி
நம் பேரை பெருமை படுத்தி
பெரிய ஜாதியாய்
நம்மை ஆக்கினார்

துணையாய்.....

சரணம் 3

வருகையில் ஆசீர்வதிப்பார்
போகையில் ஆசீர்வதிப்பார்
கீழாக்காமல் - நம்மை மேலாக்குவார்
வாலாக்காமல் - நம்மை தலையாக்குவார்

மேலே வானத்திலே.....

8. கர்த்தர் மேல்

பல்லவி

கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு
அவர் உன்னை எந்நாளும் ஆதரிப்பார்
உன் கால்கள் தள்ளாட விடமாட்டார்

கர்த்தர் மேல்.....

சரணம் 1

கர்த்தரின் பாதத்தில் காத்திருப்பாய் } 2
தேவனின் வார்த்தையை நம்பியிருப்பாய்
திரளான மீட்பை இயேசு தருவார்

கர்த்தர் மேல்.....

சரணம் 2

அந்தி சந்தி மத்தியான வேளையிலும்
தியானம் செய்வாய் முறையிடுவாய்
சத்திய தேவன் கேட்பாரே

கர்த்தர் மேல்.....

சரணம் 3

பச்சையான ஒலிவ மரமாக
தேவ சபையில் நீ இருப்பாய்
இயேசுவின் கிருபையை பெற்றுக் கொள்ளுவாய்

கர்த்தர் மேல்.....

9. வாழ்கின்ற காலம்

பல்லவி

வாழ்கின்ற காலம் உமக்காக வாழும்
கிருபையை எனக்கு தருவீரே
ஜெய கிறிஸ்துவே இயேசுவே

வாழ்கின்ற.....

அனுபல்லவி

உமையறியாமல் இருந்த நாட்கள்
அர்த்தமே இல்லை ஐயா
அர்த்தமே இல்லை ஐயா

வாழ்கின்ற.....

சரணம் 1

என்னுடைய துவக்கம் அற்ப்பமாயிருந்தும்
முடிவோ சம்பூரணம் ஆக்கிடுவீர்

வாழ்கின்ற.....

சரணம் 2

நேசரே என்னை அழைத்திடும் போது
ஓடி நான் உம்மிடம் வருவேனே

வாழ்கின்ற.....

சரணம் 3

யோபுவின் பாடுகள் நினைப்பீரே
இரு மடங்காய் என்னை ஆசீர்வதிப்பீர்

வாழ்கின்ற.....

சுகஜீவ கீதங்கள்
Vol - 34
1. இயேசு மகா ராஜனே

பல்லவி

இயேசு மகா ராஜனே
உமக்கு ஸ்தோத்திரம்
இயேசு மகா தேவனே
உமக்கு ஸ்தோத்திரம்

அனுபல்லவி

உமக்கு முன்பாக முழங்கால் படியிட்டு
பணிந்து கொள்கிறோம் வணங்கி துதிக்கிறோம்
இயேசு மகா.....

சரணம் 1

பூமியின் ஆழங்கள் கர்த்தரின் கரத்திலே
மலைகளின் உயரங்கள் உமது விந்தைகள்
உமக்கு.....

சரணம் 2

கடல்களை தேவனே உண்டாக்கினீர்
சர்வமும் சர்த்தரே உருவாக்கினீர்
உமக்கு.....

சரணம் 3

கர்த்தரே எமக்கெல்லாம் மேய்ப்பர் ஆனீரே
நாங்கள் எல்லாம் உமது ஆடுகளே
உமக்கு.....

சரணம் 4

தேவரீர் கேட்கின்றோம் உமது சத்தத்தை
நடக்கின்றோம் உமது வழியில் நாங்களே
உமக்கு.....

2. என் ஆசையே

பல்லவி

என் ஆசையே
என் நேசமே
என் செல்வமே
என் சொந்தமே

அனுபல்லவி

என் நினைவில் நீர் தானே
என் மனதில் நாயகனே

சரணம் 1

துதிகள் மத்தியிலே வாசம் செய்பவரே
கனமும் நித்திய வல்லமையும் - உமக்கே
என்றும் உண்டாகட்டும்
என் ஆசையை.....

சரணம் 2

ஞானமும் நீதியும் நீர்தானே
பரிசுத்தரே எங்கள் மீட்பரே
ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா
ஒருவராய் சாவாமையுள்ளவரே
என் ஆசையை.....

சரணம் 3

ஆவியினாலே விளங்க வைத்தீர்
தேவ ரகசியம் எங்களுக்கு
எங்களின் ஆவி, ஆத்துமா சரீரம்
உமக்கே நாங்கள் அர்ப்பணிப்போம்
என் ஆசையை.....

3. ஊற்றுமைய்யா

பல்லவி

ஊற்றுமைய்யா
ஊற்றுமைய்யா
அக்கினியை
ஊற்றுமைய்யா

அனுபல்லவி

என் இதயமெல்லாம்
கொழுந்து விட்டு
எரியட்டுமே
எரியட்டுமே

ஊற்றுமைய்யா.....

சரணம் 1

அக்கினி மயமாய் நாவுகள் போல
வந்திடுவீர் நிரப்பிடுவீர்

என் இதயமெல்லாம்.....

சரணம் 2

உற்சாகமான ஆவியையே
ஊற்றிடுவீர் தாங்கிடுவீர்

என் இதயமெல்லாம்.....

சரணம் 3

ஸ்தோத்திர பலிகள் ஏற்றுக் கொள்வீர்
ஷெகினா மகிமை இறங்கிடுமே

என் இதயமெல்லாம்.....

4. போதும் போதும்

பல்லவி

போதும் போதும்
பாவ வாழ்க்கை
இயேசுவிடம் போவோமே - நாம்
இயேசுவிடம் போவோமே

அனுபல்லவி

தன்னைப்போல நம்மையே
மாற்றி தூய்மை ஆக்குவார்
சகலமும் புதிதாக்குவார்

போதும் போதும்.....

சரணம் 1

ஆதாமின் பாவத்தினாலே
ஏதேனை இழந்தோமே
கிருபையின் தேவன்
வருகையினாலே மீட்டுக்கொண்டோமே

போதும் போதும்.....

சரணம் 2

ஆட்களின் பலிவேண்டாமே
மாடுகளின் பலிவேண்டாமே
ஒரே ஒரு தரம் தன்னை பலியாக்கி
இயேசு நம்மை ரட்சித்தாரே

போதும் போதும்.....

சரணம் 3

நோவாவின் பேழையைப்போல்
நமக்காக இயேசு வந்தார்
அனைவரும் செல்வோம்
அவரோடு செல்வோம் பரலோக ராஜியமே

போதும் போதும்.....

5. பட்சிக்கும் அக்கினியாய்

பல்லவி

பட்சிக்கும் அக்கினியாய்
எங்களின் மத்தியிலே
இறங்கியே வந்தவரே
இறங்கியே வந்தவரே

அனுபல்லவி

பரலோக தேவனே
அபிஷேகம் ஊற்றுமே

பட்சிக்கும் அக்கினியாய்.....

சரணம் 1

இடிமுழக்கம் கேட்கின்றதே
வானம் எங்கும் மின்னல்களே
கார்மேகம் மலைமேலே
எக்காள சத்தங்களே

பரலோக தேவனே.....

சரணம் 2

சீனாய் மலைமேலே
கர்த்தர் இறங்கினீரே
மலையெல்லாம் அதிர்ந்ததே
எங்கெங்கும் அக்கினியே

பரலோக தேவனே.....

சரணம் 3

மேகத்தின் நடுவினிலே
அழைக்கின்ற தேவனே
இரவினிலும் பகலினிலும்
உம்மோடு இருக்கணுமே

பரலோக தேவனே.....

6. இயேசுவே உம்மை

இயேசுவே உம்மை
தெய்வமாய் கொண்ட
ஜனமெல்லாம் பாக்கியம் செய்தவரே

அனுபல்லவி

தீமைகள் ஒழித்து
நன்மைகள் செய்ய
தரணியில் வந்த
கர்த்தர் நீரே

இயேசுவே.....

சரணம் 1

இயேசுவே உந்தன் ஜீவனுள்ள வார்த்தை
ஆறுதல் தந்து தேற்றுகின்றதே

தீமைகள் ஒழித்து.....

சரணம் 2

கர்த்தரே எனக்கு அடைக்கலமானீர்
தேவனே எந்தன் கன்மலையானீர்

தீமைகள் ஒழித்து.....

சரணம் 3

வேதத்தை கொண்டு போதிக்கும் கர்த்தர்
கைவிடா தேவன் துணை நீரே

தீமைகள் ஒழித்து.....

7. சூரியன் போல் முகம்

பல்லவி

சூரியன் போல் முகம் உடையவரே
பரிசுத்த பரலோக எங்கள் இயேசுவே

சரணம் 1

ஏழு விளக்குகள் நடுவினிலே
ஏழு நட்சத்திரங்கள் வலக்கரத்தில்
ஏந்தியே இயேசுவை கண்டேனே

சூரியன்.....

சரணம் 2

அக்கினி ஜீவாலையாய் கண்கள் இருக்க
பாதங்கள் பிரகாச வெண்கலமே
பெருவெள்ள இறைச்சலாய் கேட்கும் சத்தமே

சூரியன்.....

சரணம் 3

முந்தினவர் பிந்தினவர் உயிருள்ளவர்
பாதாளத்தின் சாவி கையில் உள்ளவர்
பயப்படாதே என்று சொல்கின்றீர்

சூரியன்.....

8. இயேசுவே இயேசுவே

பல்லவி

இயேசுவே இயேசுவே
உமது பாடுகள் நினைக்கின்றேன்
எனது பாவத்தால் உமது ரூபம்
அழகில்லாமல் போனதே

இயேசுவே.....

சரணம் 1

மறைத்து கொண்டேன் என் முகம்
இயேசுவை பாராமலே
பாடுகள்பட்டீர் துக்கமடைந்தீர்
அசட்டை செய்தேனே

இயேசுவே.....

சரணம் 2

காயங்கள்பட்டீர் நொறுக்கப்பட்டீர்
எனது மீறுதலால் இயேசுவே உமது
தழும்புகளால்
குணம் அடைந்தேனே

இயேசுவே.....

சரணம் 3

அடிக்கப்படும் ஆட்டைப்போல்
கொண்டு சென்றாரே
ஆனாலும் இயேசுவே உமது
வாயை திறக்க வில்லையே

இயேசுவே.....

9. எழுந்து கட்டுவோம்

பல்லவி

எழுந்து கட்டுவோம் வாருங்கள்
சேர்ந்து கட்டுவோம் வாருங்கள்
பரலோக தேவனே
நமக்கெல்லாம் காரியம்
கைகூடி வரப்பண்ணுவார்

எழுந்து.....

சரணம் 1

இடிந்து கிடந்ததே மதில்கள்
எருசலேம் ஆலயத்தை சுற்றிலும்
நெகேமியா வந்தான்
ஜனங்களை சேர்த்தான்
அலங்கத்தை கட்டியே முடித்தான்

எழுந்து.....

சரணம் 2

ஊரெங்கும் செல்லுவோம் நாமே
உலகத்தை சந்திப்போம் சேர்ந்தே
உத்தமர் இயேசுவின்
சத்தியம் சொல்லுவோம்
ஆத்தும ஆதாயம் செய்வோம்

எழுந்து.....

சரணம் 3

கடைசி காலத்தில் வாழ்கிறோம்
உலகெங்கும் அழிவுகள் காண்கிறோம்
கர்த்தரின் பிள்ளைகள்
காக்கப்படுகின்றார்
எல்லாரும் இயேசுவிடம் வாருங்கள்

எழுந்து.....

சுக ஜீவ கீதங்கள்

Vol-35

1. பரிசுத்த நாமத்தையே நான்

பரிசுத்த நாமத்தையே நான்
துதித்திட வந்தேனே } 2
இன்பமான என் இயேசுவே
ரூபமுள்ள என் நேசரே } 2

சரணம்

1. ஆழ்கடலின் அலைகளே
அழகான நதிகளே } 2
துதிக்குதே - உம்மை
துதிக்குதே
மகிழுதே - துதித்து
மகிழுதே } 2

பரிசுத்த நாமத்தை

2. மலைகளின் சிகரமே
கனிதரும் மரங்களே } 2
துதிக்குதே - உம்மை
துதிக்குதே
மகிழுதே - துதித்து
மகிழுதே } 2

பரிசுத்த நாமத்தை

3. வாலிபரும் கன்னியரும்
பெற்றோரும் பிள்ளைகளும் } 2
துதிக்கின்றார் - உம்மை
துதிக்கின்றார்
மகிழ்கின்றார் - துதித்து
மகிழ்கின்றார் } 2

பரிசுத்த நாமத்தை

2. நான் தேடினேன்

நான் தேடினேன்
சமாதானமே
தந்திரே எனக்குள்ளே
என் இயேசுவே - நாதா

சரணம்

காற்றினை அதட்டி அமைதி என்றீர்
இறையாதே கடலே என்று சொன்னீர்
உம்மாலே எல்லாமே கூடும் தேவா
என் வாழ்வில் எல்லாமே நீர்தானைய்யா - நான் தேடி

சமாதான காரணர் நீர் தானைய்யா
பகையை சிலுவையில் அறைந்தீரைய்யா
உமது சுவிசேஷம் சமாதானமே
உலகம் முழுவதும் சந்தோஷமே - நான் தேடி

இயேசுவே உமக்குள் நிலைத்திருப்பேன்
உமது வார்த்தைகள் எனக்குள்ளே
மிகுந்த கனிகளை கொடுப்பேனே
மகிமை உமக்கே என் தேவனே - நான் தேடி

3. இஸ்ரவேலின் தேவனே

இஸ்ரவேலின் தேவனே
உமக்கே எங்கள் ஸ்தோத்திரமே } 4

வானத்தின் கீழும்
பூமியின் மேலும்
தேவா உமைப்போல்
வேறு தெய்வம் இல்லையே } 2

சரணம்

சொன்னீர் உமது வாக்கினால்
செய்வீர் உமது கரத்தினால்
உமது கிருபை காக்கிறீர் என்றுமே } 2

வானத்தின் கீழும்

இரவும் பகலும் கர்த்தரே
உமது கண்கள் சபையிலே
திறந்தே இருக்கும் எங்கள் ராஜனே } 2

பூமியின் கீழும்

தேவனை நோக்கி நாங்களும்
பூமியில் ஜெபங்கள் செய்கிறோம்
தயவாய் கேட்பீர் எங்களின் வேண்டுதல் } 2

பூமியின் கீழும்

4. ஆராதனை நாயகனே

ஆராதனை நாயகரே
துதிகளின் பாத்திரரே - உம்
பாதம் வந்தேனே - என்
கீதம் கேட்பீரே } 2

சரணம்

வானங்களின் மேலாகவே
மகத்துவத்தை வைத்தவரே } 2
மேகங்கள் வழியாகவே
இறங்கி வந்தவரே } 2

வார்த்தைகளை தந்தவரே
உம் நாமம் உயர்த்திடுவேன் } 2
ஸ்தோத்திர பலிகளையே
உமக்கே செலுத்திடுவேன் } 2

வல்லமைகள் நிறைந்தவரே
அதிகாரம் - தந்தவரே } 2
உமது பிள்ளைகளாய்
எங்களை தெரிந்தீரே } 2

௫. தேவனின் ஆலயம்

தேவனின் ஆலயம் என் தேகமே
பரிசுத்த ஆவி எனக்குள்ளே
கொண்டாடி மகிழ்வேனே
என் இயேசுவை (2)
கொண்டாடி மகிழ்வேனே
என் நாதனை (2)

- தேவனின்

1. இஷ்டம் போல் வாழ்ந்தேன்
குப்பையில் கிடந்தேன்
தூக்கி எடுத்தாரே (2)
ராஜாவின் பிள்ளையாய்
ஆக்கிவிட்டார் - என்
இயேசு மாற்றிவிட்டார் (2)

- கொண்டாடி

2. இயேசுவின் வருகை
சீக்கிரமாக - இங்கு
வரவேண்டும்.... (2)
அவரோடு சேர்ந்து
நடுவானில்
உயரே நான் செல்ல வேண்டுமே (2)

- கொண்டாடி

6. எந்தன் ஆத்துமா

பல்லவி

எந்தன் ஆத்துமா உம்மை துதிக்குமே
கர்த்தர் இயேசுவே மகிமை உமக்குதான் } 2

அனுபல்லவி

நீரே பெரியவர் ஒளியாய் வந்தவர்
வானம் படைத்தவர் சிருஷ்டிகரே } 2

சரணம்

சீயோன் மலை நடுவில் வாசம் செய்பவரே
எங்கள் இதயங்கள் எல்லாம் ஆள்பவரே } 2
- நீரே பெரியவர்

எழை எளியவரை தேவன் சந்திக்கின்றீர்
கர்த்தர் வசனங்களை தந்து போஷிக்கின்றீர் } 2
- நீரே பெரியவர்

தேவ தூதர்களெல்லாம் காற்றுகளே
ஊழியர் எல்லாம் ஜுவாலைகளே } 2
- நீரே பெரியவர்

7. ஊற்றுமே எனக்குள்ளே

ஊற்றுமே எனக்குள்ளே
ஜெபத்தின் ஆவியை
தேவனே தேவாதி தேவனே
என்னை மீட்டவரே

சரணம்

1. சீயோனில் துதி உமக்காக
எழுந்து வருகிறதே
தேவனே தேவாதி தேவனே
என்னை மீட்டவரே - ஊற்றுமே

2. கர்த்தரே உமது மந்தையிலே
என்னை சேர்த்துக் கொண்டீரே
தேவனே தேவாதி தேவனே
என்னை மீட்டவரே - ஊற்றுமே

3. ஜெபங்களை தினமும் கேட்பவரே - நான்
உம்மிடம் வந்தேனே
தேவனே தேவாதி தேவனே
என்னை மீட்டவரே - ஊற்றுமே

ஊற்றுமே எனக்குள்ளே
பரிசுத்த ஆவியை
தேவனே தேவாதி தேவனே
என்னை மீட்டவரே - ஊற்றுமே

8. கர்த்தாவே உம்மை

கர்த்தாவே உம்மை
தேடினேன் அதிகாலையிலே } 2
தண்ணீரில்லாத நிலம் போல
நான் தாகமானேன்

அனுபல்லவி

முழு உள்ளத்தோடு
உம்மை நினைத்து
நான் வாஞ்சிக்கிறேன்

சரணம்

1. உம்மை நோக்கியே - என்
ஆத்துமா தவிக்கின்றதே } 2
தேவா எந்தன் கன்மலையே
என் உயர்ந்த அடைக்கலமே } 2
- கர்த்தாவே

2. கிருபையுள்ளவரே - என்
உள்ளம் அறிந்தவரே } 2
உமது செட்டையின் மறைவில்
என்னை சேர்த்துக் கொள்வீரே } 2
- கர்த்தாவே

9. இயேசப்பா எனக்குள்

பல்லவி

இயேசப்பா எனக்குள்
வந்ததினாலே
நன்மையும் கிருபையும் பெருகிடுதே } 2

அனுபல்லவி

வந்தார் ஏசப்பா
தந்தார் நமக்கப்பா
தேவனின் ராஜியமே } 2

சரணம்

இயேசப்பா எனக்குள் வருமுன்னே
வாழ்ந்தேன் உணர்வுகள் இல்லாமலே } 2
வீணான சிந்தனைகள் எத்தனையோ எனக்குள்
வேண்டாத பழக்கங்கள் எத்தனையோ } 2
- வந்தார்

நேசரின் சத்தம் கேட்டேனே
உபதேச வார்த்தைகள் ஏற்றுக் கொண்டேன் } 2
பழைய மனுஷன் போனானே - எனக்குள்
புதிய மனுஷன் வந்தானே } 2
- வந்தார்

உம் வார்த்தை

1. ஆத்துமாவே

ஆத்துமாவே என் ஆத்துமாவே கர்த்தர் அற்புதர்
கீதமானவர் ஜீவனானார் அவரை மறவாதே
நல்லவர் வல்லவர் இயேசுவே இரட்சகர் - 2

ஆராய முடியாத காரியம் செய்கிறார்
எண்ணியே முடியாத அதிசயம் செய்கிறார்
பெலத்தினிலே அவர் பெரியவர் ஞானத்தில் வல்லவர்
நல்லவர் வல்லவர் இயேசுவே இரட்சகர் - 2

கர்த்தரின் காருண்யம் எத்தனை பெரியது
இன்றைக்கே தருகின்றார் இரட்டிப்பாய் நன்மைகள்
இன்று முதல் நம் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்
நல்லவர் வல்லவர் இயேசுவே இரட்சகர் - 2

வெண்கல வாசல்களின் கதவுகள் உடைக்கின்றார்
இரும்பு தாழ்பாள்களை அவரே முறிக்கின்றார்
மறைவிடத்தில் இருக்கின்ற பொக்கிஷம் தருகின்றார்
நல்லவர் வல்லவர் இயேசுவே இரட்சகர் - 2

உ. உம்மையன்றி

உம்மையன்றி யாரைப் பாடுவேன்
உம்மையன்றி யாரைத் துதிப்பேன் }2

உம் பிரசன்னம் வாஞ்சிக்கிறேன்
உம் சமூகம் தேடுகிறேன்

உம்மையன்றி...

உம் வசனம் தியானிக்கனும்
உந்தன் பாதம் அமர்ந்திடனும் }2

உம்மையன்றி...

உம் முகத்தைப் பார்க்கனுமே
உம்மைப் போல மாறனுமே }2

உம்மையன்றி...

உம் பிரசன்னம் வாஞ்சிக்கிறேன்
உம் சமூகம் தேடுகிறேன் }2

உம்மையன்றி...

3. உம்பாதம்

உம்பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப் பாடுவேன் - இயேசைய்யா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே - 2
உம்பாதம்...

புது எண்ணையால் புது பெலத்தால் }2
புதிய கிருபை புது கவியால் - 2
நிரப்பி நிதம் நடத்துகின்றீர் }2
நூதன சாலேமில் சேர்த்திடுவீர் - 2
உம்பாதம்...

நெருக்கத்திலே உம்மையழைத்தேன் }2
நெருங்கி உதவி எனக்களித்தீர் - 2
திசைக்கெட்டெங்கும் அலைந்திடாமல் }2
தீவிரம் வந்தென்னை தாங்கினீரே - 2
உம்பாதம்...

4. சர்வ வல்ல

சர்வ வல்ல எந்தன் தேவா நீர் மாத்ரம் போதும்
உந்தன் நாமம் சொன்னாலே அற்புதங்கள் நடக்கும் } 2
மரித்தோரை உயிர்ப்பிக்கும் உந்தன் வல்லமைப் பெரிது
சீறும் கடலும் பெரும் காற்றும் உந்தன் வார்த்தையில் அடங்கும் } 2
சர்வ வல்ல...

எந்தன் அன்பே எந்தன் உயிரே எனதெல்லாம் நீரே
என் ஆசை என் ஏக்கம் என் சொந்தம் நீரே } 2
மரித்தோரை உயிர்ப்பிக்கும் உந்தன் வல்லமைப் பெரிது
சீறும் கடலும் பெரும் காற்றும் உந்தன் வார்த்தையில் அடங்கும் } 2
சர்வ வல்ல...

மகிமையும் மாட்சிமையும் என்றென்றும் உமக்கே
ராஜியம் வல்லமை என்றென்றும் உமதே } 2
மரித்தோரை உயிர்ப்பிக்கும் உந்தன் வல்லமைப் பெரிது
சீறும் கடலும் பெரும் காற்றும் உந்தன் வார்த்தையில் அடங்கும் } 2
சர்வ வல்ல...

5. More Love

இன்னும் அன்பு இன்னும் வல்லமை
இன்னும் நீரே என் வாழ்வில் } 2
என் முழு உள்ளத்தால் உம்மை ஆராதிப்பேன்
என் முழு மனதால் உம்மை ஆராதிப்பேன்
என் முழு பெலத்தால் உம்மை ஆராதிப்பேன்
என் தேவன் நீரே என் கர்த்தர் நீரே - 2

இன்னும் அன்பு...கர்த்தர் நீரே

More Love, More Power
More of you in my life - 2 } 2
And I'll worship you with all my heart
I'll worship you with all my Mind
I'll worship you with all my strenth
you are my LORD
You are my god 2

More Love...

6. கரம் ஒன்று

கரம் ஒன்று தொடக் கண்டேன்
நிமிர்ந்தேன் இயேசு நின்றார் } 2
அரவணைத்தார் ஏந்திக் கொண்டார்
குழந்தையைப் போல் ஆனேன் } 2

கரம் ஒன்று...

அவரை நான் அறியும் முன்னே
அவர் நம்மை தெரிந்து கொண்டார் } 2
எந்தன் இயேசு தந்திடுவார் வேண்டுதல் எல்லாமே - 2

அரவணைத்தார்...

கரம் ஒன்று தொடக் கண்டேன்
நிமிர்ந்தேன் இயேசு நின்றார்

இயேசு தானே மெய்யான திராட்சை செடியானவர் - 2
அவரில் நான் அதிகமாக கனிகள் கொடுக்கும்
கொடியாவேன் - என்னை } 2

அரவணைத்தார்...

என்னை விடவும் பெரிதான கிரியைகள் செய்திடுவீர் - 2
சொன்னாரே நம் இயேசு தம்முடைய சீடரிடம் - 2

அரவணைத்தார்...

7. பலிபீடத்தில்

பலிபீடத்தில் என்னை பரனே படைக்கின்றேன் இந்த வேளை
என்னையும் தம்சித்தம் போல ஆண்டு நடத்திடுமே } 2

கல்வாரியின் அன்பினையே கண்டு விரைந்தோடி வந்தேன் - 2
கழுவும் உம் திரு இரத்தத்தாலே கறை நீங்க இருதயத்தை - 2

ஆவியோடாத்மா சரீரம் அன்பரே உமக்கென்று தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ ஆசீர்வதித்தருளும் } 2

கல்வாரியின்...

சுயமென்னில் சாம்பலாய் மாற சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் சாக தேவா அருள் செய்குமே } 2

கல்வாரியின்...

8. I Need You Daddy

இயேசப்பா எங்க இயேசப்பா எனக்குள் வருவீர் நேசப்பா - 2
I Need you Daddy, I Love you Daddy
I Need you Daddy, I Love you Daddy
I Need you, I Love you

எந்த நாளுமே என்னோடுதான்
இயேசுவே இருக்க வேண்டுமே - 2

I Need...

பரலோகத்தின் தரிசனமே } 2
Daddy இயேசுவே தரவேண்டுமே

I Need...

என் வாழ்க்கையை Full ஆகவே } 2
Daddy இயேசுவே நடத்த வேண்டுமே

I Need...

எனக்கு வேண்டிய knowledge எல்லாமே } 2
Daddy இயேசுவே கொடுக்க வேண்டுமே

இயேசப்பா...

I Need you Jesus, I Love you Jesus
I Need you Jesus, I Love you Jesus
I Need you, I Love you
I Need you, I Love you

9. உன் வாயை

உன் வாயை விரிவாய்த் திற நான் அதை நிரப்புவேன் - 2
உள்ளங்கையில் வரைந்து உள்ளேன் பெயர் சொல்லி அழைத்தேன் - 2

தாயின் கருவில் தெரிந்து கொண்டேன்
தந்தையைப் போல் உன்னை நடத்தினேன் } 2

உன் வாயை...

என்னை நோக்கிக் கூப்பிடும் போது
மறுஉத்தரவு கொடுக்கிறேன் } 2

உன் வாயை...

கர்த்தர் நல்லவர் ருசித்துப் பார்த்தேன்
அவரை நம்பினோர் பாக்கியவான் } 2

என் வாயை...

என் வாயை விரிவாய் திறந்தேன்
நீர் அதை நிரப்பினீர் } 2

10. மான்கள் நீரோடை

மான்கள் நீரோடை வாஞ்சிப்பதுபோல்
என் ஆத்துமா வாஞ்சிக்குதே
நீர் மாத்ரம் எந்தன் ஆத்ம நேசர் } 2
உம்மை ஆராதிக்கிறேன்

மான்கள்...

நீர் என் பெலனும் கேடகமாம்
என் ஆவி என்றும் உம்மில் அடிபணியும்
நீர் மாத்ரம் எந்தன் ஆத்ம நேசர் } 2
உம்மை ஆராதிக்கிறேன் - 2

"ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" ஆதி 2:18

சுகஜீவ பொருத்த மையம்

(உலகின் நம்பிக்கைக்குரிய கிறிஸ்தவ திருமண சேவை மையம்)

www.sugajeevamatrimony.com

தபால் பெட்டி எண் : 372

விஜிபி விக்டரி ஹவுஸ், 2வது மாடி, 39 அண்ணா சாலை,

சென்னை - : **Ph : 65722230/31, Injambakkam : 65722233**

கிறிஸ்தவ பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி

உங்களுக்கு பிடித்த பொருத்தமான வரன்களை (மணமாகாதோர், விவாகரத்தானோர், விதவையானோர், ஊனமுற்றோர் எங்களுடைய சுகஜீவ திருமண பொருத்த மையத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிறிஸ்தவர்களுக்கான திருமண இணையதளம்
www.sugajeevamatrimony.com
*SugajeevaMatrimony.com*ல் உறுப்பினராக சேர்ந்து உலகெங்கிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான வரன்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேர்வு செய்து கொள்ளலாம்.

கிறிஸ்தவர்களுக்கான திருமண பொருத்த மையம்.
எங்களுடைய சென்னை மையத்திற்கு காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை ஞாயிற்றுக்கிழமை தவிர எல்லா நாட்களிலும் நீங்கள் நேரில் வருகை தந்து மணமகள் - மணமகன் பற்றிய விவரங்களை புகைப்படத்துடன் நகல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மணமகள் - மணமகன் பற்றிய விவரங்களை (*Bio-Data*) புகைப்படத்துடன் பதிவுக்கட்டணத்தை காசோலை மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி, பதிவுச்செய்து கொள்ளலாம். நேரிலும் செலுத்தலாம்.
பதிவுக் கட்டணம் ரூ. 500/- மட்டுமே

மேலும் விவரங்களுக்கு

சுகஜீவ திருமண பொருத்த மையம்
விஜிபி. விக்டரி ஹவுஸ் 2வது மாடி
37, அண்ணா சாலை, சென்னை 600 002.
போன்: 65722230, 65722231, 65722232
www.sugajeevamatrimony.com

Sugajeeva Melodies

Songs: Cardinal Rev. Dr.

V. G. Selvaraj

காலையிலும் மாலையிலும் இயேசுதானே
பகலிலும் இரவிலும் இயேசுதானே
கனவிலும் நினைவிலும் இயேசுதானே
ஆடலும் பாடலும் இயேசுதானே

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்.

Contact:

SUGA JEEVA MINISTRIES

VGP Victory House
17, Anna Salai, Chennai - 600 002.
Ph: 044-65722232. Cell: 98843 09768
Email: sugajeeva_media@yahoo.com